என்றும் உங்களுடன் புத்தகம்-1

மங்கையர் மலர்

MANGAYAR MALAR அக்டோபர் 2007 298 பக்கங்கள் ரூ.18/-



PARLE வழங்கும்

இணைப்பு

நவராத்திரி 64



Over 30 years

சுவையான
"ஆரோக்கியம்"

A-1
SKC®
SINCE 1976
நெய்

A1 SKC நெய் தமிழகம் மற்றும் பல மாநிலங்களில் விற்பனையில் முன்னனி வகித்து வருகிறது. A1 SKC நெய்யின் பாரம்பரியமிக்க தூய்மையான தரம் மற்றும் குழந்தைகளின் அறிவாற்றலுக்குத் தேவையான ஃபீட்டாகரோடின் நிறைவாக இருப்பதால் ஒவ்வொரு இல்லத்தின் "சுவையான ஆரோக்கியம்" இதில் அடங்கியுள்ளது.

இப்பொழுது A1 SKC நெய் புத்தம் புதிய பேக்கில் 20மி.லி., 50மி.லி., 100மி.லி., 200மி.லி., 500மி.லி. 1லி., 2லி., மற்றும் 5லி. அளவுகளில் டின் (Tin), ஜார் (Jar), பௌவுச் (Pouch) -களில் தமிழகம் முழுவதும் அனைத்து கடைகளிலும் கிடைக்கிறது.



deagraph

Sri Kannan & Co.,

Head Office: # 5, K.R.R. Thottam, Mangalam Road, Tirupur - 641 604. Ph.: + 91- 0421- 4323225, 2242224. Fax: 2244114.

Branch: New # 19, Yogambal Street, T. Nagar, Chennai - 600 017. Ph.: 044 - 2815 6509, 2815 7166. Fax: 4202 4676.

e-mail: skcghee@yahoo.com website: www.a1skc.com



உலகின் அதிகபட்ச
வளையல்களின் அணி வகுப்பில்...
பிரம்மாண்டமான
வளையல் திருவிழா
வளையல் திருவிழா
-அக்டோபர் 21 வரை
நேர்மையான விலைக் கொள்கையுடன் சிறப்பு சலுகைகள்
பழசுக்கு புதுசு
50 வருட பாரம்பரியத்தின் அடையாளம்
ஜுவல்லரி மஹால்
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகை
தி. நகர், சென்னை -17. போன் - 24330888
கடைக்கு மிக அருகில் விசாலமான கார் பார்க்கிங் வசதி உண்டு

முக்கிய அறிவிப்புகள்

12, 145, 160





பண்டிகை ஸ்பெஷல் பக்கங்கள்

முதலில் படிக்க...

சிறுகதைகள் :

ரூ. 7,500 இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை 44



கொங்கு நாட்டு ஸ்பெஷல் 77











அட்டை I : சிநேகா அட்டை II : மீனாட்சி

வண்ணப்படங்கள் : சங்கர் சத்யமூர்த்தி

1 மகளிர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

மலர் : 27 இதழ் : 9 அக்டோபர் 2007

இவை எல்லாமே 50 தான்!

அடுக்கு மாடி வீட்டு கிரஹப்பிரவேசத்தின் போது பசு, கன்றுக்கு நிலத்தளத்திலேயே பூஜையை முடித்துக் கொண்டு, புரோகிதரிடம் சொல்லி பசுவின் விக்கிரகத்தில் ஆவாஹனம் செய்து கொள்ளலாம். தாம்பாளத்தில் தீபம், வெற்றிலைப் பாக்கு பழத்துடன் காமதேனு விக்கிரத்தை எடுத்துக் கொண்டு புது ஃபிளாட்டுக்குள் காலடியெடுத்து வைக்கலாமே! படியேறுகையில் மாடும், கன்றும் மிரண்டு உபாதைகள் கழிப்பதும் நீங்கும்.

- கமலா தோதாத்ரி, செம்பாக்கம்.



வெல்கம் காமதேனு!

வீட்டிலுள்ள பீரோ, சோபா, நாற்காலிகள், கட்டில், முதலியவற்றை மாதம் ஒருமுறை இடம் மாற்றி வைத்தால் கீழேயுள்ள குப்பை, தூசி போன்றவற்றை அப்புறப்படுத்துவது சுலபம். பார்ப்பதற்கும் வித்தியாசமாக இருக்கும்.

- ஜி. சுந்தரராஜன், வேளச்சேரி.

பஸ்ஸில் பயணம் செய்யும் பொழுது, குழந்தைகளை வெறுமனே வேடிக்கை பார்க்கச் சொல்லாமல், வழியிலுள்ள ஊர்கள் பற்றியும் அவ்வூரின் சிறப்புகள் பற்றியும் சொல்லி வந்தால், குழந்தைகளின் பொது அறிவு வளரும்!

- ஏ.ஆர். அம்பிகா அன்பழகன், விராலிக்காடு.

பதற்றம், இதயப் படபடப்பு உள்ளவர்கள் இரவில் நான்கைந்து வில்வ இலைகளை நீரில் போட்டு வைத்து, மறுநாள் காலையில் வில்வ நீரை குடித்து வர மனம் அமைதியாகும்.

- ஆர். கீதப்ரியா, திருவாரூர்.

வெளிநாடுகளில் ஃப்ரிஜ்ஜுக்குக் கீழே நாலு உருளைச் சக்கரங்கள் உள்ளன. இதுபோல நம் ஊரிலும் தயாரித்தால் நகர்த்தி வைக்க வசதியாக இருக்கும்.

- சரோஜா மனோகர், விருதுநகர்.

ஒரு வார்த்தை!

நவராத்திரி பராக்! இந்த ஒன்பது நாட்களும் உற்சாகமும் மகிழ்ச்சியுமாகக் கழிந்து விடும். திரைப் பாடல்களில், கதாநாயகியோடு, சில வெண்ணிற ஆடை அணிந்த தேவதைப் பெண்களும் ஆடி, குஷிப்படுத்துவது போல, மெயின் சந்தோஷத்தோடு, சில, பல சைடு வசீகரங்களும் கூட்டணி சேர்ந்து நமது தசராவை மேலும் வண்ணமயமாக்கக்கூடும்!

என்னுடைய பவர் கிளாஸில் பட்ட ஒருசில :

★ பரணில் ஏறி, மரப்பெட்டிகளை இறக்கி வைத்ததுமே, கொலு பொம்மைகளுக்கு ஜாமீனில் வந்த சஞ்சய்தத் போல ஏற்படும் சுதந்திர சந்தோஷம்.

★ தொலைந்து போனதா அல்லது வேலைக்காரி சுட்டு விட்டாளா என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த பல பொருள்கள்... குறிப்பாக எவர்சில்வர் பன்னீர் சொம்பு, பாட்டியின் பிளாக் அண்ட் வயிட் சவுரி, கால்குலேட்டர் போன்றவை பரணில் கிடைக்கும் போது ஏற்படும் அல்ப சந்தோஷம்.

★ தினமும் வெளுத்துப் போன நைட்டியில், மெகா சீரியல்கள் முன் தவம் கிடக்கும் மனைவி, பட்டிலும் சில்க் காட்டனிலும் 'பளிச்' என்று வலம் வருவதால், ''இது நம்ம ஆளுதானா?'' என்று கணவர் எஃப்.ஐ.ஆர். பார்வை பார்க்கும் போது ஏற்படும் சிங்கார சந்தோஷம்.

★ போன நவராத்திரியிலிருந்து இந்த ஆடி மாதம் வரை வந்த மஞ்சள் குங்குமப் பாக்கெட்டுகள், அரை இஞ்ச் கண்ணாடிகள், கர்ச்சீப் சைஸ் ரவிக்கைத் துணிகள், பிளாஸ்டிக் தட்டுகளை எல்லாம் தோண்டிஎடுத்து இந்த வருஷ நவராத்திரிக்கு விநியோகம் செய்யும்போது ஏற்படும் க்ளியரென்ஸ் சந்தோஷம்.

★ தசாவதாரம், அஷ்டலக்ஷ்மி செட்டுகளை, வரிசைப்படி வைக்க வருஷா வருஷம் தவறினாலும், யாரும் அதைக் கண்டுபிடிக்காததால் ஏற்படும் எஸ்கேப் சந்தோஷம்.

★ ''உன் இசை என்னும் இன்ப வெள்ளத்தில் மூழ்க ஓடோடி வந்த எங்களை ஏமாற்றி விடாதே, பாடு சாந்த பாடு!'' என்று ஜெமினி



என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 2225 1522,
2225 0623, 2225 1324
தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யு.எஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

மாமாவைப் போல உசுப்பி விட்டு, சாந்தா மாமி பாடத் தொடங்கியதும், 'சளசள' என்று பேச ஆரம்பிக்கும் 'கில் ஜாய்' சந்தோஷம்!

★ கிரிஜா வீட்டு சுண்டல் ("வேகவேயில்லை!") ஜெயா வீட்டு சுண்டல் ("உப்பு தூக்கல்") செல்வி வீட்டு சுண்டல் ("நியூஸ் பேப்பரில் மடிச்சுக் கொடுத்துட்டா!") எல்லாவற்றையும் ஃப்ரிஜ்ஜில் வைத்து மறுநாள் வாட்ச்மேனுக்குத் தரும் போது ஏற்படும் கொடை வள்ளல் சந்தோஷம்.

★ அணுவைப் போட்டால், நொடியில் நியூட்ரான், ப்ரோட்டான்களாகச் சிதறும் நெரிசல் உள்ள ஜவுளிப் பெருங்கடல்களில் நீந்தி, நாத்தனாருக்கு இரண்டே நிமிஷத்திலும், தனக்கு இரண்டு மணி நேரத்திலும் புடைவை செலக்ட் செய்யும் போது கிடைக்கும் ஷாப்பிங் சந்தோஷம்.

★ பரணிலிருந்து பொம்மைகளை இறக்கியதிலிருந்து, சுண்டல் பேக்கிங் வரை எல்லாவற்றையும் செய்த வீட்டு ஐயா 'தேமே' என்றிருக்க, வருகிறவர்கள் எல்லாம் வீட்டம்மாவைப் 'ஆஹா! ஓஹோ!' என்று புகழும் போது கிடைக்கும் பைரேட் சந்தோஷம்.

★ சரஸ்வதி பூஜையில் புத்தகங்களை வைக்கச் சொன்னால், ஸ்கூல் பையையே வைத்து விட்டு, விளையாட ஓடிவிடும். குழந்தைகளுக்குக் கிடைக்கும் ஒருநாள் சந்தோஷம்.

★ செல்ஃபோன், சார்ஜர், அடாப்டர், பென்-டிரைவ்களை வைத்து, அட்சதை போட்டு, லாப்டேப்புக்கும் கம்ப்யூட்டருக்கும் சந்தனப் பொட்டு இட்டு, விஜயதசமியை விண்டோஸ் தசமியாகக் கொண்டாடும் டெக்னாலஜி சந்தோஷம்.

அடே அடே! இதைவிட அருமையான பண்டிகை உண்டோ இம்மேதினியில்?

அனுஜா நடராஜன்

As per BIS,
IS:2888-1983.




உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்த்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்த்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்த்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

Orchard B GCPMSOCN 1167/06



கருணைக் கடலான அம்பாளை வருடத்தில் ஒன்பது நாட்கள் மட்டுமல்லாது தினந்தோறும் பிரார்த்திப்போம்!



நவ துர்கைகள்!

ரிஷி மார்கண்டேயர் துர்கையின் ஒன்பது அம்சங்களை விவரித்திருக்கிறார். சக்தியின் வடிவங்களான சரஸ்வதி, லக்ஷ்மி, காளி முறையே பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவனிலிருந்து வெளிவந்ததாக புராணங்கள் கூறுகின்றன. இந்த மூன்று அம்சங்களிலி ருந்தும் மேலும் மும்மூன்று சக்திகள் பிறந் தன. மொத்தம் ஒன்பது வடிவங்கள். ஒவ் வொன்றிற்கும் தனித்தனி பெயர், தோற்றம், துர்கா பூஜையில் இந்த ஒவ்வாரு அம்சமுமே பூஜிக்கப்படுகிறது.

● **சைல்புத்ரி** : துர்கையின் முதல் வடி வம். இமவானின் புத்ரி. 'சைல்' என்றால் மலை. முன் ஜன்மத்தில் தக்ஷனின் மகளாக சதி என்ற பெயருடன் தோன்றி சிவனை மணந்தாள். தக்ஷன் யாகம் செய்து கண வனை அழைக்காமல் அவமானப்படுத்திய தால் கோபமுற்று யாகத் தீயில் விழுந்தாள். அடுத்த ஜன்மத்தில் இமவானின் மகளாக பார்வதி, ஹேமவதி என்ற பெயர்கள் பெற்று சிவனை மணந்தாள்.

● **ப்ரஹ்மச்சாரிணி** : பிரம்மா என்றாலே தவம் என்று பொருள். அம்பாளின் இந்த வடிவம் மிக அழகானது. ஞானத்தை அபரிமிதமாக வழங்குபவள். ஒரு கையில் கமண்டலமும் இன்னொரு கையில் ருத்ராட்ச மாலையையும் வைத்திருப்பவள். பார்வதியாக இருந்தபோது தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தவளை பார்த்த நாரதர் ''உனக்குத் திருமணம் ஜடாமுடி தரித்த சங்கரனுடன்தான்! அதற்குத் தவமிரு'' என ஆருடம் சொல்ல பார்வதி யும் தபஸிருந்து சிவனை மண முடித்தாள். தபசாரிணி என்று கூட பெயருண்டு.

● **சந்திரகாந்தா** : கொள்ளை அழகு டனும் பேரமைதியுடனும் தோன்றும் துர் கையின் மூன்றாவது வடிவம். பொன்நிற மேனி, நெற்றியில் பிறை வடிவ சந்திரன், மூன்று கண்களும், பத்து கைகளும் கொண் டவள். பத்துவித வாட்கள், அம்புகள் என சிங்கத்தின் மீது அமர்ந்து துணிச்சல், வீரம்... என தைர்யத்தைப் பிரதிபலிக்கும் அம்சம். அம்பாளின் மணியிலிருந்து எழும்பும் கிண்கிணி நாதங்களைக் கேட்டு அசுரர்கள், அலறி ஓடுவார்களாம்.

● **குஷ்மாண்டா** : இந்த சக்தியானவள் படைப்பவள். இவள் சிரித்தாலே பிரபஞ் சம் உண்டாகி விடுமாம். சூரியனைப் போன்று ஜொலித்து எல்லா திசைகளிலும் தெரியும் இந்தச் சக்திக்கு எட்டு கைகள். ஏழுவிதமான ஆயுதங்களை ஏந்தியிருப் பவள்.

● **ஸ்கந்த மாதா** : இமவான் மகள் தவமிருந்து சிவனை மணம் புரிந்தவுடன் ஸ்கந்தன் (முருகன்) என்றொரு மகன் பிறந்தான். ஸ்கந்த மாதா அக்னியின் தேவதை. மடியில் ஸ்கந்தன். வெள்ளை நிறம் கொண்ட இந்த சக்தியானவள் தாமரையில் அமர்ந்திருப்பாள். ஒரு முட்டா ளைக் கூட அறிவாளியாக்கும் திறமையும் கருணையும் கொண்டவள்.

● **காத்யாயனி** : ரிஷி காத்யாயனர், தவமிருந்து பெற்ற மகள் காத்யாயனி.



சமீபத்தில் நடந்த சனிப்பெயர்ச்சி அன்று எங்கள் ஊர் இராசிபுரத்தில் உள்ள ஈஸ்வரன் கோவிலில் தனிச் சன்னிதியில் குடிகொண்டுள்ள சனீஸ்வரருக்கு விமர்சையாக அபிஷேகம், ஆரா தனை, ஹோமம் செய்தார்கள். இந்த விழாவை எங்கள் ஊர் பெரியவர் ஒருவர் முன்னின்று நடத்தி

பஞ்ச் டயலாக்!

னார். அப்போது அவரிடம் சில இளைஞர்கள் கூறியதாக அவர் கூறிய பஞ்ச் டயலாக்தான் இவை!

''சனீஸ்வரர் பெயரைக் கேட்டாலே சும்மா அதிருதுல்ல?''

''எப்போதும் சனீஸ்வரர் வழி தனி வழி.''

''ஒருமுறை சனீஸ்வர் ஏழரை ஆண்டு பிடித்தால் 100 ஆண்டு வாழ்க்கை அனுபவம் கிடைக்கும்ல...''

''மொதல்ல சனி நல்லவர்களுக்கு துன்பத்தைக் கொடுப்பார். ஆனால் அவர்களைக் கடைசியில் கைவிடமாட்டார்.''

- என். கலாமணி, இராசிபுரம்.

மூன்று கண்களும் எட்டு கைகளும் கொண்டு காத்யாயனி பக்தர்களுக்கு அபயஹஸ்தம் கொடுப்பவள்.

● *காலராத்ரி* : சக்தியின் இந்த வடிவம் இருளைப் போல கரிய நிறம் கொண்டது. கழுத்தில் மாலைகள் 'பளபள'என மின்ன தலைமுடியைப் பிரித்து விட்டிருப்பவள். உருண்டையாக மூன்று கண்கள். ஒவ்வொரு முறை மூச்சை வெளிவிடும் போதும் தீப்பொறிகள் மூக்கிலிருந்து ஆயிரக்கணக்கில் பறக்கும். கழுதை வாகனம் கொண்ட இந்த சக்தி, ஒரு கையில் அபய ஹஸ்தம் தந்து இன்னொரு கையில் தீவட்டி பிடித்திருப்பாள். சுபம்கரி என்ற இன்னொரு பெயரும் உண்டு. இருளைப் போக்குபவள். இருளின் எதிரி எனக்கூட பெயர் பெற்றிருப்பவள்.

● *மகா கௌரி* : சங்கு, சந்திரன் மற்றும் மல்லிகையைப் போல் வெண்மை நிறம் கொண்டவள் மகா கௌரி. எட்டு வயதுத் தோற்றம். ஒரு கையில் மத்தளமும் இன்னொரு கையில் திரிசூலமும் வைத்திருப்பவள். கௌரி தவமிருந்த போது பூமியிலிருந்து புழுதி கிளம்பி அவள் மீது படிந்த போது சிவன் கங்கையிலிருந்து நீரெடுத்து கௌரியை நீராட்டினான் என்கிறது புராணம்!

● *சித்திதாத்ரி* : சக்தியின் இந்த வடிவமான தேவி, பக்தர்களுக்கு கேட்ட வரத்தைத் தருபவள். எட்டுவிதமான சித்திகளான - அனிமா, மஹிமா, கரிமா, லகிமா, பிராப்தி, ப்ராகம்யா, ஈஷித்வா, வஸித்வா, மகா சக்தி... என அனைத்து சித்திகளையும் வழங்குபவள். சிவனுக்கே வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது. சக்தியின் அருளால் சிவனின் பாதி சரீரம் பெண் வடிவமாகிப் போனது. ஆதலால் அர்த்த நாரீஸ்வரர் எனவும் பெயர் பெற்றார். சக்தியின் இந்த ரூபத்தை ரிஷிகள், முனிகள், தேவர்கள், யோகிகள், சித்தர்கள் அனைவருமே பூஜித்தனர்.

மகா சக்தியான கருணைக் கடலான அம்பாளைப் பூஜிப்போம், வணங்குவோம். வருடத்தில் ஒன்பது நாட்கள் மட்டுமல்லாது தினந்தோறும் பிரார்த்திப்போம்.

அன்னையான அவள் ஓடோடி வந்து நம் பிரார்த்தனைகளையும் கோரிக்கைகளையும் கேட்பாள்.

- லதா சேகர், மும்பை.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்



இணைந்து வழங்கும்



பூஞ்சாரல்

ஆட்டம்... பாட்டம்... கொண்டாட்டம்... நிகழ்ச்சி!

அன்புள்ள மாணவமணிகளே...

இளையதலைமுறையினரின் கலைத் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டி ஊக்குவிக்கும் 'பூஞ்சாரல்' போட்டி நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடந்து கொண்டிருக்கின்றன. அண்மையில் மதுரை, திருநெல்வேலி, சேலம், கோவை, சென்னை போன்ற நகரங்களில் நடைபெற்ற 'பூஞ்சாரல்' நிகழ்ச்சிகளின் சில 'கிளிக்'குகள் இங்கே தரப்பட்டுள்ளன.

இந்த ஜாலித் திருவிழாவின் முதல் சுற்று நிகழ்ச்சிகளின் தொகுப்பு, வெற்றி விவரங்கள் போன்றவை டிசம்பர் மாத மங்கையர் மலருடன் 32 பக்க இணைப்பாக வெளிவரும். தவறாமல் வாங்கிப் படியுங்க!

இன்னொரு முக்கிய அறிவிப்பு : 'பூஞ்சாரல்' நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட மாணவமணிகள் மட்டுமல்லாது, அனைத்துக் கல்லூரி மாணவர்களும் மங்கையர் மலருக்கு எழுதி அனுப்பலாம். கதை, கவிதை, ஜோக்ஸ், ஓவியம், டீனேஜ் அனுபவங்கள், வட்டார வம்புகள், கல்லூரி வளாக கலாட்டாக்கள், இளைய சிந்தனைகள் என உங்களிடமிருந்து வந்து குவியும் படைப்புகள் 'பூஞ்சாரல் பக்கங்கள்' என ஸ்பெஷலாக மலரும்...

அக்டோபர் 15ம் தேதிக்குள் வந்து சேரும் படைப்புகளுள் தேர்வு

அக்டோபர் மாதம் 'பூஞ்சாரல்

04.10.2007, வியாழக்கிழமை

கும்பகோணம்

சாஸ்த்ரா பல்கலைக்கழகம்,
எஸ்.பி.ஐ.காலனி பின்புறம்,கும்பகோணம்

அனைவரும் வருக!

06.10.2007, சனிக்கிழமை

திருச்சி

ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி,
சத்திரம் பஸ் நிலையம் அருகில், திருச்சி

அனைவரும் வருக!









செய்யப்படுபவை, மங்கையர் மலர் டிசம்பர் 2007 இதழ் முதல் 'பூஞ்சாரல்' பக்கங்களில் இடம்பெறும். தேர்வு பெறும் படைப்புகளுக்கு சன்மானமும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தங்களது படைப்புகளுடன், புகைப்படத்தை இணைத்து பயிலும் கல்லூரி, துறை, ஆண்டு போன்ற முழு விவரங்களையும் இணைக்கவும். உறையின் மீது **'மங்கையர் மலர் பூஞ்சாரல் பக்கங்கள்'** என்று மறக்காமல் குறிப்பிட்டு, ஆசிரியர், மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

என்ன எழுதத் தொடங்கியாச்சா? ரெடி ஸ்டார்ட்!

நிகழ்ச்சிகளின் விவரங்கள்:

12.10.2007, வெள்ளிக்கிழமை

வேலூர்

அக்ஸிலியம் கல்லூரி,
காந்தி நகர், வேலூர்

அனைவரும் வருக!

27.10.2007, சனிக்கிழமை

விழுப்புரம்

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, திருச்சி
தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம்

அனைவரும் வருக!



ராசி தரும் தெய்விகக் கற்கள்!

ராசிக் கற்கள் கொடுக்கும் போது, பிறந்த மாதத்தை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் முழு ஜாதகத்தையும் பார்த்து தகுந்த ராசிக் கற்களைத் தருவது சென்னை, வடக்கு உஸ்மான் சாலையில் உள்ள பத்மஸ்ரீ ஜெம்ஸ் அண்ட் ஜுவல்லரியின் முதல் சிறப்பு. எப்படி ஒருகடவுள் விக்கிரகத்துக்கு ப்ராண ப்ரதிஷ்டை செய்கிறார்களோ அதைப் போலவே ஒவ்வொரு கல்லுக்கும் தெய்விக சக்தியை அளித்து அதற்கு பவர் சேர்த்தபின் விற்பனை செய்வது பத்மஸ்ரீ ஜெம்ஸ் அண்ட் ஜுவல்லின் மற்றொரு சிறப்பு.

ஜாதகத்தில் யோகாதிபதி, லக்னாதிபதி, பாக்யாதிபதி இவர்களின் ஸ்தானத்தைப் பொறுத்து, நிரந்தரமாக அணியும் ராசிக் கற்களைத் தேர்வு செய்து தருகிறார்கள்.

''வாடிக்கையாளரின் ஜாதகம் பார்த்து, கல்லைத் தேர்வு செய்து, கல்லுக்குச் சிறப்புப் பூஜைகள் செய்தபின் தருவதால் எங்களை வெளிநாட்டு வாடிக்கையாளர்களும் தேடி வருகிறார்கள்'' என்கிறார் பத்மஸ்ரீ ஜெம்ஸ் உரிமையாளர் ராஜ்சேகர்.

''அது ஏன் ராசிக்கல் மோதிரத்தை கைவிரலில் மட்டுமே போட வேண்டும் என்கிறீர்கள்?'' என்றால் விளக்கம் தருகிறார் ஷர்மிளா ராஜ்சேகர்.

''தெய்விக சக்தியின் சிக்னல்கள் விரல் வழியாகத்தான் நமக்குள் வருகின்றன. நமது உடலின் முக்கிய சக்கரங்கள் எல்லாம் விரலில்தான் முடிகின்றன. எனவேதான் ராசிக் கற்களை விரலில் அணிகிறோம்...''


''ஒருவரது ராசிப்படி ஒன்றுக்கு மேற்பட்ட கற்கள் இருக்குமானால் தனித்தனியாகத்தான் குறிப்பிட்ட விரல்களில் அணிய வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு விரலும் ஒவ்வொரு கிரகத்தைச் சேர்ந்தது'' என்கிறார் ராஜ்சேகர்.

குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களது உச்சந்தலை கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளதால் பதின்மூன்று வயது வரை தாயத்தாகவோ, கழுத்திலோ, இடுப்பிலோ ராசிக் கற்களை அணியலாமாம்...

ஆஸ்ட்ரோ ஜெம்மாலஜி எனப்படும் ஜாதகம் - ராசிக்கற்கள் இணைந்தத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்று, உலகத்தரம் வாய்ந்த நிறுவனம் என்று சர்வதேச அளவில் சான்றிதழ் பெற்றிருக்கிறார் ராஜ்சேகர்.

''ஒருவரது ஜாதகத்தில் பாக்யம், லக்னம், பூர்வ கர்மவினை எல்லாம் சரியாக அமைய வேண்டும்... அப்படி அமையாத போது, அவற்றைச் சரிசெய்ய ராசிக்கற்கள் உதவுகின்றன. கிரகங்கள் சரியாக அமைந்து தசாபுக்தி சரியாக இல்லாவிட்டால் ராசிக்கற்கள் அணிவதுடன் பரிகாரமும் செய்ய வேண்டி வரும்...'' என்கிறார் ஷர்மிளா ராஜ்சேகர்.

* ராஜ்சேகர்



* ஷர்மிளா



- பத்மினி பட்டாபிராமன்

தொடர்பு கொள்ள : 98402 14561

அடிச்சாங்க பரிசு!

ஆஹா பரிசு (செப்டெம்பர்) போட்டியில், 'அரசாங்கம் பத்தாயிரம் பேருக்கு இலவச டீவியைக் கொடுப்பதைத் தவிர்த்து, அதே செலவில் ஒரு லட்சம் பேருக்குத் தரமான எலக்ட்ரிக் மஸ்கிடோ பேட் கொடுத்திருந்தால், பல நோய்கள் வராமல் தடுத்திருக்கலாமே!' என்ற குறிப்பை எழுதி சுவர்க் கடியாரம் பரிசு பெறுகிறார் மாயா ராஜீவ், வேளச்சேரி. அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் சுவர்க் கடியாரம் பரிசு பெறுகிறார் ஆர். குமுதா, பெங்களூரு - 28.



ஆஹா பரிசு!

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து, எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுப்பவருக்கு சுவர்க் கடியாரம் பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல, அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் சுவர்க் கடியாரம் பரிசு!

'அக்டோபர் - ஆஹா பரிசு!' என்று மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி : 15.10.2007

பெட்டிக்கதைப் போட்டி! வாசகர் விருப்பம்

பெட்டிக்கதைகளை எழுதிக் குவித்து வரும் வாசகர்களுக்கு நன்றி! இந்த இதழில் மூன்று கதைகள் பிரசுரமாகியுள்ளன.

நீங்கள் எழுதும் கதைகளிலிருந்து, இந்த மாதம் மூன்று பெட்டிக் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாகும். பிரசுரமாகும் கதைகள் தலா ரூ. 150/- பரிசு பெறும்.

சிம்பிள் கண்டிஷன்ஸ் : 100 வார்த்தைகளுக்கு மிகாமல், சொந்த கற்பனையில், பெயர், முழு விலாசம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன் இன்லாண்ட் லெட்டரில் மட்டுமே எழுதி 'பெட்டிக்கதைப் போட்டி' என்ற குறிப்புடன் அனுப்ப வேண்டும்.

எந்தக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.




USHA
வாழ்க்கை மாறுமே மகிழ்ச்சியாக.
எம்பிராய்டரி, பட்டன் ஹோலிங்,
பீக்கோ, க்வில்டிங் மற்றும் இன்னும் ஏராளம்...
ஆட்டோமேடிக் ஜிக்-ஜேக் மெஷின், உங்கள் எல்லா தேவைகளுக்கும், பட்ஜெட்டுக்கும் கச்சிதமாக பொருந்தும் வகையில் 57 விதமான தையல் வேலைப்பாடுகள் வரை தரக் கூடிய ரேன்ஜில் கிடைக்கிறது
கம்ப்யூட்டரைஸ்டு எம்ப்ராய்டரி
செமி ஜிக்-ஜேக்
ஹெவி டியூட்டி
ஸ்ட்ரெயிட் ஸ்டிச்
ஹை ஸ்பீட் இண்டஸ்ட்ரியல்
ஒவ்வொரு ரகத்திலிருந்தும் பல்வேறு மாடல்களில் இருந்து உங்களுக்கு விருப்பமானதை நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.
உஷா இண்டர்நேஷனல் லிமிடெட்
www.ushainternational.com
SHRIRAM
தலைமை அலுவலகம்: பிளாட் நெ. 3, இன்ஸ்டிட்யூஷனல் ஏரியா, செக்டர்-32, குட்காவ்-122001 (ஹரியானா), போன்: ++91-124-2883100, ஃபேக்ஸ்: ++91-124-2883200.
FCB•ULKA 720715 TAM



"வாம்மா காமாக்ஷி!"

என் அம்மாவின் தோழி ஒவ்வொரு வருடமும் நவராத்திரியின்போது ஒரு கன்னியக் குழந்தைக்கு பாவாடை சட்டை வாங்கி கொடுப்பார்கள்.

சென்ற நவராத்திரியின்போது, ஒரு உறவினர் குழந்தையை பூஜைக்குச் சொல்லி இருந்தார்கள். அவர்கள் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பகல் ஒரு மணி ஆகியும் குழந்தை சாப்பிட வரவில்லை. விசாரித்த போது குழந்தைக்கு உடம்பு சரியில்லை எனத்தெரிந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த போது அந்த ஏழை சிறுமி மீனாட்சி அவரது கண்ணில் பட்டிருக்கிறாள்.



அவள், அந்த வீட்டு வேலைக்காரியின் மகள். உடனே, என் அம்மா வின் தோழி அந்த குழந்தையைக் குளிக்கச் செய்து, புத்தாடை தந்து சாப்பாடு போட்டார்கள். கை நிறையத் தாம்பூலமும் இனிப்புகளும் தந்து மகிழ்வித்தார்கள்.

அந்தக் குழந்தை, அன்று மாலை மஞ்சள் கலரில் அரக்கு பார்டர் போட்ட பாவாடை அணிந்து தலைநிறைய பூவுடன், கையில் 'கலகல' என வளையல் சத்தத்துடன் துள்ளிக் குதித்து எங்கள் வீட்டுக்கு வந்தாள்.

''காஞ்சி காமாட்சியே வருவது போல் இருக்கிறது'' என்றார் என் அம்மாவின் தோழி.

உடனே அவள் ''அம்மா, நான் காமாட்சி இல்லை மீனாட்சி'' என்றாள் மழலைக் குரலில். எல்லோரும் நெகிழ்ந்து போய் சிரித்து விட்டார்கள்.

- கே.விஜயா, திருச்சி.

ஷீனா



தினமும் வெறும் அரை மணி நேரம் மட்டுமே போதும். ஏழே நாட்களில் உங்கள் முகம் பொலிவுபெற, உடல் மினுமினுக்க கல்யாணக் கோலத்தில் நீங்கள் தேவதையாகத் தோன்றிட உத்திர வாதம் தருகிறது நேச்சுரல்ஸ்!

சென்னை அண்ணா நகரின் பரபரப் பான சாந்தி காலனி சாலையில் 'சர்' 'சர்' என்று வழுக்கிக் கொண்டு ஓடும் கார்களின் இடைவிடா 'பீப்' ஒலிகள், அத்தனையையும் உள்வாங்கிக் கொண்டு அண்ணாநகர் நேச்சுரல்ஸில் (தொலைபேசி எண் : 42639922/42171709) நுழைந்தால் அந்தக் காலனியின் ஒட்டுமொத்த அமைதியையும் நேச்சுரல்ஸ் குத்தகை எடுத்துக் கொண்டு விட்டதோ என்று பிரமிக்க வைக்கும் தோற் றம். உள்ளே அப்படி ஓர் அமைதி.

''ப்யூட்டி பார்லர் வருபவர்கள் வெறும் அழகை பெற மட்டும் வருவதில்லை. மனதைத் தளர்த்தி, உடலைப் புத்துணர்ச்சி யாக்கி, புது ரத்தம் பாய இப்படி திருப்தி யுடன் அவர்கள் செல்ல வேண்டும் என்பதற் காகவே ஸ்பெஷலாக வடிவமைத்துள் ளோம்'' என்று பெருமை பொங்க சொன்ன வர் 'அந்த ஏழு நாட்கள்' சிகிச்சை பற்றியும் கூறினார்

இது மணமக்களுக்கான 'ஸ்பெஷல் ஸ்கின் லைட்டனிங் ட்ரீட்மெண்ட்'. ''ஆமாம். இன்றைய பரபரப்பான அலு வலக வேலையில் யாருக்கு நேரமிருக்கு ஒரு மாதம் முழுவதும் 'ப்ரைடல் பாக் கேஜஸ்' எடுத்துக் கொள்ள? கல்யாணத் திற்கு லீவு போடவே மூச்சு முட்டுது. இதில் மாதம் முழுவதும் ப்யூட்டி ட்ரீட்மெண்டா?'' - என்று அலறும் இந்தக் கால சுறுசுறு இளசுகளுக்காகவே வடிவமைக்கப்பட்டது தான் இந்தச் சிகிச்சை.

அப்படி என்னதான் உள்ளது இந்த சிகிச்சையில்? முதலில் முகத்தில் கை, கால் களில் ஸ்க்ரப் செய்து, க்ளென்சிங் செய்து அழுக்குகளை, கரும்புள்ளிகளை, திட்டு களைப் படிப்படியாக அகற்றி விடுகிறார் கள். பிறகு முகம், கழுத்து, தோள் பட்டை

அந்த ஏழு


வரை நன்கு மஸாஜ் கொடுத்து, இதற் காகவே இருக்கும் ஸ்பெஷல் டைமண்ட், கோல்ட், பேர்ல் பேஷியல் போன்றவற்றில் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப தேர்வு செய்து போடப்படுகிறது. கண்களைச் சுற்றி

கோவை ரேஸ் கோர்ஸ் சாலை யில் புதிய கிளையைத் துவக்கி கோவை வாசகிகளை குஷிபடுத்தியுள்ளது நேச் சுரல்ஸ். ஆண், பெண் இருபாலர்களுக் கான இந்த யுனிசெக்ஸ் பார்லரில் குடும்பம் முழுவதும் ஒரே இடத்தில் ரிலாக்ஸ்டாக அமர்ந்து அழகு சிகிச்சை களை எடுத்துக் கொள்ளலாம்!

தோன்றும் கருவளையங்களுக்கென்றே 'அண்டர் ஐ ட்ரீட்மெண்டும்' கொடுக்கப்படுகிறது. இதனால் முகத்தில் தோன்றும் சுருக்கங்கள், கருவளையங்கள் முழுதும் நீக்கப்பட்டு, சருமம் பளிச்சிடுகிறது.

டைமண்ட் ஃபேஷியல் :

நம் உடலில் தோன்றும் நோய்க் கிருமிகளை அழித்து, திசுக்களை வசீகரப்படுத்த வல்லது இவ்வகை ஃபேஷியல். சருமத்தை சுத்தப்படுத்தி, பிராண வாயுவை ஓடச் செய்யும் இந்த டைமண்ட் பேஷியல் என்றும் இளமையுடன் காட்சியளிக்க உதவுகிறது.





நாட்கள்

கோல்ட் ஃபேஷியல் :

ஆயுர்வேத அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்த ஃபேஷியல் மூலம் உடல் அழுக்குகள் எளிதாக வெளியேற்றப்படுகின்றன. இயற்கையாகவே நம் சருமம் தங்கத்தால் ஈர்க்கப்படுவதால் இந்த ஃபேஷியல் மூலம் உடலில் நன்கு ரத்த ஓட்டம் பெறவும், சருமம் வறண்டு சுருங்கும் தன்மையும் குறைக்கப்படுகிறது.

பேர்ல் ஃபேஷியல் :

இது முத்துக் துகள்கள் கொண்ட ஆயுர்வேத அடிப்படையில் அமைந்த ஃபேஷியல். சூரிய ஒளிக்கதிர்களால் பாதிக்கப்படும் சருமத்துக்குப் புத்துணர்ச்சியளித்து, ஆரோக்கியத்தைத் தரவல்லது. சருமத்தின் ஈரத்தன்மையையும் அதிகரிக்கச் செய்கிறது.

இந்த ஃபேஷியல்களை எடுத்துக் கொள்வதன் மூலம் முகம் சீரான நிறத்தை பெறுகிறது. அப்புறமென்ன கல்யாணத்தையும் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கலாமே!

- சுநயனா

எப்படித் திருத்துவது?

செப்டம்பர் மாத மங்கையர் மலரில் வெளியான 'ஒரு வார்த்தை' என்ற கட்டுரை பற்றி என் எண்ணத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

என் நெருங்கிய தோழிக்கு இரண்டு அருமையான பிள்ளைகள். அவர்கள் மீது அதீதமான பாசத்தைக் கொட்டி வளர்த்தாள். அவர்களும் படிப்பில் படுசுட்டிகள்.



மூத்த மகன் 10ம் வகுப்பு வரும்போது ஒரு பெண்ணைக் காதலித்தான். கல்யாண வயது வந்ததும், பையனின் பெற்றோர், தம் அன்பு மகனின் விருப்பத்தைக் கெடுக்க வேண்டாமென்று, அந்தப் பெண்ணையே திருமணம் செய்து வைத்தனர். அந்தப் பெண்ணும், என் தோழியிடமும் அவள் கணவரிடமும், மிகவும் மதிப்பும் மரியாதையுமாக நடந்து கொண்டாள். அவர்களும் அதில் திருப்தியாக இருந்தார்கள்.

ஆனால், கல்யாணத்துக்குப் பிறகுதான் அவளுடைய சுயரூபம் விஸ்வரூபமெடுத்தது. கணவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு அவனுடைய பெற்றோரை அவமதிப்பதும், அலட்சியப்படுத்துவதும் எக்கச்சக்கமாயிற்று. அவர்கள் கண் எதிர்லேயே தன் கணவனின் மடியில் கால்களைப் போட்டுக் கொண்டு படுப்பதும், அவனை அவமரியாதையாகப் பேசுவதும், இன்னும் எவ்வளவோ! பையன் மேலுள்ள அன்பால், பெற்றோர் வாயே திறப்பதில்லை.

அவர்களுக்கு முன்னாலேயே தன் சகோதரியிடம், ''நீயும் லவ் மேரேஜ் செய்து கொண்டு விடு. அப்போதுதான் அவர்கள் எல்லோரும் உன் காலில் விழுவார்கள்'' என்று அறிவுரை கூறுகிறாள்.

மெத்தப் படிப்பும், பெற்றோரின் சுதந்திரக் கொடுக்கலும், பெரியோர் மனத்தை துன்புறுத்தவா உபயோகிக்க வேண்டும்? இவர்களை நாம் எப்படித் திருத்துவது? பெற்றோரின் பேச்சைக் கேட்பவர் எத்தனை பேர்?

- சித்ரா ராம்ஜி, சென்னை - 92.

'ஒரு வார்த்தை' ஒவ்வொருவரும் உணர வேண்டிய வார்த்தை! ஐயமில்லை! இருப்பினும், ''பிரச்னைக்கு முழுக்க முழுக்க பெற்றோர்கள் பொறுப்பேற்க வேண்டும்'' என்பதில் எனக்கு உடன்பாடில்லை! பெண்களின் சீர்கேடுகளுக்குப் பெரிதும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் மீடியாக்காரர்களும்தான் இல்லையா? சென்ஸார் இல்லாமலே இவை செயல்படுவதற்கு யார் பொறுப்பு?

கால் பங்கு பெற்றோருக்கு என்றால், முக்கால் பங்கு அரசுக்கும், மற்ற துறைக்கும் இருப்பதை மறுக்க முடியுமா?

- ஐ.எஸ்.சீனிவாசன், சென்னை - 82.

வீட்டுத் தோட்டத்தில் வாழை மரம் வைத்திருப்பவர்கள், ஒருசில மரங்களை இலைகளுக்கென்று உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மற்றவற்றில் இலைகளைப் பறிக்கக் கூடாது. அதனால் பழமோ, காயோ, சரியானபடி குலை தள்ளாது. எனவே இலைக்குத் தனி மரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வாழை இலையில் உணவைச் சுடச்சுட பரிமாறினால், அதைச் சாப்பிடும் போது உடலுக்கு மிகவும் சத்து கிடைக்கிறது.

இதனை காலை நேர அவசரத்தில் எல்லோருக்கும்



சுடச்சுட சத்து!

செய்ய முடியாது. அதனால், பொதுவாக நம் வீட்டு நபர்களுக்கு ஏற்ற வகையில் பெரிய தட்டு (அ) பாத்திரத்தில் வாழை இலை நறுக்கிப் போட்டு, அதில் சமைத்த டிஃபன் வகைகளை நாலாபக்கமும் போட்டு விடவும். சூடாக இருப்பதால் வாழை இலையின் சத்து உணவுப் பொருளில் ஏறும். பிறகு எல்லோருக்கும் அதிலிருந்து எடுத்துத் தட்டிலும் பரிமாற சத்து பரவலாகக் கிடைக்கும்.

- சு. வசுமதி, வேங்கைவாசல்.

சிந்திப்போமா?



என் சிநேகிதி சுமதியின் சகோதரர் அமெரிக்காவில் இருக்கின்றார். ஒரு நாள் அவள் மும்பையில் ஷாப்பிங் போயிருக்கிறாள். அங்கே அவளுடைய அண்ணன் குழந்தைகளுடன் ஏதோ வியா பாரம் செய்து கொண்டு இருப்பதைக் கண்டு அதிர்ச்சியுடன் ''அண்ணா நீயா? என்று கூவிக் கொண்டே அருகில் ஓடி னாள். நீ எப்போ இங்கே?'' வார்த்தைகள் திணறி வர...

''நேற்று நைட் ஃப்ளைட்டிலதான் யு.எஸ்லேர்ந்து இங்கே வந்தோம். இதோ எதிர் ஹோட்டல்லதான் தங்கியிருக்கோம். பர்ச்சேஸ் முடிச்சிட்டு உங்க வீட்டுக்கு வர லாம்னு பிளான்'' என வெகு சாதாரணமாய்க் கூறவும். சுமதிக்குத் துக்கம் தொண் டையை அடைத் தது.

அன்பாவது, அவரைக்காயாவது!

பொங்கிய அழுகை யுடன் 'என்ன இது அக்கிரமம்? எட்டு அடிக்கு எட்டு அடி வீட்டில் வளர்ந்து ஒன் றாக உண்டு உறங்கி, உயிருக்குயிராகப் பழகி, காக்காய்க்கடி கடித்துத் தின்று விளையாடிய அண்ணனா ஊருக்குள் வந்து லாட்ஜில் தங்கி...'' அவளால் துயரத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''என்ன அண்ணா? இப்படி வருவது கூடச் சொல்லாமல் லாட்ஜில் தங்கிக் கொண்டு'' விம்மலுடன் அழ ஆரம்பித்து விட்டாள்.

''வாட் சுமதி, இதுக்கு ஏன் அழுனும்? என்ன தப்பு? நீயும் வேலைக்குப் போறவ, குழந்தைகளும் படிக்கறாங்க. வீணா தொந் திரவு செய்ய வேண்டாம்னுதான் இந்த ஏற் பாடு. அதோட எம்பசங்க அமெரிக்கா வுல பிறந்தவங்க. உங்களோடு இங்கே

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை



அதிர்ஷ்டம்!

கடையில் நூறு புடைவைகளைப் புரட்டிப் பார்த்து விட்டு எதையோ ஒன்றை வாங்கினேன்.

"நவராத்திரிக்கு நல்ல புடவை அமையக் கூட அதிர்ஷ்டமில்லை!" என மனம் குடைந்தது.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டு திறந்தேன். அங்கே என் பள்ளித் தோழி சத்யா தயங்கியபடி, "வீட்டு வேலைக்கு ஆள் கேட்டீங்களாமே?" என்றாள்.

வகுப்பில் முதல் ரேங்க் எடுப்பவள். "என்ன சத்யா, வீட்டு வேலையா செய்கிறாய்?" என்றேன் கவலையுடன்.

"ஆமா, பத்தாவதோடு படிப்பை நிறுத்திட்டு கல்யாணம் செஞ்சு வைச்சுட்டாங்க. புருசன் சரியில்லை. ரெண்டு புள்ளைங்க. ரொம்பக் கஷ்டம்" என்றாள்.

மனம் கலங்க, "நாளை முதல் வேலைக்கு வா" என்றேன்.

'அன்பான கணவன், நல்ல உத்யோகம், அழகான குழந்தைகள் இருந்தும் சாதாரண சேலைக்காக அதிர்ஷ்டமில்லை என எண்ணினோமே" என எனக்கு வெட்கமாக இருந்தது.

- அக்னிகா,
இராமநாதபுரம்
மாவட்டம்.

சின்ன ஃபிளாட்டுல இருக்கவே சிரமப்படுவாங்க!" என்றானாம் ரொம்பவே கேஷுவலாக.

'சீ' என்று போய்விட்டது சுமதிக்கு. 'என்ன சொந்தம்? இவ்வளவு ரூபாய் செலவழிச்சிகிட்டு எத்தனை ஆயிரம் மைல் கடந்து வருவது எதற்காக? ஹோட்டலில் தங்குவதற்கா? சாண் இடமானாலும் எல்லாரும் ஒன்று கூடி மகிழ்ந்து இருப்பதன் சுகம் ஆனந்தம் வருமா? தோள்மேல் கைபோட்டுக் குலாவிப் பேசிக் களிப்பதற்கு ஈடு உண்டா?' என அவள் பட்ட வேதனையை விவரிக்க வார்த்தைகளே இல்லை.

இன்னொரு சம்பவம்.

தாய், மரணப்படுக்கையில் இருக்கிறாள். பிள்ளை வெளிநாட்டிலிருந்து வருகிறான். இரண்டு நாட்களாயிற்று; தாய் இழுத்துக் கொண்டு இருக்கிறாள்.

"என்ன டாக்டர் இது? இன்னும் இழுத்துக்கிட்டே போகுது. எனக்கு லீவும் வீணாப் போகுது, பசங்களுக்கு காலேஜ் அட்மிஷன் டைம் வேற."

டாக்டர் விக்கித்துப் போய்விட்டார். "என்ன? என்னை என்ன செய்யச் சொல்றீங்க? உங்க அம்மாவை சாகடிக்கச் சொல்றீங்களா?" எனக் கோபத்தில் கண்டபடி கத்தித் தீர்த்துவிட்டாராம். தன் நியாயமான தேவை களைக் கூட மகனுக்காகத் தியாகம் செய்து விட்டு வாழ்ந்து முடித்த பெண்மணி அவர். அவருக்கே இந்த நிலை! தாய்ப்பாசம் எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது? பரிதாபம்!

அந்நியக் கலாசாரம் புகுந்து நம் முடைய விலைமதிப்பற்ற கலாசாரம், பண்பாடு எல்லாவற்றையும் சீரழிக்க ஆரம்பித்துள்ளது. அது எதில் போய் முடியுமோ? வருங்கால சந்ததியரை சொந்த பந்த ஒட்டதலுடன் வளர்க்க வேண்டியது நம் தலையாய கடமை!

- தங்கம் ராமஸ்வாமி, யு.எஸ்.ஏ.


கல்கி
தீபாவளி மலர் 2007
கதைகள்:
அமரர் கல்கி தொடங்கி
ஆரணி யுவராஜ் வரை...
கட்டுரைகள்:
மூதறிஞர் ராஜாஜி முதல்
இன்றைய ரமணிசந்திரன்
வரை...
கவிதை:
திருவாசகம் முதல்
தஞ்சை சகா வரை...
ஆன்மிகம்:
திருத்தலப் படங்கள்,
தெய்வீகச் சித்திரங்கள்,
யாத்திரைத் தொகுப்புகள்...
நல்ல தமிழ் 'நா'வசைக்க...
அள்ளும் வண்ணம்
கண்ணிசைக்க...
முல்லை மலர் வாசமென
எல்லையில்லா இன்பம் தர...
பிரதி
விலை
ரூ.100/-
கலைநயத்துடன்
தயாராகிறது...
இப்போதே அருகில் உள்ள கடைகளில் அல்லது எமது முகவர்களிடம் முன்பதிவு செய்யுங்கள்.
தபால் மூலம் பெற ரூ.130/- (MO/DD) அனுப்பவும்.
சர்க்குலேஷன் மேனேஜர், பரதன் பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

ஒரே கல்லில்--- ---

ரமா கண்ணன்,
திருச்சி - 2.

எப்போதாவது ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிச்சிருக்கீங்களா?

இரண்டு என்ன...? நாலே அடிச்சுக்கிட்டிருக்கேன். எண்ணிக்குங்க ரமா!

தினமும் காலையில் வாக்கிங் போவேன்.

மாங்காய் ஒண்ணு - உடற்பயிற்சி.

அப்படியே கோயிலுக்குள் நுழைந்து ஒரு கும்பிடு போட்டு விடுவேன்.

மாங்காய் இரண்டு - சுவாமி தரிசனம்.

திரும்பும் போது காய்கறி, கீரை வாங்குவேன்.

மாங்காய் மூன்று - சமையலுக்கு ஃப்ரெஷ் காய்கறி.

போகும் போதும், வரும்போதும், இன்றைக்கு எதோ எழுதலாம் என்று சிந்தித்து விடுவேன்.


மாங்காய் நான்கு - வாசகியரின் பாராட்டு.



எல். மோகனசுந்தரி, கிருஷ்ணகிரி - 635 001.

இந்த உலகிலேயே மிகவும் புனிதமான பணி எது?

குப்பை அள்ளுவதுதான்! (இதுவே போன மாதம் கேட்டிருந்தீங்கன்னா ரொம்ப நேரம் யோசித்து பதில் சொல்லியிருப்பேன். சென்னையே குப்பை மலைகளுக்குள் நாறிக் கொண்டிருப்பதால், 'சட்' என்று பதில் சொல்லி விட்டேன். டாபிகலாகக் கேட்டு 'அன்பு வட்டத்து'க்குள் இடம்பிடித்த உங்கள் சாமர்த்தியத்தை மெச்சுகிறேன்).



ஏ.பி.ஆர். புனிதா ரமேஷ்,
நல்லகரம்.

அனுஷாவுக்குப் பிடித்த கடவுள் யார்?

நீங்க இந்த சினிமா கதாநாயகர்களின் பேட்டியைப் படிச்சிருக்கீங்களா?

"உங்களுக்குப் பிடிச்ச ஹீரோயின் யார்?" என்று கேட்டால்,

"நர்கிஸ், மதுபாலா, சாவித்ரி" என்று அந்தக் காலத்துப் பெயர்களாகச் சொல்லி சமாளித்து விடுவார்கள். நான் மட்டும் வம்பில் மாட்டிக் கொள்வேனா என்ன...? அதான் செய்யும் தொழிலே தெய்வம்னு சொல்லிட்டேன்!

(உங்க ஊர், நல்கலரமா, நல்கவரமா... நல்லகரமா...? கையெழுத்துப் புரியலை!)

கௌரி ராமச்சந்திரன், சென்னை - 40.

எனக்கு நல்ல நல்ல புத்தகங்கள் படிப்பது என்பது சிறு வயதிலிருந்தே பிடித்தமான பொழுதுபோக்கு. இந்த ஐம்பத்தெட்டு வயதில் கூட தூக்கம் வரும் வரை படிக்கிறேன். ஆனால்

மாங்காய்?

அன்பு வட்டம்!

என் குடும்பத்தில் அனைவரும் திட்டுகிறார்கள். ''உன்னை வைத்து எரிக்கும் போது, உன் புத்தகங்களையும் வைத்து எரிக்க வேண்டும்!'' என்றெல்லாம் என் கணவர் திட்டுவார். மேடம், நீங்களே சொல்லுங்க... நல்ல புத்தகங்கள் படிப்பது தவறா?

ஒரு வாரம் படிப்பதை நிறுத்துங்க கௌரி.



'தொண தொண' என்று எதையாவது பேசி, வீட்டில் உள்ளவங்களை அறுங்க!

''வாங்க, ஷாப்பிங் போகலாம். சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க!''னு உங்கக் கணவரை நச்சரிங்க!

வயலின், கீ-போர்டு கிளாசுக்குப் போறேன்னு வீட்டுல இரைச்சலா பிராக்டிஸ் பண்ணுங்க...

மெகா சீரியல்களை ஒண்ணு விடாமப் பாருங்க. 'ரிமோட்' சண்டை போடுங்க.!

''அம்மா, தாயே! இந்தா உனக்குப் பிடிச்ச புக்ஸ். அமைதியா உன் அறையில போய்ப் படி!''னு அவரே கொண்டு வந்து அன்புடன் கொடுக்கிறாரா இல்லையான்னு பாருங்க! முக்கியமான விஷயம், இந்த இதழை அவர் கண்ணுல காட்டிடாதீங்க! நம்ப பிளானெல்லாம் 'ஃபணால்' ஆயிடும்!

என். செண்பகவல்லி, பாளையங்கோட்டை.

நாங்கள் அனுப்பும் படைப்புகள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று அறிய எத்தனை இதழ்கள் வரை காத்திருக்கலாம்?

அது நீங்கள் அனுப்பும் படைப்பைப் பொறுத்த விஷயம்!

தேர்ந்தெடுக்கப்பட்ட டாபிகலான விஷயங்களை அந்த மாதமே பிரசுரித்து விடுவோம். உதாரணத்துக்கு 'பாதுகாப்பாக பட்டாசு வெடிப்பது எப்படி?' என்ற கட்டுரையைக் கண்டிப்பாக தீபாவளி இதழில் மட்டுமே பிரசுரிக்க முடியும். அந்தக் கெடு தாண்டி விட்டால், பிரசுரத்துக்கு ஏற்கப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

பொதுவான கவிதை, கதை, கட்டுரை என்றால் மூன்று மாதம் வரை பொறுத்துப் பார்க்கலாம். வரவில்லை என்றால் ஒரு ஃபோன் அடித்து விவரம் தெரிந்து கொள்ளலாம். இருந்தாலும், அஞ்சல் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட கவரை இணைத்து அனுப்பினால் பிரசுரத்துக்கு ஏற்கப்படவில்லை என்றால்

அனுஜா நடராஜன்

உடனே திருப்பி அனுப்பிவிட வசதியாக இருக்கும்.

மீனா ரெங்கநாதன், மேற்கு மாம்பலம்.

அந்தக் காலத்தில் நீங்கள் காத்திருந்து, தவித்து, ரசித்த தொடர்கதை எது?

எழுத்தாளர் சுஜாதாவின் அனைத்துத் தொடர்களையுமே அப்படித்தான் படிச்சிருக்கிறேன். 'கொலையுதிர்க் காலம்', 'கரையெல்லாம் செண்பகப்பூ' 'காயத்ரி', 'பிரி வோம், சந்திப்போம்', 'மாயா' 'வைரம்' போன்றவை இன்னும் ஞாபகத்தில் உள்ளன. கல்லூரியை விட்டு வரும்போதே, புத்தகக் கடையில் வாங்கி, வழியெல்லாம் படித்துக் கொண்டே வருவேன். ஒரு வேளை என் தங்கை வாங்கி வர நேர்ந்தால், அவள் புத்தகம் முழுக்க ஆற அமரப் படித்து விட்டுத்தான் தருவாள். அதுவரை கல்யாணப் பந்திகளில் இடம் கிடைக்காமல், மூடிய டைனிங் ஹால் கதவுகளுக்குப் பின்னால் ஒருசிலர் தவியாய்த் தவிக்கிற மாதிரி... நானும் தவிச்சிருக்கேன்!

எஸ். தனலக்ஷ்மி, பள்ளிப்பாளையம்.

இத்துடன் என் மகன் விவேக்கின் திருமணப் பத்திரிகை அனுப்பியுள்ளேன். அனுஷாவின் வாழ்த்து தேவை!

பேஷா! நீங்க என்ன செஞ்சாலும் 'செக்' பண்ணாத, என்ன பேசினாலும் 'கிராஸ்' பண்ணாத, உங்கள் வார்த்தையை 'டிஸ் ஆனர்' பண்ணாத, மருமகளாக அமைய வாழ்த்துகிறேன். (உங்கள் வருங்கால மருமகள் வங்கியில் பணிபுரிவதை நான் 'நோட்' செய்து விட்டதால் இப்படியொரு வாழ்த்து!)

எஸ். சுகுணசுந்தரி, சென்னை - 4.

'கலைஞர்' டீவியைப் பார்த்தீங்களா?

'சன்கலை' டீவியைப் பார்த்தேன்!

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : தீபாவளி ஸ்பெஷல் காரம்

கடைசி தேதி : 20.10.2007

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

கத்தியின்றி ரத்தமின்றி இருதய பைபாஸ் சிகிச்சை



Neomed Hospital

நியோமெட் மருத்துவமனையின் தலைமை டாக்டர்
மருத்துவ ஆலோசனை வழங்கும் இடம் மற்றும் தேதிகள்
சென்னை : பிரதி மாதம், பிரதி வாரம் திங்கள் முதல் வியாழன் வரை
சேலம் : அக்டோபர் 11, 12, 13 ஆகிய தேதிகளில்
மதுரை : அக்டோபர் 26, 27 ஆகிய தேதிகளில்,

வந்துவிட்டது. அறுவை இல்லா பைபாஸ் சிகிச்சை. அறுவை சிகிச்சை இன்றி நெஞ்சுவலி, மாரடைப்பு, இருதய பலவீனம் போன்ற பிரச்சனைகளை போக்கும் அற்புத மாற்று சிகிச்சை E.E.C.P (Enhanced External Counter Pulsation) / கிலேசன் சிகிச்சை (Artery Clearance Therapy). அமெரிக்கா, ஜெர்மனி போன்ற 26 நாடுகளில் வெற்றிகண்ட இந்த அறுவை இல்லா இயற்கை பைபாஸ் சிகிச்சையினால் சுமார் 18.5 லட்ச மக்கள் பயன் அடைந்துள்ளனர். இ.இ.சி.பி சிகிச்சை அமெரிக்காவில் உள்ள Food and Drug Administration (FDA) அங்கீகாரம் பெற்றுள்ளது. இச்சிகிச்சை முறை தற்போது இந்தியாவில் பல முன்னிலை மருத்துவமனைகளில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஓஸோன் / கிலேசன் சிகிச்சை சிக்கல் இல்லாதது. ஆனால் சிக்கனமானது. இந்த சிகிச்சைகள் மூலம் மேலும் Arteriosclerosis (Blocked Arteries) Arthritis, Stroke, Chronic Backpain, Parkinsonism, Cancer, Diabetic Gangerene and Foot Ulcers போன்ற நோய்களும் குணமாக்கப்படுகிறது. இதய சம்மந்தப்பட்ட நோய் உள்ளவரா நீங்கள்? தயக்கமின்றி நியோமெட் வாருங்கள். இ.இ.சி.பி / ஓஸோன் / கிலேசன் சிகிச்சை மூலம் நிவாரணம் பெற்று நிம்மதியுடன் வாழுங்கள்.

- 70% - 100% வரை இதய அடைப்புகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- வலி இல்லை.
- அறுவை சிகிச்சை இல்லை.
- நீண்ட நாட்கள் மருந்து இல்லை.
- மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.

The Zero Surgery Center

NEOMED HOSPITAL
CARE FOR BETTER LIVING

Consultation : Weekdays 9 am to 6 pm.

Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Chennai-600 040. Ph : 044-2620 1147 / 2620 0882.
Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Salem-636 007. Ph : 0427-2311818, 2311819.
Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Madurai-625 020. Ph : 0452-2581414, 2581515.
Fax : 2620 0631. www.neomedhospitals.com

முக்கால் பக்கக் கதை!

அம்மா!

''இன்னைக்கு ராதா ஊருக்குப் போகிறாள். அவளைப் பார்த்து விட்டு வருகிறேன்'' என கிளம்பினாள் கல்பனா.

''ம். சரி, சீக்கிரம் வந்துரு'' என்றான் கல்பனாவின் கணவன்.

''என்னடி, கிளம்பிட்டியா? உங்க அம்மாவுக்காக வாங்கின சாமானை எல்லாம் மறக்காமல் எடுத்து வச்சிட்டியா?'' என்றபடி ராதாவின் வீட்டுக்குள் நுழைந்தாள் கல்பனா.

''ம்... எல்லாம் ரெடி! பத்து நாள்ல வந்துருவேன். நீ அப்பப்ப என் வீட்டுக்கு வந்து போய்க்கிட்டு இரு'' என்றாள் ராதா.


இரண்டு மூணு நாள்தான் ஆனது. ராதா அவள் வீட்டு வாசலில் தெரிந்தாள்.

''ஏய், எப்ப வந்தே? ஏன் சீக்கிரம் வந்துட்டே? அம்மா கூட பத்து நாள் இருக்கப் போறேன்னு போனியே?'' என்றாள் கல்பனா.

''போனேன். எங்கம்மாவுக்கு என்னைப் பார்த்துப் பேசக் கூட நேரமில்லை. எப்பவும் டீ.வி. பார்த்துக்கிட்டே இருக்காங்க. எனக்கு இங்கே பசங்களை விட்டுட்டு இருக்க மனசாகலை. அதான் வந்துட்டேன்'' என்றாள் ராதா.

- சரோஜா மனோகர்,
விருதுநகர்.





ஆஹா 50!

கழிப்பறைகளில் ஓரச் சுவர்களில் நீளக் கம்பி ஒன்றைப் பொருத்தி வைத்தால் வீட்டில் உள்ள குழந்தைகளும், பெரியோர்களும் இக் கம்பியைப் பிடித்துக் கொண்டு மெதுவாக உட்காரவோ, எழுந்திருக்கவோ செய்வார்கள்.

- ஆர். பத்மா, சின்மயாநகர்



சொல்ல விரும்புகிறோம்

✉ கணபதி பூஜையில் கலந்து கொள்ளும் சமயத்தில் எல்லாம், அதற்கான முழுக் காரணத்தை அறியாது மனசஞ்சலப்படுவதுண்டு. எனது நீண்ட நாளைய சந்தேகத்தைப் போக்கியது 'கணபதிக்கு முதல் பூஜை' கட்டுரை.

திருச்சி - 18, வி. மோனிஷா பிரியங்கா.





✉ நைவேத்யம் - 64-ல் கூறியபடி வெல்லச் சீடை செய்தேன். மாவைப் போட்டவுடன் எண்ணெயில் சிதறி போர்ன்விடா போல் வரும்

பட்சண கைடு வருமா?

வெல்லச் சீடை, அழகாக, உருண்டு, கொள்ளை ருசியுடன் வந்தது. தீபாவளிப் பட்சணங்களுக்கும் இது போல் கைடு வருமா?

சென்னை - 4, சீனு. சந்திரா.

✉ 'ஜெயஸ்ரீராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டி' முதல் பரிசுக் கதை சுற்றுப்புறப் பாதுகாப்பை சமூக விழிப்புணர்வுடன் அணுகியது சிறப்பாக இருந்தது. பாராட்டு!

உடுமலைப்பேட்டை, எஸ். ஜானகி.

✉ சர்வஜித் பெண் சி. மகாலக்ஷ்மியின் வாழ்க்கை, சிறு கஷ்டத்தைக் கூட தாங்க முடியாமல் வாழ்க்கையில் விரக்தியடையும் பெண்களுக்கு நல்லதொரு தன்னம்பிக்கை டானிக்!

வேலூர் - 6, நா. கற்பகம்.

✉ 'ஏ.வி. பலன்' சிறுகதையில் முடிவை வாசகர்களின் கையில் கொடுத்து ஒரு அசத்து அசத்தி விட்டார் ஆசிரியர் ஹேமலதா சுகுமாரன்.

லால்குடி, எல். ஜெஜலெக்ஷ்மி ராஜேந்திரன்.

✉ எது நல்ல கதை என்று இவர்களிடம் கேட்டால்... தமாஷ் கற்பனை ஜோர்.

திருவான்மியூர், புவனேஸ்வரி ராமன்.

✉ கண்ணில் நீர் வரும்படி நவீன தசரதர்கள் கவிதை எழுதியுள்ளார் மீனாட்சி சூர்யநாராயணன்.

சென்னை - 91, பி. பிரேமா.

✉ குட்டீஸ் ஜூட்டியில் 'கரும்பு காயா, பழமா?' என்ற கேள்வியை எழுப்பியிருந்தார், ஒரு சகோதரி. கரும்பு ஒரு புல் வகை. மூங்கில் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆக, கரும்பு காயுமல்ல, கனியுமல்ல; தண்டு!

திருநெல்வேலி, ப. மீனாட்சி.

✉ இறைவனின் சக்தியே மங்கை. மங்கையர் மதிப்புடன் மங்களகரமாக வாழ வழிகள் சொல்லும் மங்கையர் மலர் என்றும் வாழ்க!

சேலம்-5, மங்களம் நாகராஜன்.

தசரா, தீபாவளி கலெக்ஷன்ஸ்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் - என்பது பழைய மொழி! மெகா சில்க் காட்டன் கடைக்கு - நான்கு ரக கலெக்ஷனே பதம் என்பது பிரசாந்தியின் புடைவை மொழி! (விவாஹம், வைபோகம், நித்யம், ப்ரியம்)

விவாஹம் கலெக்ஷன் : இந்தப் பண்டிகை சீஸனுக்கு என்றே, கோத்து வாங்கிய புடைவையில் (கோர்வை) ஜகார்டு வேலைப்பாடு செய்து, விதவிதமாக அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதிலும் வைர ஊசி, டிஷ்யூ, புட்டாஸ், ஜரிசெக்ஸ் என எண்ணற்ற ரகங்கள். நிறங்கள்? அதுதானே பிரசாந்தியின் எக்ஸ்க்ளூசிவ் டேஸ்ட்! மஷ்ரூம் ஷேட், மீராஜாஸ்மின் ப்ளூ, மெஜந்தா, பேரட் க்ரீன் என புதியப் புதிய நிறங்களில் நெஞ்சை அள்ளும் டோரியா, மீனாகாரி பார்டர்கள்...



ப்ரியம் கலெக்ஷன் : பளபளப்பான, வண்ண வண்ண குந்தன் ஸ்டோன்ஸ் பதிக்கப்பட்டு, அழகிய த்ரெட் வர்க் செய்து, ஆஹா... என்ன ஒரு ரிச் லுக்? பாட்டில் க்ரீன், டபுள் ஷேட் மெஜந்தா, கடல் நீலம் போன்ற நிறங்களில், பாவன்ஜி ஃப்ளாரல் பார்டர்களுடன், அடடே!

ப்ரிண்டட் ஃபேன்டஸி : மினுமினுப்பான சில்க் காட்டனில், 'லாங்' பார்டர்கள் இருப்பதோடு அதிலேயே லவ்லி ப்ரிண்டுகளும் இருந்தால், அடேயப்பா... என்ன ஒரு வசீகரம்? உயரமான இளம் பெண்கள் டஜன் கணக்கில் அள்ளிக் கொண்டு போகிறார்கள்.

சிம்ப்ளி கிராண்ட் (வைபோகம்) : பாரம்பரியமும் புதுமையும் கைகுலுக்கிக் கொண்டதன் கற்பனை வடிவம்தான் சிம்ப்ளி கிராண்ட் ட்ரெடிஷனல் சாரீஸ்... ஆத்தி வாழைப் பூ டிஸைன், பாலும் பழமும் கட்டம், செட்டிநாடு கோடு, வேல்தாரி என பழைமையான டிஸைன்கள் எல்லாம் பிரசாந்தியின் சில்க் காட்டனில் 'ஜில்' என்று புது வடிவம் எடுத்துள்ளன.

என்ன பண்டிகை பர்சேஸுக்கு ரெடியா?

தொடர்பு எண் : 044-2499 1850, 2499 7636



பண்டிகை ஸ்பெஷல் - 2



* ஒற்றைக்கால் தவம்



தவம் செய்யும் வங்கத்து சரஸ்வதி!

கொல்கத்தாவிலிருந்து இரண்டு மணி நேரப் பயணத்தில் இருக்கும் அரிய கலைக்கோயில் ஹன்ஸேஸ்வரி திருக்கோயில். பான்ஸ் பெரியா (Bansberia) என்ற மூங்கில் காட்டுப் பகுதியில் உள்ள இந்த சரஸ்வதிக் கோயிலின் தலவரலாறு மிகவும் பழமைவாய்ந்தது.

ராகவேந்திர தத்தா என்ற ஜமீன்தார் பரம்பரையில் வந்தவர் நரசிங்கதேவ். ராகவேந்திர தத்தா, ராமேஷ்வர் தத்தா, ரகுதேவ் என்ற இவருடைய முன்னோர்கள் தம் நிர்வாகத் திறமைக்காக, முறையே ஷாஜஹான், ஔரங்கசீப், வங்காள நவாப் போன்ற ஆட்சியாளர்களிடமிருந்து விருதுகளும், வெகுமானங்களும் பெற்றவர்கள். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த நரசிங்கதேவ் வடமொழி, அரபி, பெர்ஷியன், உருது, ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலமை பெற்று விளங்கியவர். மருத்துவ விஞ்ஞானத்தில் 'உத்திஷ் தந்த்ரா' என்ற வங்காள மொழி நூலை இயற்றி மருத்துவ உலகிற்கு ஓர் அரிய பொக்கிஷத்தை அளித்தவர்.

ஆன்மிகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த துர்க்கை பக்தரான இவர், 1788ம் ஆண்டில் துர்க்கைக்கு ஒரு கோயிலை உருவாக்கினார். மனதை ஒருமைப் படுத்துவதன் மூலம் காளிதாசனைப் போல், தெனாலிராமனைப் போல நேரிலேயே துர்க்கையை தரிசனம் பண்ண முடியும் என்ற நம்பிக்கையில் பல பயிற்சிகளை எடுத்துக் கொண்டார். ஒரு நாள் துர்க்கையை தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்.

''உன் பக்தியால் ஈர்க்கப்பட்டு உன் முன்வந்திருக்கிறேன். நான்தான் ஹன்ஸேஸ்வரி'' என்று சிறு பெண் வடிவமாக துர்க்கை வந்து சொன்ன போது அப்படியே மெய்மறந்து போனார்.

தான் கண்ட சிறு பெண் உருவி

* ஹன்ஸேஸ்வரி கோயில் முகப்பு



லேயே துர்க்கையை ஸ்தாபித்து ஒரு கோயிலை உருவாக்கினார். படகுகள் மூலம் கற்களையும், கட்டுமானப் பொருள்களையும் கொண்டு வந்து 1801ம் ஆண்டு முடிக்கப்பட்ட இந்தக் கோயில் ஹன்ஸேஸ்வரி கோயில் என பிரசித்தி பெற்றது.

ஆன்மிகச் சேவையின் நிறைவில் அவர் விண்ணுலகம் எய்தியபோது, அவருடைய முதல் மனைவி உடன் கட்டை ஏறினார். ஆனால் இரண்டாவது மனைவி கணவரின் ஆன்மிகச் சேவையைத் தொடர எண்ணம் கொண்டு கோயிலிலேயே மனதை ஒருமுகப்படுத்தும் தியானப் பயிற்சிகளைக் கற்றுத் தரும் கல்விச் சாலையை நிறுவினார். மனித உடலில் தோன்றும் 'ஷத்தந்த்ரா' என்ற மெய்ஞானத்தை உணர்த்தும் நோக்கில் கட்டப்பட்டதுதான் இந்த ஆலயம்.

இக் கோயிலில் உள்ள ஹன்ஸேஸ்வரி சிலையும் நமக்கு குண்டலினி சக்தியைத்தான் உணர்த்துகிறது. சயனத்தில் இருக்கும் மகாதேவனுடைய நெஞ்சிலிருந்து உருவான ஆயிரம் இதழ் தாமரையின் மீது, தேவியானவள், ஒற்றைக் காலில் நின்றபடி தவம் இயற்றும் அற்புத அழகுக் கோலம். 250 வருடங்கள் பழைமையான, வைரம் பாய்ந்த வேப்பமரக் கட்டையால் உருவான அம்மன் சிலை; தேவியின் வலதுபக்கத்தில் மஹிஷாசுரமர்த்தினி, இடப்பக்கம் ராதா கிருஷ்ணர் சிலைகள் அருள்பாலிக்கின்றன. துர்க்கா பூஜை (நவராத்திரி), தீபாவளி மற்றும் செவ்வாய், சனிக்கிழமைகளில் சிறப்புப் பூஜை நடத்தப்படுகிறது. பெண்கள் தம் கைகளாலேயே அன்னைக்கு அபிஷேகம் பூஜை செய்கிறார்கள்.


கோயில் அருகிலேயே டெரகோட்டா சிற்ப மண்டபம் இருக்கிறது. இங்கு ஓவியப் பயிற்சிக்கு வரும் மாணவர்கள் ஹன்ஸேஸ்வரி சன்னிதானம் முன்பு அமர்ந்து தியானம் செய்த பிறகே கலைப்பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். புதிதாகப் பள்ளியில் சேரும் குழந்தைகளை இங்கு அழைத்து வந்து பூஜை செய்த பிறகே பள்ளிக்கு அனுப்புகிறார்கள். கொல்கத்தா நகரப் பள்ளிகளில் இருந்து குழுக்களாக மாணவர்கள் வந்து தியானம் பழகுவதைக் காணலாம். ஹன்ஸேஸ்வரி முன் அமர்ந்து மன ஒருமுகப் பயிற்சி பெறும் மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் பெருமிதத்திற்குரிய வெற்றிகளை பெறுகிறார்கள் என்று அறியும் போது வங்கத்து சரஸ்வதி ஹன்ஸேஸ்வரி தேவியின் மகிமை புரிகிறது.

- பத்மா கலைமணி,
கொல்கத்தா.

"இனப் பெருக்கத்தின் ஆதாரமே பெண்களின் கருப்பைதான்! மனிதகுலம் தழைத்தோங்கி வருவதும் கருப்பையால்தான்!

கோயிலில் தெய்வம் உறையும் கருவறை எவ்வளவு புனிதமானதோ, அதே அளவு பெண்களின் கருவறையும் புனிதமானது. அதைக் காத்து, ஆரோக்யமாக வைத்திருப்பது நம் கடமை" என்கிறார் ஈரோடு, மாருதி மெடிக்கல் சென்டர் அண்ட் ஹாஸ்பிடல்ஸ் மகப்பேறு மருத்துவர் டாக்டர். நிர்மலா சதாசிவம்.

குழந்தையின்மை சிகிச்சைத் துறையில் பிரபலமாக விளங்கும் இவர், கருப்பை நோய்கள், சிகிச்சை முறைகள் பற்றித் தெளிவாக விளக்குகிறார்.



தாய்மையின் உயிர்ப்பீடமாகிய கருப்பையின் மொத்த நீளம் 7 செ.மீ.; அகலம் 5 செ.மீ., பருமன் 3 செ.மீ., ஆழம் 3 செ.மீ., முழுக்க முழுக்க தசைநார்களாலான இந்தக் கருப்பையின் மேற்பகுதி அகலமாகவும் கீழ்ப்பகுதி குறுகலாகவும் இருக்கும். குழந்தை, இந்தப் பையில் பதியமாகி வளரும் போது, கருப்பையும் பெரிதாகும்.

கருப்பையைத் தாக்கும் நோய்கள் :

★ பிறவிக் குறைபாடு : பெண் சிசுவானது, தாயின் கர்ப்பத்தில் இருக்கும் போதே, அதனுடைய கருப்பை ஒருசில நோய்களால் தாக்கப்படும் அபாயமிருக்கிறது.



"கோயிலுக்குப் போகணும்... வீட்டுல கல்யாணம் வருகிறது!" போன்ற காரணங்களால், மாதவிலக்கைத் தள்ளிப் போட நினைக்கும் பெண்களும், "இந்த மாதம் மாதவிலக்குத் தள்ளிப் போயிருக்கு. கர்ப்பமாயிடுவனோன்னு பயமா இருக்கு. இப்ப குழந்தை வேண்டாம்!" என்று முடிவு செய்யும் பெண்களும், தாங்களாகவே மருந்துக் கடைகளை அணுகி, ஏதேனும் ஒரு மாத்திரையை வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.

இது ரொம்பவே தவறானது.

இவர்கள், மகப்பேறு மருத்துவரை அணுகினால், அவர்கள் குறைந்தபட்ச பக்க விளைவுகள் கொண்ட மருந்தை கவனத்துடன் தேர்ந்தெடுத்து சிபாரிசு செய்வார்கள். தாமாகவே சுய மருத்துவம் செய்து கொண்டால், பெண் சிசுவின் கருப்பையின் வளர்ச்சி பாதிப்படையக்கூடும்.

டாக்டர் நிர்மலா சதாசிவம்

கருப்பை பாதுகாப்பு!



★ ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து, கொசு மருந்துப் புகை, தொழிற் சாலைகளின் மாசு, ரசாயன சாயங்கள் போன்றவை புழங்குமிடங்களை கர்ப் பிணிப் பெண்கள் கட்டாயம் தவிர்க்க வேண் டும்.

★ அடுத்ததாக மரபணு சார்ந்த கருப் பைக் கோளாறுகள். இதை 'mullerian dysgenesis' என்போம்.

ஹைபோபிளாஸ்டிக் யூட்ரெஸ் எனப் படும் குறை வளர்ச்சியடைந்த கருப்பை, செப்டேட் யூட்ரஸ் எனப்படும் தடுக்கமைந்த கருப்பை, இரட்டைக் கருப்பை, கூம்புக் கருப்பை, பைகார்னுயேட் யூட்ரஸ் எனப் படும் சுவர்க் கூம்புக் கருப்பை போன்ற பிறவிக் குறைகளால் கருப்பை பாதிக்கப் பட்டிருக்கும்போது, அவற்றை அறுவை சிகிச்சை மூலம் சரிசெய்ய வேண்டி யிருக்கும்.

சில பெண்களுக்கு கருப்பையே இல்லா மல் போய்விடும். கருப்பை இருக்க வேண் டிய இடத்தில் வெற்றிடம் மட்டுமே காணப் படும். இவ்வகை பிரச்னைக்கு, 'வாடகைத் தாய்' முறையில் மட்டுமே குழந்தைப்பேறு அடைய முடியும்.

ஒருசிலருக்கு அரைகுறை வளர்ச்சி இருக்கும். இவர்களுக்கு ஹார்மோன் மருந்துகள் மூலம் கருப்பையைப் பெரி தாக்கி, கருத்தரிக்கச் செய்யலாம். ஒருசில பெண்களுக்கு இடைச் சுவருடன் செப்டம் உருவாகி, கருத்தரிக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கும். இவர்களுக்கு ஹிஸ்ட ரோஸ்கோபி மூலம் இடைச்சுவரை நீக்கி, கருத்தரிக்க உதவலாம்.

✱ கருப்பையைத் தாக்கும் தொற்று வியாதிகள்

புதிதாகத் திருமணமானப் பெண்களுக்கு 'பெல்விக் இன்ஃபெக்ஷன்' எனப்படும் தொற்று சகஜமாக ஏற்படும். அடிவயிற்று வலியுடன், ஜுரம், வெள்ளைப்படுவது போன்ற அறிகுறிகளும் இருக்கும். இதற்கு ஆன்டி-பயாடிக் கொடுத்தாலே போதும். குணமாகிவிடும். ஆனால் அசிரத்தையாக இருந்தால், நாளடைவில் 'சைனக்யே'

எனப்படும் ஒட்டுச்சதை உருவாகி, கருத் தரிப்பை தடைசெய்யும். அதன்பின், ஹிஸ்ட்ரஸ்கோபி மூலம்தான் நிவாரணம் பெற முடியும்.

✱ கர்ப்பப்பை வாய்ப்புண்

இது நாற்பதைக் கடந்த பெண்களி டையே அதிகம் காணப்படுகிறது. கடுமை யான முதுகுவலி, வெள்ளைப்படுதல் போன்ற அறிகுறிகளுடன் வருவார்கள். பாப்ஸ்மியர் (pap smear) பரிசோதனை செய்து, ஆறக்கூடிய புண்ணா, புற்றுநோயாக மாறக்கூடியதா எனக் கண்டறிந்து, அதற்கேற்ப சிகிச்சை தரவேண்டும்.

✱ கர்ப்பப்பை காசநோய்

நோய் எதிர்ப்புசக்தி குறைந்த பெண்களி டையே காணப்படும் இந்நோய் இருந்தால் நிச்சயம் மலட்டுத் தன்மையும் இருக்கும். பொதுவாக, நுரையீரல் காசநோய்க்கு என்னென்ன சிகிச்சை முறை கடைப்பிடிக் கப்படுகிறதோ, அவையே கர்ப்பப்பை காசநோய்க்கும் தரப்படும்.

இவை தவிர, நார்திசுக் கழலைகள் (Fibroids) நீர்க் கழலைகள் (polyps) அடினோமையோஸிஸ் (கருப்பைச் சுவரின் தசைகள் அளவுக்கு அதிகமாக வளர்வது) போன்ற பிரச்னைகளும் கருப்பையில் உருவாகின்றன.

ஃபைப்ராய்டுகள் கருப்பையை பாதிக் கிற அளவில் இருந்தால், மைக்ரோ சர்ஜரி மூலம் பாதிப்பில்லாமல் அகற்றிவிட்டு, கருப்பையைச் சுத்தப்படுத்தலாம்.

நீர்க்கழலைகளை டி அண்ட் சி முறை யில் சுத்தப்படுத்தலாம். அடினோமை யோசிஸுக்கு, லேபராஸ்கோபி, மைக்ரோ சர்ஜரி மூலம் குணப்படுத்தி விடலாம்.

கருப்பை நோய்கள் வராமலிருக்க என்ன செய்யணும்?

★ ரத்த சோகை வராமல் காத்துக் கொள்ள வேண்டும். இரும்புச்சத்துமிக்க உணவைச் சாப்பிட வேண்டும். பருவமெய்திய பெண் களுக்கு அயர்ன் ஸிரப், யூடரைன் டானிக் போன்றவற்றை சிபாரிசு செய்கிறோம்.

★ மாதவிலக்கு சமயத்தில் மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். உலர்ந்த, சுகாதாரமான நேப்கின்களைப் பயன்படுத்த வேண்டும்.

★ உடலுறவுக்கு முன்னும் பின்னும் அந்தரங்க உறுப்புகளை சுத்தமாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.

★ பூப்படைந்த பெண்களுக்கு ஆன்டி-ரூபெல்லா தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும். இதனால் கருப்பையைத் தாக்கும் வைரஸ் கிருமிகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்.

★ 'பாபிலோமா வைரஸ்' எனப்படும் கிருமிகள் தாக்குவதால்தான் கருப்பை புற்றுநோய் உருவாகிறது. எனவே 20 -35 வயதுக்கு உட்பட்ட பெண்கள் இதற்கென உள்ள பிரத்யேக தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால், எதிர்காலத்தில் கருப்பை புற்றுநோய் வராது காக்கலாம். வெளிநாடு களில் பிரபலமாக இருக்கும் இந்தத் தடுப்பூசி விரைவில் இந்தியாவிலும் அறி முகப்படுத்தவுள்ளது. நிச்சயம் இது பெண் களுக்கு வரப்பிரசாதமாக அமையும்!

(அடுத்த இதழில் கருத்தரியாமை ஏன்?)



கல்யாண செட்டில் மணப் பெண் (அ) மாப்பிள்ளை பொம்மைகளில் ஏதேனும் ஒன்று உடைந்து விட்டால் கவலை வேண்டாம். மஞ்சள் நீராட்டு விழா என்றோ, மாப்பிள்ளை அழைப்பு என்றோ சொல்லி விடலாம்.

- சங்கரி வெங்கட்,
பெருங்களத்தூர்.




பெண் மனம்

"என்னங்க! இது எவ்வளவு அழகாயிருக்கு பாருங்களேன்" என்று வசந்தி என்னை அழைத்ததும், கடைக்கு வெளியில் நின்று கொண்டிருந்த நான் உள்ளே நுழைந்தேன். அடிக்கடி சுந்தரா ஹாலில் நடக்கும் கலைப்பொருள் கண்காட்சிதான் அன்றைக்கும் நடந்து கொண்டிருந்தது. 'ஆர்ட் பீஸ்' என்ற பெயரில் ஏகவிலைக்கு விற்கும் பொருட்களை ரசிக்கும் மனோபாவமும், அவற்றை வாங்கும் எண்ணமும் எனக்கு என்றுமே இருந்ததில்லை. அதனால்தான் உள்ளே நுழைய விருப்பமின்றி வெளியே நின்றிருந்தேன்.

ஆனால் வசந்தி அதற்கு நேர்மாறானவள். எதைப் பார்த்தாலும், "இது எவ்வளவு அழகாயிருக்கு? இதை வாங்கட்டுமா?" என்பாள் கெஞ்சலாக! நான் உள்ளே நுழையும் வரையில் பொறுக்காத அவள், என்னை இழுத்துக் கொண்டு சென்று அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பீங்கான் சட்டியைக் காட்டினாள். வழக்கமாகத் தென்படும் பூந்தொட்டி போல் இல்லாமல், அது மிக அகலமான வாயகன்ற பீங்கான் சட்டியாகக் காணப்பட்டது. பளீரென்ற வெண்மை நிறத்தில், நீலவண்ணப் பூக்களும், இலைகளும் வரையப்பட்டிருந்த அந்தப் பீங்கான் சட்டி அவளை மிகவும் கவர்ந்து விட்டது. வழக்கமாக இதெல்லாம் காசுக்குப் பிடித்த கேடு என்று எண்ணும் நானே அதன் அழகை, மென்மையை ரசித்தேன்.

"செம அழகு இல்லீங்க!" என்று அவளது விழிகள் வியப்பில் அகல விரிந்தது இன்னும் அழகாக இருந்தது. "மேடம்! இது அபூர்வமான சைனீஸ் பௌல்! ஒரிஜினல் சைனா போர்சலின் மெட்டீரியல்! ரொம்ப ரேர் பீஸ்!" என்று அவளை உசுப்பி விட்டார் சேல்ஸ்மேன்.

"என்னங்க! பெரிய கடை



எஸ்.லக்ஷ்மி

களிலே பார்த்திருக்கீங்களா? வாசல்ல பெரிய பௌல் வைச்சுத் தண்ணீர் விட்டு, ரோஜாப்பூ மிதக்க விட்டிருப்பாங்க. அது மாதிரி நம்ம வீட்டிலேயும் செய்யணும்னு ரொம்ப நாளா எனக்கு ஆசை!'' என்று கூறியவளை நோக்கி,

''வசந்தி! பித்தளை பௌல் வைச்சு, தண்ணி விட்டு பூ மிதக்கறதைப் பார்த்திருக்கேன்! ஆனால் இது பீங்கான் ஆச்சே!'' என்றேன்.

''இருந்தா என்ன?'' என்றவள், ''பித்தளை கறுத்துப் போகும். இது என்னிக்கும் நல்லாயிருக்கும். என்னங்க! இப்பவே இதை வாங்கித் தர்றீங்களா?'' என்று பஞ்சு மிட்டாய் வாங்கித் தரச் சொல்லிக் கெஞ்சும் சிறுமியைப் போல் இமைகள் பட படக்க அவள் கேட்க,

''நீ கேட்டு ஏதாவது இதுவரை வாங்கித் தராம இருந்திருக்கேனா? ஆனா இப்ப வேண்டாம்.

"அவள் கேட்டது எதையும் வாங்கித் தராமல் நான் இருந்ததில்லை. அவள் முகம் வாடினால் என் உடல் பதறும். அவள் கண் கலங்கினால் என் நெஞ்சில் உதிரம் வடியும்."



கபாலீஸ்வரர் கோயிலுக்குப் போயிட்டுத் திரும்பி வரச்சே வாங்கலாம்'' என்றதும், அவளுக்கு ஒரே குஷி!

ஆனால் கோயிலுக்குச் சென்று விட்டுத் திரும்பி வரும்போது மிகவும் நேரமாகி விட, அந்த சைனீஸ் பௌலை அன்று வாங்க முடியாமல் போய் விட்டது. வீட்டுக்கு வந்ததும் அதையே சொல்லிச் சொல்லி வசந்தி புலம்பினாள். ''அது எங்கே ஓடிப் போயிடப் போறது வசந்தி, நாளைக்கே நான் வாங்கித் தரேன்!'' என்று சமாதானப் படுத்தினேன். ஆனால் மறுநாள் அதை வாங்க முடியாமல் போக, அதற்கடுத்த நாளே ஒரு திருமணத்திற்காக வெளியூர் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட, இவ்வாறு பல நாட்கள் தள்ளிப் போயின.

அவள் விரும்பிக் கேட்டதை அன்றே வாங்கியிருக்கலாம் என்று என்னை நானே நொந்து கொண்டேன். இத்தகைய சிறிய விஷயங்களில் கூட ஏமாற்றம் ஏற்பட்டால் வசந்தியால் தாங்க முடியாது. திருமணமாகிய ஏழு ஆண்டுகளில் அவள் கேட்டது எதையும் வாங்கித் தராமல் நான் இருந்ததில்லை. அவள் முகம் வாடினால் என் உடல் பதறும். அவள் கண்கலங்கினால் என் நெஞ்சில் உதிரம் வடியும். ஏனெனில், திருமணமானவுடன் பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் கிட்டும் மழலை பாக்கியம் அவளுக்கு ஏழு ஆண்டுகளாகியும் கிட்டவில்லை. அதனால் என்னால் வாங்கித் தரக்கூடிய எதுவாக இருந்தாலும், அதை அவளுக்கு வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். நானாவது ஆண்பிள்ளை. எனக்கென்று ஆபீஸ் ஒன்று இருப்பதால், குழந்தையில்லாத குறையை ஓரளவுக்கு என்னால் மறக்க முடிகிறது. ஆனால் நாள் முழுக்க தனி ஆளாக வீட்டைச் சுற்றி வளையவரும் அவள் நிலை எப்படியிருக்கும் என்று எண்ணி நான் வருந்தாத நாளில்லை.

முதல் ஓரிரண்டு ஆண்டுகள் அந்தக் குறையை நாங்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளாக ஆக அந்தப் பிரச்னை விஸ்வரூபம் எடுக்க, நாங்கள் டாக்டரை அணுகியபோதுதான், குறைபாடு அவளிடமில்லையென்றும், என்னிடந்தான் என்றும் தெரியவந்தது. ஆனால் அது தீராத பிரச்னையில்லை என்று தைரியம் கூறிய டாக்டர், ஏதோ மாத்திரைகளை எழுதிக் கொடுத்துத் தொடர்ந்து சாப்பிட்டு வரும்படிக் கூறினார்.

நிலைகுலைந்து போன என்னைத் தேற்றியது வசந்திதான்! ''குழந்தை பிறக்கவே பிறக்காதுனு டாக்டர் சொல்லலையே... எனக்கு நம்பிக்கை இருக்கு. விரைவில் அந்தப் பாக்கியம் கிட்டும்!'' என்று தைரியமூட்டினாள். ஆனால் வருடங்கள் உருண்டோடினவே தவிர, அந்தப் பாக்கியம் எங்களுக்கு இதுவரை கிட்டவில்லை. மழலைப் பாக்கியத்தை அவளுக்குத் தர இயலாத நான், அவள் மற்ற எதை விரும்பிக் கேட்டாலும், எப்பாடுபட்டும் நான் அவளுக்கு வாங்கித் தர முயன்று வந்தேன்.

வெளியூரிலிருந்து திரும்பியதும், முதல் வேலையாக சுந்தர ஹாலுக்குச் சென்று



ஆஹா 50!

பழைய மங்கையர் மலர் இதழ்களிலிருந்து வீட்டுக் குறிப்புகளைச் சேகரித்து ஒரு சிறிய புத்தகமாய்ப் போட்டு சென்ற வருடம் நவராத்திரியின் போது, விநியோகித்தேன். செம ஹிட்!

- பி. சாரதாம்பாள்,
சென்னை - 91.

அந்த சைனீஸ் பௌலை அநியாய விலை கொடுத்து வாங்கினேன். அடேயப்பா! அதைக் கண்டு அவள் அடைந்த சந்தோஷத்தைப் பார்க்க வேண்டுமே... அன்று முதல் அவளைக் கையிலே பிடிக்க முடியவில்லை. எங்கள் வரவேற்பு அறையில் ஒரு பிரதான இடத்தை அது பிடித்துக் கொண்டது. அன்று மாலை நான் ஆபீஸிலிருந்து திரும்பியதும், என்னை எதிர்கொண்ட வசந்தி, ''இங்க பாருங்க! இதிலே தண்ணி விட்டு வைச்சிருக்கேன். நீங்க உடனே போயி நிறைய ரோஜாப்பூ வாங்கிட்டு வாங்க!'' என்றாள்.

''இப்ப ரோஜா எப்படிக் கிடைக்கும், வசந்தி?'' என்று நான் கேட்க, ''அப்படியானால் மல்லிகை, முல்லை, அரளி எல்லாம் வாங்கிட்டு வாங்க!'' என்றாள். சரியென்று சொல்லிவிட்டுக் கிளம்பிய என்னை மீண்டும் அழைத்தவள், ''அப்படியே நடுவில் வைக்க ஒரு பெரிய தாமரை வாங்கிட்டு வாங்க. அதைப் பார்த்தால் ஒரு குழந்தை என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி இருக்கணும்'' என்றாள்.


மீண்டும் என்னை அழைத்தவள், ''கனகாம்பரம், வில்லி இதெல்லாம் கிடைச்சாலும் வாங்கிட்டு வாங்க... அப்புறம்...'' என்றதும்,

''கோயம்பேடு மார்க்கெட்டையே பெயர்த்து இங்கே கொண்டு வருகிறேன்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

அன்று முதல் அந்த பௌலுக்கு ஏக மரியாதை! தினமும் காலையில் அதில் தண்ணீர் ஊற்றுவதும், பூக்களை நிரப்புவதும், வீட்டுக்கு வருவோர் போவோருக்கெல்லாம் அதைக் காட்டுவதுமாக ஒரே அமர்க்களம்தான். அதில் தூசு, தும்பு படியாமல் தினமும் அதை வசந்தி துடைத்து வைப்பாள். எச்சரிக்கையாக இல்லாவிட்டால் அது கீழே விழுந்து உடைந்து விடுமோ என்ற பயத்தில், அதைத் துடைக்கும் பொறுப்பை வேலைக்காரியிடமோ, என்னிடமோ விடாமல் தானே செய்து வந்தாள். ''ஏதேது இதற்குக் கிடைக்கிற மரியாதை கூட எனக்குக் கிடைப்பதில்லையே!'' என்று நான் கேலி செய்வதுண்டு.

சில மாதங்கள் சென்றன. அவசரமாக நாங்கள் இருவரும் மும்பை செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரு வாரத்திற்குப் பின் வீட்டில் நுழைந்த எங்களுக்கு ஒரு சிறிய அதிர்ச்சி காத்திருந்தது. எங்கள் வீட்டு பால்கனியில் அழையாவிருந்தாளி ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் மட்டும் சும்மா வந்திருந்தால் பரவாயில்லை. தன் கணவனுடன் சேர்ந்து தங்கள் எதிர்கால வாரிசுக்காக ஏற்பாடு செய்திருந்தார்.

''ஐயோ! இந்தப் புறா நம்ம பால்கனியிலே முட்டையிட்டிருக்கு பார்த்தீங்களா?'' என்று வசந்தி சொன்னதும், ''முட்டையிட நம் வீட்டு பால்கனிதான் கிடைச்சுதா? மரத்திலே கூடு கட்டி முட்டையிடக் கூடாதா? தரையிலே குச்சிகளை அடுக்கி அதன் மீது முட்டையிட்டிருக்கு பாரேன்!'' என்றேன் எரிச்சலுடன். ஆனால் வசந்தியோ, ''புறாவுக்குக் கூடு கட்டத் தெரியாதுங்க. வீட்டுக்



ஆஹா 50!

நவராத்திரி வந்து விட்டதே! வாழைப் பழங்கள் மீந்து விட்டனவா? அடிகனமான பாத்திரத்தில் இரண்டு ஸ்பூன் நெய் விட்டு வாழைப் பழத்தை மசித்து வெல்லப் பொடி போட்டு, சுருளக் கிளறவும். ஏலம் சேர்க்கவும். வாழைப்பழ ஜாம் உடனே காலியாகி விடும்.

– ஜானகி மணியன், நெருள்.

குள்ளேதான் முட்டையிடும். ஆனா தெரியாம நம்ம கால் பட்டா முட்டை உடைஞ்சிடுமே...'' என்று கவலைப்பட்டாள்.

''முட்டையைத் தூக்கி வெளியே எறிஞ்சுடலாமா?'' என்று நான் கேட்டதும் அப்படியே வசந்தி துடித்துப் போனாள்.

''தயவுசெஞ்சு அப்படி எதுவும் செஞ்சிடாதீங்க. முட்டை காணாமப் போனா, தாய்ப்புறா இந்த இடத்தைச் சுத்தி சுத்தி வந்து அழும். வேண்டாங்க. அது மகாபாவம். அதுக்கு நம்ம கால் பட்டு மிதிபடாம ஒரு கூடு கட்டிக் கொடுத்துடுங்க'' என்றாளே பார்க்கலாம்.

''சரிதான்! இந்த வேலை வேறயா?'' என்று அலுத்துக் கொண்டே, ஒரு காலி அட்டைப் பெட்டியை வைத்து அதற்குள் முட்டையை வைத்தேன். நான் அருகில் சென்றதும் பயந்து சிறகடித்துப் பறந்த தாய்ப் புறா, மீண்டும் பெட்டிக்கருகில் வந்தது. ஆனால், இறங்காமல் பயந்து போய்த் தள்ளி நின்றது.

''தாய்க்கு முட்டை மேலே உக்காந்து அடை காக்கணுங்க. ஆனா அது இந்தப் பெரிய பெட்டியிலே இறங்கவே பயப்படுது. வேறு ஏதாவது ஏற்பாடு செய்யுங்க!'' என்றாள் வசந்தி.

சிறிய வாய்திறந்த தகர டின்னை ஒன்றை எடுத்து வைத்து முயற்சி செய்தேன். ஊஹூம்! தாய்ப்புறா அதற்குள்ளும் இறங்க பயந்தது. பழைய பிளாஸ்டிக் கப், பிளாஸ்டிக் டப்பா, ஹெல்மெட் என்று ஒவ்வொன்றாக முயற்சி செய்தும், தாய்ப்புறா அவற்றுள் இறங்காமல் பரிதாபமாக நின்றது.

''சரி! வேறே வழியில்லை. நான் ஒண்ணு செய்றேன்'' என்று கூறிய வசந்தி, நேராகச் சென்று தன்னுடைய சைனீஸ் பௌலை எடுத்து, அதிலிருந்த தண்ணீரையும், பூக்களையும் கொட்டி விட்டு, ''இந்தாங்க! இதுக்குள்ளே அந்த முட்டையை எடுத்து வையுங்க!'' என்றாள்.

''உனக்குப் பைத்தியமா வசந்தி? எத்தனை ஆசையா அதைப் பொத்திப் பொத்தி வைச்சிருக்கே. அதைப் போய்ப் பாழாக்கப் போறியா?'' என்று கத்தினேன்.

பதில் பேசாமல் அவளே அந்த முட்டையைத் தன் கையால் எடுத்து பௌலுக்குள் வைக்க, இதுவரை தயங்கிக் கொண்டிருந்த தாய்ப்புறா, குறைந்த உயரமும், அகன்ற வாயும் கொண்ட பௌல்தான் தனக்குப் பொருத்தமானது என்று உணர்ந்து, சொகுசாக உள்ளே இறங்கித் தன் முட்டைகளின் மீது அமர்ந்து கொண்டது.

''நீ செஞ்சது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலை வசந்தி!'' என்று நான் கோபிக்க, கண்ணீர் மல்கும் கண்களுடன் புறாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

''போனாப் போகுதுங்க. எனக்குக் கிடைக்காத பாக்கியம் அதுக்குக் கிடைச்சிருக்கு. போன பிறவியிலே என்ன பாவம் செஞ்சேனோ, இப்படி நான் குழந்தையில்லாமத் தவிக்கிறேன். அதுவாவது தன் குஞ்சுகளோட இந்த வீட்டிலே சந்தோஷமா வாழட்டுங்க!'' என்றவள் திடீரென்று உடைந்து போய்க் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள். ●



சர்வ அலங்கார சந்தன பொம்மை!

பெங்களூரைச் சேர்ந்த 80 வயது சாவித்ரம்மா, நவராத்திரி கொலுவுக்குப் பட்டாடை, நகைகளுடன் அலங்கரிக்கப்பட்ட தெய்விக சந்தன பொம்மைகளைத் தயாரித்து அளிக்கும் பணியில் கடந்த 60 ஆண்டு களாக ஈடுபட்டிருக்கிறார். குறிப்பாக, இவருடைய மஹா விஷ்ணு, லக்ஷ்மி சிலைகள் பூஜை அறையிலேயே ஆராதிக்கப்படுகின்றன. இதுவரை அளிக்கப்பட்ட 6000 பொம்மைகள் நம் நாட்டில் மட்டுமின்றி இலங்கை, மத்திய கிழக்கு, மேலை நாடுகளில் ஷோகேஸ்களை அலங்கரிக்கின்றன.






சமீபத்தில் கர்நாடக முதல்வர் குமாரசாமி ஒரு ஜோடியைப் பெற்று வரவேற்பறையில் பிரதான இடத்தில் வைத்துள்ளார். முதலில் ஆயுதங்களால் பொம்மைகளைச் செதுக்கி, தேவைக்கேற்ப சிறு மாற்றங்களைச் செய்கிறார். உயர்ரகப் பட்டுத் துணிகளையும், மூக்குத்தி, கம்மல், நெக்லஸ் போன்ற தரமான நகைகளையும் தேர்ந்தெடுத்து வாங்கி, கச்சிதமான அளவுகளில் ஆடைகளை கைத்தையலாகத் தயாரித்து அணிவிக்கிறார். ஒரு பொம்மையைத் திருப்தியுடன் அலங்கரித்து முடிக்க 15 நாட்கள் வரை ஆகிறதாம்.

''இந்த வயதில் எனக்குத் துல்லியமான பார்வையையும், உடல் ஆரோக்கியத்தையும், குடும்பத்தினரின் ஒத்துழைப்பையும் அளித்த ஆண்டவனுக்கு இந்த ஆன்மிகப் பணி என் நன்றிக்கடன்'' என்கிறார் சாவித்ரம்மா.

- எஸ். சரோஜினி, பெங்களூரு - 72.

நன்றி : 'சப்போர்ட்'



ஆஹா 50!

உபயோகித்த கொசு 'மேட்'களை கொலுவில் மலை அமைக்கும் போது, படிக்கட்டுகளாகப் பயன்படுத்தலாம்.

- சங்கரி வெங்கட், பெருங்களத்தூர்.


சௌபாக்யா
சௌபாக்யா வந்த பிறகு நான்
ரொம்ப சோம்பேறி ஆகிட்டேன்னு
என் கணவர் சொல்றார்!
6 Years Warranty
Sakthi
SWATHI
maa
Shree
110v AVAILABLE FOR USA AND CANADA
www.sowbaghya.com
SOWBAGHYA®
AN ISO 9001:2000 CERTIFIED COMPANY
32A North Usman Road, T Nagar, Chennai - 600017
Tel: 044-28341760/28342908.
Branch Office: 5 Hasthinapuram Main Road,
Chrompet, Chennai. Tel: 22234420
Erode: 314 Perundurai Road, Erode. Ph: 0424 2260245/2269965
சௌபாக்யா இருக்கட்டும்... சௌபாக்யமும் கிடைக்கட்டும்...
ADSMITH

சென்ற இதழின் சுருக்கம்

திவ்யா, தனது பெற்றோர்களுக்கு ஒரே பெண்! தன் பெற்றோர் மீது அவள் வைத்திருந்த அளவுக்கடங்கா பாசம், திவ்யாவுக்கும் அவள் கணவன் சியாமுக்கும் இடையே பெரிய பிரச்னையாக விஸ்வரூப மெடுக்கிறது. புகுந்த வீட்டினரிடம் அவள் ஒட்டாமல் இருப்பதை சியாம் கண்டிக்கிறான். திவ்யாவின் போக்கு மாறியதா? இளஞ்ஜோடிகள் மீண்டும் ராசியானார்களா? படியுங்க மீதிக் கதையை...

சியாமுக்கு இது தெரியவந்ததும் அவன் ருத்ரமூர்த்தியானான். திவ்யாவுடன் எப்படியோ தொடர்புகொண்டு, "உங்கம்மாவை அப்பா பார்த்துக் கொள்வார். உடனே நம்ம, லாரி எங்க வீட்டுக்குப் போ. ஆனந்தி தனியாகத் திண்டாடுகிறாள். எங்கம்மாவும் உனக்கு உறவுதான். நாங்களும் உன் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. எங்கம்மாவைப் பார்த்துக் கொள்கிற கடமையும் உனக்கு இருக்கிறது."

"சியாம்!"

"ஷட் அப் திவ்யா. உடனே கிளம்பி வீட்டுக்குப் போய் ஆனந்திக்கு உதவியாக இரு. நீ இன்னும் ஒரு வார்த்தை பேசினால் கூட நான் பொல்லாதவனாயிடுவேன். நம் விவாகரத்துக்கு நீ தயாராக இருக்க வேண்டி வரும்."

பிறந்த வீட்டுப் பாசம்!

இன்னொரு சிறிய சம்பவம். சியாமின் மனத்தில் உறுத்தலாக அது நிலைத்தது.

சில மாதங்களுக்கு முன் வேலை நிமித்தம் சியாம் டில்லிக்குப் போக வேண்டி வந்தது. ஹரி பள்ளியில் சக மாணவர்களுடன் சுற்றுலா சென்றிருந்தான்.

தன் தாய்க்கு முதுகுவலி என்று பார்க்கப் போன திவ்யா அன்று வீடு திரும்பாமல் பெற்றோர்களுடன் தங்கி விட்டாள்.

அன்றைக்கு என்று பவானி குளியலறையில் வழுக்கி விழுந்து மயக்கமாகிவிட, வீடே அமர்க்களப்பட்டது. சின்னப் பெண்ணான ஆனந்தி திவ்யாவைத் தொலைபேசியில் அழைக்க முயன்று தொடர்பு கிடைக்காமல் அக்கம்பக்கத்தார் உதவியுடன் தாயை மருத்துவமனையில் சேர்த்தாள்.

ஆவேசம் வந்தது போல் அவன் கத்தியதும் திவ்யா உண்மையிலேயே பயந்து போனாள்.

அவன் சென்னை திரும்பியதும் அவள் விமான நிலையத்துக்கே வந்து பலமுறை மன்னிப்புக் கேட்டும் கோபம் தணிவதாக இல்லை.

புகுந்த வீட்டாரோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு பாசத்தையும் அன்பையும் அவர்களோடும் பகிர்ந்து கொள்வதில் தான் வாழ்க்கையின் அர்த்தமே அடங்கியிருக்கிறது. இந்த விதி ஆண்களுக்கும் பொருந்தும்தான். திருமணமாகி இரண்டாண்டுகளில் பலமுறை எடுத்துச் சொல்லியும் திவ்யா இன்னும் மாறாமல் அப்படியே இருந்தது சியாமுக்கு அலுப்பூட்டியது.

இதற்கு அவன் ஏதாவது செய்ய வேண்டும்.


லக்ஷ்மி ரமணன்

திவ்யாவை மாற்ற அவனுக்கு உதவக் கூடியவர்கள் அவள் பெற்றோர்கள் மட்டுமே.

சியாம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு அந்த நல்ல செய்தி வந்தது. சிங்கப்பூரிலுள்ள அவர்கள் தலைமைச் செயலகத்தில் சியாமுக்கு முக்கியமான பொறுப்பை அளித்து அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி பணித்திருந்தார்கள். இரண்டாண்டுகள் அங்கே தங்க வேண்டுமென்பதால் மனைவியையும் உடன் அழைத்துப் போகலாம். சியாம் தன் எம்.டி.யுடன் பேசி திவ்யாவுக்கும் சிங்கப்பூரில் வேலைக்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

"நீ இன்னும் ஒரு வார்த்தை பேசினால் கூட நான் பொல்லாதவனாயிடுவேன் விவாகரத்துக்கு நீ தயாராக இருக்க வேண்டி வரும்"



அர்ச்சனாவின் கணவனுக்கு அதே சமயத்தில் சென்னைக்கு மாற்றல் கிடைத்து விட்டதால், தன் தாய் தம்பி, தங்கையைப் பற்றியும் கவலை இல்லை என்றாகி விட்டது. அர்ச்சனா கணவனுடன் தங்கள் வீட்டிலேயே தங்கி அம்மாவையும், தம்பி, தங்கையையும் பார்த்துக் கொள்ளலாம்.

எல்லா ஏற்பாடுகளையும் கச்சிதமாகச் செய்து முடித்த பிறகே திவ்யாவிடம் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தான் சியாம்.

''சிங்கப்பூரா... குட்! போயிட்டு வாங்க'' என்றாள் அவள்.

''நீயும் என் கூட வரப் போறே.''

''நோ சியாம், என்னால முடியாது. எங்கக் கம்பெனி இலவசமா அறிவிச்ச வெளிநாட்டு ட்ரிப்பையே ஒதுக்கினவள் நான். உங்களுக்கே தெரியும். அம்மா, அப்பாவை விட்டுட்டு ரெண்டு வருஷம் எப்படி வருவேன்?''

''அடடே.... உங்கப்பாகிட்டே இதைப் பத்திச் சொன்னேன். ரொம்ப சந்தோஷப்பட்டார். உன்கிட்டே முக்கியமான விஷயம் ஏதோ பேசணும்னு சொன்னார்.''

''என்னவாம்?''

''ரொம்ப முக்கியமாம். உன்கிட்டேதான் சொல்வாராம்.'' சியாம் சிரித்தவாறு சொன்னான். திவ்யா துள்ளி எழுந்து டெலிஃபோனை எடுத்தாள்.

''ஹலோ... திவ்யாவா... சியாம் சொன்னார். நீயும் சிங்கப்பூர் போகப் போறது ரொம்ப சந்தோஷம்.''

''ச்ச்... அது இருக்கட்டும். நீங்க ஏதோ முக்கியமான விஷயம் சொல்லப் போவதாக சியாம் சொன்னார், அது என்ன?''

''திவ்யா... உன்னுடைய இத்தனை நாள் கவலைக்கும் முற்றுப்புள்ளி வைக்க நினைச்சுத்தான் இந்த முடிவெடுத்தோம்.''

''ஐயோ.. சுத்தி வளைக்காமே சொல்லுங்கப்பா.''

''எங்க தனிமையை நினைச்சு நீ கவலைப்பட்டு உன் குடும்பத்தாரை ஒதுக்குவதும், எதிர்காலத்துக்கான வாய்ப்புகளைப் புறக்கணிப்பதும், அதனால் உன் புகுந்த வீட்டார் அத்தனை பேரையும் அவதிக்குள்ளாக்குவதும் சரியில்லை. உனக்கு நாங்க தனியா இருக்கக் கூடாது. அவ்வளவுதானே? அதுக்கு ஒரு ஏற்பாடு செய்து விட்டோம்.

''உன் ஒன்றுவிட்ட அத்தை ஒருத்தி புருஷனால் கைவிடப்பட்டு தன் பிள்ளையோடு காப்பகம் ஒன்றில் இருந்தாளே, அவள் சமீபத்துல இறந்து விட்டாள். அந்தப் பிள்ளை சூர்யாவுக்கு இப்போ பன்னிரண்டு வயசு. அவனை நம்ம வீட்டுக்கு அழைச்சுக் கிட்டு வந்து சுவீகாரம் பண்ணிக்கலாம்னு இருக்கோம். அப்படிச் செஞ்சா அவனுடைய எதிர்காலத்துக்கும் வழி பிறக்கும்; எங்க தனிமையும் போயிடும். இல்லையா? உனக்கு உறவுன்னு சொல்லிக் கொள்ள ஒரு தம்பி கிடைப்பான். நீயும் சியாமும் கவலை இல்லாமல் சிங்கப்பூர் போகலாம். என்ன, சரிதானே?''

என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்து நின்றாள் திவ்யா.

(முற்றும்)

அன்பு வாசகியரே... இந்த நவராத்திரி நன்னாளில், நம் வீட்டு செல்லங்களுக்கு, இந்தக் கதையைப் படித்துச் சொல்லலாம்! ''இந்த உம்மாச்சிக்கு பதினெட்டு கைகள் ஏன்?''னு உங்க வீட்டுக் குழந்தை கேட்டால், 'டாண்'னு பதில் சொல்லலாமே!

மங்கள நாயகி மகிஷாசுரமர்த்தினி!



முன்னொரு காலத்தில் மகிஷன் என்ற கொடிய அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் கடுந்தவம் புரிந்து, "தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள், மற்றும் விலங்குகள் ஆகிய எந்த சக்தியின் மூலமும் எனக்கு மரணம் நேரக்கூடாது. எந்தப் பெண்ணிடம் எனக்கு இச்சை ஏற்படுகிறதோ அந்தப் பெண்ணால் மட்டுமே எனக்கு மரணம் நேரட்டும்'' என்ற வரத்தைப் பெற்று, மமதையுடன் வாழ்ந்து வந்தான்.

மகிஷாசுரனின் நடவடிக்கைகளால் தங்கள் உரிமைகளையும், உடைமைகளையும் இழந்த சூரியன்,

தனது பக்தர்களின் உள்ளங்களில் படிந்து கிடக்கும் தீய எண்ணங்களை அகற்றி, அகங்காரத்தை விரட்டி, பலவித நன்மைகளை அளித்து, இறுதியில் தன் திருவடிக் கமலங்களில் சேர்த்துக் கொள்வாள் தேவி என்பதுதான் இக் கதையால் நாம் அறிய வேண்டியது.

இப்படிப்பட்ட அளவற்ற ஆற்றல்மிக்க கருணைக் கடலான அன்னை மகிஷாசுரமர்த்தினிக்கு வேலூர், வாலாஜாபேட்டையில் உள்ள கீழ்புதுப்பேட்டையிலுள்ள தன்வந்த்ரி ஆரோக்கிய பீடத்தில் தனிச்சந்நிதி அமைந்துள்ளது.

ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி சாந்தசொரூபிணியாய் வீற்றிருப்பதும் வேறெங்கும் காண முடியாத தனிச் சிறப்பு. எட்டு அடி உயரம், நான்கு அடி அகலம் கொண்ட ஒரே கல்லால் ஆன தேவி, பத்தாயிரம் கி.மீ., கரிக்கோலப் பயணம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டு கண்கவர் தோற்றத்தில் அமைந்துள்ளாள். மகிஷாசுரமர்த்தினியின் புன்முறுவல் பூத்த இன்முக தரிசனத்தைக் கண்டாலே நம் துன்பங்களெல்லாம் பறந்து விடும்.

மரண பயத்தைப் போக்கி மாங்கல்ய பலத்தை அளிக்கும் மகிஷாசுரமர்த்தினியின் எழில் திருவுருவம் எழுந்தருளியுள்ள பீடத்தின் கீழே, நாடெங்கும் உள்ள பக்தர்கள் கைப்பட எழுதிய சுமார் 7 கோடி மந்திரங்கள் யந்திரங்களாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இந்த மகிஷாசுரமர்த்தினியை
ஓம் காத்யாயநாய வித்மஹே
கன்ய குமாரி தீமஹி
தந்நோ துர்கா பிரசோதயாத் :

சந்திரன், அக்னி, வாயு, யமன், நிருதி, வருணன், இந்திரன் ஆகியோர் மட்டுமின்றி முனிவர்களும், வேதவிற்பன்னர்களும் செய விழந்து துன்புற்றுத் திரிய நேர்ந்தது.

இந்நிலையைக் கண்டு மனம் வருந்திய பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும், அன்னை பராசக்தியால் தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த விசேஷ சக்தியால் ஓர் அழகான பெண்ணைச் சிருஷ்டித்தார்கள்.

பதினெட்டு கரங்களுடன் மாபெரும் சக்திவாய்ந்த பேரழகு தேவதை ஒருத்தி தோன்றினாள். மூவரும், தேவரும் தத்தமக்குரிய ஆயுதங்களையெல்லாம் அளித்தார்கள்.

மகிஷனுக்கு அந்தத் தேவியின் மீது அளவற்ற மோகம் ஏற்பட்டது. தனக்கு மனைவியாகி மகிழ்விக்குமாறு அந்தப் பெண்ணிடம் வேண்டி மன்றாடினான்.

கடுங்கோபம் கொண்ட தேவி, அவனுடன் போரிட்டு, இறுதியில் தன் சூலாயுதத்தால் அவனை வதம் செய்தாள்.

லக்ஷ்மி, துர்கை, சரஸ்வதி என்ற முப்பெரும் சக்திகள் இணைந்த தேவிதான் அப்பெண் என்பதை உணர்ந்த மகிஷன், தேவியிடம் வேண்டிக் கொண்டதன்பேரில், அவனது திருமுடியைத் தன் திருவடியில் கிடத்திக் கொண்டாள் தேவி. மகிஷனை வதம் செய்ததால் மகிஷாசுரமர்த்தினி என்ற பெயரைப் பெற்றாள். மகிஷனும் முற்பிறவியில் வரமுனி என்ற பெயருடன் சக்திவாய்ந்த தவசீலராக விளங்கியவன் என்பதால் தேவியின் திருவடியில் தன் சிரம் கிடக்கும் அரிய பேற்றைப் பெற்றான் என்பதும் குறிப்பிடத்தக்கது.



✱ சாந்தசொரூபிணி

என்ற மூலமந்திரத்தை உச்சரித்தபடி ஒன்பது முறை வலம் வந்து வணங்கினால் ரோகங்கள் நீங்கும். சோகங்கள் பறந்தோடும். சகல சௌபாக்யங்களும் நாடிவந்து கூடும்.

மகிஷாசுரமர்த்தினியின் பூஜையில் வைத்து எடுக்கப்படும் மாங்கல்ய சரடுகளை வாங்கி இங்கே உள்ள ஸ்ரீஇராகு, கேதுவுக்கு பின்புறம் உள்ள அரசமரம், வேப்பமரத்தில் கட்டிவிட்டால் தடைபட்டு நிற்கும் திருமணம் உடனடியாக நடக்கும். திருமணம் ஆன பெண்கள் தங்கள் மாங்கல்யத்துடன் கட்டிக் கொண்டால் தம்பதியிடையே அன்யோன்யம் ஏற்படும்.

“**ந**வராத்திரியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான அலங்காரங்களும், ஸகஸ்ரநாம அர்ச்சனையும் காண கண்கோடி வேண்டும். செவ்வாய்க்கிழமைகளில் மகாலக்ஷ்மி ஹோமம், குபேரலக்ஷ்மி ஹோமம், அமாவாசையில் மிருத்யுஞ்சய ஹோமம் செய்வது நல்ல பலன்களைத் தரும்'' என்கிறார் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்.

- கோமதி, வேலூர்.

இவை எல்லாமே ஆறா 50 தான்!



ரவா லாடு, கடலை மாவு லட்டு, பயத்தம் மாவு லட்டு செய்யும் போது, அரைத்த சர்க்கரையையும், நெய்யையும் ஒரு தட்டில் நன்றாகக் கலந்த பின், மாவை அதில் போட்டு உருண்டை பிடித்தால், மாவு சீராகக் கலந்து, லட்டு சுவையாகக் கரையும்.

- தஸ்மிலா அஸ்கர், கீழக்கரை.

கரையுதே லட்டு!

மாவிலையை சிறிது நேரம் தண்ணீரில் போட்டு வைத்துப் பிறகு தோரணம் கட்டினால் இலை கிழியாமல் துளை போடலாம்.

- எஸ். மகாலக்ஷ்மி சுப்ரமணியன், புதுச்சேரி.

வீட்டில் எக்ஸ்ட்ராவாக ஓரிரு பொம்மைகள் வைத்திருக்கவும். சில குழந்தைகள் கொலுப் படியில் உள்ள பொம்மை வேண்டும் என அடம்பிடித்தால் கொடுக்க வசதியாக இருக்கும்.

- ஜி.வி. சாந்தி, ஈரோடு.

சீமந்தம், வளைகாப்பு, ஆயுஷ்ஹோமம், கிருஹப்பிரவேசம் போன்ற சமயங்களில் குங்குமத்தைக் கரைத்து ஆரத்தி பண்ணக் கூடாது. அந்த வேளையில் சுண்ணாம்பைத் தேடி ஓடாமல், மஞ்சள் பொடியுடன் ஒரு சிட்டிகை சோப் பவுடரைக் கலந்து கரைத்தால் ஆரத்தி நல்ல நிறம் வரும். பண்டிகை நாட்களில் செய்யும் ஆரத்தியை குங்குமம் சேர்த்துத்தான் கரைக்க வேண்டும்.

- டாக்டர். வித்யா மூர்த்தி, பெங்களூர்.

சீரகத்தை வறுத்து ஊறப்போட்ட தண்ணீர் குளிர்ச்சியைத் தருகிறது. இதே போல் வெந்தயத்தை வறுத்து தூளாக்கி மோரில் சாப்பிட்டால் வெந்தயத்தில் உள்ள இரும்புச் சத்தும், மோரின் குளிர்ச்சியும் சேர்ந்து நல்ல புத்துணர்ச்சி டானிக் தரும்.

- ஏ. இந்திரா, ஈரோடு.

குத்து விளக்கு, காமாட்சி அம்மன் விளக்கின் மேல் நுனியில் மெல்லிய ரப்பர் பேண்டைச் சுற்றிப் பூ வைத்தால் கீழே விழாது.

- சி. தாமரைச்செல்வி, வீராணந்தல்.



பவழமல்லி

பவழமல்லியின் மற்றொரு பெயர் பாரிஜாதம். பவழநிறக் காம்புடன் மல்லிகை மலர் போல் வெண்மை நிறத்தோடு பூப்பதால் பவழமல்லி என அழைக்கப்படுகிறது. இதன் 'கமகம' நறுமணம் இது இருக்கும் இடத்தின் புனிதச் சூழலை மிகுதிப்படுத்தும். மாலையில் பூக்கும் இந்த மலர் காலையில் உதிரும் தன்மை கொண்டது. இந்த மலரை அன்னைக்கு வைத்து வழிபடுவதால், சமர்ப்பிப்பவரின் நியாயமான ஆசைகள் யாவும் நிறைவேறும். பவழமல்லியை மாலை போல் கோத்து அன்னை படத்திற்குச் சாத்தி வழிபட்டால், பவழமல்லி மலர்கள் ''என்னை மாலையாய்த் தொடுத்தவரின் நியாயமான ஆசையை நிறைவேற்று, தாயே'' என்று தாயின் செவிகளில் முறையிட்டு அந்த ஆசைகளை மிக விரைவில் நிறைவேற்றித் தரும்.

ஸ்ரீ அன்னை

திருப்பூர் கிருஷ்ணன்

அந்தக் கப்பல் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது. வெளியே சுகமான தென்றல் வீசியது. கப்பலில் இருந்தவர்கள் ஆனந்தமாகப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். எங்கும் உற்சாகம் கலந்த குரல்கள்! பாட்டுப் பாடிக் கொண்டிருந்த இளம்பெண்கள். சிரித்துச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள். வாலிபர்களின் மகிழ்ச்சிக் கூச்சல். நடுவயதுப் பெண்மணிகள் அரட்டை அடித்தவாறே ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்தார்கள். வயோதிகர்கள் தங்களின் இனிய மலரும் நினைவுகளை சக பயணிகளிடம் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

''இப்படித்தான் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த போது திடீரென்று புயல் வந்தது தெரியுமா? கப்பலில் இருந்த பொருள்களையெல்லாம் சூறாவளி சுருட்டி ஆகாயத்தில் வீசிய போது திக்பிரமித்துப் போனோம். நல்லவேளை. இரண்டே நிமிடத்தில் அந்தப் புயல் நகர்ந்து விட்டது.''

அந்த முதியவர் சில இளைஞர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். கடந்த காலத்தை வர்ணிக்கிறபோது என்ன இது, நிகழ் காலத்தில் அதே சப்தம்! கப்பலில் பயணம் செய்த அத்தனை பேரின் நெஞ்சங்களும் உறைந்தன.

திடீரென்று ஊழிக் காற்று ஆரம்பமாகியது.

அந்தக் கடும்புயல் இரண்டு நிமிடப் புயல் அல்ல; அது அரைமணி நேரத்திற்கும் மேலாகத் தொடர்ந்து வீசலாயிற்று. எல்லோரும் அச்சத்துடன் உள்தளத்திற்கு ஓடினார்கள். கப்பல் நிலையில்லாமல் ஆடியது.

காப்டன் அனைவர் முன்னாலும் சங்கடத்தோடு வந்து நின்றார். 'புயலால் அலைக்கழிக்கப்படும் கப்பல், கட்டுப்பாட்டை இழந்து விட்டது. எந்த நேரம் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்று அறிவித்தார். அடுத்தகணம் அழுகையும் கதறல்களும் எங்கும் எழுந்தன. இதுவே தங்கள் கடைசிப் பயணம் என்றெண்ணி முழந்தாளிட்டுச் சிலர் கடவுளைப் பிரார்த்தனை செய்யலாயினர்.

அந்தக் கப்பலில் தான் தன் ஸித்துக் கலைக் குருநாதர் தியோனோடு அல்ஜீரியாவிலிருந்து ஃபிரான்ஸ் தலைநகரான பாரீஸ் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார் மிர்ரா. எதனாலும் பாதிக்கப் படாமல் சாந்தமே வடிவாக அவர் அமர்ந்திருந்தார்.

''உங்களுக்கு அச்சமாக இல்லையா?'' என்று யாரோ கேட்டார்கள். ''இந்தக் கப்பலுக்கு ஒன்றும் ஆகாது. இறைவன் இதைக் காப்பாற்றி விடுவான்'' என்று புன்முறுவல் பூத்தவாறே தெரிவித்தார் அவர்.



தியோன், தன் சிஷ்யையான மிர்ராவைப் பார்த்து, ''மகளே! இறைவன் மேல் நம்பிக்கை வைத்துப் புயலை அடக்கு!'' என்று உத்தரவிட்டார்.

மிர்ரா அமைதியாக ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டார். அடுத்தகணம் அங்கே அவர் உடல் மட்டும்தான் இருந்தது. உயிர் உடல்கூட்டை விட்டுத் தற்காலிகமாகப் பிரிந்து விண்ணில் பறந்தது.

அவ்விதம் பறக்கும் போதே தன்னைச் சுற்றிக் கப்பலில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பார்த்துக் கொண்டே போனார் அவர். எத்தனை அழுகுரல்கள்! எத்தனை துன்பக் கதறல்கள்! குழந்தைகளின், பெண்களின், முதியவர்களின் அச்சமும் கவலையும் தோய்ந்த முகங்கள். இதெல்லாம் ஏன்? மனிதகுலம் நிம்மதியாக வாழ வேண்டாமா? ஆம்; மனிதகுலத்தை நிம்மதியாக வாழவைப்பதுதானே அன்னையின் குறிக்கோள்?

ஆகாயத்திற்குச் சென்ற போதுதான் அவருக்குப் புயலுக்கான காரணம் புரிந்தது. அங்கே சில உருவமில்லாத அருவங்கள் உக்கிரத்துடன் புயல் காற்றை உற்பத்தி செய்து கொண்டிருந்தன. காற்றை மறுபடி மறுபடித் தூண்டி பெரும்புயலாக அது வீசுமாறு அவை நிர்பந்தித்துக் கொண்டிருந்தன.

மிர்ரா அந்த அருவங்

களின் முன் கைகட்டிக் கம்பீரமாக நின்றார். ''என்ன விளையாட்டு இது? ஏன் இப்படி ஒன்றும் அறியாத அப்பாவிகளை வதைக்கிறீர்கள்? உடனடியாக இந்தப் புயலை நிறுத்துங்கள். இந்த இடத்தை விட்டு ஓடிப் போய்விடுங்கள்!'' என்று ஆணையிட்டார்.

மனிதகுலம் முழுவதன் மேலும் அளவற்ற அன்பு செலுத்தும் ஒரு தெய்விகக் குரலின் தெள்ளத் தெளிவான கட்டளையைக் கண்டு அவை அஞ்சி நடுங்கின. காற்றை அதன் இயல்புப்படியே மெல்ல வீசுமாறு செய்துவிட்டு அவை மிர்ராவைப் பணிந்து வணங்கி மிரட்சியுடன் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டன.

மிர்ரா மறுபடி கப்பலில் தன் உடல்கூடு இருக்குமிடத்திற்கு வந்தார். தன் உடலில் தன் உயிரைச் செலுத்தி எழுந்து அமர்ந்தார். காற்று ஒருநிலைப்பட்டது. கப்பல் சீராகச் செல்லத் தொடங்கியது.

கப்பலில் இருந்தவர்கள் இந்த அற்புதத்தைக் கண்டார்கள். தங்கள் அனைவரின் உயிரும் காப்பாற்றப்பட்டது மிர்ராவின் ஆன்மிக சாகசத்தால்தான் என்பதைப் புரிந்து கொண்டார்கள். மிர்ராவைக் கொண்டாடிப் பணிந்தார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு மிர்ராவின் புகழ் 'விறுவிறு' என்று ஃபிரான்சில் பரவத் தொடங்கியது. ஆனால் அவர் தன் புகழால் பாதிக்கப்படாமல் அமைதி தவழும் புன்முறுவலோடு முன்போலவே இயங்கி வந்தார்.

இப்போதும் அடியவர்கள் ஸ்ரீ அன்னையைப் பிரார்த்திக்கிறார்கள். தங்கள் மனக் கப்பல் தீய எண்ணங்கள் என்னும் புயல் காற்றால் தடுமாறும்போது அவர்கள் அன்னையைத்தான் சரணடைகிறார்கள். அன்னையின் திருவுருவம் அவர்கள் மனத்தில் பேரொளியோடு தோன்றுகிறது. அன்னை தீய எண்ணங்களை உருவாக்கிய அருவச் சக்திகளை அதட்டுகிறார். அவை வாலைச் சுருட்டிக் கொண்டு மனக்கப்பலை விட்டு விட்டு ஓட்டமாய் ஓடுகின்றன. தீய எண்ணங்களெல்லாம் விலகி அன்னை மேல் பக்தி என்ற தூய நினைவு மட்டுமே மனத்தில் மிதப்பதை அடியவர்கள் உணர்கிறார்கள்.

அன்னையின் அருள் அடியவர்கள் நெஞ்சில் நிகழ்த்தும் அற்புதம் இது. அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் மனத்தை முற்றிலுமாக நம் வசத்தில் அடக்கி ஆள்வது தானே? மனத்தை அடக்கவிரும்பும் அன்பர்களுக்கு அன்னையின் அருள் தோன்றாத் துணையாய் உதவுகிறது.

மிர்ராவுக்கு மெள்ள மெள்ளப் பல சித்துக்கள் வசப்பட்டன. ஆவிகளுடன் பேசுதல், மிருகங்களின் குறைகளை அவற்றின் கண்ணைப் பார்த்து அறிதல், தாவரங்கள் மற்றும் அசைவே இல்லாத ஜடப் பொருள்கள் போன்றவற்றின் குறைகளைக் கூடக் கண்டுணர்தல், சூட்சும உடல் கொண்டு வெகுதூரம் பயணம் செய்தல் என அவரது ஆன்மிக சாதனைகளின் காரணமாக அவர் பல சக்திகளைப் பெற்றார்.

தம் சக்திகளை அவர் சரியான தருணங்களில் அடுத்தவர் நன்மைக்காகப் பயன்படுத்தினாரே தவிர தமக்கு இந்தச் சக்திகளெல்லாம் உண்டு என்று அவர் விளம்

செயலில் தேவை முழு உணர்வு!

ஒரு சிறு நிகழ்ச்சி. வேலையில் நமது மனப்பாங்கு எவ்வளவு முக்கியம் என்பதை அது காட்டும்.

ஒரு சமயம் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் அச்சகத்தில் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். வேலையாட்கள் அன்று வரமாட்டார்கள். ஆனால் அந்த வேலையோ அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய வேலை.

நாங்கள் ஏழெட்டு இளைஞர்கள் ஒரு மேசையைச் சுற்றி இருந்து வேலை செய்து கொண்டிருந்தோம். வேலை செய்து கொண்டே யாரோ ஒருவர் ஒரு ராகத்தை முனகிக் கொண்டிருந்தார். கொஞ்சம் பேச்சும் நடந்து கொண்டிருந்தது. வேலையை முடித்து விட்டோம்.

மறுநாள் காலை நான் அன்னையிடம் சென்றபோது அவர், ''நீ வேலை செய்

யும்போது பேசிக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன்'' என்று சொன்னார். எனக்குச் சிறிது ஆச்சரியமாக இருந்தது. அது சாதாரண சூது வாதற்ற பேச்சுத்தான். அதனால் நான் அது ''தாளை மடிக்கிற வேலைதான். ஒன்றும் பெரிய வேலை அல்ல. வேலை முடிந்து விட்டது'' என்று பதில் சொன்னேன். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?



''நான் தாள்களை மடிக்க வேண்டியிருந்தால் அதைவிட நன்றாகச் செய்திருக்க முடியாத அளவு மேலும் சிறப்பாகச் செய்வதற்காக என் உணர்வு முழுவதையும் அதில் செலுத்தி இருப்பேன்.''

இதை அவர் மிக இனிமையாகச் சொன்னார். ஆனால் அன்னையைச் சந்தித்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் புன்முறுவலோடு மிக இனிமையாகப் பேசினாலும் சம்பந்தப்பட்ட ஆளை அது உள்ளே ஓர் உலுக்கு உலுக்கி, கன்னத்தில் அறைவது போலிருக்கும். எனக்கும் அந்த அடி விழுந்தது. அன்று நான் கற்ற பாடத்தை மறக்கவே இல்லை.

('அன்னையை நன்றியுடன் நினைவு கூர்தல்' என்ற நூலில் சித்ராசென்.)

பரப்படுத்திக் கொள்ளவில்லை. இந்தச் சக்திகளையெல்லாம் கடந்த மெய்யான சத்தியம் ஒன்று உண்டே, அந்தக் கடவுளை அறிதல் மட்டுமே அவர் நோக்கமாயிற்று.

ஓவியக் கலை பயின்ற மிர்ரா, ஓர் ஓவியக் கண்காட்சி நடத்தினார். அந்தக் கண்காட்சியில் மிர்ரா வரைந்த ஓவியங்களைப் பார்த்த ஹென்றி மோரிசெட் மிர்ராவின் ஓவிய ஆற்றலை வெகுவாகப் பாராட்டினார். இவர்கள் இருவருக்கும் இடையே நட்பு மலர்ந்தது. 1897 அக்டோபர் 13-ஆம் தேதி அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். மிர்ராவுக்குத் திருமணம் நடந்தபோது அவர் வயது 19.

ஓவியத்தோடு மட்டுமல்லாமல் இசையிலும் மிர்ராவுக்கு ஆர்வம் இருந்தது. சங்கீதப் பயிற்சி பெற்றார் அவர். அவரது ஆன்மிகத் தேடலோ அளவிட முடியாததாய் இருந்தது. எனவே அது தொடர்பான ஏராளமான புத்தகங்களைத் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அது மட்டுமல்ல; தமது புதிய ஆன்மிகக் கண்டுபிடிப்புகள் குறித்து அவர் கட்டுரைகள் எழுதலானார். அவை பல இதழ்களில் வெளிவரலாயின.

இவ்விதம் ஓவியக் கலைஞராகவும் இசைக் கலைஞராகவும் இருந்த அவர் ஓர் எழுத்தாளராகவும் உருவானார். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரும் சாவித்திரி என்ற அற்புதமான காப்பியத்தைப் படைத்தவருமான ஸ்ரீ அரவிந்தரோடு பின்னாளில் இணைந்து ஆன்மிக சாதனைகளைப் புரியப் போகிறாரே? ஆகையால் அவருக்கு எழுத்துத் துறையிலும் பயிற்சி இருக்க வேண்டும் என்று தெய்வம் கருதியது போலும். ஸ்ரீ அன்னை எழுதிய ஆன்மிகக் கட்டுரைகள் பலராலும் வியந்து பேசப்பட்டன. கருத்துக்காக மட்டுமல்ல, நடைக்காகவும் அவை பாராட்டப்பட்டன.

அன்னையின் வாழ்வில் ஃபிரான்சுக்கும் இந்தியாவுக்கும் ஒரு பங்கிருப்பதைப் போலவே ஜப்பானுக்கும் ஒரு பங்கு உண்டு.

அது என்ன?

(அருள் பெருகும்)





ஒவ்வொரு வீட்டிலும் ஓம்!

"ஒவ்வொரு வீட்டிலும், தெய்வத்தை வணங்கும் இடம் தனித் தன்மையுடையது. இறை உணர்வும், நிம்மதியும் தரும் இடம். ஆனால் இடப்பற்றாக்குறை காரண மாக பூஜை அறையைத் தனியாக அமைக்க முடிவதில்லை. இதை மனத்தில் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டதுதான் 'ஓம் பூஜா மண்டபம்'. இது வீட்டிற்குள்ளேயே ஒரு கோவில் அமைப்பைத் தருகின்றது. இஷ்ட தெய்வங்களின் படங்களையோ, உருவச் சிலைகளையோ அலங்காரமாக வைக்கலாம். பூஜைப் பொருள்களை நேர்த்தியாக அமைக்கலாம். பூஜை செய்துவிட்டு, மண்டபத்தை மூடிவைக்கலாம். வாஸ்து தேவைக்கு ஏற்ப, பொருத்திக் கொள்ளலாம். குறிப்பாக, அடுக்குமாடி கட்டிடங்களில் இத் தேவையை 'ஓம் பூஜா மண்டபம்' பூர்த்தி செய்கிறது'' என்கிறார் ஜெ.எஃப்.ஏ. எனப் பிரபலமாக அழைக்கப்படும் ஜெயபாரதம் ஃபர்னிச்சர் அண்ட் அப்ளையன்ஸஸ் நிர்வாக இயக்குநர் ஈ. ராஜேந்திரன்.

''ஏன் 'ஓம்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தீர்கள்?'' என்றால்,

'ஓம்' எனும் சொல் "அகில உலகுக்கே மிக சக்தியுடைய அதிர்வுச் சொல். மதம், மொழிகளைக் கடந்த சொல். இறைவழிபாட்டுக்கு இதை விடச் சிறந்த பெயர் கிடைக்குமா?'' என்கிறார்.

ஓம் பூஜா மண்டபங்கள் ஐம்பது மாடல்களில் ஐந்து நிறங்களில் கிடைக்கின்றன. 10 அடி முதல் 6 அடி உயரம் வரையில் பல மாடல்களில், உயர்தரமான மரங்களைக் கொண்டு சாஸ்திரப்படி தயாரிக்கப்பட்டுள்ளன. சூடான பொருள்களை வைப்பதினாலோ, தண்ணீர், எண்ணெய் படுவதாலோ கெடுதல் ஏற்படாது. கரையான் அரிக்காது. தேவைக்கு ஏற்ப சலவைக்கல் அல்லது செராமிக் கல்லை உள்தளமாக அமைக்கலாம் என்பது இதன் தனிச்சிறப்பு.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க :
99406 67858

Team Health Shoppe
For Wellness

அரிது, அரிது ஆலோவேரா அரிது !

இயற்கை முறையினாலான ஆலோவேரா பொருட்கள்







ஆலோ பேஷியல் ஜெல்	ஆலோ ஸ்ரெட்ச் நில்	ஆலோ மல்டிபர்பஸ் ஜெல்	ஆலோ ஸ்கின் ப்ரைட்னர்	ஆலோ பேர்னஸ் ஆயில் ஜெல்	ஆலோ டீம் பயோக்ளென்சர்

TEAM EUBIO CARE



வண்டலூர்: டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு,
போன்: 2275 0502

அண்ணாநகர்: பிளாட் 1200, Z பிளாக், 6வது அவென்யு, (லேபர் ஆபிஸர்ஸ் குவார்ட்டர்ஸ் அருகில்) 4269 3332

இந்திரா நகர்: 3வது அவென்யு, எண்.26, தரைதளம், கார்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 4269 5115

புரசைவாக்கம்: எண்.23B, பேஸ்மெண்ட், பிரின்ஸ் டவர்ஸ் (அபிராமி மெகாமால் எதிரில்) புரசைவாக்கம் ஹை ரோடு, 4542 8898

For bulk requirements,Please Contact : Team House - GST Road, Vandalur, Ch - 48
Fax : 22750860 (or) E-mail: teamhealthshoppe@drraoholdings.com

www.teamhealthshoppe.com | OPEN ON ALL DAYS



படிக்கிறாரு பிள்ளையாரு!



நவராத்திரி கொலு வைக்கும் போது சிறுவர், சிறுமியர்களைக் கவரும் வகையில் கொலு வைப்பது எங்கள் வீட்டு வழக்கம்.

சென்ற வருடம் இராமேஸ்வரத்தில் இருந்து புதிய வரவாக ஒரு பொம்மை பிள்ளையார் எங்கள் வீட்டுக்கு வருகை தந்தார். வலது காலை மடக்கி இடது தொடையின் மீது போட்டுக் கொண்டு கையில் ஒரு புத்தகத்தை விரித்து வைத்து வாசித்துக் கொண்டிருப்பார். புத்தகத்தில் ஒரு பக்கத்தில் 'உ' என்று தமிழிலும், மறு பக்கத்தில் 'ஓம்' என்று வடமொழியிலும் எழுதி அதைக் கொலுப் படியில் வைத்திருந்தோம். சிறு குழந்தைகள் அதை ஆர்வமாகப் பார்த்தபோது, ''பார்த்தீங்களா, பிள்ளையார் எவ்வளவு அழகாக அம்பாள் முன்பு படித்துக் கொண்டிருக்கிறாரு. நீங்களும் அவரைப் போல் படிக்கணும்!'' என்றேன்.

அப்போது எனது தம்பி மகன் ''என்ன அத்தை, இந்தப் பிள்ளையாரு, எட்டு நாளா ஒரே பக்கத்தையே படிச்சுக்கிட்டு இருக்காரே, இப்படி ஒரே பக்கத்தையே படிச்சுக்கிட்டிருந்தா எங்கள் மிஸ் திட்டுவாங்க!'' என்றான்.

அவனது சாமர்த்தியமான பேச்சு எங்கள் எல்லோரையும் சிரிக்க வைத்து விட்டது.

- பார்வதி பிரியா, தூத்துக்குடி.

ESTD. 1921

தடைகளை தகர்த்து சாதிக்கலாம் வாங்க



TMB மகளிர் லோன்

கடன் தொகை ரூ. 10 லட்சம் வரை

தொழில் முனையும் மகளிருக்கு தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் வாழ்வில் உயர்ந்திட வழித்துணையாய் நிற்கும். தொழில் மேம்பாட்டிற்கு ஒரு பிரத்தியேக மகளிர் கடன் திட்டத்தை அறிமுகம் செய்கிறது. சுலபமாகவும், குறைந்த வட்டியிலும் விரைவாகவும் கடனை பெற்று தொழிலை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் தரும் வரப்பிரசாதம்.

கூடுதல் வட்டி தரும் டெபாசிட் திட்டத்தை பற்றி அறிய
“TMB55” என டைப் செய்து “5667733” என்ற எண்ணுக்கு SMS செய்க

ESTD. 1921

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.

Customer Oriented & Committed to Excellence

Regd. Office : 57, V.E.Road, Thoothukudi-628 002 Website.www.tmb.in

சிறப்புச் சிரிகதை

"**வ**ந்தாச்சு வந்தாச்சு, நவராத்திரியும் வந்தாச்சு! என்ன 'வெச்சுக்' கொடுக்கலாம்?" - எல்லா வீட்டிலும் இதுதான் இப்போ ஹாட் டாபிக்!

"நம்ம ஜானுக்கு புதுசு புதுசா ஏதாவது கிடைக்குது. எங்கேயாவது போய் புதுமையா எதையாவது வாங்கிட்டு வந்துடறா. நமக்குத்தான் தோதா எதுவும் கிடைக்க மாட்டேங்குது" நான் சொல்ல,



"ஜானு அசத்தறான்னா அதுக்குக் காரணம் அவளோட வீட்டுக்காரர். அவர் எப்பவும் அவ பின்னாடி நிக்கறார் ஸ்டிராங்கா. 'இது நல்லாயிருக்கு ஜானு. அது வித்தியாசமா இருக்கும் ஜானு'ன்னு பார்த்துப் பார்த்து செலக்ட் பண்ணித் தருவாரு. நம்ம வீட்டுலயும்தான் இருக்காங்களே.."

முகத்தை ஒரு நொடிப்பு நொடித்துக் கொண்டு சொன்னாள் வத்சலா!

கீதா ஸ்ரீகாந்த்

"அவர் உங்க பின்னாடி நிற்கவில்லை. வாஸ்தவம்தான். ஆனா உங்க முன்னாடி நிக்கறாரே வேர்க்க விறுவிறுக்க. அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கிட்டு செய்யறாரே! ஸ்ரீ ஜயந்திக்கு பலகாரம் பண்ணினாரு. அடுத்து பிள்ளையார் சதுர்த்தி. குனிஞ்சு நிமிர்ந்து பார்க்கிறதுக்குள்ள வந்தாச்சு நவராத்திரி."

இப்படியெல்லாம் சொல்ல ஆசைதான்! ஆனா, வத்சலாகிட்டே வாய் கொடுத்து மீள முடியுமா...? அதனால பொதுவாய் தலையை ஆட்டி வெச்சேன்.

வத்சலா இப்படின்னா ஜானு அக்கா மாதிரி வேற.

போன முறை நவராத்திரிக்கு அவங்க வேற வீட்டுக்குப் போன போது,



ஹாலில் கொலுவும், கொலுவோடு கொலுவாய் அவங்க வீட்டு ஸாரும்தான் இருந்தார்.

"ஜானு அக்கா எங்கன்னு" நான் இழுக்க... "உட்காருங்க... இப்ப வந்துடுவா"ன்னார் எதிரும் புதிருமாய் உட்கார்ந்துக்கிட்டே கால் மணி நேரம் கழிந்தது. நொடிக்கொரு தடவை "காப்பி சாப்பிடறீங்களா?"னு விசாரிப்பு வேற. எல்லாம் ஜானுவோட ஆர்டராய் இருக்கும்.

"வா... வா... காயத்ரி.. வந்து ரொம்ப நேரமாச்சா... எல்லா வீட்டுக்கும் போயிட்டு வர்றதுக்குள்ள எப்படியோ நேரமாயிடுச்சு."





இத்தனை நேரமா?''

பல்லைக் கடித்த படி சிடுசிடுத்தாள்.

அடுத்த நிமிடமே தேன்குரலில் என்னை அழைத்தாள்.

''காயூ... காயூ...''

ஏதோ விஷயமாய்த்தான் கூப்பிடறான்னு தெரியும். ஆனா நான் சத்தியமாய் அதை எதிர் பார்க்கலை.

''காயூ... தேங்காய்த் துருவி வைக்க மறந்தே போயிட்டேன். ஒவ்வொருத்தரா இப்ப வர ஆரம்பிச்சுடுவாங்க. இந்தத் தேங்காயை கொஞ்சம் துருவித் தாயேன்.

தனது புது நெக்லஸை அட்ஜஸ்ட் செய்து கொண்டே பட்டுப் புடவை சரசரக்க வந்தாள் ஜானு அக்கா.

9 நாள், 90 அனுபவம்!

''நான் வந்து ரொம்ப நேரமாயிடுச்சு. கிளம்பட்டுமா?''

''என்னது? இப்படிப் பறக்கறே...? கொஞ்சம் இரு!''

சொல்லிக்கிட்டே சமையலறைக்குப் போக, அவங்க வீட்டுக்காரரும் பூனைக்குட்டியாய்ப் பின்னாலேயே போனார்.

''சுண்டலுக்கு எத்தனை விசில் வந்துச்சு? உப்பு போட்டீங்களா? நேத்து செஞ்ச மாதிரி மறக்கலையே! எ..ன்ன..து தேங்காயே போடலையா...? சரியாப் போச்சு போங்க! தாம்பூலம் வேற இன்னும் எடுத்து வைக்கலை. **என்னதான்** செஞ்சீங்க...

நான் ஒருத்தியா கஷ்டப்படறேன். உதவிக்கு யாரும் இல்லை. என்ன செய்யறது சொல்லு? நீ ஒண்ணும் தப்பா நினைச்சுக்க



கலையே... என் தங்கை மாதிரி நீ...''

தேங்காய்த் துருவியைக் கையில் கொடுத்துவிட்டு ஜானு அக்கா உள்ளே போய் விட்டாள். தானே தேங்காய் துருவிக் கொடுத்து சுண்டலும் வாங்கிட்டு வந்த முதல் ஆள் நானாய்த்தான் இருப்பேன்.

மாங்கு மாங்குன்னு தேங்காய்த் துருவிக் கொடுத்துட்டு நான் அடுத்து விஜயம் பண்ணினது விஜயா மாமி வீட்டுக்கு.

நீங்கள்லாம் வீட்லு கொலு வச்சு பார்த்திருப்பீங்க. ஆனா வீடே கொலுவா இருக்கிறதை பார்த்திருக்கீங்களா? இல்லைன்னா ஒரு நடை விஜயா மாமி வீட்டுக்கு வந்துட்டுப் போங்க!

ஒரு பக்கம் புத்தக மலை; இன்னொரு பக்கம் மடிக்காத துணிகளோட மலை. இதுக்கு நடுவிலயும் மாமி கொஞ்சூண்டு இடம் பண்ணி கொலு வச்சிருந்தார்.

''வா... வா... காயத்ரி.. ஒக்காரு.''

மாமி ஜமக்காளமெல்லாம் போட்டு வச்சிருந்தார். உட்காரப் போன சமயம் 'டக்'குனு வந்து விழுந்தது ஒரு தலையணை. மாமியின் சீமந்தப் பிள்ளையாண்டான். பள்ளிகொண்ட பெருமாளா சாஞ்சுண்டுட்டான். மாமிகிட்ட அதுக்குக் கூட ஒரு முகச்சுளிப்போ, முணுமுணுப்போ இல்லை.

''கார்த்தாலேயே... எழுந்துண்டுட்டான் பாவம். டென்த் படிக்கறானே. மாத்தி மாத்தி ஸ்பெஷல் கிளாஸ் வச்சுடறா. பாவம் ஹரீஷ் இளைச்சுப் போயிட்டான் பாரு.''

''ஆமாம் மாமி... இளைச்சுத்தான் போயிட்டான்... சரி, நான் கிளம்பட்டுமா...?''

''ஒரு நிமிஷம் காயத்ரி... இந்த வாழைப் பழத்தை வாங்கிண்டு வந்து இங்கேதான் எங்கேயோ வச்சேன்... எங்கன்னு... தான் தெரியலை...''

சு..த்..தம்... தேடும் படலம் ஆ..ரம்பம்...!!

ஒருவழியா தேடி புத்தக மலைக்கு நடுவே கண்டெடுத்தோம் வாழைப் பழத்தை! அப்புறம் மாமி வெத்தலைப் பாக்கு வாங்க தெரு முனைக்கு ஓடி, மஞ்சள் கிழங்கைத் தேடி மாடிக்கு ஓடி, ஒருவழியா வச்சுக் கொடுத்து என்னை வழியனுப்பியது தனிக் கதை!

இவங்களைப் பத்தியெல்லாம் சொல்லிட்டு கல்யாணி ஆண்ட்டியை பத்திச் சொல்லலைன்னா எப்படி? கல்யாணி ஆண்ட்டி படு சிக்கனம். புதுசு புதுசா ஏதாவது செஞ்சுகிட்டே இருப்பார். பழைய டப்பா, அட்டைப் பெட்டின்னு ஒண்ணு விடறதில்லை. நாலே நாலு சுண்டல், சின்ன வெத்திலை, இணுக்கு அளவு பூ... நாலணா தட்சணை... இதையே டைரக்டர் ஷங்கர் ரேஞ்சுக்கு சொல்லிக்கிட்டு இருப்பாங்க!

புதுமையா ஆனா சிக்கனமா செய்ய நினைக்கிற கல்யாணி ஆன்ட்டி, நேரத்தில் வேலைகளை முடிக்கத் திணறுகிற ஜானு அக்கா, எல்லாரையும்



பள்ளிகொண்ட பெருமாள்!

இதோ கிளம்பிட்டேன்!



அசத்த நினைக்கிற வத்சலா, இவங்க எல்லாருமே நவராத்திரியோட தாத்பரியத்தை மறந்தே போயிட்டாங்க. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரூபமா சக்தியை ஆராதனை பண்ணி, வீடு தேடி வர சுமங்கலிகளை அவங்க மனசு நிறைஞ்சு போற வகையில மரியாதை செஞ்சு ரவிக்கை, வளையல், பூ, மஞ்சள்னு கொடுத்து வழியனுப்பி வைக்கிறதுதானே சம்பிரதாயம், அந்நாளிலே, மட்டைத் தேங்காய் கூட வச்சுத் தருவாளாம். எங்க பாட்டி சொல்லுவாங்க.

''மட்டைத் தேங்காயா? தேங்காய் பத்தைதான் வச்சுக் கொடுக்கலாம். இன்னிக்கு விலைவாசியில''

கிராஸ் டாக் வேற யாரு...? கல்யாணி ஆன்ட்டிதான்!

அவ்வளவு டிபிக்கலா இல்லைன்னாலும், வயதான சுமங்கலிகளுக்கு மட்டுமாவது தரமான ரவிக்கை துணி வச்சுத் தரலாமே?

வீடு தேடி வர்ற சுமங்கலிகளைக் காக்க வைக்காமல், முன்கூட்டியே திட்டமிட்டு எல்லாத்தையும், செட்டா எடுத்து வச்சுக்கலாம். வாசல்ல தலை தெரிஞ்சவுடன், தெருமுனை கடைக்குத் தாவ வேண்டாம்.


பிள்ளைகள் என்னதான் டென்த், பிளஸ்டூன்னு படிச்சுட்டு இருந்தாலும், அவங்களையும் அவ்வப்போது இதுல ஈடுபடுத்தலாம். பின்னாளிலே அப்பத்தான் அவங்களுக்கும் பண்டிகைகள்ல ஆர்வமிருக்கும். குறைந்தபட்சம் நவராத்திரியோட முக்கியத்துவத்தையாவது சொல்லித் தரலாமே...! என்னடா, இவ.. திடீர்னு அட்வைஸ் அம்புஜம் ஆயிட்டாளேன்னு நினைக்காதீங்க...

இந்த ஒன்பது நாளும் நான் நொந்து நூடுல்ஸ் ஆனா கதை மாதிரி உங்ககிட்டேயும் தொண்ணூறு அனுபவங்கள் இருக்கும். ஆனாலும் அதிலும் ஒரு சுவாரசியம் இருக்கத்தான் செய்யுது. இல்லையா...? இதோ, கிளம்பிட்டேனே, பரிசுப் பொருள்கள் வாங்க! ●

அஹா 50!

பயற்றம் பருப்பை இரண்டு மணி நேரம் ஊறவைத்து விட்டுக் கொதிக்கும் நீரை விட்டுப் பருப்பைப் போட்டு மூடி வைத்தால் 15 நிமிடத்தில் பூவாக மலர்ந்து விடும். பிறகு தேவையானதை தாளித்தால், சுண்டல் குழையாமல், மலர்ந்து இருக்கும்.

- *மாலதி நாராயண், சென்னை - 87.*



இளைய சாதனை

அதிசய அதிதி!

எந்தத் துறையிலுமே முதன் முதலாக என்றால் அதற்கு ஒரு தனி மரியாதை உண்டு. அந்த விதத்தில் அதிதி, அங்கீகரிக்கப்பட வேண்டியவர். சென்னை எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பிரிவில் முதலாம் ஆண்டு படிக்கிறார் அதிதி.

இந்தியாவிலேயே கீ போர்டிலேயே இந்துஸ்தானி இசையை வாசிக்கும் முதல் பெண் அதிதிதான்!

''எனக்குச் சின்ன வயசுல இருந்தே இந்தியப் பாரம்பரிய இசையில ஆர்வம் வந்துவிட்டது. குறிப்பா, ஹார்மோனியம், கீ போர்டுல வர்ற ஒலி என்னை ரொம்பவே வசீகரித்து விட்டது.

நானாவே கீ-போர்டு கட்டைகளை அழுத்தி அழுத்திப் பார்த்து ஏதோ வாசிக்க ட்ரை பண்ணுவேன். அதைப் பார்த்த என்னோட பேரண்ட்ஸ் முறையாவே கத்துக்க அனுப்பிட்டாங்க. கே.என். சசிகிரண்கிட்ட கர்நாடக இசைப் பயிற்சி பெற்று, அப்படியே கர்நாடக இசைப் பாடல்களை கீ போர்டிலே வாசிக்கத் தொடங்கினேன். அதுக்கப்புறமா, ஹிந்துஸ்தானி இசையில என்னோட கவனம் திரும்பிடுச்சு. சில கமகங்களை கீ போர்டுல வாசிக்கிறது கஷ்டம்ங்கிறதால பொதுவா, யாரும் ஹிந்துஸ்தானி இசையை கீ போர்டுல வாசிக்க முயற்சி செய்ய மாட்டாங்க.

ஆனா, எட்டு வருஷம் விடாமுயற்சியோட, சிரத்தையா ப்ராக்டிஸ் பண்ணினதுல, ஒரு புதிய சாதனை நடத்த முடிஞ்சுது. அதுக்கு என்னோட பெற்றோர்களுக்கும், குருக்களுக்கும் நன்றி'' என்கிறார் அதிதி.

சந்தூர் இசைக் கருவியை ஒற்றி அதிதி இசைக்கிறார். பிடித்த ராகம் பாக்யஸ்ரீ என்றாலும் மற்ற எல்லா ராகங்களையும் எளிதாகவே இசைக்க வருகிறதாம். தன் இசை நிகழ்ச்சிகளில் தபேலாவையும் தம்புராவையும் இணைத்துக் கொள்கிறார். ஆபோகி, மார்வா, சாருகேசி போன்ற ராகங்களை மேடையில் இசைத்து பாராட்டுகளை அள்ளிக் கொண்டிருக்கிறார்.

வகுளாபரணத்தின் ஒரு பிரிவான சல்லாபம் எனும் ராகத்தை இவர் இசைக்க, அரியதொரு ராகத்தை இசைத்ததற்காக பி.பி.ஸ்ரீனிவாஸ் இவரைப் பாராட்டியிருக்கிறார்.

''தேஷ் ராகத்தில் 'அன்றொரு நாள் இதே நிலவில்' என்ற பாடலை கீபோர்டில் ஒரு நிகழ்ச்சியில் இசைத்தேன். அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த எம்.எஸ். விஸ்வநாதன் தமது இசையமைப்பில் உருவான அந்தப் பாடலை நான் சிறப்பாக இசைத்ததைக் கேட்டு நெகிழ்ந்து புகழ்ந்து பேசினார். மெல்லிசை மன்னரிடம் அப்படியொரு பாராட்டைப் பெற்றதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்'' என்கிறார் அதிதி.

''வருங்காலத்தில் கீ போர்டும் இந்துஸ்தானி இசையில் ஓர் அங்கமாக வேண்டும். அதற்கு என் முயற்சி உதவும்'' என்கிறார் அதிதி. இந்துஸ்தானி கலைஞர்கள் இதற்கு எப்படி ரியாக்ட் செய்கிறார்கள் என்று நாம் கேட்ட போது, ''அவர்கள் எல்லோருமே வட இந்தியாவில் வசிப்பதால் அவர்கள் கருத்தை என்னால் அறிய முடியவில்லை'' என்று பதில் வருகிறது. அதிதி




கே போர்டில் இந்துஸ்தானி வாசிப்பைக் கற்றுக் கொண்டது பண்டிட் ரவிசங்கரின் சிஷ்யரான ஜனார்தன் மிட்டாவிடம். சென்னையில் வசிக்கும் இவரிடம் ஒன்றரை வருடம் சிட்சை எடுத்துக் கொண்டாராம்.

ரவிச்சந்திரன் கிருஷ்ணகுமாரி தம்பதியருக்கு ஒரே மகள் அதிதி. ''இதுவும் வசதியாகத்தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த பல குடும்பங்களில் கூடப் பிறந்தவர்கள் எதற்காவது சண்டையிட்டுக் கொண்டே இருப்பதை நான் பார்க்கிறேன். என் பெற் றோரின் கவனம் முழுவதும் என் வளர்ச்சியில் இருந்ததும் என் சாதனைக்கு ஒரு காரணம்'' என்கிறார்.

18 வயதில் ஒருவர் மேஜர் எனப்படுவது இயல். அந்த வயது நிறைவடைவதற்கு முன்பே ஒரு முதல் முதலான முயற்சி என்பதும் மேஜர் சாதனைதானே!

- ஜி.எஸ்.எஸ்.





இவை எல்லாமே ஆறு 50 தான்!



வெள்ளைப் பூண்டு, சூடம் இரண்டையும் தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பேன், பொடுகு வராது.

- பி. உதயராணி, பெரும்பாக்கம்.

போதுமே பொடுகு!

கொலுவுக்கு வரும் நபர்களின் வயதைப் பொறுத்து அவர்களுடைய தேவைகளை அறிந்து பரிசுப் பொருள்களைக் கொடுக்கலாம். மாலை வேளைகளில் அழுகை சீரியல்களைப் போட வேண்டாம்.

- தாரா, கோவை.

கிருஷ்ணன், கோபிகாஸ்திரீகளுடன் இருக்கின்ற பொம்மை செட் வாங்கினால் மணலை நிரப்பி கடுகு போட்டு முளைக்க வைத்து பிருந்தாவனம் போல் செய்யவும். நடுவில் கிருஷ்ணனை வைத்து சுற்றிலும் கோபிகாஸ்தீரிகளின் பொம்மைகளை வைக்கலாம். நடுநடுவே ரோஜாப்பூ இதழ்களைத் தூவி விட்டால் அழகாக இருக்கும்.

– சி. வசந்தகோகிலம், சென்னை – 61.

கொலுவுக்குக் கலசம் வைக்கும் போது முகத்தில் கடையில் விற்கும் கண் மலரை வாங்கி சிறிது சந்தனம் உட்பக்கமாக வைத்து ஒட்டவைக்கலாம். பார்க்க அழகாகவும் இருக்கும்.

- என். விஜயலெட்சுமி, தபோவனம்.

கொலுவுக்கு சுண்டல் செய்யும் போது, தாளித்து, திக்கான புளிக்கரைசலை ஊற்றி அதில் சிறிது வெல்லம் போட்டுக் கொதிக்க விட்டுக் கெட்டியானதும் அதில் வேகவைத்த பருப்பைப் போட்டுக் கிளறி, உப்பு சேர்த்தால் சுண்டல் புளிப்பும், உரைப்புமாகச் சுவையாக இருக்கும்.

- என். கலா, நாமக்கல்.

சாதாரண மலைகளையே அமைப்பதை விட, ஆற்று மணலால் மலையை அமைத்து, அதன் பெரும்பகுதியை பஞ்சினால் மறைத்து விட்டால் பனிமலை ரெடி. அதில் ஸ்கேட்டிங் போவது போல் பொம்மைகளை செட் செய்யலாம்.

- ஆர். விஜயலெட்சுமி, விருதுநகர்.



பலே பாட்டி!

அந்தக் காலத்துப் பாட்டிகளின் சாமர்த்தியமும் தைரியமும் நமக்குக் கூட வராது.

ஒருமுறை நாங்கள் எல்லோரும் தசரா திருவிழாவுக்குச் சென்றிருந்தோம். எங்கள் பாட்டி மட்டும் வீட்டில் தனியாக இருந்தார்.

திருடன் ஒருவன் வந்து கதவைப் 'படபட' எனத் தட்டியதும், பாட்டி தான் தனியே இருப்பது தெரியக்கூடாது என்பதற்காக கதவருகே சென்று, ''ஏதோ பெருச்சாளி கதவை சுரண்டுகிறாப்பல இருக்கே! ஏ கிச்சாமி, அப்பு இங்கே வாங்க. என்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு? அடியே அலமேலு, அம்புஜம்... நீங்களாவது வாங்களேன்'' என இரைந்து சொன்னதும், திருடன், ''இந்த வீட்டில் நிறைய பேர் இருக்காங்க போலிருக்கு'' என நினைத்து ஓடி விட்டான். நாங்கள் வந்ததும் பாட்டி நடந்ததைச் சொல்ல, எங்களுக்கு சிரிப்புத் தாங்கவில்லை. அதே சமயம் பாட்டியின் துணிச்சலையும், சாமர்த்தியத்தையும் எல்லோரும் பாராட்டினோம்.

- ஆர். பட்டம்மாள், கும்பகோணம்.

கொங்கு நாட்டுச் சமையல்!

இம்மாத ஸ்பெஷல்

உருளைக் குருமா, கொள்ளு ரசம், இளநீர் அல்வா, சுரைக்காய்த் தொக்கு

(செஞ்சு பார்த்து அசத்துங்க!)

நளபாக சக்கரவர்த்தி
ஜேக்கப்

ருசியோ... ருசி - 10



கோமதியின் உருளைக் குருமாவை வாசகியர் செய்து பார்த்தால் தெரியும் அதன் அருமை! கொங்குச் சமையலில் குருமாவுக்குத் தனி இடம் உண்டு என்றாலும் கூட, திருவிழாக் காலங்களில்தான் குருமா சமையற்கட்டில் களைகட்டும். சாதாரண குருமா என நினைக்க வேண்டாம். நான் சொல்கிறேன்... இது தேவாமிர்த சுவை கொண்டது. இட்லிக்கு செம ஜோடி!

கரூர் உருளைக் குருமா

தேவையான பொருள்கள் :

தேங்காய்த் துருவல் - 1 பெரிய கிண்ணம்,
சீரகம், சோம்பு - 5 கிராம்,



பட்டை, கிராம்பு,
ஏலக்காய் - 3 கிராம்,
பச்சை மிளகாய் - 2,
முந்திரி - 50 கிராம்,
இஞ்சி, பூண்டு விழுது - 10 கிராம்,
வெங்காயம், தக்காளி - 2,
உருளைக் கிழங்கு - 100 கிராம்,
எண்ணெய் - 50 மில்லி,
மிளகாய்த் தூள் - 10 கிராம்,
மஞ்சள் தூள் - 5 கிராம்,
உப்பு - தேவையான அளவு.

செய்முறை :

★ தேங்காய்த் துருவலை, சீரகம், சோம்பு, பட்டை, கிராம்பு, ஏலக்காய்,



கொங்குச் சமையலின் மற்றொரு மைல் கல் இந்தக் கொள்ளு ரசம். கொள்ளு சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்லது. மழைக்காலங்களில் இதனை உட்கொள்வதே சாலச் சிறந்தது. ஏனெனில் கொள்ளு உடம்புக்கு சூடுகொடுக்கவல்லது. தமிழரசி, கொள்ளுச் சமையலில் கைதேர்ந்தவர். இவரது கொள்ளுப் பருப்பு கூட்டு, கொள்ளுச் சாதம் ஆகியவை என் சாய்ஸ்.

பச்சை மிளகாய் சேர்த்து நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

★ வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் வெங்காயம் சேர்த்து நன்றாக வதக்கவும். பிறகு இஞ்சி, பூண்டு விழுது சேர்த்து



வதக்கவும்.

★ பின்னர் அதனுடன் முந்திரி சேர்த்து நன்றாக வதக்கவும். அதில் சிறிதாக வெட்டிய தக்காளி சேர்த்து வதக்கவும், பிறகு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் சேர்த்து வதக்கவும்.

★ அரைத்த மசாலாவை அதனுடன் சேர்த்து சிறிதாக வெட்டிய உருளைக் கிழங்கை சேர்த்து நன்றாக வேக வைக்கவும். தேவையான அளவு தண்ணீர் ஊற்றவும்.

★ நன்றாகக் கொதித்தவுடன், கிழங்கு வெந்தவுடன் உப்பு சேர்த்து இறக்கினால் கரூர் உருளைக் குருமா தயார். ●

கொள்ளு ரசம்



தேவையான பொருள்கள் :

கொள்ளு வேக வைத்த நீர் - 50 மில்லி,
சின்ன வெங்காயம் - 20 கிராம்,
தக்காளி நறுக்கியது - 10 கிராம்,
மஞ்சள் தூள், மல்லித் தூள் - சிறிது,
பூண்டு - 1 சிறிய துண்டு,



(கொள்ளு ரசம் தொடர்ச்சி...)

புளித் தண்ணீர் - 10 மில்லி,
மிளகு - 10 கிராம்,
சீரகம் - 5 கிராம்,
வரமிளகாய் - 2,
எண்ணெய் - 10 மில்லி,
கறிவேப்பிலை, கொத்துமல்லி -சிறிது,
உப்பு - தேவையான அளவு.

செய்முறை :

★ வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு அதில் மிளகு, சீரகம், வரமிளகாய், சிறிதாக நறுக்கிய பூண்டு சேர்த்து நன்றாக வதக்கவும்.

★ அதில் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு, சிறிதாக நறுக்கிய தக்காளி, கறிவேப்பிலை சேர்த்து சிறிது மஞ்சள் தூள், மல்லித் தூள், மிளகாய்த் தூள் சேர்த்து நன்றாக வதங்கியபின் அதில் புளித் தண்ணீர் சேர்க்கவும்.

★ பின்னர் கொள்ளு வேகவைத்த நீரைச் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி உப்பு சேர்க்கவும்.

★ கொதிப்பதற்கு முன்னர் மல்லித்தழை சேர்த்து உப்பு சரிபார்த்து இறக்கினால், கொள்ளுரசம் தயார். ●



மேட்டூரைச் சேர்ந்த வடிவு அவர்களின் சுரைக்காய்த் தொக்கு ருசிமிக்கது. கொங்குச் சமையலில் தொக்கு என்பது மிகவும் பிரதானமான பதார்த்தம்! வேர்க்கடலை சேர்த்து அரைத்த இந்த மசாலா, வெள்ளை சாதத்திற்கும், கேப்பைக் களிக்கும் சூப்பர் காம்பினேஷன்!



மொடக்குறிச்சியைச் சேர்ந்த சாந்தியின் இளநீர் அல்வாவுக்கு சொத்தையே கூட எழுதி வைக்கலாம். பாரம்பரியமாகவே சமையல் குடும்பம் அவருடையது. அவர் கணவர், தேர்ந்த சமையல் நிபுணர். ஈரோட்டில் நான் ஒரு விருந்துக்குப்

சுரைக்காய்த் தொக்கு



தேவையான பொருள்கள் :

சுரைக்காய் (சின்ன சைஸ்) - 1, வேர்க்கடலை - 100 கிராம்,

காய்ந்த மிளகாய் - 10, தனியா - 2 டேபிள் ஸ்பூன்,

மிளகு, சீரகம் - ½ டேபிள் ஸ்பூன், மஞ்சள் தூள் - தேவையான அளவு,

உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 50 மில்லி.

செய்முறை :

★ சுரைக்காயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அதை உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து குக்கரில் வேகவைக்கவும்.

★ மிளகாய், தனியா, வேர்க்கடலை, சீரகம், மிளகு இவற்றை பொன்னிறமாக வறுத்துப் பொடியாக்கி வைக்கவும்.

★ வாணலியில் எண்ணெய் காய்ந்ததும், அரைத்து வைத்துள்ள பொடியை அதில் சேர்த்து வதக்கவும்.

★ வதங்கியவுடன் அதனுடன் நறுக்கிய சுரைக்காயை சேர்த்து நன்றாகக் கிளறவும். குழைய வெந்து, சுருண்டு வந்ததும் இறக்கினால் சுரக்காய் தொக்கு தயார். ●



போயிருந்தபோது இந்த இளநீர் அல்வாவை ருசிக்க நேர்ந்தது. இதனைச் செய்தவர் யார் என்று தேடிப் பிடித்து, எப்படிச் செய்வது என்று கேட்டுக் குறித்தும் கொண்டேன். அப்போது சாந்தியின் கணவர் வெங்கடாசலம், மறக்காமல் சொன்னது, ''சார், இந்த அல்வாவை எனக்கு அறிமுகம் செய்தது என் மனைவி சாந்தி!'' - ஆஹா!

இளநீர் அல்வா

தேவையான பொருள்கள் :

இளநீர் - 4,

சர்க்கரை - 250 கிராம்,





அரிசி மாவு - 100 கிராம்,
நெய் - 100 கிராம்.

செய்முறை :

★ நல்ல வழுக்கையாக உள்ள இளநீரைத் தேர்ந்தெடுக்கவும். உப்புச் சுவை இல்லாத நாக இருந்தால் சுவை கூடும்.

★ சர்க்கரையை சிறிது இளநீரில் கலக்கி, அடுப்பில் வைக்கவும்.

★ நன்றாகக் கொதித்ததும், மீதமுள்ள இளநீரையும் சேர்க்கவும்.

★ அரிசி மாவைத் தண்ணீரில் கலக்கவும்.

★ இந்தக் கலவையை வடிகட்டவும்.

★ வடிகட்டிய கலவையை இளநீர் சர்க்கரைப்பாகுடன் சேர்க்கவும்.

★ மிதமானத் தீயில் கைவிடாமல் மெதுவாகக் கிண்டவும்.

★ அரிசி மாவு வாசனை போகும் வரை கிளறவும்.

★ கடைசியில் நெய் சேர்த்து அல்வா பதம் வந்ததும் இறக்கிப் பரிமாறவும்.

★ விருந்துக்கும், விசேஷங்களுக்கும் ஏற்ற சுவையான இளநீர் அல்வா தயார்.

நளபாகப் போட்டி - 9 (முடிவு)

செப்டெம்பர் 2007ல் இடம்பெற்ற போட்டியின் விடை :

விடைகள் : 1. கடுகு, 2. நெய், 3. அவல், 4. இஞ்சி, 5. உப்பு, 6. கொள்ளு, 7. தேன், 8. சுக்கு, 9. எள் 10. மாங்காய்

வந்து குவிந்த கூப்பன்களில் ரூ. 150/- பரிசு பெறும் 20 அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!

1. எம். சர்வேஷ், சென்னை - 17, 2. எஸ். ஆனந்தவல்லி, வில்லிவாக்கம், 3. ஆர். ஜெயந்தி, பவானி, 4. சீதா ராமன், கொல்கத்தா, 5. எஸ். அலமேலு, தியாகராயநகர், 6. எஸ். சாவித்திரி, சிதம்பரம், 7. எஸ். சுதா நாராயணன், சிவகங்கை, 8. ப்ரீத்திரேஷா, பெங்களூர் - 3, 9. ஆர். சாரதா, சென்னை - 75, 10. டி. ஏ. ஹேமா, ஈரோடு, 11. அனு மணி, ஹாப்ளி, 12. சாரதா கணேசன், பவானி, 13. எஸ். பூர்ணவல்லி, கொடியாலம். 14. பட்டு வெங்கட்ராம், மும்பை - 28, 15. ஆர். ஜெயந்தி, தஞ்சாவூர், 16. கே. சுஜனா, சிதம்பரம், 17. எம். ராஜேஸ்வரி, பெரம்பலூர், 18. எஸ். மங்களம் ஸ்ரீநிவாஸன், ஆதம்பாக்கம், 19. ஜி. கல்யாண குமாரி, விழுப்புரம் மாவட்டம், 20. எஸ். தனலெக்ஷ்மி, வில்லிவாக்கம்.



இதோ இங்கே எட்டு சமையலறைக் கேள்விகள் தரப்பட்டுள்ளன. உங்கள் அடுப்பங்கரை ஞானத்தைக் காட்டுங்களேன்!

1. சக்கப் பிரதமன் என்றால் என்ன?

அ] பலாப்பழப் பாயசம் ஆ] பைனாப்பிள் பாயசம் ....

2. சாக்லேட்டின் அடிப்படைப் பொருள் எது?

அ] கோக்கோ ஆ] கரும்பு ....

3. புல்லரிசிக் கூழின் உலர்ந்த வடிவத்தை எப்படி அழைக்கிறோம்?

அ] மைதா, ஆ] ஓட்ஸ். ....

4. பொரிவிளங்காய் உருண்டைக்குத் தேவைப்படும் முக்கியமான பருப்பு வகை எது?

அ] பயத்தம் பருப்பு ஆ] உளுத்தம் பருப்பு ....

5. சூப்பில் உப்பு அதிகமாகி விட்டால், அந்த உப்பை உறிஞ்சி எடுத்துக் கொள்ள எந்தக் காயை அதில் போடலாம்?

அ] பச்சை உருளைக்கிழங்கு, ஆ] பச்சைத் தக்காளி ....

6. குடல்புண், வாய்ப்புண் போன்றவற்றை எது தீர்க்கவல்லது?

அ] வெல்லம், ஆ] மணத்தக்காளி ....

7. எலுமிச்சம்பழத்தில் உள்ள அமிலத்தின் பெயர் என்ன?

அ] லாக்டிக் அமிலம் ஆ] சிட்ரிக் அமிலம் ....

8. பெருஞ்சீரகத்தை எப்படி அழைக்கிறார்கள்?

அ] சோம்பு, ஆ] லவங்கம் ....

- ஜி.எஸ்.எஸ்

இங்குள்ள புதிரைச் சரியாக நிரப்பி வெட்டி மங்கையர் மலருக்கு அனுப்புங்க. குலுக்கல் முறையில் 20 பேருக்கு 150 ரூபாய் பரிசு! ஜெராக்ஸ் அனுப்பக் கூடாது!

கடைசித் தேதி : 15.10.2007

உறையின் மீது நளபாகப் போட்டி - 10 என்று குறிப்பிடவும்.
ஆசிரியர் தீர்ப்பே இறுதி.


பெயர் : .... விலாசம் : ....

....

....

தொலைபேசி எண் : ....





படிக்க... பயன்பட...

நூல் அறிமுகம்

பெண் குழந்தை வளர்ப்பு : பெற்றோர்களுக்கான கையேடு - சி.எஸ். தேவ்நாத், நர்மதா பதிப்பகம், 10, நாணா தெரு, சென்னை - 17. விலை ரூ. 60.00

பெண் குழந்தை வளர்ப்பில் பெற்றோர் காட்ட வேண்டிய அக்கறையையும், அவர்களுக்கு ஊட்ட வேண்டிய தன்னம்பிக்கையையும் விளக்குகிற நல்ல நூல்.

ஆப்பிரிக்க காந்தி நெல்சன் மண்டேலா இராம. சுந்தரம் - மணிமேகலை பிரசுரம், சென்னை - 17. விலை ரூ. 32.00

தென் ஆப்பிரிக்கா விடுதலைக்குப் பாடுபட்ட நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய நூல்.

நிறைவளிக்கும் வாழ்வு. ஜேம்ஸ் ஆலன் தமிழில் இரா. நடராஜன், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 36.00

'நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்களோ, அதுவாகவே இருக்கிறீர்கள்' 'ஆன்மிக தியானமும் சுயஒழுங்கும் பிரிக்க இயலாதவை' போன்ற தத்துவச் சிந்தனைகள்.

திருப்பூர் குமரன் - கே. ஜீவபாரதி, குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை - 1 7. விலை ரூ. 40.00

கொடிகாத்த குமரனோடு சேர்ந்து போராடியவர்களுள் ஒருவர் மறைந்த அப்புக்குட்டி முதலியார். அவரையும் அவருடைய துணைவியாரையும் சந்தித்துத் தொகுக்கப் பட்ட வீர வரலாறு.

பாஸிடிவ் பாயிண்ட் - ஓஷோ ஸ்ரீதரன். வாநினி வெளியீடு, 14வது தெரு, 4வது செக்டார், கே.கே. நகர், சென்னை - 78. விலை ரூ. 49.00

வாழ்க்கையில் தன்னம்பிக்கையோடு வெற்றி பெற உதவும் நூல். சிறு சிறு நிகழ்ச்சிகள் மூலம் விளக்கம் தந்துள்ள முறை நன்றாக உள்ளது.

வாழ்ந்து காட்டிய வள்ளல் எம்.ஜி.ஆர். 'பொம்மை' சாரதி. நர்மதா பதிப்பகம், சென்னை - 17. விலை ரூ. 60.00

எம்.ஜி.ஆரோடு நெருக்கமாகப் பழகிய பத்திரிகையாளரின் அனுபவத் தொகுப்பு இது. புரட்சித் தலைவரின் பல பரிமாணங்களைச் சுவையாக எழுதியிருக்கிறார்.

நோய் தீர்க்கும் யோகாசனங்கள். பி.ஆர். தாமஸ். குறிஞ்சி வெளியீடு, 20, டீச்சர்ஸ் கில்டு காலனி, வில்லிவாக்கம், சென்னை - 49. ரூ. 50.00

இதிலுள்ள ஆரோக்கிய வாழ்வுக்கான வழிமுறைகள் அனைவருக்கும் பயன்படும்.

- வாசகன்

கோல்ஹாபூர் மகாலட்சுமி திருக்கோவில் என்றவுடன் அன்னையின் அழகான உருவமும், வெண்மையான கோவில் கோபுரங்களும் தான் கண்முன் தோன்றும்.

இத்தலம் மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ளது. மும்பை, பூனா நகர்களிலிருந்து நேரடியாகவும், சென்னை



* கட்டட அழகு



கோலோச்சும் கோல்ஹாபூர்

- குண்டக்கல் - லோண்டா மீராஜ் வழியாக ரயில் மூலமாகவும் பயணம் செய்து இத்திருக்கோவிலை அடையலாம்.

இந்த ஆலயம் சுமார் 6000 ஆண்டு பழமையானது எனக் கூறுகின்றனர். ஆனால் மகாலட்சுமி ஆலயம், அம்பாளின் திருவுருவம் இவை தோன்றிய காலத்தை எவரும் அறிந்திலர். கி.பி. 1306-1307ம் ஆண்டுகளில் ஏற்பட்ட படையெடுப்புகளில் இந்த ஆலயம் தாக்குண்டது. எனினும் இச்சிலை பக்தர் ஒருவர் வீட்டில் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. பிறகு மராத்தியர்கள் ஆளத் தொடங்கியதும் இந்த மகாலட்சுமி ஆலயத்தைத் தொடங்கினர். 1712ம் ஆண்டு ஒரு நல்லநாளில் இச்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்றிலிருந்து அவளது அருள் கடாட்சத்துக்கு எல்லையே இல்லை.

பக்தகோடிகள் தினசரி அன்னையைத் தரிசித்து குடம் குடமாக பால், தயிர், தேன் சந்தனம், வாசனைப் பொடிகள், மஞ்சள் நீர் முதலானவற்றால் அபிஷேகம்



செய்ததால் அம்மனின் திருவுருவம் நலிய ஆரம்பித்தது. எல்லோரும் கூடி ஆலோசித்து இச்சிலைக்கு மருந்துக் காப்பு சாத்தப்பட்டு வலுவூட்டப்பட்டது. அதனால் எல்லாவித அபிஷேகங்களும் நிறுத்தப்பட்டன. அதற்குப் பதிலாக ஐந்து கால பூஜை தொடங்கப்பட்டு இன்றுவரை நடைபெறுகிறது.

ஐந்து தலை வெள்ளி நாகம் பளபளக்கிறது.

அன்னையின் பின்னால் அவளது வாகனமான சிம்மம் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

அன்னையை எங்கு நின்று பார்த்தாலும் மனம் நிறைய, கண்குளிரப் பார்த்து அருள்பெறலாம் அப்படியொரு அமைப்பு.

ஆலயத்தின் பிராகாரத்தை வலம் வருகிறோம். அங்கு மகாகணபதி மகாலிங்கம், மகாகாளி, மகாசரஸ்வதி முதலிய தெய்வங்களின் சந்நிதிகளைக் கண்டு வணங்குகிறோம். ஸ்ரீயந்திரம் என

மகாலக்ஷ்மி!

கண்களைப் பறிக்கும் வண்ணப் பட்டாடைகளால் அம்மனை அலங்கரிக்கின்றனர். நெய்விளக்கு ஆரத்தியும் எடுக்கின்றனர்.

நாம் இப்பொழுது தேவியை, மகாலக்ஷ்மியைக் காண்கிறோம்.

தேவியின் கரங்களில் வாள், கேடயம், கதை, தாமரைப் புஷ்பம், இருந்தாலும் நாம் அதைக் காண முடியாது. ஏனென்றால் எப்பொழுதும் பலவித வண்ண ஆடைகள் அவற்றை மறைக்கின்றன.

சிரசில் வைரக்கிரீடம், ஜொலிக்கிறது. அதன்மேல் குடைபோல கவிழ்ந்துள்ள



* ஸ்ரீ மகாலக்ஷ்மி

அழைக்கப்படும் ஸ்ரீ சக்ரத்துக்கே ஒரு தனி சந்நிதி உண்டு.

கோலாகரன் என்ற அரக்கனை மகாலட்சுமி நவதுர்க்காக்களின் உதவியுடன் எதிர்த்து அழித்ததால் இவ்வூர் கோல்ஹாபூர் என பெயர் பெற்றது என்றும் கூறுகின்றனர். அதனால் இங்கு அம்பாள் மஹிஷாசுரமர்த்தனியாகப் போற்றப்படுகிறாள்.

இத்தலத்தை தக்ஷிணகாசி என்றும் கூறுவர். ஒருமுறை அகத்தியப் பெருமான் தென்பகுதி யாத்திரை முடிந்து காசி க்ஷேத்திரத்துக்கு செல்லும் முன் சற்று களைப்பு ஏற்பட்டது. உடனே சிவபெருமானை வேண்டினார். உடனே ஸ்ரீ பரமேச்வரன் காட்சியளித்து கோல்ஹாபூரை 'தக்ஷிணகாசி' என்று கூறி இங்கு தங்கினாலே அது வடக்கில் உள்ள காசி க்ஷேத்திரத்தில் தங்குவதற்குச் சமம் என்று அருள்புரிந்தார். அதனால் அகத்தியப் பெருமானும் அவரது மனைவி லோபமுத்திரையும் இத்தலத்திலேயே தங்கிவிட்டதாக புராண வரலாறு.

நவராத்திரியின் ஒன்பது நாட்களும் அம்மனுக்கு விதவிதமான அலங்காரங்கள்; ஜோடனைகள்! சிம்மம், யாளி, பூதம், யானை, கருடன், கமலமலர், குதிரை, மயில், அன்னம் என தினமும் ஒரு வாகனம் கொண்டு எழுந்தருளும் அப்பராசக்தியைக் காண கண் கோடி வேண்டும்.

- கே. ராஜலக்ஷ்மி,
சென்னை - 82.


கோயில் முகப்பு



பாரோ பலராமா!

மைசூர் தசரா பண்டிகையில் யானைகளுக்கு முக்கிய பங்கு உண்டு. மொத்தம் 12 யானைகள் இதில் கலந்து கொள்கின்றன. இதற்காக 6 யானைகள் நாகரஹொளே தேசியப் பூங்காவிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளன. யானைப் பேரணிக்குத் தலைமைதாங்கும் பலராமா (49 வயது)வுக்கு தனிச் சிறப்பு உண்டு. 8வது வருடமாக அது தங்க அம்பாரியைச் சுமக்க உள்ளது. துரோணா என்ற யானை இதுவரை 14 தடவை தங்க அம்பாரியை சுமந்து சாதனை படைத்துள்ளது. பலராமாவுடன் அர்ஜுனா (43), பரதா (40), கஜேந்திரா (52) போன்ற யானைகளும் வந்துள்ளன. இவற்றில் வருங்காலத்தில் தங்க அம்பாரியைச் சுமக்கும் தகுதி அர்ஜுனாவுக்கே அதிகம். ஏனென்றால் அதன் கம்பீரமும் அடக்கமும், பணிவும் அனைவரையும் கவர்ந்துள்ளது.

தசராவுக்காகக் காட்டிலிருந்து வரும் இந்த யானைகளை வரவேற்பதே தனி அழகு. யானைகள் மலர்கள் தூவப்பட்டு ஆட்டம் பாட்டத்துடன் வரவேற்கப்படுவதைக் காண பெரும் திரளான மக்கள் கூடுவர். யானைகள் வந்து விட்டாலே மைசூரில் தசரா களைகட்டி விடும்!

– ராஜிராதா, பெங்களூர் – 34.

சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை கணேஷுக்கு. எவ்வளவு முன்னெச்சரிக்கையானவன் அவன்! மாமியார் மருமகள் சண்டை வந்து விடுமோ என்று பயந்து தாயாரை ஊரிலேயே விட்டு வைத்திருந்தான். வேலை பார்க்கும் பெண்களை எல்லாம் மறுத்து விட்டான். நன்கு சமைக்கத் தெரிந்த, பார்க்க அழகாய் பெண்ணாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே அவன் போட்ட கண்டிஷன். சமையல் எக்ஸ்பர்ட்டான அம்மா, 'பிரமாதம்' என்று சர்டிபிகேட் கொடுத்திருந்தார். பெண் அழகுதான் என்பதை நேரிலும் பார்த்து உறுதிசெய்து கொண்டான். இருந்தும் இப்போது...



கிச்சன் கில்லாடி!

பி.சாரததேவி

இவ்வளவு நாள் ஹோட்டலில் சாப்பிட்டு அலுத்து விட்டது. வீட்டுச் சாப்பாடு என்றாலே தனிதான். மாமியார் வீட்டில் ஒரு வாரம் விருந்து சாப்பிட்டு விட்டு புது மனைவி ப்ரியாவுடன் ஊர் சுற்றிவிட்டு சென்னை திரும்பியிருந்தான். நாளை ஆபீஸ் போக வேண்டும். இன்று முதல் முதலாக மனைவி கையால் சாப்பிடப் போகிறான். லஞ்சுக்கு மட்டன் வாங்கிக் கொடுத்திருந்தான். நல்ல பசியுடன் தட்டின் முன் உட்கார்ந்தான். ப்ரியா பரிமாறினாள்.

'' 'மட்டன் 95' சாப்பிட்டுப் பாருங்கள்'' என்றாள் வெட்கத்துடன். ''என்னது! மட்டன் 95ஆ! கேள்விப்பட்டதே இல்லையே'' ''சாப்பிட்டுப் பாருங்களேன்'' சாப்பிட்டதில் அவன் முகத்திலிருந்த அத்தனை திசுக்களும் திருகிக் கொண்டாற்போன்ற உணர்ச்சி! இதுவரை பெருங்காய வாசனையுடன் அவன் மட்டன் சாப்பிட்டதே இல்லை. ''எப்படி இருக்கிறது?''

''ஹி, ஹி! நன்றாக இருக்கிறது'' சமாளித்துவிட்டு கைகழுவச் சென்றான்.

''என் பெண் சூப்பராக சமைப்பாள்'' என்று ப்ரியாவின் தாய் பீற்றிக் கொண்டது நினைவுக்கு வந்தது. இதுதான் சூப்பர்



சமையலா?

சாயங்கால டிபனுக்கு புடலங்காய் பஜ்ஜியாம்! ''இரவு சாதம் சாப்பிட்டு விடுவோம்' என்று கெஞ்சியும், கொஞ்சியும் அவள் கேட்கவே இல்லை. 'உங்களுக்கு வெரைட்டியாக டிபன் தருவதற்குத்தானே நான் இருக்கிறேன். எனக்குச் சிரமமேயில்லை'' என்று துள்ளி ஓடி சமையலறைக்குள் புகுந்தாள்.

டி.வி. பார்த்துக் கொண்டிருந்தவனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

நத்திங் டூயிங்! இன்னிக்கு உங்களுக்காகவே ஸ்பெஷல் ஐட்டம் ஒன்றை காலையிலிருந்தே யோசிச்சு வைச்சிருக்கேன்

டைனிங் டேபிள் மேல் பிரௌன் கலரில் தோசையும் பச்சையாக ஒரு சட்னியும் அவனைப் பார்த்துச் சிரித்தன. கோதுமை மாவில் கேழ்வரகு ரவை சேர்ந்த தோசையாம்! சட்னியிலோ வேர்க்கடலை, புதினா கூட்டணி!

முதல் தோசையை எப்படியோ சாப்பிட்டான். ''எனக்கு வயிறு அப்செட் ஆனது போலிருக்கிறது. போதும்'' என்று எழுந்து டாய்லெட்டுக்குள் எஸ்கேப் ஆனான்.

தினமும் இப்படி விதம் விதமாக(!) சமைத்துப் போட அவன் விரக்தியின் விளிம்பை எட்டியிருப்பான். ஆனால் மதியச் சாப்பாடு கம்பெனி தருகிறது. அதை ஒரு பிடி பிடித்து விடுவான். காலையிலும் இரவிலும் சிரமம் தான். கோபித்துக் கொள்ளவும் மனமில்லை. புது மனைவி ஆயிற்றே! தட்டிக் கழிக்கவும் முடியாது. அவன் சாப்பிடத் தயங்கினால் ப்ரியாவே ஊட்டி விடவும் தயங்க மாட்டாள். இந்த கெமிக்கல் கலவை சாப்பாட்டை அவன் எப்படித்தான் சாப்பிடுகிறானோ அவனும் இளைத்திருப்பதாகத் தான்பட்டது.

அந்த ஞாயிற்றுக் கிழமை சிக்கன் வாங்கிக் கொடுத்தான். அதை எந்த வடிவில் சமைத்தாலும் சாப்பிட்டு விடலாம் என்பது அவன் எண்ணம். ஆனால் அதுவும் 'சிக்கன் ரவை பிரியாணி' வடிவில் வந்து அவன் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கியது.



அன்று இரவு ப்ரியாவின் கன்னத்தைக் கிள்ளி, ''கண்ணம்மா, இன்றுடன் நமக்குத் திருமணமாகி ஐம்பது நாட்கள் ஆகிவிட்டதல்லவா? அதை நாம் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டாடுவோமே. பாவம் உன் சின்னக் கை செல்லக் கை - சமைத்துச் சமைத்துச் சிவந்து விட்டது பார்'' கொஞ்சினான்.

''நத்திங் டூயிங்! இன்னிக்கு உங்களுக்காகவே ஸ்பெஷல் ஐட்டம் ஒன்றைக் காலையிலிருந்து யோசிச்சு வைச்சுருக்கிறேன்'' என்று மிஞ்சினாள். இனிப்பும் உப்புமாக ஏதோ ஒன்றை விழுங்கி சாப்பாட்டுக் கடனைக் கழித்தான்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? நவராத்திரி முதல் நாளன்று காலை உருளைக்கிழங்கு கொழுக்கட்டையை (மேலிருந்த முந்திரிப் பருப்பை மட்டும் எடுத்துக் கொண்டு) தட்டுடன் தள்ளி வைத்தான். தாய்க்கு ஃபோனைப் போட்டான். ''அம்மா, உடனே பஸ் ஏறுங்க. கோயம்பேடுக்கு நான் வந்து அழைத்துச் செல்கிறேன்'' வேறு ஒன்றும் சொல்லாமல் ஃபோனை வைத்தான்.

இதோ அம்மாவை அழைத்து வந்தாகி விட்டது. வரும்போதே எல்லாவற்றையும் ஒப்பித்திருந்தான். ''இனி அம்மா சமைப்பார்கள். நீ ஓய்வு எடுத்துக் கொள்'' சொல்லிவிட்டு ஆபீஸ் புறப்பட்டான். இரவு வீட்டுக்குள் நுழையும்போதே முருங்கைக்காய் சாம்பார் மணமணத்தது. ஐந்து தோசைகளையும் ஐந்தே நிமிடங்களில் விழுங்கிவிட்டு, ''அம்மா, என்ன இருந்தாலும் உங்கள் சமையல் தனிதான்'' வாய் நிறையப் பாராட்டினான்.

''என்ன, என் சமையலா? எல்லாம் நம் ப்ரியா சமையல்தான்.''

''ப்ரியாவா? அவள் இதெல்லாம் கூட சமைக்கிறாளா?''

தனிமையில் ப்ரியா சொன்னாள், ''பின்னே என்ன? ஏதோ மாமியார் - மருமகள் சண்டை வந்து விடும்னு உங்க நண்பர்கள் சொன்னதைக் கேட்டு பயந்துக்கிட்டு, வயசான அம்மாவை ஊரிலேயே விட்டு விட்டு வந்துட்டீங்க. பாவமில்லையா? சண்டை வந்தால்தான் என்ன? குடும்பம்னா எல்லாமும்தான் இருக்கும். நமக்குள் சண்டை வந்தால் என்ன செய்வீங்களாம்?''

''சரி குருவே, உங்கள் உபதேசத்தைக் கேட்டுக் கொண்டேன். பாகற்காய் வடை பிரசாதம் தருகிறீர்களா?'' என்று பவ்யமுடன் குனிந்தான்.

சிரிப்பொலியில் வீடு நிறைந்தது. ●

ஒருகாலத்தில் ஆடம்பரச் சாதனமாக இருந்த செல்ஃபோன், இப்பொழுது எல்லோர் கைகளிலும் நடமாடுகிறது. ஆனால் இதனை உபயோகிப்பவர் இதன் உபயோகத்தை முற்றிலும் உணர்ந்திருக்கிறார்களா என்பது சந்தேகமே. எனக்குத் தெரிந்த சில செல்ஃபோன் தகவல்களைப் பரிமாறிக் கொள்கிறேன்.




ஐ லவ் யூடா செல்:போன்!

இது ரிமோட் கன்ட்ரோல் காலம். காருக்கும் ரிமோட் கன்ட்ரோல் சாவி உள்ளது. இந்தச் சாவியை மறந்து காரில் வைத்து விட்டுக் கதவை அடைத்து விட்டாலோ, இல்லை தொலைத்து விட்டாலோ அக்காரைத் திறக்க செல்ஃபோனால் இயலும்.

கைவசம் இருக்கும் செல்ஃபோனில் மறுசாவி இருக்கும் இடத்துக்குத் தொடர்புகொள்ளவும். அவ்விடத்திலிருந்து மறுசாவியின் பொத்தான்களை அழுத்தச் சொன்னால் காரின் கதவைத் திறக்கலாம். அவ்வாறு செய்யும்பொழுது காரின் கதவிலிருந்து ஓர் அடி இடைவெளியில் செல்ஃபோனைப் பிடித்திருக்க வேண்டும். இவ்வாறு மறுசாவி இருக்கும் வீட்டிலிருந்தே பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் காரின் கதவைத் திறக்கலாம்.

செல்ஃபோனின் பாட்டரியின் சார்ஜ் குறைந்து இருக்கும் சமயத்தில் நீங்கள் அவசரமாக ஒருவரைத் தொடர்பு கொள்ள வேண்டுமானால் என்ன செய்யலாம்?

நோக்கியா செல்ஃபோனில் இதற்கு சௌகரியம் உள்ளது. நாம் ரீ-சார்ஜ் செய்யாமலேயே தொடர்பு கொள்ள முடியும். நோக்கியா செல்லில் ஓர் எக்ஸ்ட்ரா பாட்டரி உண்டு. இதனை உபயோகிக்க '3370' '#' எண்ணில் கூப்பிட்டால் பாட்டரி ஐம்பது



பார்வைகள் பலவிதம்!

தீக்ஷைகள் மூன்று விதம். 1. ஸ்பரிச தீக்ஷை, 2. பார்வை தீக்ஷை, 3. மானசிக தீக்ஷை

* கோழி தன் முட்டைகளை இறகுகளால் அடைகாத்து குஞ்சு பொரிக்கும்; இது ஸ்பரிச தீக்ஷை!

* மீன்கள் முட்டை இட்டதும் தன் முட்டைகளைத் திரும்பிப் பார்க்குமாம். அதன் பார்வைபட்ட முட்டைகள் யாவும் குஞ்சுகளாகப் பொரியுமாம்! - இது பார்வை தீக்ஷை!

* ஆமை எங்கேயாவது மணலில் முட்டை இட்டுச் சென்று விடும். பிறகு தன் முட்டைகளைப் பற்றி நினைக்கும்பொழுது இந்த முட்டைகள் குஞ்சாகப் பொரியுமாம். இது மானசிக தீக்ஷை!

வன்னி, பாதிரி, வில்வம். இவை தேவலோக விருட்சங்கள்.

வில்வ மரம் : கைகளால் தொட்டாலோ பயன்படுத்தினாலோ நற்பலன் கிடைக்கும் சக்திவாய்ந்தது. இது ஸ்பரிச தீக்ஷை!

பாதிரி மரம் : பார்த்தால் நற்பலன் கிடைக்கும். இது பார்வை தீக்ஷை!

வன்னி மரம் : நினைத்தாலே நற்பலன் கொடுக்கக்கூடியது. இது மானசிக தீக்ஷை!

- ஏ. ராதிகா, சென்னை - .4

சதவிகிதம் சார்ஜ் ஆகி உபயோகப்படுத்தும் சூழல் ஏற்படும்.

மொபைல் ஃபோன் திருட்டுப் போவது என்பதும் மிகவும் சாதாரணமான விஷயமாகி விட்டது. திருடப்பட்ட செல்ஃபோன் திரும்பக் கிடைக்க ஒரு வழி இருக்கிறது. அதற்கான ஒரு சீரியல் நம்பர் எல்லா செல்ஃபோன்களிலும் உண்டு. இந்த நம்பரை நாம் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் செல்ஃபோன் வாங்கிய உடனேயே இந்த நம்பரை டயரியிலோ, கம்ப்யூட்டரிலோ பதிவுசெய்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த எண் கிடைக்க, செல்ஃபோனில் ★ # 06 # என்ற நம்பரை டயல் செய்யவும். உடனேயே பதினைந்து இலக்க எண் ஒன்று செல்ஃபோனில் வரும். இதனைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் நம் கைவசம் இருக்கும் மொபைல் ஃபோனில் சீரியல் நம்பர். மொபைல் திருடப்பட்டால் சீரியல் நம்பரை டெலிஃபோன் அலுவலகத்தில் கொடுத்தால் தொலைந்த ஃபோனின் சர்வீஸை அதிகாரிகள் நிறுத்தி விடுவார்கள். சிம் கார்டு மாற்றிப் போட்டாலும் செல்ஃபோனைத் திருடியவர்களால் உபயோகிக்க முடியாது, விற்கவும் முடியாது.

மொபைல் ஃபோனின் ரேஞ்ச் இல்லாத இடத்தில் நாம் அகப்பட்டுக் கொண்டால் நாம் 112 ஐத் தொடர்பு கொள்ள வேண்டும். இது ஓர் எமர்ஜென்ஸி நம்பர். உடனே ஏதாவது ஒரு நெட்வொர்க் வழி நமக்கு வேண்டியவர்களோடு தொடர்பு கொள்ள இயலும். அந்தச் சமயத்தில் நமது கீ பாட் பூட்டியிருந்தாலும் இந்த 112 ஐத் தொடர்பு கொள்ள முடியும்.

நமக்குப் பலவிதங்களிலும் பயன்படக்கூடியவண்ணம் அமைக்கப்பட்டுள்ள செல்ஃபோனை சரியான விதத்தில் பயன்படுத்தினால், ''ஐ லவ் யூடா செல்ஃபோன்!'' என்று பிரகாஷ்ராஜ் பாணியில் சொல்வீங்க!

- ஸ்ரீமதி ராமஸ்வாமி,
வல்லக்கடவு.

கைவண்ணம்

கொலு கல்யாண வைபோகமே!



''எங்க வீட்டுல நவராத்திரி கொலுவை ரொம்ப விமரிசையா வைப்போம். 2006-ல் 'தெய்வத் திருமணங்களும், மானிடத் திருமணங்களும்' என்ற தலைப்பில் வைக்கப்பட்ட கொலு, அனைவரது பாராட்டையும் பெற்றது. அதுக்கு நான் மங்கையர் மலருக்குத்தான் நன்றி சொல்லணும். ஏன்னா, உங்களோட 'திருமண மலர்' புத்தகத்தில் வந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டுதான் இந்தத் 'தீமை'யே அமைச்சேன். அருமையான இன்ஸ்பிரேஷன் தந்த மங்கையர் மலரின் திருமண மலருக்கு நன்றி'' என்று பாராட்டி மகிழ்ந்தார் நமது சென்னை வாசகி, பத்மினி ஸ்ரீநிவாஸன். இவர், கர்நாடகப் பாடகி காயத்ரி கிரீஷின் தாய்.



* வாசலில் சந்தன பேலா வரவேற்பு (''கல்யாண வைபோகமே'' தலைப்புடன்...)



* லக்ஷ்மி கல்யாணம் (கருடர் முகத்தில்தான் எத்தனை பரவசம்!)



✱ ருக்மணி கல்யாணம்
(கண்ணன் லீலைகளைக் கேட்டு ருக்மணி வெட்கப்படுகிறாள்)

✱ திருமணஞ்சேரி ஸ்தல வரலாற்றில் ஒரு காட்சி...





✱ சீதா கல்யாணம்
(அண்ணலும் நோக்க... அவளும் நோக்கினாள்)

✱ திருமணத்தடை நீக்கும் திருவிடந்தை






✱ கல்யாண வரம் தரும் காமாக்ஷி

✱ மானுடத் திருமணக் காட்சிகளில் ஒருசில...



✱ மாக்கோலமிட்டு வரவேற்று...



✱ "மணமகளே... மருமகளே வா... வா..."



✱ நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க...

நம் தினசரி வாழ்விலும், பண்டிகைகளிலும், சுபநிகழ்ச்சிகளிலும்... வேத காலத்திலிருந்தே இணைந்து விட்டவையல்லவா சந்தனமும், மஞ்சளும்... சந்தனம் குளிர்ச்சி, மஞ்சள் கிருமிநாசினி... நம் எல்லோருக்குமே தெரியும்.

மஞ்சளின், சந்தனத்தின் மருத்துவக் குணங்களையும் உபயோகிக்கும் முறையும் பற்றி மணக்க மணக்க இந்தப் பக்கங்களில் பார்ப்போமா?



அழகுக்கு...

★ காலில் பித்தவெடியா? மஞ்சள் பொடியோடு வேப்பங்கொழுந்தை அரைச்சு காலில் பத்து போட்டு வர, பாதம் 'மொழு மொழு' என ஆகிவிடும்

★ ஒரு பிரமாதமான ஆன்டிசெப்டிக் லோஷன் தயாரிக்கலாமா?

தேங்காய் எண்ணெய் கால் லிட்டர் எடுத்து காய்ச்சுங்க. அது காயும் போது 50 கிராம் கஸ்தூரி மஞ்சள் தூள் போடுங்க. [கஸ்தூரி மஞ்சள்தான் போடணும்] நல்லா பொரிஞ்சு நுரை வரும்... ஆறியதும் மேலே தெளிஞ்சு நிக்கும்... அதை அப்படியே ஒரு பாட்டில்லே எடுத்து வச்சுக்குங்க!

தீப்புண், வெட்டுக்காயம் எல்லாத்துக்கும் அருமருந்து.



★ பசு மஞ்சள் உலர்த்தி எடுத்துக்கவும். வெள்ளை மிளகு, நெல்லிமுள்ளி, வேப்பங்கொட்டை இந்த நாலையும் சம அளவு எடுத்து அரைத்துப் பொடியாக்கவும். இதைக் கொஞ்சம் பாலிலே கலந்து முகம், கழுத்துப் பகுதிகளில் தடவி வந்தால் வயசாறப்ப ஒரு சதைத் தொய்வு ஏற்படுமே, அது வராமல் நிச்சயமா தடுக்கலாம்!

★ ஒரே ஒரு பாதாம் பருப்பு, 1 டீஸ்பூன் பால் எடுத்துக் கொள்ளவும். பாதாம் பருப்பை விழுதாக்கி பாலில் கலந்து, கால் டீஸ்பூன் சந்தனத் தூளும் கலந்து, முகத்தில்... குறிப்பாக பரு இருக்கும் இடங்களில் தடவவும். மசாஜ் செய்து கழுவி விட்டால் போதும்! முகம் செம 'லுக்' ஆக இருக்கும்!

★ ஜிங்க் ஆக்சைட், செர்ரி பிளாசம் இவை இரண்டையும் கடையில் வாங்கி வந்து சிறிது சந்தனப் பவுடர் கலந்து வஸ்திரகாயம் [துணியில் சலிப்பது] செய்து முகத்தில் தடவி வந்தாலும் பருக்கள் வராமல் செய்யலாம்.. தழும்புகளையும் மறைய வைக்கலாம்.

★ தூக்கிக் கொண்டை போட ஆசை...





ராஜம் முரளி

ஆனால் கழுத்து கறுப்பாக இருக்கு... சிறிதளவு சந்தன எண்ணெய், ஆலிவ் எண்ணெய் வாங்கி வரவும். இரண்டும் [சில சொட்டுக்கள்] கலந்தோ அல்லது ஒருநாள் சந்தன எண்ணெய் அடுத்த நாள் ஆலிவ் எண்ணெய் என்றோ தடவி வந்தால், பின்னங்கழுத்து ஜொலிக்கும்!

சமையல் குறிப்பு

மஞ்சள் டீ

ஆர்த்ரைடிஸ் பிரச்னை உள்ளவங்களுக்கு இந்த மஞ்சள் டீ நல்லது. அரை லிட்டர் தண்ணீரில் ஐம்பது கிராம் மஞ்சள் பொடி போட்டு சுண்டக்காய்ச்சணும். சிறிது இஞ்சி தூவவும். இதைத் தேவையானால் சர்க்கரை, பால் சேர்த்து, ஒரு வாரத்துக்கு தினமும் சாப்பிட்டு வந்தால் மூட்டுவலி போயிடும்!

ஆரோக்கியத்துக்கு...

இருமல், ஜலதோஷம் என்று அவதிப்பட்டால், மஞ்சள் பொடியை சூடாகப் பாலில் போட்டு சர்க்கரை சேர்த்துக் குடிப்போம் இல்லையா...? மஞ்சள் பொடியை தேனில் குழைத்துச் சாப்பிட்டாலும் நல்ல குணம் தெரியும்... அதே போல மஞ்சள் கிழங்கை அடுப்பில் சுட்டு அந்தப் புகையை மூக்கில் இழுக்கலாம்...

★ மஞ்சள் பொடியோடு சிறிது பனை வெல்லம் சேர்த்துச் சாப்பிட்டு வாருங்களேன்... சிறுநீர் ஒழுங்காகப் பிரியும்.

★ சில பேர் கால் ஆணி வந்து கஷ்டப்படுவாங்க. மஞ்சள் பொடியோடு, வேப்பங் கொழுந்து, மருதாணி, குப்பைமேனி இலைகளை அரைச்சு எல்லாம் சமஅளவா கலந்து தடவி வந்தால் போதும். கால் ஆணி காணாமல் போகும்.

தொகுப்பு: பத்மினி பட்டாபிராமன்

படம் : ஸ்ரீஹரி

ஊர், உலகத்தில் எத்தனையோ விஷயங்களுக்குப் போட்டிகள் வைத்து பரிசுகள் கொடுக்கிறார்கள். பொம்மைக் கொலு மட்டும் விதிவிலக்கா என்ன? சென்னையைச் சேர்ந்த 'டாக் மீடியா' என்ற பத்திரிகை நிறுவனம் வருடா வருடம் சிறந்த பொம்மை கொலு வைத்த பெண்மணிகளுக்கு பரிசுகள் வழங்குகின்றது. சிறந்த கொலு என்பதை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள், அதை எப்படித் தேர்வு செய்கிறார்கள்? 'டாக் மீடியா' சார்பில், கொலு நடுவராக நியமிக்கப்பட்டுள்ள சாந்தியை சந்தித்தபொழுது...





கொலு ஜட்ஜம்மா!

“கொலு என்றால் சம்பிரதாயக் கொலுவாக இருக்க வேண்டும் என்பது ரொம்பவும் முக்கியம். அதைத் தவிர படைப்பாற்றலுக்கு மதிப்பெண்கள் உண்டு. முதலில் வீட்டினுள் நுழைவதற்கு முன் வாயிலில் அமைக்கப் படும் தோரணம், கோலம் இரண்டையும் கவனிப்போம். கற்பனாசக்தியை எடுத்துக்காட்டும் 'பார்க், கோயில், பள்ளிக்கூடம் போன்ற அமைப்புகள். அதிலும் ஏதாவது ஒரு 'மெசேஜ்'



* கடந்த இரண்டு வருடங்களாக பொம்மை கொலுப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிச் சென்ற சாலிகிராமம் வாசகி பானுசித்ரா

இருந்தால் மார்க்குகள் கூடும். மேலும் ஏதாவது ஒரு 'தீமை' அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தால் சிறப்பு மதிப்பெண்கள் தருவோம். பொம்மைகள் அல்லது படங்களில் அவர்கள் எந்த அளவுக்கு ஈடுபாட்டுடன் கைத்திறமையைக் காட்டியுள்ளார்கள் என்பதையும் கவனத்தில் கொள்வோம்.

சம்பிரதாயக் கொலுவில், படிகளில் பொம்மைகள் சாஸ்திரப்படி வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். மேல் படிகளில் தெய்வங்களை வைத்து, அதற்குப் பிறகு தேவர்கள், மகான்களை வைத்து, அதற்குக் கீழ்ப்படிகளில்தான் விலங்கினங்கள் வைக்க வேண்டும். மனிதர்களாகப் பிறந்த நாம் நல்லவற்றைச் செய்தால் தேவர் நிலையை அடைந்து, பிறகு பகவானின் பாதாரவிந்தங்களை நெருங்கலாம். தீயவற்றைச் செய்தால் விலங்கினங்களாகப் பிறவி எடுப்போம் என்பதைப் புரியவைக்கத்தான் கொலு. கொலுவின் தாத்பரியமும் அதுதான். அதைப் புரிந்து கொள்ளாமல் சிலர் மேற்படியில் பகவானுக்குப் பக்கத்தில் நாய் பொம்மைகளை இருபுறமும் வைப்பார்கள். அவர்களுக்கு மைனஸ் மார்க்தான்!

இன்னொரு முக்கிய விஷயம். இந்து சம்பிரதாயத்தில் பல உருவில் தெய்வங்களை வணங்குகிறோம். நம் குழந்தைகளே இந்து மதத்தில் ஏன் இத்தனை தெய்வ உருவங்கள் என்று கேட்கிறார்கள். ஹயக்ரீவர் என்றால் கல்விக்கு, லக்ஷ்மி என்றால் செல்வத்துக்கு ஹனுமான் என்றால் பலத்துக்கு என்று பெரியவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் சிறியவர்களுக்கு அவ்வுருவங்களின் அனுகூலம் புரியும். சில பெண்மணிகள் பொம்மைகளில் எழுதியும் வைத்து மார்க்குகளைத் தட்டிச் செல்கிறார்கள்.

இதையெல்லாம் மனத்தில் கொண்டுதான் தேர்வு செய்கிறோம். சின்னக் கொலுவுக்கு முதல் பரிசும் கொடுத்திருக்கிறோம். ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலவழித்தவர்களுக்கு ஆறுதல் பரிசு கூட கிடைக்காமல் போயிருக்கிறது.

இந்த நன்னாட்களில் நம்மை பகவானிடத்தில் எவ்வளவு முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறோமோ அவ்வளவு நற்பலன்களையும் பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை'' என்கிறார் கொலு ஜட்ஜம்மா சாந்தி.

- மாலதி சந்திரசேகரன்

''98 ஆண்டுகளாகப் புகழ்பெற்ற பாரம்பரிய மிக்க குடும்ப மருந்தான ''ஆர்.எஸ்.பதி மருந்து நேச்ரோ'' உங்கள் வீட்டு அலமாரியில் இருந்தால், அது உங்களுடனே கைவைத்தியர் ஒருவர் உடனிருப்பதற்குச் சமம். இது எல்லா வயதுக்காரர்களுக்கும் எல்லா காலங்களுக்கும் ஏற்றது'' - ரத்னசபாபதி, உரிமையாளர்.



சர்வ ரோக நிவாரணி

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளு, கை கால் வலி, மூட்டுவலி, சைனஸ் போன்ற உடல் உபாதைகளுக்கு உடனடி நிவாரணி. தலைவலி தரும் இம்சைகளிலிருந்து விடுபட உதவுவது ''ஆர்.எஸ். பதி மருந்து நேச்ரோ'' தைலம். மூன்று அல்லது ஆறு துளிகள் மருந்தினை இரண்டு அல்லது மூன்று முறை நெற்றியில் தேய்க்கவும். அதன் பிறகு தலைவலி போயே போச்!

அதிக தூரம் நடந்து போக நேரும் போதும், கடுமையான உடல் உழைப்பின் போதும் தேகம் முழுவதும் அதிக வலியும், மண்டைக் கனமும், 'விண்விண்' என்று தெறிக்கும். அப்போது வெந்நீரில் 'ஆர்.எஸ். பதி மருந்து நேச்ரோ' விட்டுக் கலக்கி ஸ்நானம் செய்து பாருங்கள். உடம்பு வலி யும் மண்டைக் கனமும் மறைந்து போய் விடும்.

கைகால், முழங்கால், இடுப்பு வலி, மூட்டுவலிக்கு வலியுள்ள இடங்களில் மருந்தை நன்றாகச் சூடேறும்படி அடிக்கடித் தேய்த்து வந்தால், அதன் வலிகளிலிருந்து விடுதலை பெறலாம். கத்தியினால் வெட் டுப் பட்ட காயங்கள், வெந்த புண்கள், புரை யோடிப் போயுள்ள ஆறாத புண்கள் யாவும் இம் மருந்தைப் போட்டு வர, சீக்கிரம் குணமாகும்.

பல் வலி, அரணை, வீக்கம் போன்ற வற்றுக்கு ஒரு பஞ்சில் மருந் தினை நனைத்து நோயுள்ள இடத்தில் அடிக்கடி வைத்து வந்தால் பல் சார்ந்த உபாதைகள் ஓடி ஒளிந்து விடும்.

ஜலதோஷம், மூக்கடைப்பு ஆகிய வற்றுக்கு நோயுள்ள இடங்களில் இம் மருந்தினை நன்றாய்ச் சூடேறும்படி தேய்த்து வரவும். சைனஸ் தொந்தரவு உள்ளவர்கள் இந்த மருந்தை ஒரு துளியும், தேங்காய் எண்ணெய் மூன்று துளி களும் கலந்து காலை, மாலை மூக்குத் தண்டின் மீது தடவி வந்தால் நல்ல நிவார ணம் கிடைக்கும். மேலும் இந்த மருந் தினை சுடுதண்ணீர் பாத்திரத்தில் சில துளி கள் விட்டு, போர்வையில் தலையை மூடிய வண்ணம் ஆவி பிடித்து வந்தால் சைனஸ் தொல்லையிலிருந்து விடுபட்டு விடலாம்.

குழந்தைகளுக்கு இருமல் வந்தால் முது கெலும்பின் மேலும் நெஞ்சுக் குழியிலும் மருந்தை அடிக்கடி தேய்ப் பதுடன் தொண்டையின் மேலும் தேய்த்து வர வேண்டும். நெஞ்சு சளி, இருமல், தொண்டை வலியுடைட குழந்தைகளுக்கு 'டாட்டா' காட்டி விட்டு அகன்று போய் விடும்.

''ஆர்.எஸ்.பதி மருந்து நேச்ரோ'' மருந்து எல்லாக் கடை களிலும் கிடைக்கும்.

தொடர்பு கொள்ள :
மதுரை -
(0452) 2342085
99449 38334



Advt

Wanted Stockists all over Tamilnadu

அமாவாசை நிலவு

தேவிபாலா

நள்ளிரவு கதவு தட்டப்பட, முதலில் பதற்றமாகக் கண் விழித்தது அம்மா தேவகி. மீண்டும் தட்டப்பட, மைத்ரேயி கண்களை விழித்தாள்.

அம்மா வந்து தாளை விலக்கி, கதவைத் திறக்க, ஏறத்தாழ அம்மாவின் மேல் விழும் நிலையில் ஓர் இளைஞன் நின்றான்.

அம்மா மிரண்டு போனாள்.

அவன் கண்கள் சிவக்க தலையைத் தூக்கினான்.

மதுவின் வாடை 'குப்' என தாக்கியது.

இருவரும் நிலைகுலைந்து போனார்கள்.

''யாரப்பா நீ?'' - கேட்ட அம்மாவின் குரல் நடுங்கியது.

''எ...என்னது? எங்க வீட்டுக்குள்ளே நின்னுக்கிட்டு என்னையே யார்ன்னு கேக்கறியா? நீ யாரு?''

''என்னப்பா சொல்றே?'' அம்மாவின் குரல் தொண்டையைத் தாண்டுவதற்குள் பிசிறடித்தது.

அவனது பார்வை அம்மாவைக் கடந்து மைத்ரேயி மேல் வெறியுடன் படிந்தது.

''இது யாரு?''

''இதப்பாரு தம்பி! எந்த வம்பும் பண்ணாம போயிடுப்பா. உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்!''

அவன் அதைப் பொருட்படுத்தாமல் வேகமாக உள்ளே நுழைய, அம்மா படக்கென மண்டியிட்டு, அவன் கால்களைப் பிடித்து விட்டாள்.

அம்மா பிடித்த வேகத்தில் அவன் நிலை தடுமாறி, தலைகுப்புற விழுந்தான்.

விழுந்த வேகத்தில் உள்படியில் தலை மோதி நெற்றியில் உடனே ரத்தம் வழிய, அதைக் கைகளால் தொட்டுப் பார்த்து, ''அய்யோ ரத்தம்!'' என அலறி, மிரண்டு, அப்படியே கண்கள் செருக, மயக்கமானான்.

''தம்பி! என்னாச்சு?''

பதிலே இல்லை.

அம்மா தொட்டுப் பார்க்க, அவன் தலை துவண்டது.

''எத்தனை பெரிய ஆபத்துல இருக்கோம்! இங்கிருந்து போயிடலாம்டி மைத்ரேயி.''

''உனக்குப் பைத்தியமா? இந்த ராத்திரி வேளைல எங்கே போறது?''

''ஒரு ஆட்டோ வச்சிட்டு, ஆஸ்பத்திரிக்குப் போயிடலாம்.''

''வேண்டாம்மா! நீ இங்கே இரு. பங்களா நடக்கற தூரம் தான். வாட்ச் மேன் இருக்கானான்னு நான் பார்க்கறேன்.''

''இருட்டா இருக்கேம்மா!''

''நம்ம வாழ்க்கையே இருட்டுதான். இந்த இருட்டு என்னம்மா செய்யும்? இருவர்றேன்.''

மைத்ரேயி இறங்கி புல்வெளியில் நடக்க, தூரத்தில் நின்ற செக்யூரிட்டி ஓடி வந்தான்.

''என்னம்மா வேணும்? எதுக்கு இந்த நடுராத்திரியில வெளில வர்றே?''

''சீக்கிரம் வாங்களேன்...''


அவன் பதற்றமாக நடந்து உள்ளே வர,

''இந்த ஆள் குடிச்சிட்டு வந்து கலாட்டா பண்றார்.''

''சின்னவர் இங்கே வந்துட்டாரா? அய்யோ அடிபட்டிருக்கே! என்ன செஞ்சீங்க?''

''சின்னவரா?''

''ஆமாம்! இவர்தான் சின்ன முதலாளி.''



6

''அப்படீன்னா, ஈஸ்வர் அய்யாவுக்கு மகனா?''

''ஆமாம்!''

தேவகி பீதி பூசிய முகத்துடன் மைத்ரேயியைப் பார்த்தாள்.

வாட்ச்மேன் சில நிமிடங்களில் வேலைக்காரர்களை அழைத்து வந்து சின்னவரைத் தூக்கிக் கொண்டு போனான்.

மைத்ரேயி வீட்டுக்கு வந்து கதவைச் சாத்தினாள்.

''அம்மா! தப்பான இடத்துக்கு வந்துட்டோம். வெளிச்சம் வந்ததும் போயிட வேண்டியதுதான்!''

''எப்படிம்மா? நாளைக்குக் காலைல அந்தம்மா உனக்கு மஞ்சள் நீராட்டு விழாவுக்கு ஏற்பாடு செஞ்சிருக்காங்களே...?''

''உனக்குப் புத்தியில்லையா? நாம நெருப்புல நீராடிக்கிட்டிருக்கோம். மஞ்சள் நீராட்டு விழாவா? இங்கிருந்து தப்பிச்சா போதும்மா. இந்தக் குடிகாரன் தப்பா நடந்துக்கிட்டாக் கூட வெளில வராது. அசிங்கப்படணுமா? அண்ணி சொன்ன அமாவாசை வேலையைக் காட்டுதா?''

அம்மா கலவரத்துடன் பார்த்தாள்.

''அவ துரத்திட்டாளேடீ. எங்கே போறது?''

''தெரியலைமா. அனாதை இல்லங்கள் ஊர்ல இல்லையா? புகலிடம் கிடைக்காதா?''

''என்ன கொடுமை இது! ஒவ்வொரு ராத்திரியும் திகிலா இருக்குதேம்மா...''

இருவரும் புலம்பியபடி கொட்டக் கொட்ட விழித்திருந்தார்கள்.

விடியத் தொடங்கி விட்டது. மணி ஐந்தரை. இருவரும் முகம் கழுவி, கையில் கொண்டு வந்திருந்த துணிப்பையுடன் புறப்பட்டு விட,

வாசலில் கார் வந்து நின்றது.

திலகம் இறங்கி வந்தாள்.

''என்ன இது? குளிச்சு, பட்டுத்துணி உடுத்தி, நகைகள் எல்லாம் போடலியா?''

''எங்க ஜென்மத்துக்கு அது ஒண்ணுதாம்மா குறைச்சல்?''

''என்ன சொல்றீங்க?''

வேலைக்காரன் ஓடி வந்தான்.

''இங்கே என்னப்பா நடந்தது?''

''சின்னவர் குடிச்சிட்டு வந்து இங்கே ரகளை பண்ணியிருக்காரு. நடுராத்திரியில நாங்க வந்து பங்களாவுக்குத் தூக்கிட்டுப் போனோம்மா.''

திலகம் முகம் இருண்டது.

''கோகுல் இங்கே வந்தானா?''

தேவகி அருகில் வந்தாள்.

''அம்மா, ஆதரிச்சதுக்கு நன்றிம்மா. அரசனை நம்பி புருஷனை இழந்துட்டு



50!

தற்காலத்தில் பெண் குழந்தைகள் சிறு வயதிலேயே பருவமெய்தி விடுகிறார்கள். பெரும் பாலான பள்ளிகளில் வாரத்தில் குறைந்தபட்சம் ஒரு நாளாவது முழு வெள்ளைச் சீருடையைக் கட்டாயமாக்கியிருக்கிறார்கள். சிறு பெண் குழந்தைகள் மாதத்தில் அந்த மூன்று நாட்களில் வெள்ளைச் சீருடை அணிவித்துச் செல்வதை மிகவும் அசௌகரியமாக உணர்கிறார்கள். இருபாலரும் படிக்கும் பள்ளிகளில் அது பெண் குழந்தைகளுக்கு மேலும் கூச்சத்தையும், பயத்தையும் தருகிறது. எனவே, பள்ளி நிர்வாகிகள் வெள்ளைச் சீருடைக்குப் பதிலாக வேறு ஏதேனும் அடர் நிறத்தில் சீருடை வைத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். பள்ளி நிர்வாகிகள் கவனிப்பார்களா?

- வி. ஸ்ரீவித்யா, விருகம்பாக்கம்.

நிக்கறோம். வசதிகள் சில சமயம் திசைகளை மாற்றுது. மன்னிச்சிடுங்க. வாடி மைத்ரேயி.''

''இருங்க. அவசரப்பட வேண்டாம். தயவுசெஞ்சு என்னை மன்னிச்சிடுங்க. அவன் வெளியூர்ல இருந்தான். திடீர்னு இப்படி வருவான்னு நான் எதிர்பார்க்கலை. இனிமே உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது. நம்புங்க.''

''இல்லீங்க. எனக்குப் பயம்மா இருக்கு.''

''அவன் அயோக்கியன் இல்லை. குடிப்பான். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். மைத்ரேயியை, உயிர் கொடுத்த உங்க மகளை, உசத்தியா நினைக்கிறேன்மா. என் கணவர் ஆயிரம் கனவுகளை வச்சிருக்கார். தப்பு செஞ்ச மகனை உங்க கால்ல விழ வைக்கறோம். உங்களுக்குத் தனிப் பாதுகாப்பு தர்றோம். தயவுசெஞ்சு புறப்படுங்க.''

திலகம், மைத்ரேயி அருகில் வந்து, கையைப் பிடித்துக் கொள்ள மைத்ரேயி பதறி விட்டாள்.

''அம்மா, என்ன இது?''

''ப்ளீஸ் மைத்ரேயி. அரை மணி நேரத்துல தயாராயிடுங்க.''

திலகம் வெளியேற, ''என்னடீ மைத்ரேயி இது? இப்ப என்ன செய்யலாம்?''

''இவங்க சொல்றதைக் கேட்கலாம்.''

''அப்படியா சொல்றே?''

''யார் தப்பு செய்யலை? உன்னைக் கழுத்தைப் புடிச்சுத் தள்ளின அண்ணியை உன்னால தண்டிக்க முடிஞ்சுதா? நம்மைப் பற்றிக் கவலைப்படாத அண்ணனை தண்டிக்க முடிஞ்சுதா? நம்மை இப்படி ஒரு அவல நிலையில நிக்க வச்ச தெய்வத்தைத்தான் கேள்வி கேட்க உன்னால முடிஞ் சுதா?''

அம்மா அழுதாள்.

''விடு. போராடுவோம். என்ன நடக்குதுன்னு பார்க்கலாமே. குளிச்சு உடை மாற்றுவோம்.''

அரை மணி நேரத்தில் தயாராக, திலகம் உள்ளே வந்தாள்.

நெற்றியில் சின்ன பிளாஸ்திரியுடன் கோகுல் பின்னால் வந்து நின்றான்.

''அந்தம்மா கால்ல விழுடா...''

'டக்'கென விழுந்து விட்டான்.

''வாய் விட்டு மன்னிப்பு கேளு. நான் காட்டின பாசத்தை நொடியில நாசப்படுத்திட்டே. இவங்க முகத்துல விழிக்கவே என்னால முடியலை.''

அவன் தேவகியிடம் வந்தான்.

கைகூப்பினான்.

''அம்மா! பங்களான்னு நெனைச்சு போதைல வந்துட்டேன்மா. நீங்க இருக்கிற திசைப் பக்கமே நான் இனி வர மாட்டேன். எங்கப்பா, அம்மா நல்லவங்க. அவங்களை யாரும் வெறுக்காதீங்க! ப்ளீஸ்.''

கண்கள் கலங்க மீண்டும் கைகூப்பினான்.

ஃபோன் அடித்தது.

''ஆமாங்க. இங்கேதான் இருக்கான். மன்னிப்புக் கேட்டுட்டான். நீங்க உணர்ச்சி வசப்படாதீங்க. வேண்டாம். பேசிக்கலாம். அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நான் கூட்டிட்டு வர்றேன். நீங்க வந்துடுங்க.'' ரிசீவரை வைத்தாள்.

''நீ போ'' கோகுல்.

அவன் விலகிப் போக, அவர்தான். நேத்தைக்கு நடந்த விஷயம் தெரிஞ்சு சத்தம் போடறார்.''

''நேரமாச்சு. வாங்க. எல்லாத்தையும் முடிச்சுட்டு நிதானமா வந்து பேசிக்கலாம்.''

தலைவலி, தூக்கமின்மை போன்றவற்றிற்கு மாத்திரை சாப்பிடும் பழக்கத்தை விட்டு, தண்ணீர் மட்டும் அருந்தி உண்ணாநோன்பு இருக்க உடல் தூய்மையாகும்.

- ஜி. சுகந்தி,
பெங்களூர் - 8.



அம்மா மைத்ரேயி இருவரும் காரில் ஏற, கார் புறப்பட்டது.

அங்கே குலதெய்வக் கோயிலுக்குப் போய்விட்டு கோபால் அப்போதுதான் திரும்பியிருந்தான்.

உமா குளித்துக் கொண்டிருந்தாள்.

''பாட்டி, அத்தை எங்கேடா?''

குழந்தை அழுதது.

''ஏன்மா அழறே?''

''அம்மா - பாட்டியைக் கழுத்தைப் புடிச்சு வெளில தள்ளினாங்கப்பா. பாட்டியும், அத்தையும் அழுதாங்க. வேறொரு பாட்டி கார்ல வந்து அம்மாவைத் திட்டிட்டு, அத்தை, பாட்டியைக் கூட்டிட்டுப் போனாங்க.''

கோபால் அப்படியே நின்றான்.

உமா தலைதுவட்டியபடி வந்தாள்.

''வாங்க. நல்ல தரிசனமா? வழிபாடு களை முடிச்சிங்களா?''

''அம்மா, மைத்ரேயி எங்கே?''

''அது... அது வந்து...''

'ரெண்டு பேரும் எங்கே?''

''போயிட்டாங்க.''

''எங்கே போனாங்க?''

''தெரியலை. சடங்கு நடத்தினா தோஷம்னு சொன்னது உங்கம்மாவுக்குப் பிடிக்கலை. எங்கக்காவைக் கைநீட்டி அடிச் சாங்க. என்னால பார்த்துட்டு நிக்க முடி யுமா? கூச்சல் போட்டேன். பெரிய வாக்கு வாதமாச்சு. சாபம் விட்டுட்டு, மகளையும் கூட்டிட்டு உங்கம்மா போயிட்டாங்க. சண்டை போட்டுட்டுப் போறவங்களை நான் தடுக்க முடியுமா?''

''நீ கழுத்தைப் புடிச்சு எங்கம்மாவைத் தள்ளி விட்டதா குழந்தை சொல்றா. என் பொண்ணுக்குப் பொய் சொல்லத் தெரி யாதே?''

'விசுக்' என நிமிர்ந்தாள் உமா.

''ஆமாம்; தள்ளினேன். அமாவாசையில பொறந்தவ தப்பான வழியிலதான் போவா. அவளை இந்த வீட்டுக்குள்ள வச்சுக்கிட்டு என் மகளை நான் எப்படிப் பாதுகாப்பா ஆளாக்குவேன்? உங்களுக்கு அம்மாவும், தங்கச்சியும்தான் உசத்தினா, என் மகளைக் கூட்டிட்டு நான் வெளியில போயிடறேன். நாங்க பிச்சை எடுக்கணும்னு தலைல எழுதியிருந்தா, அதை யாரால தடுக்க முடியும்?''

கூந்தலை விரித்துப் போட்டுக் கொண்டு அழுகையும், ஆர்ப்பாட்டமுமாக உமா பேச, கோபால் மிரண்டு போனான்.

அங்கு நிற்கப் பிடிக்காமல் கோபால் வீட்டை விட்டு வெளியே வந்து மனம் போன போக்கில் நடந்தான்.

எதிரே நண்பன் வந்தான்.

''என்னடா? பிரம்மாண்டமா மண்டபம் எடுத்து உன் தங்கச்சிக்கு மஞ்சள் நீராட்டு விழா நடக்குது; நீ இப்பிடி தாடிபோட தெருவுல சுத்திக்கிட்டு இருக்கே. நீ அதை நடத்தலையா?''

கோபால் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

''அடுத்த தெருவுலதான்டா மண்டபம். சூப்பர் டிஃபன்! நான் சாப்பிட்டுத்தான் வர்றேன். போய்ப் பாரு.''

நண்பன் விலக, குற்ற உணர்ச்சி கொந் தளிக்க, கோபாலின் கால்கள் மண்டபத்தை நோக்கி நகரத் தொடங்கின.

(நிலவு வளரும்)



கொலுவின் முன்னால் ஒரு டப்பாவை வைத்து விடுங்கள். வந்தவர்களை, துண்டுச் சீட்டில் பெயர் எழுதிப் போடச் சொல்லுங்கள். கடைசி நாளன்று, குலுக்கல் முறையில் தேர்ந்தெடுப்பவருக்கு, பரிசு கொடுத்து, வித்தியாசமாக கொண்டாடலாம் கொலுவை... அத்துடன், யார் வந்தார்கள் என்ற விவரமும் தெரிந்து கொள்ளலாம்.

- என். கோமதி, நெல்லை - 7.

BHAGHAVAN SRI DHANVANTHIRI FOUNDATION



Bhaghavan
Sri Dhanvanthiri
"Lord of Health"

3/481A, 4th Cross, Kazhura Garden 2nd Street,
Neelankarai, Chennai - 600 041.
Ph: 24493115 Cell: 98410344830
E-mail: dhanavanthirifoundation@yahoo.co.in
website: www.dhanvanthirifoundation.com



Dr. S. Parthasarathy
Managing Trustee

புத்திகூர்மை அதிகரிக்கும்... தாய்ப்பால்

நான் சேலத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் தனியார் மருத்துவமனையில் டாக்டராக பணிபுரிந்து வருகிறார். ஒன்பது மாத குழந்தையாக எங்களுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் பிறந்தது முதல் அவனுக்குத் தேவையான பாலை என்னால் கொடுக்க முடியவில்லை. இதை நினைத்து எத்தனை நாட்கள் அழுதிருக்கிறேன் தெரியுமா? என் வீட்டுப் பெரியவர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களின் ஆலோசனைப்படி தினமும் பால், சுறா, பூண்டு, பாலக்கீரை, சுரைக்காய் இவற்றுடன் 1 லிட்டர் பாலையும் குடித்து வந்தேன். இதனால் எனது எடை அதிகரித்ததுதான் மிச்சம். மற்றபடி பால் சுரக்கவேயில்லை. அப்போதுதான் சென்னையில் இருக்கும் என் உறவினர் மூலம் 'தன்வந்திரி Dr. பார்த்தசாரதி' பற்றி தெரியவந்தது. அவரிடம் சிகிச்சை பெறலாம் என நினைத்தேன். என் கணவருக்கு இதில் உடன்பாடில்லை. ஆனால், என் உறவினரோ 'தன்வந்திரி Dr. பார்த்தசாரதி' மீது அதீத நம்பிக்கை கொண்டவர். அவரது வாழ்வில் இந்த டாக்டர் ஒளியேற்றியதும் இதற்கு ஒரு காரணம். சிரித்த முகத்துடன் அவர் பேசியதும், பொறுமையாக எனது பிரச்னைகளை காது கொடுத்து கேட்டதும் என் மனதுக்கு பிடித்திருந்தது. அவர் கொடுத்த மருந்தை, அவர் சொல்லியபடியே எடுத்துக் கொண்டேன். சொன்னால் நம்பமாட்டீர்கள். குழந்தைகு தேவையான அளவு பால் சுரக்க ஆரம்பித்தது. இதோ இந்த 9 மாதங்களாக என் மகன் பால் குடித்துக் கொண்டிருக்கிறான். பெற்ற தாய்க்கு இதைவிட வேறென்ன வேண்டும்?

குணப்படுத்த முடியாது... என பலரால் கைவிடப்பட்ட பல நோயாளிகளை 'தன்வந்திரி பவுண்டேஷனை' நடத்தி வரும் டாக்டர் பார்த்தசாரதி குணப்படுத்தியிருக்கிறார். அவருக்கு நீண்ட ஆயுளை இறைவன் கொடுக்க வேண்டும். அப்போது தான் அவரது சேவை பல ஆண்டுகள் தொடரும்.

இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கான கடிதங்கள் தினமும் 'தன்வந்திரி பவுண்டேஷனுக்கு' வருகின்றன. அனைவருமே டாக்டர் பார்த்தசாரதியால் குணமடைந்தவர்கள். இவ்வளவு சிறப்பு வாய்ந்த 'பகவான் ஸ்ரீ தந்வந்திரி பவுண்டேசன்' ஒரு Divine Trust குழந்தைகள் I.Q. வளர்ச்சிக்கு தாய்ப்பால் அவசியம். உடலின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தரமான இரத்தத்திற்கும் தாய்ப்பாலே காரணம். தாய்ப்பாலும், பசும்பாலும் உடலில் ஹீமோகுளோபினை அதிகரிக்கச் செய்வதால் அதிக ஞாபகசக்தியும் கல்வியில் முன்னேற்றமும் குழந்தைகளுக்குக் கிடைக்கிறது. பலவகையான மூளை நோய்களினால் அவதிப்படும் குழந்தைகள் காப்பாற்றப்படுவது தாய்ப்பாலில் தான். உடல் நலத்தை நன்கு பேண சிறந்த ஆலோசனை 'தன்வந்திரி'யில் வழங்கப்படுகின்றன. இங்கு UNEXPLAINED INFERTILITY, SCANTY AND IRREGULAR PERIOD, PROFUSE BLEEDING, BACK PAIN, SPONDILITIS, MORNING SICKNESS, LOW B.P., OBESITY ஆகியவற்றுக்கும் சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.

அலுவலக நேரத்தில்
(9.00 மணி முதல் 6.00 மணி வரை)
டாக்டர். பார்த்தசாரதியை
சந்திக்க முன்பதிவு செய்து கொள்ளலாம்.
Panel Doctor: Dr. **P.B. Premalatha**, M.D., D.G.O.,

Branches: **Bangalore** - (080) 2672 7773
Coimbatore - (0422) 2540 942
Madurai - (0452) 2435 5160

இப்படிக்கு
திருமதி. ரஞ்சனி
சந்தியபிரபு
W/o. **Dr. Sathya Prabhu**
M.B.B.S., M.R.C.S.
No. 7, 1st Street,
Gopalapuram, Chennai.
Ph: **65256025**



சுய முன்னேற்றத் தொடர்-3

"பெண்ணுக்கு ஞானத்தை
வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்"
"மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார் - பாரதி.

எழுத்தாளர் ஜெயகாந்தன் பற்றி ஒரு செய்தி படித்தேன். முன்பு நடந்தது. அவரைப் பார்க்க ஒருவர் வந்தார். புதிதாக வெளிவந்த ஒரு வார பத்திரிகையைத் தம் கையில் வைத்துக் கொண்டிருந்தார். அவர் கையில் இருந்த பத்திரிகையை வாங்கி அதிலிருந்த சிறுகதையின் முதல் வரியைப் படித்து விட்டு அந்தப் பத்திரிகையை எரிச்சலுடன் வீசி எறிந்தார் ஜெ.கே. கதையின் முதல் வரி "ஒரு ஊரில் ஒரு வேசி இருந்தாள்" என்று ஆரம்பமானது. கர்ஜித்தபடி ஜெ.கே. சொன்னார். "என்னடா எழுதுகிறான் இவன். ஒரு ஊரில் ஒரு வேசி இருந்தாள் என்று எழுதுகிறானே... இப்படியா எழுதுவது?" என்று சீறினார். பிறகு எப்படி எழுதுவது என்று நண்பர் கேட்டதும் ஜெ.கே. கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு, "ஒரு


சுகிசிவம்





பெண்ணே, நீ வாழ்க!

ணில் பல ஆண் மக்கள் இருந்தார்கள். அந்த ஆண் மக்கள் எல்லாம் சேர்ந்து தங்களது தேக சுகத்திற்காக அந்தப் பெண்ணை வேசியாக்கினார்கள்... என்றல்லவா எழுதி இருக்க வேண்டும்... அதுதானே சரியாக இருக்க முடியும்?'' என்று கர்ஜித்தாராம். ஒரு கூட்டத்தில் நான் கேட்ட செய்தி இது... எவ்வளவு நியாயமான கருத்து இது.

பெண் அடிமையானாளா? அடிமையாக்கப்பட்டாளா? என்கிற நம் கேள்விக்கு மேலே சொன்ன செய்தி ஒரு வகையில் விடைசொல்லும். மனிதகுல வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால் பெண் எப்படி அடிமையாக்கப்பட்டாள் என்கிற உண்மை நமக்குப் புலனாகும். கருத்தரித்தல் கருச்சுமத்தல், பாதுகாப்பான பிள்ளை வளர்ப்புக்கான பொறுப்புடன் இருத்தல் என்கிற பெண்மையின் இயற்கை விதியே அவளை மெள்ள மெள்ள அடிமையாக்கிவிட்டது. இப்போது போல் ஒரே ஒரு பிள்ளை, அதிகபட்சம் இரண்டு என்பதெல்லாம் அறியாது கூட்டம் கூட்டமாகப் பிள்ளை பெற்ற அந்தக் காலத்தில் இடைவிடாது கருத்தரிக்கும் பிள்ளைப்பேறு இயந்திரமாகப்



பெண் பயன்படுத்தப்பட்டாள். அதனால் உடற்சோர்வும், மனச்சலிப்பும் கொண்டவளாய் குடும்பத்திற்கு அடிமையானாள் பெண். பத்து பெற்றால்தான் மூன்றோ நான்கோ தங்கும் என்கிற பயத்தால் அடுத்தடுத்து பிள்ளை பெறுவதைத் தடுக்கும் எண்ணமே முன்னர் ஏற்படவில்லை. அதனால் பெண்ணுக்குப் பெருமைசேர்க்கும் கருப்பைதான் அவளை அடிமையாக்கும் சுருக்குப்பை ஆகிப் போனது.

இரண்டாவதாக இயல்பாகவே பெண்ணுக்கு அமைந்த பொறுப்புணர்ச்சி அவளை மேலும் அடிமையாக்கியது. ஆம், சிலரது சிறப்பியல்புகளே அவர்களது முன்னேற்றத்திற்குத் தடையாகி விடுவது போல ஒரு பெண்ணின் இயல்பான கடமையுணர்ச்சியே, அவளை மேலும் மேலும் அடிமையாக்கியது. அப்பட்டமாக உடைத்துச் சொல்லவா?

கூண்டுக் கிளியின் இறகுகளை இரண்டு மூன்று முறை வெட்டி விட்டால் இறகு வளர்ந்த பிறகும் கிளிகள் பறக்க முயல்வதில்லை.

ஒரே சமயத்தில் இரண்டு மூன்று மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டு ஏககாலத்தில் இரண்டு மூன்று குடும்பங்களின் தலைவர்களாக ஆண்கள் அராஜகம் செய்த மாதிரி பெண்கள் எப்போதாவது செய்தது உண்டா? செய்ய முடியுமா? கற்பனையிலாவது இது சாத்தியமா? இல்லையே. பாஞ்சாலிக் கதை மாதிரி ஒன்றிரண்டு விதிவிலக்குகள் வேண்டுமானால் கண்ணில் தட்டுப்பட முடியும். ஆனால் சர்வசகஜமாக இரண்டு மூன்று குடும்பங்களின் தலைவனாக ஏககாலத்தில் வெகுசாதாரணமாகப் பல ஆண்கள் விளங்கினார்கள். இப்போதும் விளங்குகிறார்கள். இந்தச் செய்தி என்ன சொல்கிறது? ஆண் ஒரு குடும்பத்தின் மிக இன்றியமையாத நபர் அல்ல. அவனது இருப்பும் இல்லாமையும் ஒரு பெரிய விஷயமே அல்ல. அதாவது நேரடி மேற்பார்வை குடும்பத்திற்கு அவ்வளவு முக்கியம் அல்ல. அவனது பொறுப்புகள் முழுவதையும் மனைவியே பார்த்துக் கொள்வதால் அவன் வீட்டிற்கு வந்து போகும் ஒரு நபராக மட்டுமே விளங்கினாலும் கூட போதுமானது. பொறுப்பு குறைந்த ஒரு நபர் சுதந்திரமானவராக விளங்க முடிந்ததும், பொறுப்புகள் கூடிய நபர் (அதாவது மனைவி) அடிமையாக விளங்குவதும் தவிர்க்க முடியாததாகி விட்டது. பொறுப்புகளைச் சுமப்பவர்கள் அடிமையாவதும் பொறுப்பு குறைந்தவர்கள் சுதந்திரமாகத் திரிவதும் இயல்பு தானே? பெண் அடிமையானதற்கு இது ஒரு மிக முக்கிய காரணம். குடும்பத்தின் இன்றியமையாத மையப் புள்ளியாகப் பெண்ணே விளங்கினாள்.

பெண்ணின் அடிமைத்தனத்திற்கு இப்போது, ஆண்களின் பங்களிப்பு என்ன என்பதை விளக்குகிறேன். ஆதியிலிருந்தே, பெண்ணை உயிருடைய உணர்வுடைய சகநபராக ஆண்கள் மதித்தது இல்லை. நமது பழைய கதைகளைப் பாருங்களேன். அரிச்சந்திரன் மனைவியை விலைக்கு விற்றிருக்கிறான். தருமபுத்திரன், (பெயர்தான் தர்மபுத்திரன்) சூதாட்டத்தில் பணயம் வைத்திருக்கிறான். அட, உத்தம மனிதன் என்று அடையாளம் காட்டப்படும் ராமனே கூட அக்னியில் இறங்க வைத்து தனது அல்ப மனுஷத்தன்மையை அடையாளம் காட்டி இருக்கிறான். இத்தனைக்கும் அரிச்சந்திரன்,

தர்மபுத்திரன், ஸ்ரீராமன் எல்லோருமே உயர்வான ஆண்களாகவே கொண்டாடப் பட்டவர்கள். உயர்ந்த ஆண்களின் லட்சணமே இப்படி என்றால் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்ல? ஸ்ரீராமன் ஏக பத்தினி விரதன், பெண்ணை மதிப்பவன் என்ற பெருமையைக் கவிஞர் கபிலன் ஒரே வரியில் ஒழித்துக்கட்டி இருக்கிறார். அவருக்கு ராமன் மீது என்ன கோபம் பாருங்கள்.

''அப்பனுக்கு ஆயிரம் மனைவிகள்
ஆனாலும் ஒரு சந்தேகமும் இல்லை.
மகனுக்கு ஒரே மனைவி
என்றாலும் ஆயிரம் சந்தேகங்கள்''



என்று ஒரே பந்தில் ராமனை க்ளீன் போல்டு ஆக்கி விடுகிறார். நான் படித்த இன்னொரு கவிதை பாருங்கள்.

அன்றைய சீதைக்கு
அக்னிப் பிரவேசம் ஒருமுறைதான்
அலுவலகம் போகும் இன்றைய
சீதைக்கு
அன்றாடமல்லவா அக்னிப்
பிரவேசம்?

என்று அலுவலகம் போகும் பெண்களின் அவல நிலையைப் படம்பிடிக்கிறது இது. இருக்கட்டும்.

பெரிய புராணத்தில் இயற்பகை நாயனார் தம் மனைவியைச் சிவனடியார் கேட்டார் என்று பரிசாகத் தருகிறார். மனைவியின் அனுமதியோ விருப்பு வெறுப்போ ஒரு பொருட்டாகவே மதிக்கப்படவில்லை. நாயன்மார் என்றால் நாயகியை மதிக்க வேண்டியதில்லை என்று சுதந்திரம் தரப்பட்டுள்ளதா?

மகாபாரதத்தில் பாருங்கள் அம்பை என்கிற இளவரசியின் சுயம்வரம் நடந்த போது அம்பையை அலட்சியப்படுத்தி விட்டு பீஷ்மர் அவளைத் தேரில் தூக்கிக் கொண்டு பறக்கிறார். இத்தனைக்கும் தான் மணப்பதற்காக அல்ல; தன் தம்பிக்குத் திருமணம் செய்து வைக்க. எத்தனை பெரிய கொடுமை இது? பெண் வெறும் உடைமையாய் ஆணின் அனுபவ பாத்யதைக்குரிய சொத்தாக மட்டுமே மதிக்கப் பட்டிருக்கிறாள். அவளுக்கென்று ஒரு மனம் உண்டு. மனத்தில் உணர்வுகள் உண்டு என்று காலம் காலமாகக் கணக்கில் கொள்ளப்படவில்லை என்று நமது இலக்கியங்கள் செய்தி வெளியிடுகின்றன.

காலப்போக்கில் பெண்கள் தங்களுக்கென்று சுயமாகச் சிந்திக்க, தேர்வு செய்ய, விருப்பு வெறுப்புக்களைச் சமூகத்தில் வெளியிட உரிமையில்லை என்கிற சிந்தனைப் போக்கிலேயே முடங்கிப் போனார்கள். அந்தச் சுருக்கத்திலேயே வாழ்வை அமைத்துக் கொள்ளப் பழகிப் போனார்கள். கூண்டுக் கிளியின் இறகுகளை இரண்டு மூன்று முறை வெட்டி விட்டால் இறகு வளர்ந்த பிறகும் கிளிகள் பறக்க முயல்வதில்லை. காரணம் பறக்கும் சக்தியே தங்களிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டதாக அவை முடிவு செய்து விடுகின்றன. முயற்சியை மூலைக்குத் தள்ளிவிட்டு முடங்கிப் போய்விடுகின்றன. இந்தக் கூட்டுக் கிளியின் கதைதான் வீட்டுக் கிளிகளின் கதையும்.

கோவில் யானைகளைப் பார்த்திருக்கிறீர்களா? அதைப் பார்த்தாலும் எனக்கு, ஆழ்ந்த பெருமூச்சுதான் எழும்! அது ஏன்?

(தொடரும்)





மவுத் ஆர்கன் வாசிக்கும் யானை!

நவராத்திரி விழா என்பது சைவ, வைணவ பேதமின்றி எல்லாக் கோயில்களிலும் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை. வைணவத் திருத்தலங்களில் முதன்மையானதாகப் போற்றப்படும் திருவரங்கத்தில் அரங்கநாயகியாக அருள்பாலிக்கும் தாயார், நவராத்திரி நாட்களில் தினமும் மாலை புறப்பாடு கண்டருள்வார்.

புறப்பாடு ஆகும் முன் சங்கநாதம் ஒலிக்கும். பிராகாரங்களை ஒருமுறை வலம் வந்தபின் கொலு மண்டபத்தில் வீற்றிருந்து பின்னர் இரவு 8.30 மணிவாக்கில் மூலஸ்தானம் எழுந்தருள்வார். அதுவரை ஸ்பெஷல் நாதசுரக் கச்சேரிகள் நடக்கும். மூலஸ்தானத்துக்கு முன் மண்டபத்தில் அன்னை எழுந்தருளும் போது கோயில் யானை துதிக்கை உயர்த்தி நமஸ்கரிக்கும். மௌத் ஆர்கனை வாயில் வைத்து ஒலி எழுப்பும். பின்னர் ஒரு காலைத் தூக்கி நொண்டி அடித்துக் கொண்டு போய் 'பேஷ்கார்' எனப்படும் கோயில் அதிகாரிக்கு தாம்பூலம் கொடுக்கும். இதை வேடிக்கை பார்ப்பதற்காகவே குழந்தைகள், பெரியவர்கள் என்று கூட்டம் வரும்.

நவராத்திரி ஏழாம் நாள் தாயாரின் திருவடிகள் வெளியில் தெரியும்படி அலங்காரம் செய்து புறப்பாடு ஆகும். இந்தத் திருவடி சேவையைக் காண எங்கெங்கோ இருக்கும் பக்தர்கள் எல்லாம் அன்று குவிந்து விடுவார்கள். அந்த ஒருநாள் தான் தாயாரின் திருவடிகள் தரிசனம் காணக் கிடைக்கும். அரங்கநாயகியின் அழகை வருணிக்க இயலாது.

- இரா. வேதவல்லி, ஸ்ரீரங்கம்.



அவங்க மட்டும் தான் பொறுப்பா?

செப்டெம்பர் இதழில் ஒரு பெண்ணின் தாயார் எழுதிய கடிதத்தைப் படித்தேன். இந்த விஷயத்தில் பெண்ணின் பெற்றோரை முழுப் பொறுப்பு ஆக்க முடியாது.

நான் சமீபத்தில் என் உறவினர் மகனுக்காக இரண்டு பெண்களை அவர்கள் வீட்டில் சந்தித்து உரையாட நேர்ந்தது. ஒருபெண், ''பையனுக்கு இருபதாயிரம் சம்பளம் என்றால் எப்படிக் குடித்தனம் நடத்த முடியும்? ஐம்பதாயிரமாவது மாதச் சம்பளம் வேண்டாமா?'' என்றாள். இத்தனைக்கும் அவர்கள் நடுத்தர வகுப்பைச் சார்ந்தவர்கள்தான். மற்றொரு பெண்ணோ ஒரு படி மேலே போய் விட்டாள்.

''நான் 1982ல் பிறந்து இத்தனை சம்பாதிக்கிறேன். எனக்கு வரும் பையன் 80ல் பிறந்திருந்தால் இத்தனை சம்பாதிக்க வேண்டும். 78-ல் பிறந்திருந்தால் இத்தனை, 76 என்றால் இத்தனை சம்பாதிக்கவில்லையென்றால் அவன் முன்னுக்கு வர முயற்சி செய்யவில்லை; வேஸ்ட்'!' என்றாள். அவர்கள் சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் படித்து வளர்ந்தவர்களில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பெற்றோர்கள் இவர்களைக் கட்டுப்படுத்த முடியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்கத்தான் முடியும்.

மிகப் பெரிய மாற்றம் ஒன்று ஓசையின்றி தற்கால பெண்களின் மனப்பாங்கில் ஏற்பட்டு விட்டது. பெண்ணுரிமை சார்பாகப் பார்த்தால் இது மிகப் பெரிய சாதனை. ஆனால் மனிதநேயம், வாழ்வியல் சார்பில் பார்க்கும்போது, பணத்தை மட்டுமே மிதிக்கும் இந்தப் போக்கு, வளர்ச்சி அல்ல, வீக்கமே!

- சித்ரா, சென்னை.



எங்கள் வீட்டுக் கொலுவுக்கு வந்த பெண், பாடி விட்டு எழுந்திருக்கும் போது, கால் மரத்துப் போனதால், சற்றுத் தடுமாறினாள். உடனே என் சித்தப்பா ''அம்பாளுக்குப் பாட்டு மட்டும் பாடினால் போதும், டான்ஸ் ஆட வேண்டாமே!'' என்று சொல்ல ஒரே சிரிப்பு.

- ஆர். பார்வதி, அம்பத்தூர்.

தலைகீழ் அன்னை!

நவராத்திரியை முன்னிட்டு ஒரு மாதமாக காலனியில் நாங்கள் அபிராமி அந்தாதிப் பாடல்களைக் கற்றுக் கொண்டு வருகிறோம். எங்களுக்கு அபிராமி அந்தாதியைக் கற்றுக் கொடுக்கும் பெண்மணி சென்னையிலிருந்து மொத்தமாக இருபத்து ஐந்து அபிராமி அந்தாதிப் புத்தகங்களை வாங்கி வந்து ஒருநாள் வகுப்பின் போது எல்லோருக்கும் கொடுத்தார்.

சந்தோஷமாய்ப் புத்தகத்தைப் பிரித்தோம். நான்காவது பக்கத்தைப் பிரித்துப் பார்த்ததும் நான் 'ஆ' என்று அலறினேன். அந்தப் பக்கத்தில் அன்னையின் படம் தலைகீழாக இருந்தது. என் கலவரத்தை அதிகப்படுத்துவது போல அருகிலிருந்த என் தோழிகள், ''உன் புத்தகத்தில் மட்டும்தான் இப்படி அம்மன் தலைகீழாய் இருக்கிறாள். இது நல்லதில்லை; ஏதோ விபரீதத்தின் அறிகுறி'' என்று எச்சரித்தார்கள்.

வீட்டில் கணவர் வேறு அர்ச்சனை செய்தார். ''உனக்கு எதிலும் சீரியஸ்னெஸ் கிடையாது. அபிராமி அன்னையை அபீஸ் என்கிறாய்... கணேசரை கன்ஸ், மீனாட்சித் தாயை மீன்ஸ் வெங்கடாலஜபதியை வெங்க்ஸ்... அதான் உனக்கு இப்படி தண்டனை கிடைச்சிருக்கு'' என்றார்.

''ஐயையோ! நான் கடவுளைச் செல்லமா அப்படி அழைப்பேனே தவிர, என் பக்தியில் குற்றமில்லை..'' என்று புலம்பினேன்.

சின்னப் பெண் ப்ரியா, ''அம்மா... இதெல்லாம் சகஜம். சில சமயம் ப்ரிண்ட் செய்யறப்போ இதுமாதிரி தவறுகள் நேரலாம். இதுக்குப் போய் மனசை அலட்டிக்காதே'' என்றாள்.

ஆனாலும் பயமாயிருந்தது. ஆபத்து எந்த ரூபத்தில் வரப் போகிறதோ?

ஃபோன் அடித்தது. எதிர் முனையில் உடன்பிறப்பு. ''ஐயோ! என்னடா ஆச்சு



அம்மாவுக்கு?'' ஒரு மாதமாகவே அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. ஸ்கூட்டரிலிருந்து கீழே விழுந்து முதுகுத்தண்டில் அடிபட்டதாய்ச் சொல்லியிருந்தாள். அது இப்போது அறுவை சிகிச்சை அளவு கொண்டு போய் விட்டு விட்டதா?

'திக் திக்' என இதயம் அடித்துக் கொள்ள, ரிஸீவரைப் பிடித்தபடி நான் நிற்க, என் தம்பி, ''அம்மா, பூரண குணம். அதைச் சொல்லத்தான் ஃபோன் செய்தேன்'' என்றான்.

அம்மாடி!

ஆனாலும் காஸ் அடுப்பு பற்றவைக்கும் போதிலிருந்து வாசல் கதவை அழுத்தி மூடும் வரை தொட்டதற்கெல்லாம் பயம். தெருவில் நடந்தால் பின்னாலேயே ஏதும் வாகனம் வந்து இடித்து மோதி விடுமோ என குலை நடுக்கமாயிருந்தது.

ஆனால் இரண்டே நாட்களில் எதிர்பாராத பல நல்ல செயல்கள் நடந்தன. தலைகீழ் அபிராமி அன்னை வந்த வேளை, தொட்டதிலெல்லாம் எனக்கு அதிர்ஷ்டம் அடித்தது. சுதந்திர தினத்தையொட்டி ஒரு கடையில் வாங்கிய பரிசுக் கூப்பனில் மிக்ஸி பரிசாகக் கிடைத்தது. தொலைந்தே போய் விட்டது என நினைத்த என் வாட்ச் திரும்பக் கிடைத்தது. என் கணவருக்கு அலுவலகத்தில் பதவி உயர்வு.

பயம் விலகி பரவசமானது.

மறுநாள் வகுப்பில், அன்று என்னை பயமுறுத்திய தோழிகளிடம் விவரம் கூறி என் மகிழ்ச்சியைத் தெரிவித்தேன்.

வகுப்பு முடிந்ததும் தோழிகள் மெள்ள ஆசிரியையிடம் சென்று, ''மேடம்! எங்களுக்கும் அபிராமி அன்னை தலைகீழாய் அச்சான அபிராமி அந்தாதிப் புத்தகம் தேவை. அடுத்த தடவை சென்னையிலிருந்து வாங்கி வர முடியுமா?'' என்று கேட்டார்கள்.

- ஷைலஜா, பெங்களூர் - 76.

மாநகராட்சி கவனிக்குமா?

கிராமத்துப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறேன். மாணவர்களை பள்ளியில் சேர்ப்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஆனால் படிக்காத பெற்றோர்களுக்கு பிறப்புச் சான்றிதழின் மதிப்பு தெரியவில்லை. அவர்களிடம் விவரம் கூறி மாநகராட்சி அலுவலகம் சென்று வாங்கி வரச் சொன்னால் நாட்களைக் கடத்தி விடுகிறார்கள். மாணவர்கள் சேர்க்கைக்குக் கடினமாக உள்ளது. ஏப்ரல் மாதத்தில் மூன்று நாட்களுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகளின் பிறப்புக்கான மருத்துவ அட்டையைக் கொண்டு வந்தால் பிறப்புச் சான்றிதழ் உடனே வழங்கப்படும் என்று மாநகராட்சி அறிவிக்கலாமே!



- அமலி எட்வர்ட், மதுரை - 19.

முன்னோர்களுக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும், திதி, தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ரு பூஜை நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாசையே. பித்ரு தர்ப்பண க்ஷேத்ரமான

காசியில் மஹாளய அமாவாசை அன்று

(10-10-2007) நடைபெறும் பித்ரு பூஜையிலும் அன்னதானத்திலும் அனைவரும் கலந்து கொண்டு பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற அன்புடன் அழைக்கிறோம்

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட் 9 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடத்தும் முன்னோர் வழிபாடு

பேரன்புடையீர்! வணக்கம். தங்களுக்கு முன்னோர்களின் பரிபூரண ஆசியும், ஆதரவும் கிடைக்க பிரார்த்திக்கிறோம். பித்ரு க்ஷேத்ரமாக விளங்கும் காசியில் அன்பர்கள் அனைவராலும் **கங்கைக்கு ஜல தீபம் ஏற்றி மஹாளய அமாவாசை** அன்று முன்னோர் வழிபாடு செய்து, அவர்கள் நினைவாக அன்னதானம் செய்ய முடியும் என்ற இறை சிந்தனையோடு அனைத்து வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க **ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்** மூலம் **மஹாளய அமாவாசையில் காசியில் பித்ருக்கள் நினைவாக கங்கைக்கு ஜலதீபம் ஏற்றி அவர்கள் நினைவாக வஸ்தரதானத்துடன் அன்னதானமும் வைதீக முறைப்படி செய்யப்படுகிறது.** மஹாளய அமாவாசை அன்று தர்ப்பணமும், அன்னதானமும் செய்தால் பித்ருக்கள் பூரண திருப்தி ஏற்பட்டு தங்களுக்கும், தங்களுடைய சந்ததிகளுக்கும் அனைத்து வகை ஆரோக்யத்தையும் அளிக்கிறார்கள். மஹாளய அமாவாசை அன்று நடைபெறும் **அன்னதான திருப்பணி** மற்றும் **முன்னோர் வழிபாட்டுக்கு** தங்களால் இயன்ற நன்கொடையை அனுப்பி **ஸ்ரீ மகா விஷ்ணுவின்** நல்லாசியும் மற்றும் **பித்ருக்களின் ஆசிர்வாதமும்** பெற அன்புடன் அழைக்கிறோம்.

பித்ருக்கள் நினைவாக நடைபெறும் அன்னதானத்திற்கு தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு திருக்கயிலாயத்தில் இருந்து நேரடியாக பெறப்பட்ட கீழ்கண்ட ருத்ராட்சங்கள் அனுப்பி வைக்கப்படும்

- **ரூ. 300** - அனுப்பும் அன்பர்களுக்கு, 5 முகம் கொண்ட ருத்ராட்சம் 5 அனுப்பி வைக்கப்படும்.
  (5 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அனைத்து தோஷங்களும் நிவர்த்தியாகும். ரத்த அழுத்தம், இதய கோளாறுகளை சீர் செய்யும்).
- **ரூ. 500** - அனுப்பும் அன்பர்களுக்கு, ருத்ராட்ச மாலை அனுப்பி வைக்கப்படும்.
  (ருத்ராட்ச மாலை அணிபவர்கள் அனைத்து சிவ ஸ்தலங்களையும் தரிசித்த மஹாபுண்ணிய பலனை பெறலாம்).
- **ரூ. 1000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 3 முகம் (மஹா சரஸ்வதி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (3 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு அறிவு வளர்ச்சி, கல்வி மேம்பாட்டிற்கும் உதவும். குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமானது).
- **ரூ. 2000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 7 முகம் (சப்த ரிஷி) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (7 முக ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு தடைபட்ட திருமணம் நடக்கும். மேலும் செவ்வாதோஷம் விலகி சுப நிகழ்ச்சிகள் கைகூடும்).
- **ரூ. 3000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 11 முகம் (வீர ஹனுமான்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (11 முக ருத்ராட்சத்தை அணிவதால் குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திர பாக்கியம் உண்டாகும்).
- **ரூ. 5000** - அனுப்பும் அன்பர்களுக்கு, **கௌரி சங்கர் (சிவ-பார்வதி)** ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (கௌரி-சங்கர் ருத்ராட்சத்தை அணிபவர்கள் கணவன் - மனைவி ஒற்றுமையுடன் வாழ்வார்கள். நீண்ட ஆயுளையும் தரும்).
- **ரூ. 6000** - அனுப்பும் அன்பர்களுக்கு, ஒரு முகம் (ஸ்ரீபரமேஸ்வரன்) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஒரு முக ருத்ராட்சத்தை அணிந்தவர்களை எதிரிகளால் கூட வெல்ல முடியாது மற்றும் பிரம்மஹத்தி தோஷமும் நீங்கும்).
- **ரூ. 7000** - அனுப்பும் அன்பர்களுக்கு, **ஸ்ரீகணேஷ்** (விநாயக பெருமானின் முழுத்தோற்றம்) ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (ஸ்ரீகணேஷ் ருத்ராட்சத்தை அணிபவர்களுக்கு செழிப்பான வளர்ச்சியுடன் எடுத்த காரியத்தில் வெற்றியும், அஷ்ட லக்ஷ்மிகளின் அருளும் கிடைக்கும்).
- **ரூ. 10000** - அனுப்பும் அன்பர்களுக்கு, 21 முகம் (குபேர ஸ்வரூபம்) கொண்ட ருத்ராட்சம் அனுப்பி வைக்கப்படும்.
  (சகல ஆன்மீக சக்திகளையும், ஆத்ம பலத்தையும், ஆரோக்கியத்தையும் வழங்கி, சகல செல்வங்களும் சொத்துக்களும், சுகங்களும் கிடைக்கும்).

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம், தர்ப்பணம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் சேர்த்து ரூபாய் 1000 அனுப்பும்போது யாருக்கு சிராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் **பெயர், திதி** மற்றும் **கோத்ரம்** போன்ற விபரங்களை தெரிவித்தால், தங்கள் விருப்பப்படி மஹாளய அமாவாசை அன்று முன்னோர் வழிபாடு முறையாகவும், முழுமையாகவும் செய்யப்பட்டு, **அவர்களின் நினைவாக வஸ்திரதானத்துடன் அன்னதானம்** செய்யப்படும். பித்ரு காரியங்களுக்கு பணம் அனுப்பும் அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான **'அக்ஷய வடத்தின்'** படமும், கயாவில் உள்ள **விஷ்ணு பாதமும், விஷ்ணு பாதத்தின் படமும்** மற்றும் ஸ்ரீஅன்னபூரணி அன்னையின் விக்ரகமும் கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பு, காசி கயிறு அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு **க்ஷேத்ரத்தில்** பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

மஹாளய அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக நடைபெறும் அன்னதான சேவையிலும், முன்னோர் வழிபாட்டிலும் ஈடுபட விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O. மூலம் Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai என்ற பெயருக்கு எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி பித்ருக்களின் ஆசியை பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

ஸ்ரீஅன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd).
4, Appavoo Gramani IIIrd Street R.A.Puram, Chennai - 28
TEL : 044 - 2495 9302 Fax : 044 - 4206 6525.



பித்ருக்களுக்கு மஹாளய அமாவாசையில் தர்ப்பண பூஜை செய்வது இந்துக்களின் இன்றியமையாத கடமையாகும்

பொதுவாக, எழுபது வயதைக் கடந்த நம் நாட்டுப் பெண்கள் என்ன செய்வார்கள்? இயன்ற வீட்டுக் காரியங்களைச் செய்வார்கள். கோயில்குளம் போவார்கள். மெகா சீரியல்களைப் பார்ப்பார்கள். மூட்டு வலிக்கு தைலம் தேய்ப்பார்கள். பேரச் செல்லங்களைக் கொஞ்சுவார்கள். "இனிமே என்ன இருக்கு? நல்லபடியா போய்ச் சேர்ந்தா தேவலை!" என்று முனகுவார்கள். ஆனால் பெங்களூரைச் சேர்ந்த பத்மா ஸ்ரீநிவாஸன், 'பீட்ஸா ஹெவன்' என்ற பெயரில் கேட்டரிங் செய்கிறார். அதில் வரும் லாபத்தைக் கொண்டு முதியோர் இல்லம் நடத்துவதுதான் இவரது லட்சியம். உன்னதமான குறிக்கோளை வைத்துக் கொண்டு, நாளும் தேனீயின் சுறுசுறுப்புடன் இயங்கும் பத்மா ஸ்ரீநிவாஸனை சந்தித்த போது...



• 'பெண் சாதனையாளர்' விருது பெறுகிறார் பத்மா. அருகில் பார்வதம்மா ராஜ்குமார்



வல்லமை தாராயோ?

"**நா**ன் பெங்களூரில் உள்ள இந்தியன் டெலிபோன் இன்டஸ்ட்ரி (ஐ.டி.ஐ.) யில் பணியாற்றி ஓய்வு பெற்றவள். நான் வேலைக்குப் போனதே விதிவசத்தால்தான். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் மதுரையில். என் தந்தை சங்கரய்யர், பள்ளிக்கூட ஆசிரியர். மெரிட் ஸ்காலர்ஷிப்பில் தான் படிச்சேன்.

பி.ஏ. முதல் வருஷம் படிக்கிறப்போவே, கல்யாணம் நிச்சயமாயிடுச்சு. "இன்னும் இரண்டே வருஷம்தானே! டிகிரி முடிச்சுடறேன்"னு எங்க மாமனார்கிட்ட கெஞ்சிக் கேட்டேன். அவரும் சம்மதித்தார். பட்டம் வாங்கினப்புறம்தான் புகுந்த வீடான பெங்களூருக்கே வந்தேன்.

என் கணவர் ஸ்ரீநிவாஸன், நல்ல பண்பான கணவராக இருந்தார். இரண்டு குழந்தைகள் பிறந்தன. மகிழ்ச்சியா வாழ்க்கை போயிட்டிருந்தது. விதிக்குப் பொறுக்குமா? ஒரு சாலை விபத்துல கணவரைப் பறிகொடுத்தேன். அப்ப, என் மகளுக்குப் பத்து வயசு; மகனுக்கு நான்கு வயது. இரண்டு குழந்தை களையும் கையில் பிடித்துக் கொண்டு நின்றபோது, இருண்டடர்ந்த முள்காட்டில் நிற்பது போல தவிப்பாக

இருந்தது. ஆனாலும் உள்ளுக்குள்ளே ஏதோ ஒரு வெறி.

''இந்தக் குழந்தைகளுக்காக நாம் வாழத் தான் வேணும்''னு என் துக்கத்தையெல்லாம் விழுங்கிக் கொண்டு வெளியே வந்து விட்







● பீட்ஸா தயாரிப்பில்...

டேன். என் கணவர் இன்ஜினியராக வேலை பார்த்த ஐ.டி.ஐ.யிலேயே கருணை அடிப்படையில், கிளார்க் வேலை கிடைச்சுது. வீட்டுக்குள் ஒரே எதிர்ப்பு. ''உன் மாமனார் பெரிய ஆடிட்டரா இருக்கும்போது, நீ சாதாரண குமாஸ்தா வேலைக்குப் போறது, பெரிய அவமானம். உனக்கும் உன் குழந்தைகளுக்கும் தேவையானதை நாங்க செய்ய மாட்டோமா?'' என்று விவாதித்தார்கள்.

'என் துரதிருஷ்டம் என்னோடு! நான் யாருக்கும் பாரமா இருக்க விரும்பலை. நான் எங்கே போனாலும், நம்ம குடும்ப கௌரவத்துக்கு பங்கம் வராமல் பார்த்துப்பேன்!'னு உறுதிமொழி தந்துவிட்டுத்தான் வேலையில் சேர்ந்தேன்'' என்று பழைய நினைவுகளில் ஆழ்ந்தார் பத்மா.

''துணைக்கு என் பெற்றோரை அழைச்சுக்கிட்டேன். வீட்டு வேலை, அலுவலக வேலை, குழந்தைகளுக்கு

"என் துரதிர்ஷ்டம் என்னோடு! நான் யாருக்கும் பாரமா இருக்க விரும்பலை. நான் எங்கே போனாலும், நம்ம குடும்ப கௌரவத்துக்கு பங்கம் வராமல் பார்த்துப்பேன்!"

கோச்சிங், எல்லாவற்றையும் 'மாங்கு, மாங்கு' என்று செய்துவிட்டு, இரவு பதினொரு மணிக்கு மேல், ஐ.சி.டபிள்யூ.ஏ. பரீட்சைக்குப் படிக்க ஆரம்பிப்பேன்.

''பத்மா... நீ இப்படி ஓயாம உழைச்சா, உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்? வயசான காலத்துல உன் குழந்தைகளை எங்க கிட்டே ஒப்படைச்சுட்டு நீ செத்து கித்துப் போயிடாதேம்மா!''னு என்று அப்பா கவலைப்படுவார்.

அந்த அளவுக்குப் பசி, தூக்கம் மறந்த உழைப்பு... அதன் பலனாக, காஸ்ட் அக்கவுண்டன்ஸி படித்து, ஃபைனான்ஸ் மானேஜராக பதவி உயர்வு பெற்றேன். அலுவலக வாழ்க்கையும் ரோஜா பாதையாக இருக்கவில்லை. பலவிதமான எதிர்ப்புகள். ஒத்துழையாமை! எல்லாவற்றையும் இன்முகத்தோடு தாங்கிக்கிட்டு பற்பல சாதனைகளை செஞ்சு காட்டிய பிறகுதான் அவங்களோட முழு நம்பிக்கையைப் பெற முடிஞ்சுது'' என்று புன்னகைத்தார் பத்மா.



ஜெயலக்ஷ்மியுடன் பத்மா ஸ்ரீநிவாஸன்

பத்மா சாதித்த பல அலுவலக விஷயங்களில், அவருக்கே நிறைவு தந்தது 'சக்தி பேக்கரி'யை ஆரம்பித்தது தானாம்!

''நான் வேலைக்குச் சேர்ந்த உடனேயே, ஒரு விஷயத்தைக் கவனித்தேன். அங்கிருந்த பல தொழிலாளர்களுக்குத் தீவிரமான குடிப்பழக்கம் இருந்தது. அவர்களில் யாராவது இறந்து போனால், அவரது விதவை மனைவியும், குழந்தைகளும் அடுத்த வேளை சோற்றுக்கே கஷ்டப்படுவதைப் பார்த்தேன். அவங்களுடைய நல்வாழ்வுக்காக, ருக்மயி என்கிற அதிகாரியுடன் சேர்ந்து 'சக்தி பேக்கரி'யை ஆரம்பிச்சேன். இன்றைக்கும் அது ஐ.டி.ஐ. வளாகத்துக்குள் லாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது'' என்றவர் மீண்டும் ஃப்ளாஷ்பேக்குக்குத் தாவினார்.

''இதற்குள் என் பிள்ளைகள் நன்கு வளர்ந்து, ஸ்திரமான வேலைகளில் அமர்ந்தார்கள். கல்யாணம், குடும்பம், குழந்தைகள் என நல்லபடியாக செட்டில் ஆனார்கள். நானும் ஓய்வு பெற்று சீனியர் சிட்டிஸன் ஆகிவிட்டேன். இத்தனை வருஷமாக, ஒரு நிமிஷம் கூட வீணாக்காமல் உழைத்துப் பழகிவிட்ட எனக்கு, வீட்டில் சும்மா இருப்பது ரொம்பவே சிரமமாக இருந்தது. அருகிலிருந்த முதியோர் இல்லம் ஒன்றில் வாலண்டியராகப் பணியாற்றினேன். அங்கேதான் முதியோர்களின் கஷ்டங்களை நேரில் பார்த்தேன். நான் தினமும் வீட்டுக்கு வந்ததும் முதியோர் இல்லத்துச் சோகங்களை, கதை கதையாகச் சொல்வேன்.

உத்வேகப் பெண்மணி பத்மா ஸ்ரீநிவாஸனை அடையாளம் காட்டிய நமது பெங்களூர் வாசகி சாருஸ்ரீக்கு நன்றி.



'சும்மா பரிதாபப்பட்டா போதுமா அம்மா? அநாதரவாக விடப்படும் ஏழை முதியோர்களுக்கு நாம்ப ஏதாவது செஞ்சா என்ன?'' என்று என் மகள் சரஸா வாசுதேவன் கேட்கவும், அதுபற்றி சீரியஸாக யோசிக்க ஆரம்பிச்சேன்.

முயற்சிகளுக்கு எப்போதும் உறுதுணையாக வரக்கூடிய என் தோழியும், சம்பந்தியுமான ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸனுக்கும் இந்த ஐடியா ஏற்புடையதாக இருந்தது.

உடனே அதைப் பற்றி எல்லோருமே பேசிப் பேசி 'விஷ்ராந்தி ஹோம்' என்ற திட்டத்தைத் தொடங்கினோம். அந்த முதியோர் இல்லத்துக்கு ஒரு நிரந்தர வருமானம் தேவைங்கிறதனால, ஒரு பீட்ஸா கடையை ஆரம்பிக்கலாம்னு யோசனை தந்து, அதற்கான தனது ஆம்வே வேனையும் நன்கொடையாகத் தந்தவள் என் மகள் சரஸா. இந்த பிராஜெக்ட்டுக்கே பிள்ளையார் சுழி போட்டதோடு கிரியா ஊக்கியாகவும் திகழ்கிறாள்.''

''எத்தனையோ தொழில்கள் இருக்க, பீட்ஸா தயாரிக்கும் எண்ணம் வந்தது ஏன்?''

''இந்தத் திட்டத்தில் இளைஞர்களை அதிக அளவில் ஈடுபடுத்த வேண்டும் என்பது எங்கள் நோக்கம். இளைய தலைமுறையினரைக் கவர வேண்டும் என்றால் அவர்கள் விரும்பும் பீட்ஸா வைத்தானே தந்தாகணும்? அதுவும் பெங்களூர் போன்ற ஐ.டி. நகரத்தில் இளைஞர்களிடம்தானே பணமும் அதிகமாகப் புழங்குகிறது!

ஆரம்பத்தில் அவ்வளவு வரவேற்பு இருக்கவில்லைதான். ஒவ்வொரு கார்ப்பரேட் நிறுவனமாக ஏறி இறங்கி, அதிகாரிகளைச் சந்திப்பேன். நிறைய விளக்கங்கள் தந்து, அவர்களை 'கன்வின்ஸ்' செய்வேன். எப்படி லாபத்தில் வரும் ஒவ்வொரு பைசாவும் முதியோர் இல்லப் பணிகளுக்குச் செல்கிறது என்று வெளிப்படையாகக் காட்டுவேன்.

அதற்குப் பிறகு எங்கள் பீட்ஸாவின் சுவை, எங்கள் லாபமற்ற சேவை இரண்டுமே அவர்களுக்குத் திருப்தியைத் தரவே, இன்றைக்கு பெங்களூரில் 'பீட்ஸா பாட்டி' என்ற பட்டப் பெயரே ஏற்பட்டு விட்டது! எப்படியும் ஒருநாளைக்கு குறைந்தபட்சம் இருநூறு பீட்ஸாக்களாவது விற்பனை ஆகின்றன. எல்லா செலவுகளும் போக, பத்தாயிரம் ரூபாயைச் சேமிக்க முடிகிறது!'' என்கிறார் பெருமையுடன்.

'விஷ்ராந்தி முதியோர் இல்லம்' தற்போது எந்த நிலையில் இருக்கிறது?'' என்று கேட்டால், நீண்ட பெருமூச்சு விடுகிறார் பத்மா.

''என்னுடைய ஓய்வூதியத்திலிருந்து ஐந்து லட்ச ரூபாயை முதலீடு செய்து, வைட்ஃபீல்டுக்கு அருகே இடம் வாங்கிப் போட்டிருக்கேன். ஆனால் கட்டடம்? மற்ற வசதிகள்? அதற்காகத்தான் அரசாங்க சலுகைகள், தனியார் நிறுவனங்களின் நன்கொடைகள் என நாளும் அலைந்து கொண்டிருக்கிறேன். முதலில் சுற்றுச் சுவர், கிணறு, ஆறு அறைகள் என முதல் கட்டப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் கட்டணம் பெற்றுக் கொண்டு செயல்படவிருக்கும் 'விஷ்ராந்தி' ஓரளவு தன்னிறைவு பெற்ற

தும், அனாதை இல்லம், முதியோர் இல்லம் என இலவசமாகவும் சேவை செய்யும்.

''நிறைய வங்கிகள், கார்பரேட் நிறுவனங்கள், நல்இதயம் கொண்ட நன்கொடையாளர்கள், கட்டுமானப் பணிகளுக்கு உதவ முன்வந்திருக்கின்றனர். வெகுவிரைவில் எங்கள் கனவு விதை 'விஷ்ராந்தி'. பலருக்கும் நிழல் தரும் ஆலமரமாகத் தழைக்கும்'' என்கிறார் நம்பிக்கையுடன் பத்மா.

நாம் விடைபெறும் சமயத்தில், பத்மாவின் பேத்தி, தன் பாட்டிக்காகச் சேமித்து வரும் உண்டியலைக் காட்டினார்.

''அவளுடைய பாக்கெட் மணியைக் கூட மிச்சம் பிடித்து 'விஷ்ராந்திக்காக' சேமிக்கிறாள். ஒருமுறை எங்க வீட்டு வேலைக்காரம்மாள் என் பேத்தியிடம், ''ஏன் பாப்பா... உங்க அம்மாவும், அப்பாவும் நிறைய சம்பாதிக்கிறாங்களே! அதெல்லாம் உன் ஒருத்திக்குத்தானே! அப்புறம் ஏன் நீ இவ்வளவு கஷ்டப் பட்டுப் படிக்கணும்?'னு கேட்டிருக்கா.

அதுக்கு அவள், ''நான் நிறைய சம்பாதிச்சாதான், எங்க பாட்டியோட விஷ்ராந்திக்கு நிறைய டொனேஷன் தர முடியும். அவங்க என் மீது காட்டற அன்புக்கு நான் பிற்காலத்துல ஏதாவது நன்றி காட்ட வேண்டாமா?''னு கேட்டிருக்கா.

''போதும் பத்மா நீ உழைச்சது... கிளம்பு''னு ஒருவேளை காலதேவன் ஓலை அனுப்பிட்டான்னா, எனக்குப் பிறகு என் பிள்ளைகள், பேத்திகள் விஷ்ராந்தியைத் தொடர்ந்து நடத்து வாங்கன்னு நம்பிக்கை இருக்கு. அது வரைக்கும் நான் என் முயற்சிகளைத் தொடர்ந்துகிட்டே இருப்பேன்'' என்கிறார் பத்மா ஸ்ரீநிவாஸன் உறுதியான குரலில்!

சந்திப்பு : **அனுராதா சேகர்**

துள்ளிக் குதித்த அவதாரம்!

நவராத்திரி என்றவுடனே நாங்கள் அடித்த கூத்துதான் ஞாபகத்திற்கு வருகிறது. கொலுப்படி வைத்து, அதற்குப் பக்கத்திலேயே கோயில், கோபுரம் தெப்பக்குள செட்டும் அமைத்தாயிற்று. கோயில் குளத்தில் நிஜ மீன்களைப் பிடித்துப்போட்டால் இன்னும் அச்சு அசலாக இருக்குமே என்று தோன்ற குளத்தில் இறங்கி மீன்களைப் பிடித்தேன். என் தாவணியை வீசியதில் சிறிய மீன்கள் இரண்டு கிடைத்தன. அவை படு இரகசியமாகக் குளத்தில் விடப்பட்டன. அந்தக் கொலு குளத்தில் ஏற்கெனவே கண்ணாடி மீன்கள், பிளாஸ்டிக் மீன்களும் இருந்ததால், உற்றுப் பார்த்தால்தான் தெரியும்.

நவராத்திரியும் வந்தது. முதல் நாள் லலிதா சகஸ்ர நாமம் படித்துக் கொண்டிருந்த என் தாயாருக்குப் பக்கத்தில் ஒரு மீன் குதித்து வெளியே வர, அம்மா குதித்த குதி இருக்கே! ருத்ர தாண்டவம்!

''அம்மா, இன்று முதல் நாள் முதல் அவதாரம் மச்ச அவதாரம். உன் பூஜையில் மகிழ்ந்து அம்பாளே மீன் வடிவில் வந்திருக்கிறாள்'' என்று சென்டிமெண்டாக 'டச்' செய்யவும். ''நம்புவதா? வேண்டாமா?'' என்று என் தாய் விழித்தது இன்றும் நிழலாடுகிறது.

- நா. விஜயா, சென்னை - 19.



salon Aarthi

School of Beauty Therapy & Hairdressing



City & Guilds
London Approved Training Centre Recognized over 100 countries

ADVANCED HAIR & SKIN SERVICES

SPECIAL BRIDAL PACKAGES

ARTI AMARENDRA - Trained Cosmetologists from Singapore and UK Academies

Diploma in Hairdressing - Diploma in Beauty Therapy

- Latest syllabus and teaching methods
- Basic & Advanced Hair cuts & Hair Styles
- Perming, Rebonding. International Hair colouring system
- Electrical Machines
- Bridal, Special effects, Photographic and Stage Makeups
- Skin care and advanced facials with Serum Therapy,
- Collagen, Algae Masks etc..
- Hostel facilities arranged

100% Job Placement Assistance

Ideal for - Starting own business - Good Job opportunities in India, Abroad and Immigration purpose.

For Registration :

Shop 31 & 32, 2nd Floor, New Corporation Complex, 3rd Cross Road, R.A.Puram, Ch - 28. Mobile : 98400 48355 / 98844 10169.

ஸ்ரீ ஸ்து சுபமஸ்து ஸ்ரீ வெங்கடேச ப்ரசன்ன

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஆசியுடனும் ஆக்ஞையின்படியும் கீழ்கண்ட யாத்திரைகளை அறிவிக்கிறோம்.

1	**22.10.2007** முதல் **28.10.2007** வரை	ஓம்காரேஸ்வர், மஹாகாலேஸ்வர், மாஹீஷ்மதி, உஜ்ஜயின் உள்ளிட்ட யாத்திரை
2	**01.11.2007** முதல் **17.11.2007** வரை	அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், காசி, கயா, கோனார்க் உள்ளிட்ட தீபாவளி நிஜ கங்காஸ்நான காசி யாத்திரை
3	**05.11.2007** முதல் **14.11.2007** வரை	தீபாவளி நிஜ கங்காஸ்நான காசி யாத்திரை
4	**28.11.2007** முதல் **08.12.2007** வரை	பூரி, புவனேஸ்வர், கோனார்க், கௌஹாத்ரி, காமாக்யா, ஹௌரா உள்ளிட்ட யாத்திரை
5	**19.01.2008** முதல் **03.02.2008** வரை 	அஹமதாபாத் பஞ்சதுவரகா, சோமநாதம், நாகநாதம். (இரண்டு ஜோதிலிங்கம்) அம்பாஜி, மௌண்ட் அபு, ஏகலிங்கஜி, காங்க்ரோலி துவாரகா, ஸ்ரீநாத்துவாரகா, அஜ்மீர், புஷ்கர், ஜெய்பூர் உள்ளிட்ட யாத்திரை.

ஒரே குருப்பாக வரும் அன்பர்களுக்கு காண்ட்ரக்ட் முறையில் அவர்கள் விரும்பும் இடங்களுக்கு அவர்கள் விரும்பும் தேதியில் யாத்திரை செய்து தரப்படும்.

குறிப்பு: - எங்களுக்கு ஏஜெண்டுகள், கிளை அலுவலகங்கள் கிடையாது. 60 நாட்கள் முன்னதாக டிக்கெட் ரிசர்வ் செய்ய வேண்டி இருப்பதால் அதற்கும் முன்னதாக ரிசர்வ் செய்து கொள்வது நல்லது.

தேதிவாரி அட்டவணை மற்றும் மேலும் விவரங்களுக்கு

ஸ்ரீ மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்

1, யூசுப் லேன், அருணாசல ஆசாரி தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி : ஆபீஸ் : 044 - 28516845, வீடு : 044-28516957

அரையணா வைத்தியம்!





ஒருமுறை மகாத்மா காந்தி சிறையில் இருந்த போது காதில் உண்டாகிய சிறு கொப்பளத்தால் மிகவும் வேதனைப்பட்டார். டாக்டர் தான் கற்ற வித்தையையெல்லாம் செய்தும் கொப்பளம் உடையவில்லை. வலியோ அதிகமாகியது.

முடிவில் கஸ்தூரிபா அம்மையார் தனக்குத் தெரிந்த ஒரு நாட்டு மருந்தை காந்தியின் காதில் விட, கொப்பளம் உடைந்து, காந்தியும் நன்றாகத் தூங்கினார்.

மறுநாள் காந்தியிடம் டாக்டர், ''மிஸ்டர் காந்தி! இந்த அற்புத நாட்டு மருந்தைப் பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்று கேட்க, ''இது பழைய மருந்துதான். சிறிது நல்லெண்ணெயில் வெள்ளைப் பூண்டைப் போட்டு, நன்றாகக் காய்ச்சி, இளஞ்சூட்டில் காதில் ஊற்ற வேண்டும். சூடு விரைவில் ஆறாமல் இருக்க ஒரு செங்கல் துண்டைச் சற்று அனலில் காட்டி அதைக் காதில் வைத்து மூடி விட வேண்டும். இதற்குச் செலவு அரையணாதான்'' என்று காந்தி பதில் சொல்ல, டாக்டரும் தன் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

நீங்கள் செய்வதெல்லாம், ''மருந்து கொடுத்து பார்ப்பது, நோய் குணமாகாவிட்டால் காதையே அறுத்து விடுவது. இனி ஆங்கில டாக்டர்கள் உங்களது பட்டங்களைத் துறந்துவிட்டு, நாட்டு வைத்தியம் செய்யுங்கள்'' என்று காந்தி டாக்டரைக் கிண்டல் செய்ய, அங்கே இருந்த மற்றவர்களும் சிரித்தனராம்.

- தா. விஷ்ணு கஜேந்திரன், புதுச்சேரி.



ஆஹா 50!

தையல்காரரிடம் தைக்கக் கொடுக்கும்போது உயர்ரக ஸ்டீல் (அ) பித்தளை ஹுக், பட்டன் வைக்கச் சொல்ல வேண்டும். மட்டமான ஹுக் வைப்பதால் துருப்பிடித்து துணியே கிழிந்து விடுகிறது.

- பிரேமா ராவ், ஸ்ரீரங்கம்.



மல்டி பர்ப்பஸ்
தக்காளி டிலைட்

தேவையான பொருள்கள் :
தக்காளி - 2 கிலோ,
வெங்காயம் (அரிந்தது) - ¾ கிலோ,
பூண்டு (விருப்பப் பட்டால்) - 50 கிராம்,
மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன்,
மிளகாய்த் தூள் - 2 டீஸ்பூன்,
மல்லித் தூள் - 2 டீஸ்பூன்,
சீரகத் தூள் - 1 டீஸ்பூன்,
கரம் மசாலாத் தூள் - 1 டீஸ்பூன்,
புளிக்கரைசல் - 1 டேபிள் ஸ்பூன்,
பச்சை மிளகாய் - 8-10,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - 1- 1½ கப்,
சீரகம் - 1 டீஸ்பூன்,
கறிவேப்பிலை, கொத்துமல்லி - சிறிதளவு.

செய்முறை :

1. நன்கு உறுதியான, பழுத்த தக்காளிகளைக் கழுவி எடுத்துப் பொடியாக அரியவும்.

2. பூண்டு, வெங்காயம் ஆகியவற்றையும் பொடியாக அரியவும். பச்சை மிளகாயை இரண்டாகப் பிளக்கவும்.

3. காய்ந்த எண்ணெயில் சீரகத்தை வெடிக்கவிட்டு பூண்டு, வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்து மல்லித்தழை ஆகியவற்றை நன்கு வதக்கவும்.

4. இதில் மஞ்சள் தூள், மிளகாய்த் தூள். சீரகத்தூள், தனியாத்தூள், உப்பு சேர்த்து ஒரிரு நிமிடங்கள் வதக்கிய பிறகு அரிந்த தக்காளியைச் சேர்த்து நன்கு வேகும் வரை வதக்கவும். கரம் மசாலாத் தூள் சேர்க்கவும்.

5. இதில் புளிக்கரைசலைச் சேர்த்து



ஓரளவு கெட்டியாக விழுது போல ஆகும் வரை கிளறவும்.

★ இதோ, உங்கள் மல்ட்டி பர்ப்பஸ் தக்காளி டிலைட் ரெடி. ஃப்ரிஜ்ஜில் வைத்து ஒரு வாரம் வரை உபயோகிக்கலாம். இதை எப்படியெல்லாம் உபயோகித்து என்னவெல்லாம் செய்யலாம் தெரியுமா?

★ இதில் கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்துக் கொட்டி சிறிது தண்ணீர் சேர்த்துக் கரைத்தால் இட்லி, தோசை, பொங்கலுக்கு அருமையான சைட்டிஷ் ரெடி.

★ இக் கலவையை உதிரியாக வடித்த சாதத்தில் பிசிறினால் நொடியில் டேஸ்ட்டி தக்காளி சாதம் தயார்.

★ சாதாரண சாம்பார், குழம்பில் இக் கலவையில் ஒரு கரண்டி சேர்த்துப் பாருங்கள். உங்கள் சாம்பார் ருசி ஊரையே தூக்கும்.

★ இக்கலவையை மிக்ஸியில் போட்டு ஒரு நொடி மசித்து விட்டு, வேகவைத்த உருளைக் கிழங்கு, பட்டாணி, கேரட் வகைகளுடன் சேர்த்துக் கொதிக்க வைத்து எடுத்தால் அருமையான வெஜிடபிள் சப்ஜி தயார்.

★ இக் கலவையில் ஒரு கப் எடுத்துக் கொண்டு ஒரு கப் தேங்காய்ப் பால் சேர்த்துக் கொதிக்க வைத்தால் இடியாப்பம், ஆப்பத்துக்கு ஏற்ற தேங்காய்ப் பால் மசாலாக் குழம்பு நொடியில் ரெடி.

★ இரண்டு ஸ்லைஸ் பிரெட்டுக்கு நடுவில் இவ் விழுதை சிறிது தடவி டோஸ்ட் செய்தால் சூப்பர் டோஸ்ட் ரெடி.

★ இக் கலவையில் தேவையான அளவை நைஸ்ஸாக அரைத்து சிறிது வெண்ணெய் சேர்த்து, பன்னீர் துண்டங்களைப் போட்டு 2-3 நிமிடங்கள் சிம்மில் வைத்துத் தளைக்க விட்டால் இன்ஸ்டண்ட் பன்னீர் பட்டர் மசாலா ரெடி!

★ சாதாரணமாகச் செய்யும் ரவா உப்புமாவில் இக் கலவையில் சிறிதளவு சேர்த்துக் கிளறினால் சுவையான மசாலா பாத் தயார்.

★ வெந்த பச்சைப் பட்டாணி, கேரட், காலிஃப்ளவருடன், இக் கலவையைச் சேர்த்துக் கொதிக்க வைத்து வறுத்த பாஸ்மதி அரிசி, தண்ணீர் சேர்த்து வேக வைத்தால் அருமையான வெஜிடபிள் புலாவ் ரெடி.

★ தோசை மாவுடன் இக் கலவையைச் சேர்த்துக் கலக்கி வார்த்தால் சுவையான தக்காளி தோசை/ஊத்தப்பம் நொடியில் ரெடி.

★ இந்த 'மிக்ஸை' ¼ கப் வினிகர் சேர்த்துத் தயாரித்தால் 1 மாதம் வரை கூட உபயோகிக்க முடியும்.

- உஷா ஸ்ரீகுமார்

டியூசன் சென்டர், ஆரம்பப்பள்ளி,
மேல்நிலைப்பள்ளி,
மெட்ரிக்குலேசன் பள்ளிகளுக்கு



Creative Kids

CENTRE FOR CREATIVE ARITHMETIC LEARNING

ABACUS, VEDIC MATHS, CURSIVE HANDWRITING ONE WORD SUBSTITUTES, TONGUE TWISTERS

- 100 புத்தகங்கள் வாங்கும் பள்ளிகளுக்கு பள்ளியிலேயே ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
- உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கும் புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

Books are available in One Lot or One Set or Singly

36, மஹால் 5வது தெரு, மதுரை - 1. போன்: 0452 4370701, செல்: 98421 32115

சித்தா & அகுபஞ்சர் கிளினிக்

சர்க்கரை நோய், குழந்தையின்மை, பக்கவாதம், மூலம், ஆஸ்துமா, அல்சர், மூட்டுவலி, இடுப்புவலி, இரத்தக் கொதிப்பு, ஆண்மைக்குறைவு, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், கருப்பை கட்டிகள், உடல் பருமன், தைராய்டு பிரச்னைகள் & நாட்பட்ட அனைத்து நோய்களிலிருந்தும் நிரந்தர தீர்வு பெற...



டாக்டர் K.S. **சுப்பையா**
BSc., M.A. BAMS MD (ACU)
(அரசு பதிவுபெற்ற மருத்துவர்)

கார்த்திக் சித்தா கிளினிக்
73/16A, சாலை ரோடு, திருச்சி - 18.
94433 43771, 99949 32121

டாக்டர். S.M.L. **பாண்டியன்**
Ph.D.MD (Acu)

சுகம் அகுபஞ்சர் கிளினிக்
ஆணையூர், மதுரை - 17.
செல்: 93441 02961

சென்னையில்: வெள்ளி, சனி, இரண்டு நாட்களிலும்
10, மன்னார் தெரு, தி.நகர், சென்னை - 17ல் இருவரையும் சந்திக்கலாம்.

அகுபஞ்சர் கற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளவும்
94433 43771, 93441 02961

அதற்கும் சேர்த்துதான்!



கவிதை

இன்று -
சரஸ்வதி பூஜை
அத்தையின் பக்திப் புத்தகம்
கணவரின் பதிவேடுகள்
குழந்தையின் பாடப் புத்தகங்கள்
இவற்றுடன் -
எனது மங்கையர் மலர்!

இன்று -
ஆயுத பூஜை
சமையலறைத் தளவாடங்கள்
கத்தியுடன் மணை வாணலியும்
பொட்டிட்டு மங்களமாய் அமர்ந்திருக்க
கூடவே எனது மங்கையர் மலர்!

காய்களை நறுக்க மட்டுமல்ல
புத்தியைத் தீட்டவும் கற்றுத் தந்ததால்
அதனால் மட்டுமல்ல - பெண்களின்
கவசமாய் இரும்புக் கவசமாய்
திகழ்கிறதே அதற்கும்
சேர்த்துத்தான்..

இன்று -
ஆயுத பூஜை!

- கம்பீர்யா, திருச்சி.

பண்டிகை ஸ்பெஷல் - 2

'கொல்'லுன்னு...

''கொலு பொம்மை கடையில் ஏன் திருடினே?''

''கபாலி பொண்டாட்டிக்கு கொலு வைக்கும் ஆசை வந்தா தப்பா சார்...?''





''பெண்களைக் கவர நம்ம பேங்கி யில புதுமையா என்ன திட்டம் வச்சிருக்கீங்க?''

''கொலு வைக்க லோன் தரப் போறோம் சார்...''



''மிஞ்சிய சுண்டலை எல்லாம், என் தலையில் கட்டிடுவா என் பெண் டாட்டின்னு நான் சொன்னப்போ நீ நம்பலியே... இப்பவாவது நம்பறியா...?''



கருத்து : ராஜி ராதா
கார்ட்டூன்ஸ் : பிள்ளை

''மூணா வருஷம் 3 படி... போன வருஷம் 5 படி... இந்த வருடம் 7 படின்னு கொலு வெச்சிருக்கேன்...''

''படிப்படியா முன்னேறியிருக்கே போல இருக்கே... பேஷ்! பேஷ்!''

...சிரிங்க!





''தேர்தல் அதிகாரி வீட்டு கொலுவுக்குப் போனது தப்பாப் போச்சு.''

''ஏன்...?''

''சுண்டல் கொடுத்ததுக்கு அடையாளமா கைவிரலில் அழியாத மை வெச்சு அனுப்பிட்டாங்க!''



''ஏற்கெனவே நிறைய வீட்டுல சுண்டல் வாங்கிட்டேன். சரி... உன் வீட்டுல என்ன சுண்டல்?''

''அந்தச் சுண்டல்களைச் சாப்பிட்டு அஜீரணம் ஆகாமல் இருக்க மூணு டைஜின் மாத்திரைகள் தர்றேன்...''



''கொலு பக்கத்துல இலவசம்னு என்னவோ எழுதி வெச்சிருக்கியே... என்னது?''

''கொலுவுக்கு வந்து, பாட்டுப் பாடறவங்களுக்கு ஒரு சுண்டல் பாக்கெட்டுக்கு இன்னொரு சுண்டல் பாக்கெட் இலவசம்.''



''எதுக்கு கொலுவுக்கு முன்னால திருஷ்டிப் பூசணி வெச்சிருக்கே...?''

''வீடு மாதிரி கொலுப் படியையும் கட்டித்தானே வைக்கிறோம். அதனால் கண்படாம இருக்கத்தான்.''

நல்ல சமுதாயம் உருவாக ஒரு யோசனை...

டீ.வி.யில் எந்த சேனலைத் திருப்பினாலும் வன்முறையும் ஆபாசக் காட்சியுமே காண்பிக்கப்படுகிறது. பெரும்பான்மையானவை மனதளவில் மக்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. பத்திரிகையில் ஆன்மிகப் பத்திரிகை நடத்துவதைப் போல் வசதி படைத்த பத்திரிகை நிறுவனமோ அல்லது ஆன்மிக எண்ணம் கொண்ட அமைப்புகளோ, ஆன்மிக நிகழ்ச்சிகளைத் தருவதற்கென்றே பிரத்யேகமாக ஒரு சேனலைத் துவங்க வேண்டும்.

வடக்கில் 'சஞ்சார்' போல் தமிழகத்திலும் இந்து மதத்துக்கு என ஒரு சேனலைத் துவக்கினால் பயனுள்ளதாக இருக்கும்.



அந்த ஆன்மிக சேனலில் சைவ, வைணவ பேதம் இல்லாமல், நல்ல உபன்யாஸங்கள், பக்தி சொற்பொழிவுகள், வழிபாட்டு ஸ்தலங்கள், இசைக் கச்சேரிகள், கோயில் திருவிழாக்கள், வெளி உலகத்துக்குத் தெரியாத பல திருக்கோவில்களின் விவரங்கள், பக்தி நாடகங்கள் போன்றவற்றை தரமான விளம்பரங்களுடன் ஒளிபரப்பலாமே. என் ஆசை நிறைவேறுமா?

- கே. ஜானகி,
கும்பகோணம்.



சூப்பர் விற்பனையில்...
கோகுலம்
அக்டோபர் 2007 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!
ஆஹா!
படித்து ரசிக்கவும்...
பார்த்து வியக்கவும்...
புதுமைப் படக்கதை
நான்தான் ராஜா!
விளையாட்டுச் சிறப்பிதழ்!
வெல்கம்
08:08:08
பிரித்து...மடித்து...
கத்தரித்து...
இணைத்தால்...
அட!
மினி
கோகுலம்
உங்கள் குழந்தையே தயாரிக்கலாம்!

முதல் பரிசு: டேபிள் டாப் வெட் கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: மைதிலி சுவாமிநாதன், சென்னை - 40.

தலைப்பு :
ஸ்பெஷல் ஸ்வீட்

உருளைக் கிழங்கு ராஜ்போக்

தேவையான பொருள்கள் :
உருளைக்கிழங்கு - ¼ கிலோ,
பால் பவுடர் - 1 கப்,
சர்க்கரை - 3½ கப்,
தண்ணீர் - 5 கப்,
குங்குமப்பூ - 1 சிட்டிகை,
ஏலப்பொடி - 8 (பொடித்தது),
முந்திரி பருப்பு, பாதாம், பிஸ்தா பருப்பு,
பேரீச்சம் பழம் - 10,
உலர்ந்த திராட்சை - 20,
எண்ணெய் - ¼ கிலோ.

செய்முறை :
உருளைக்கிழங்கை மிருதுவாக வேக வைத்துக் கொள்ளவும். கிழங்கு ஆறியவுடன் நன்றாகக் கட்டியில்லாமல் உதிர்த்து பால் பவுடரைச் சேர்த்துப் பிசையவும்.

முந்திரி, பாதாம், பிஸ்தா, பேரீச்சை, திராட்சை ஆகியவற்றை சிறிய துண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

இப்பொழுது பிசைந்து வைத்திருக்கும் உருளை, பால் பவுடர் மாவை ஒரு எலுமிச்சை அளவு உருட்டவும். கட்டை விரலால் நடுவில் ஒரு குழி செய்யவும். இந்தக் குழியில் நறுக்கி வைத்திருக்கும் பருப்புகளையும், உலர் பழங்களையும் ஒன்றாகக் கலந்து அரை ஸ்பூன் அளவு நிரப்பி அதை மூடவும். இப்படியே மீதம் இருக்கும் மற்ற மாவையும் உருட்டி, பருப்பு பழக் கலவையை வைத்து மூடவும்.

இப்பொழுது எண்ணெயைக் காய வைத்து மிதமான சூட்டில் இந்த உருண்டைகளை 4 (அ) 5 போட்டுப் பொரித்து எடுக்கவும். தனியே வைக்கவும். சர்க்கரையை தண்ணீரில் கரைத்து, பொன்னிறமாகும் வரை பாகு காய்ச்சவும். இந்தப் பாகில் ஏலக்காய், குங்குமப்பூ சேர்க்கவும். செய்து வைத்திருக்கும் உருண்டைகளைப் பாகில் ஊறப்போடவும்.

உருளைக்கிழங்கு ராஜ்போக் தயார்.



இரண்டாம் பரிசு
ரூ. 300/-
சுரைக்காய் பர்ஃபி

தேவையான பொருள்கள் :
சுரைக்காய்த் துருவல் - 2 கப்,
மைதா மாவு - ½ கப்,
பொட்டுக்கடலை மாவு - ½ கப்,
சர்க்கரை - 2 கப்,
சர்க்கரை போடாத பால்கோவா - 50 கிராம்,
ஏலப்பொடி - 1 ஸ்பூன்,
கேசரிப் பவுடர் - 1 சிட்டிகை,



நெய்யில் வறுத்த முந்திரி - சிறிது,
நெய் - 1½ கப்

செய்முறை :

சுரைக்காயை தோல் நீக்கி துருவி, கையால் சாற்றைப் பிழிந்து எடுத்தபின் இரண்டு கப் அளவு எடுத்து ஆவியில் வேக வைத்துக் கொள்ளவும். பிறகு பொட்டுக் கடலையை கொஞ்சமாக வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். மைதாவை கொஞ்சம் நெய்விட்டு சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

சர்க்கரையை ஒரு பாத்திரத்தில் போட்டு, தண்ணீர் விட்டு கொதிக்க விடவும். கம்பிப் பதம் வந்ததும், முதலில் வறுத்து வைத்துள்ள மைதாவை சேர்க்கவும். அடுத்து பொட்டுக்கடலை மாவையும் சேர்த்து நன்றாகக் கிளறவும். இரண்டும் நன்கு கலந்த பின் வேகவைத்துள்ள சுரைக்காய்த் துருவலையும் போட்டுக் கிளறவும். பின்பு பால் கோவா, கேசரி பவுடரைச் சேர்க்கவும். கொஞ்சம் கொஞ்சமாக நெய் சேர்த்துக் கிளறவும். நன்கு சுருண்டு வரும்போது ஏலப் பொடி, முந்திரி இவற்றையும் போட்டு நன்கு கிளறி, நெய் தடவிய ஒரு தட்டில் கொட்டி, கொஞ்சம் ஆறிய பின் துண்டங்களாகப் போடவும். இது மிகவும் ருசியாகவும், மிருதுவாகவும் இருக்கும். மேலும், சுரைக்காய் உடலுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

பி.கு : சில சமயங்களில் சுரைக்காய் மிகவும் தித்திப்பாக இருக்கும். பச்சையாக ருசி பார்த்துவிட்டு தித்திப்பாக இருந்தால் சர்க்கரை அளவைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம்.

- மாயா சேகர், மும்பை.



இம்மாத இல்லத்தரசி

மூன்றாம் பரிசு ரூ.200/-

இயற்கை லட்டு உருண்டை

தேவையான பொருள்கள் :

முளைவிட்ட கம்பு - 200 கிராம்,
முளைவிட்ட பச்சைப் பயறு - 200 கிராம்,
சுக்கு, ஏலத்தூள் - சிறிது,
கிராம்பு - 4,
உடைத்த கடலை - 100 கிராம்,
வேர்க்கடலை வறுத்தது - 100 கிராம்,
கொப்பரைத் துருவல் - 1 கப் (வறுத்தது),
உலர் திராட்சை - 50 கிராம்,
பேரீச்சம் பழம் - 25,



முதல் முறை!

''வாம்மா. நல்லவேளை ரயில் தாமதமாகலை. அப்பா நெஞ்சு வலியால் நேற்று இரவு முழுக்கத் தூங்கவேயில்லையம்மா. அப்பாகிட்டே பேசிக்கிட்டிரு. நான் காப்பி கொண்டு வரேன் என்றாள்'' மகள் புஷ்பா.

சீதாவின் குரல் கேட்டுப் புதுத் தெம்புடன் எழுந்தார் ராமன். ''உன்னைப் பார்க்காமல் போயிடுவேனோன்னு கவலையா இருந்தது'' என்றார் தழுதழுப்பாக.

''மனசை அலட்டிக்காதீங்க. ஜெயாவும், மாப்பிள்ளையும் சந்தோஷமாக இருக்கிறாங்க. புதுக்குடித்தனம் நல்லபடியாக வைச்சுட்டேன். ஜெயாவை கண்கலங்காமல் பார்த்துப்பேன்னு மாப்பிள்ளை சத்தியமே செஞ்சுட்டாரு'' என்று சொல்லி முடிக்கவும், அப்படியே மனைவியின் மடியில் தலைசாய்த்து காலமானார் ராமன்.

ஐம்பது வருட தாம்பத்தியத்தில் முதன் முறையாகப் பொய் சொன்னதை நினைத்து சீதா கண்ணீர் வடித்தாள்.

- ஜி. நிர்மலா,
மும்பை.

முந்திரி, பாதாம் பருப்பு - 25 +10,
டைமன் கல்கண்டு - 100 கிராம்,
தேன் - 50 கிராம்,
நெய் - 50 கிராம்,
துளசி, புதினா, கற்பூரவல்லி இலை - 10+10+10 இலைகள்.

செய்முறை :

முளைவிட்ட கம்பு, பயறு இவற்றை உலரவைத்து, வறுக்கவும். இத்துடன் ஏலம், சுக்கு, கிராம்பு, உடைத்தகடலை சேர்த்து நைஸாக அரைக்கவும். பின் கல்கண்டு, கிராட்சை, பேரீச்சை, தேங்காய், முந்திரி, பாதாம் இவற்றை உரலில் போட்டு இடிக்கவும். பின் மாவுடன் இவற்றைக் கலக்கவும். இதில் தேன், நெய் கலக்கவும்.

துளசி, புதினா, கற்பூரவல்லி இலையைக் காயவைத்துப் பொடித்து இதில் போடவும். பின் உருண்டைகளாகப் பிடிக்கவும். மேலும், தேவை என்றால் சிறிது நெய்யைச் சூடாக்கி ஊற்றிப் பிடிக்கலாம். மிகவும் சக்தி உள்ள கிராமத்துக் கைமணத்துடன் கூடிய ஸ்வீட் இது!

- கே. கமலி, சென்னை - 33.

ஆறுதல் பரிசு ரூ.100/-

குஜியா

தேவையான பொருள்கள் :

மைதா - 1 ஆழாக்கு,
சமையல் எண்ணெய் (அ) டால்டா - 2 குழிக்கரண்டி,
சமையல் சோடா - சிட்டிகை,
தேங்காய்த் துருவல் - ½ ஆழாக்கு,
சர்க்கரையில்லா கோவா - 500 கிராம்,
சர்க்கரை - 500 கிராம்(பொடித்தது),
ஏலப்பொடி - 1 டீஸ்பூன்.

செய்முறை :

மைதா மாவை, எண்ணெய் அல்லது டால்டா ஊற்றிப் பிசையவும். சோடாவை சேர்க்கவும். பிறகு தேவையான அளவு நீர் சேர்த்து கைகளால் நன்றாக அழுத்தி

கெட்டியாகப் பிசையவும். ஈரத் துணியில் 1 மணி நேரம் மூடி ஊறவிடவும்.

பூரணம் செய்ய வெறும் வாணலியில் தேங்காயை இலேசாக வதக்கவும். பிறகு தனியாக கோவாவையும் அதே போல வதக்கவும். பின் சர்க்கரைப் பொடி, ஏலப் பொடி வதக்கி ஆறிய தேங்காய்த் துருவல், கோவாவை ஒன்றாகக் கலக்கவும். பின் பிசைந்துள்ள மாவை அதிக மெல்லிசாகவும் இல்லாமல் அதிக தடியாகவும் இல்லாமல் சிறிய ரொட்டிகளாக இட்டு நடுவில் வைத்து ரொட்டியை மடித்து கைகளால் ஓரங்களை நன்றாக அழுத்தி மூடவும். எண்ணெயில் பொரித்தெடுத்தால் சுவையான குஜியா ரெடி.

இது ஹோலி பண்டிகையில் உ.பி. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சகோதரியும் தன் சகோதரனுக்காகக் கண்டிப்பாக செய்யும் ஓர் இனிப்பு வகை. தேங்காய் சேர்ந்திருப்பதால் இரண்டு, மூன்று நாட்களே வரும். இந்தத் தீபாவளியில் உங்கள் வீட்டில் ஒரு ஸ்பெஷல் ஸ்வீட்டாக இது அமையட்டும்.

- அனுராதா ராஜேஷ், ஹரியானா.

குங்குமப்பூ - சிறிதளவு,
முந்திரி - 25 கிராம்

செய்முறை :

பாலை அடிகனமான பாத்திரத்தில் ஊற்றிக் காய்ந்தவுடன், சர்க்கரை சேர்த்து, பத்து நிமிடம் நன்றாகக் கொதிக்கவிடவும். பிரட்ஸ்லைஸ் ஓரங்களை மெலிதாக வெட்டி எடுத்து விட்டு, பிய்த்து பிரட்டை பாலில் வேகவிடவும். நன்றாக திக்காக வரும்போது தணலை மிதமான சூட்டில் வைத்து, இளம்சூட்டில் கலவையுடன் பால் ஏட்டைச் சேர்க்கவும். நன்றாகக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். அத்துடன் ஏலக்காய்ப் பொடி, பாலில் கரைத்த 1 சிட்டிகை குங்குமப்பூ, பொடித்த முந்திரிப் பருப்பு சேர்த்து கிளற, அல்வா பதத்தில் வரும். அப்போது இரண்டு ஸ்பூன் நெய் விட்டு நன்கு கிளறி இறக்க வேண்டும். இதை கேக் மாதிரி வெட்டத் தேவையில்லை. கிண்ணத்தில் போட்டு சுடச்சுடவும் பரிமாறலாம். பிரிட்ஜில் வைத்து குளிரக் குளிரவும் தரலாம்.

- மேனகா ராஜேந்திரன், மும்பை.

ஆறுதல் பரிசு ரூ.100/-

சம் சம்

தேவையான பொருள்கள் :

பால் - 1 லிட்டர்,
நெய் - 2 ஸ்பூன்,
பால் ஆடை - 150 கிராம்,
பிரட் - 10 துண்டுகள்,
சர்க்கரை - 150 கிராம்,
ஏலக்காய் - 1,

பிரசுரத்துக்கு...

டேஸ்டி கோல்டன் அல்வா

தேவையான பொருள்கள் :

பச்சை வேர்க்கடலை - 1 கப்,
கடலை மாவு - 1 கப்,
பால் - 2 கப்,
சர்க்கரை - 3 கப்,
பேரீச்சம், முந்திரி பருப்பு - 15,
பாதாம் பருப்பு - 5,



நெய் - 50 கிராம்,
ஏலக்காய்ப் பொடி - 2 சிட்டிகை,
நெய்யில் வறுத்து முந்திரி - சிறிது.

செய்முறை :

கடாயில் இரண்டு ஸ்பூன் நெய் ஊற்றி கடலை மாவை பொன்னிறமாக வறுக்கவும். முந்திரி பருப்பு, பாதாம் பருப்பு, பேரீச்சம் பழம் ஆகியவற்றை கரகரப்பாக அரைக்கவும். வேர்க்கடலையை ஊற வைத்து, அதனுடன் பால் சேர்த்து விழுதாக அரைத்து, குக்கரில் பத்து நிமிடங்கள் வேக வைக்கவும். பிறகு, அதில் அரைத்த முந்திரி, பாதாம், பேரீச்சையை சேர்த்து கலந்து விடவும்.

இதனை, அடிகனமான வாணலியில் போட்டு மிதமானத் தணலில் கிளறவும். விழுது கொஞ்சம் கண்டி வரும்போது, வறுத்த கடலை மாவை, கட்டி தட்டாமல் போட்டு, நன்றாகக் கலந்து விடவும். அதன் பிறகு சீனியைப் போட்டு அது நன்றாகக் கரைந்தவுடன் நெய்யைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி அல்வா பதம் வரும் வரை கிளறவும். அதனுடன், வறுத்த முந்திரி, ஏலக்காய்ப் பொடி சேர்த்து இறக்கவும். சுவையான அல்வா தயார்.

- ஆர். அனிதா, பட்டுக்கோட்டை.

பிரசுரத்துக்கு...
பனீர் ஜாமூன்

தேவையான பொருள்கள் :

சர்க்கரை இல்லாத கோவா - 100 கிராம்,
பனீர் - 100 கிராம்,
மைதா - 25 கிராம்,
சர்க்கரை - 400 கிராம்,
சோடா - 1 சிட்டிகை.


செய்முறை :

முதலில் பனீரை நன்றாக உதிர்ந்துக் கொண்டு, சர்க்கரை இல்லாத கோவாவுடன் சேர்த்து நன்றாகப் பிசையவும். அத்துடன் மைதா, 1 சிட்டிகை சோடாவும் சேர்த்துப் பிசையவும். மிருதுவாக ஆனதும் ஒரு அரைமணி நேரம் மூடி வைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் 2 தம்ளர் தண்ணீர் ஊற்றி, அதில் சர்க்கரையைச் சேர்த்து அடுப்பில் வைக்கவும். அதில் ஒரு ஸ்பூன் பாலை விட்டால், சர்க்கரையில் இருக்கும் அழுக்கு மேலே மிதந்து வரும். அந்த அழுக்கை எடுத்துவிட்டு, வடிகட்டினால் சுத்தமான ஜீரா கிடைக்கும். ஜீரா நன்றாகக் கொதித்து கையில் தொட்டால் 'பிசுபிசு' என்ற பதம் வந்ததும் இறக்கி மூடி வைக்கவும்.

பின் தயாரித்து வைத்துள்ள பனீர் கோவாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டவும். அடுப்பில் வாணலியை வைத்து அதில் எண்ணெயும் 4 ஸ்பூன் நெய்யும் சேர்த்துக் காயவிடவும். மிதமானத் தீயில் ஜாமூன்களைப் பொரித்து ஜீராவில் போடவும். நாவுக்குச் சுவையான ஸ்பெஷல் பனீர் ஜாமூன் ரெடி.

- பி. சந்திரலேகா, ஹைதராபாத்.




ஆஹா 50!

வாழைப் பழத்தை ப்ரிட்ஜில் வைத்தால் கறுப்பாகி விடும். வெளியே வைத்தால் வாடிவிடும். கேரி பேக்கில் போட்டு சுவற்றில் ஆணியில் தொங்கவிட்டால் நாலைந்து நாட்கள் வரை ப்ரெஷ்ஷாக இருக்கும்.

– மீனாக்ஷி பத்மநாபன்,
திருநெல்வேலி.


தீபாவளி ஸ்பெஷல் விருந்து
தயாராகிறது!
அனுராதா ரமணன் எழுதும்
உள்ளம் தொட்டவன்!
சிறப்புச் சிறுகதை
நா இனிக்க இனிப்பு வகைகள்
மொறுமொறுக்க கார வகைகள்
அத்துடன்...முழுக்க முழுக்க உங்கள் கைவண்ணத்தில்
உருவாகும் ஜகஜோரான தீபாவளிச் சிறப்பிதழை
சுவைக்கத் தயாரா?
3
புத்தகங்கள்
அதிக அதிகப் பக்கங்கள்
விலை ரூ.20/-
(இந்த இதழ் மட்டும்)
உடனே தீபாவளி
விஷயங்களை
எழுதிக் குவியுங்க!
பலே பருப்பு 64!
இலவச
இணைப்புடன்...


ஐடியா





இம்முறை கொலு சற்று மாறுதலாக அமைக்க எண்ணினேன். மெகா சைஸ் மண் அகலை வாங்கினேன். அதன் மேற்புறம் மலைக் குகை போன்று தெர்மகோல் துண்டுகளால் அமைத்து, செயற்கைப் புற்கள், தங்கமணி, மலர்களை ஒட்டினேன். அகலுக்கு நடுவே தேவியரை இருத்தி, அகல் விளக்கை ஏற்றினேன். கொலுவைப் பார்க்க வந்த அனைவரும் 'தேவியர் விளக்கு' என்று புதுப் பெயரைச் சூட்டி, பாராட்டியும் வணங்கியும் சென்றார்கள்.

- செ. கலைவாணி, மேட்டூர் அணை




ஒரே அளவிலான வளையல்களை, சாட்டின் ரிப்பனால் கோத்து, 'வளையல் மாலை' செய்திருக்கிறேன். இதை கொலுப்படியின் பக்கங்களில், சரம் சரமாகத் தொங்கவிடுங்கள், அழகாக இருக்கும்.

- சங்கரி வெங்கட், பெருங்களத்தூர்





அம்மணீஸ்!



பொதுவாகவே, எங்கள் வீட்டுக் கொலுவில், நானே தயாரித்த பொம்மைகள்தான் அதிக பாராட்டைப் பெறும். என் கற்பனையில் உருவான, வாழைத்தார், மலைப் பாம்பு, கரடி பொம்மை போன்றவற்றைப் பாருங்க! தத்ரூபமா செஞ்சிருக்கேனா?

- க. பிரேமகுமாரி,
சென்னை - 53.



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் மூத்த அர்ச்சகரான என் கணவர் தங்கபட்டர் அமெரிக்க, நியூஜெர்ஸி நகரின் வரசித்தி விநாயகர் கோயிலில் அர்ச்சகர் பொறுப்பேற்றுச் சென்றார். ஒருசில ஆண்டுகளில் நானும் அவருக்கு உதவியாகச் சென்றேன்.

நவராத்திரியை கலை விழாவாகவும், பக்திப் பண்டிகையாகவும் அம்பிகை ஆராதனையாகவும் மகிழ்ந்து கொண்டாடிய என்னால் அமெரிக்காவில் அமரிக்கையாக இருக்க முடியுமா...?

கையோடு கொண்டு சென்றிருந்த துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதி விக்ரகங்களும், லலிதாம்பாள் சோபனப் புத்தகமும் கைகொடுக்க, கொலுப்படி அமைக்கத் திட்டமிட்டேன். ஆனால் பொம்மைகள்?

''இங்கெல்லாம் அசாத்திய விலை சொல்வார்கள்!'' என்று என் கணவர் மறுத்து விட்டார். ஆனால் கோயிலுக்கு வந்த பெண்களின் உதவியுடன், கேரேஜ் சேல் நடக்குமிடங்களிலிருந்து மலிவான விலையில் பொம்மைகள் வாங்கி வந்தேன்.

அப்புறமென்ன? அம்பிகையருடன் அமெரிக்க பொம்மைகளும் அமர்ந்திருக்க, மனநிறைவுடன் நவராத்திரியைக் கொண்டாடி மகிழ்ந்தேன்.

– ஜெகதாம்பாள், யு.எஸ்.ஏ.

கிடைக்குமா கலை வடிவம்?

மாமல்லபுரம் சென்றிருந்தேன். நம் சிற்பக் கலையின் பெருமைகளை, அயல் நாட்டு நண்பர்களுக்கு என்றென்றும் நினைவூட்டும்படியான பரிசொன்றை அளிக்க எண்ணினேன். அர்ஜுனன் தவம், கடற்கரைக் கோயில் போன்றவற்றின் மினியேச்சர் சிற்பங்கள் கிடைக்குமா என்று அங்கிருந்த கடைகளிலெல்லாம் தேடினேன், தேடினேன், தேடிக் கொண்டேயிருந்தேன். கிடைக்கவில்லை. பிரத்யேகமாக செய்து தருவார்களா என்று விசாரித்தால், நிஜ யானை விலை சொன்னார்கள்!

ஒரிஸ்ஸாவின் 'கொனார்க்' சக்கரம், பூரி ஜகந்நாதர் கோயில், மதுரை மீனாக்ஷி கோயில், ஆக்ராவின் தாஜ்மஹால் போல, நமது மாமல்லபுரத்துச் சிற்பங்களையும் சிறிய வடிவில் செய்து விற்கலாமே! சுற்றுலாத் துறையினர் கவனம் செலுத்துவார்களா?

– சுமதி சுப்ரமணியன், நவி மும்பை.



பாரம்பரியம் | பண்டிகை ஸ்பெஷல் - 2

ஆண்களுக்கு நன்றி!



நவராத்திரி கொலு என்றாலே பெண்களுக்கு மகிழ்ச்சிதான். பக்தியும் உற்சாகமும் கலந்த பண்டிகை.

சுமார் ஐம்பது வருடங்களுக்கும் மேலாக கொலு வைத்து மகிழ்பவள் நான். எழுபத்தாறு வயதாகும் நான் திருச்சியைச் சேர்ந்தவள். 1940ல் திருமணமாகி நேரே போனது ஹௌரா! அங்கும் கிட்டத் தட்ட நம் தமிழ்நாட்டைப் போலவே ஏகப் பட்ட தமிழ்க் குடித்தனங்கள். பண்டிகைகள், விழாக்கள் எல்லாமே தமிழ்நாட்டையும் விட விமர்சையாக, பாரம்பர்யம் நழுவாமல் கொண்டாடுவோம்.

ஹௌரா ராமகிருஷ்ணபூர் லேனில் இருந்த எங்கள் வீட்டுக் கொலு மிக பிரசித்தம். ஒரு ரூம் பூரா கொலு பொம்மைகள்தான். பதினொறு 11 படி கட்டுவோம். பரண் முழுக்க ட்ரங்க் பெட்டிகளில் பொம்மைகள் வருடத்திற்கு ஒருமுறை 10 நாட்களுக்கு இப் பொம்மைகள் கீழிறங்கும். பொம்மைகளைப் பார்த்தவுடனேயே உடலில் பரவசம் தோன்றும்.

மகாளயத்தன்று பாலிகஞ்சில் இருக்கும் என் தம்பி ஜெயராமன் (இப்போது வயது 72) ஹௌரா வந்து விடுவான். பார்த்துப் பார்த்து கொலு பொம்மைகள் அடுக்குவான். ஒவ்வொரு படி வைத்தவுட னும் வாசலுக்கு ஓடி திரும்பவும் புதிதாகப் பார்ப்பது போல் பார்த்து மாற்றி...மகிழ்வான். பெரிய்ய பெரிய்ய் யானை பொம்மைகள், கன்றுடன் பசு, ஆஞ்சநேயர், சிவன், ஆண்டாள், பிள்ளையார், தசாவதார பொம்மைகள்... என பார்த்தாலே அவ்வளவு நன்றாக இருக்கும். மரப்பாச்சி பொம்மைகளுக்குத்தான் முதலிடம். மர பொம்மைகள், மண் பொம்மைகள், பீங்கான் பொம்மைகள், துணியினாலான பொம்மைகள்... என அடுக்குவான்.

மிகப் பெரிய பார்க் கட்டி நடுவில் தெப்பக்குளம், ஒரு பக்கம் கிராம வாழ்க்கை - விவசாயி, ஏர், மண்கலம் என்றால் இன்னொரு பக்கம் நகர வாழ்க்கை. விமான தளம் கூட உண்டு. என் மூத்த மகன்

ரூ.150 பரிசு பெறும் பெட்டிக் கதை



இடைவெளி!

''அம்மா வித்யா பேசறேன். உங்க பிள்ளை தக்காளி ரசம் வைக்கச் சொல்றார். எப்படிப் பண்ணணும்னு கொஞ்சம் சொல்லுங்களேன் ப்ளீஸ்'' என்று கெஞ்சினாள் புதுசாக மணமாகி அமெரிக்காவில் தனிக் குடித்தனம் செய்யும் மருமகள்.

''ஹூம்.. அவ அம்மா எப்படி வளர்த்திருக்கா?'' என்று மனசுக்குள் முனகிக் கொண்டே ரெசிபியை சொல்லி வைத்தாள். நாற்காலியில் அமரப் போனவளை, ரூமில் படுத்திருந்த மாமியார் கூப்பிட்டார். ''உடம்பெல்லாம் ஒரே வலி கஷாயம் போடுன்னு சொன்னேனே செய்துட்டியா?''

''அது எப்படிப் போடணும்னு தெரியலை. கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்றவளைப் பார்த்து, ''இந்த வயதிலும் ஒன்றுமே தெரியாமல் எப்படி இருக்கிறாள் பார்?'' என்று மனசுக்குள் முணுமுணுத்தவாறே கஷாயம் காய்ச்சும் முறையைச் சொல்ல ஆரம்பித்தாள் அந்த மூதாட்டி!

- கே.எஸ். கிருஷ்ணவேணி, கும்பகோணம்.

ஜெயராமனின் பங்கு மகத்தானது. பொறுமையாக நறுவிசாக பார்க் கட்டுவான்.

என் கணவர் டூர் செல்லும்போது அங்கிருந்து பறவைகள் செட், மிருகங்கள் செட், வாகனங்கள் செட்.. என ஆசை ஆசையாக வாங்கி வருவார். தாம்பூலத்தில் வைக்கும் குங்குமச் சிமிழ், சீப்பு எல்லாம் டிஸைன் டிசைனாக படாபஜாரிலிருந்து வாங்கிக் குவிப்பார். ஒன்பது நாட்கள் செய்யும் சுண்டல் சாமான்களும் கிலோ கணக்கில் வாங்கி வந்து ''நிறையச் செய்து எல்லோருக்கும் கொடு'' என அன்புக் கட்டளை போட்டு விடுவார்.

சுண்டல் பெரிய வாணலியில்தான் செய்வது பழக்கம். நிமிஷமாகத் தீர்ந்து விடும். சுண்டல் பாக்கெட் என் இளைய மகன் மணி அம்சமாக கட்டிப் போட்டு விடுவான்.

என் மூன்று மகள்களுக்கும் தினம் ஒரு வேஷம் போட்டு விடுவேன். ராதை, ஆண்டாள், கிருஷ்ணர், குறத்தி, காபூலிவாலா என ரோடில் போகும் போது வங்காளிகள் பிரமித்து விடுவார்கள். வங்காளிகளைப் போன்று நட்பு மிக்க இனிமையானவர்களைப் பார்க்க முடியாது. கொலு பார்க்க வருவார்கள். இது என்ன இது என்ன என ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்.

இன்று என் மருமகள்கள் கொலு வைத்து, தினமும் தேவிபாராயணம் சொல்லும்போது, சந்தோஷமாக இருக்கிறது. உடல்நிலை சரியில்லாத நான் அம்பாளைப் படுத்தவாறே தியானிக்கிறேன்.

என் கணவர், என் தம்பி, என் மகன்களைப் பற்றி விவரித்திருக்கிறது எதற்கென்றால் நவராத்திரி பெண்களுக்கான பண்டிகை என்றாலும் ஆண்களின் பங்கு மகத்தானது.

எங்கள் வீட்டு கொலு சிறப்பாக இருந்தது என்றால் அது எங்கள் வீட்டு ஆண்களையே சேரும். எங்கள் வீடு மாத்திரம் அல்ல. அனைவரது வீட்டிலும் ஆண்கள் ஆதாரமாக இருந்தால் எல்லாம் அருமையாகத்தானிருக்கும்.

நவராத்திரி கூட்டு விழா குடும்ப விழா

- பார்வதி கந்தசாமி, கொல்கத்தா.





என்ன ஸ்பெஷல்?

''ஏண்டி, இன்னிக்கு என்ன டிபன் பண்ணி வைக்கப் போறே? சாயங்காலம் ஆபீஸிலிருந்து வர்ற என் பிள்ளைக்கு'' மாமியார் புலம்பல்.

''கவலைப்படாதீங்க. அவருக்குப் பிடிச்ச சப்பாத்தியும் நவரத்ன சன்னாவும் ரெடியாயிடும்.''

''கடலையே வாங்கலை, அப்புறம் எப்படி?''

''அது என் கவலை. நீங்க பேசாம போய் டீ.வி. சீரியலைப் பாங்க'' 'படபட' என்று பேசியபடி வெளியே கிளம்பினாள் பவானி.

அன்று, அவளை பல பேர் வீட்டில் நவராத்திரி கொலுத் தாம்பூலம் வாங்க அழைத்திருந்தார்கள்.

முதல் தெருவில் உள்ள வீட்டுக்கு நுழைந்தாள். ''வாடியம்மா, நல்ல நேரத்துக்கு வந்தே! ஒரு பாட்டு பாடு. அதுக்குள்ளே நான் தாம்பூலம் ரெடி பண்றேன்'' என்றார் கல்யாணி.

பவானி பாடி முடிக்கவும் வெற்றிலைப் பாக்கு, பழம் ரவிக்கையுடன் அவள் முன்னால் வந்தாள் மாமி. அதை வாங்கிப் பையில் போட்டவளிடம், ''இன்னிக்கு எனக்கு உடம்பு முடியலை. அதனாலே வெறும் வாழைப்பழம்தான் கொலு பண்டம்.''

''அதனால் என்ன மாமி?'' என்றபடி அடுத்தத் தெரு வீட்டுக்குச் சென்றாள். அங்கு ஆப்பிள்தான் கொலு பண்டம். இன்னும் இரண்டு வீட்டுக்குச் சென்றாள். அங்கேயும் திராட்சையும், சாத்துக்குடியும்தான் கொலு பண்டம். எல்லாவற்றையும் வாங்கி அலுப்புடன் வீடு திரும்பினாள். அவள் கணவன் சுந்தரமும் ஆபீஸிலிருந்து வந்து சேர்ந்தான். காப்பியை அவனிடம் நீட்டியபடி, ''கொஞ்சம் பொறுங்க. உப்புமா கிளறித் தரேன்'' என்றாள் பவானி.

''சப்பாத்தியும், நவரத்தின சன்னாவும் பண்றதா சொன்னியே என்ன ஆச்சு?'' நக்கலாகக் கேட்டாள் மாமியார்.

''எல்லாம் உங்க பிள்ளையோட அதிர்ஷ்டம். இன்னைக்குப் பார்த்து ஒரு வீட்டிலேயும் சுண்டலே செய்யலை. நான் விதவிதமாய் சுண்டல் கிடைக்கும். அதை வைச்சு சன்னா பண்ணலாம்னு நினைச்சா எல்லாருக்குமேவா உடம்பு முடியாமப் போயிடும்? வர வர கொலுவிலே சுண்டலுக்குக் கூட மரியாதை இல்லாம போச்சு.'' புலம்பிய பவானியைப் பார்த்துச் சிரித்தான் சுந்தரம்.

''இன்னைக்கு என்ன கொலு பண்டம் தரப் போறே?'' என்ற மாமியாரிடம், ''ம்... ஞானப்பழம்'' என்று கடுப்பாகக் கூறிவிட்டு உள்ளே சென்றாள் பவானி!

- கே. கீதா, சேலையூர்.

உன் கையில் உலகம் - 8

முன்பெல்லாம் ஒரு குடும்பத்தில் பத்து பதினைந்து நபர்கள் இருப்பார்கள். வசிக்கும் வீடும் பெரியதாக இருக்கும். ஆனால் இன்று குடும்பங்களும் சுருங்கி விட்டன. வீடும் புறாக்கூண்டாகி விட்டது. இந்த நிலையில் அழகியலும், பயன்பாடும் இணைந்து செயல்படும் வகையில் சிறிய வீட்டில் எந்த வகையில் இட நிர்வாகம் செய்யலாம் என டிப்ஸ் தருகிறார் இன்டீரியர் டெகரேஷனில் ஆர்வமுள்ள அபர்ணா கார்த்திகேயன்.



★ தாத்தா காலத்து கட்டில், பாட்டி காலத்துப் பல்லாங்குழி ஆகியவற்றைப் பத்திரப்படுத்தும் ஆர்வம் நமக்கு எப்போதும் உண்டு. அதற்குக் காரணம் அவற்றின் அழகியலும், பழமைத் தன்மையும்தான். ஆனால் அதற்கென்று எல்லாப் பழைய பொருட்களையும் தூக்கிப் பரண் மீது வைக்க வேண்டியதில்லை. எந்தப் பொருள் நமக்குத் தொடர்ந்து ஆறு மாதத்துக்குள் பயன்படுத்தாத நிலையில் இருக்கிறதோ அந்தப் பொருளை தாட்சண்யம் இன்றி தூக்கியெறிவதுதான் புத்திசாலித்தனம்.

★ வீட்டைக் கட்டும்போது எல்லா அறைகளிலும் சகட்டு மேனிக்குப் பரண்களைக் கட்டி விடுகிறோம். பழைய பெட்டிகள், டி.வி., ஃப்ரிட்ஜ், வாஷிங் மெஷின், கம்ப்யூட்டர் ஆகியவற்றின் பேக்கிங் அட்டைப் பெட்டிகளைத் தவிர கொலுப் படி, கொலு பொம்மைப் பெட்டி என்று பலவற்றைப் பரணில் போடுகிறோம். இதனால் கரப்பான்பூச்சிகள், பல்லிகள், அணில்கள் பரண்களில் உலாவுகின்றன.

ஏதாவது ஓர் அறையில் பரண் வையுங்கள். தேவையில்லாத சாமான்களும் குறையும். பரணும் சுத்தமாக இருக்கும். அந்தக் காலத்து மரப்படிகள் போலில்லாமல் இப்போது மடித்துக் கையோடு எடுத்துப் போகும் அளவுக்குக் கொலுப் படிகள் வந்து விட்டன. கொலு முடிந்ததும் பிள்ளைகளின் புத்தக அலமாரியாக அவற்றை உபயோகித்துக் கொள்ளலாம்.

★ மொட்டை மாடியில் ஓர் அறையை மட்டும் தயவுசெய்து போடாதீர்கள். காலப்போக்கில் அந்த அறை வேண்டாத குப்பைகளின் கிடங்காகி விடும்.



★ படுக்கை அறையில் கட்டிலுக்குக் கீழேயே டிராயர்கள் வைத்துச் செய்தால் அவற்றில் பெட்ஷீட், தலையணை போன்றவற்றை வைத்துக் கொள்ளலாம். தனி இடம் தேவையில்லை. இடம் மிச்சம்.

★ படுக்கையறையில் உள்ள கப்போர்டுகளில் உங்கள் ஆடைகளை அடுக்கி வைக்காமல் ஹேங்கரில் தொங்கவிடும்படியான ஏற்பாட்டைச் செய்யுங்கள். இடமும் மிச்சமாகும், அவசரத்துக்கு கலையாமல் எடுக்க முடியும்.

★ அந்தக் காலத்தில் கள்ளிப் பெட்டி



கட்டில்கள்) பயன்படுத்தினால் இடம் மிச்சமாகும்.

★ படுக்கையறையில் ஏதாவது ஓர் மூலையில் நகர்த்தக்கூடிய மூடியுடன் கூடிய கீழ்த்தளம் அமைத்து, அதில் குளிர்கால ஆடைகள், தலையணைகள், போர்வை களைப் பத்திரப்படுத்தலாம்.

★ கிச்சனில் நிறைய அலமாரிகளை வையுங்கள்; நிறையப் பொருள்களை வைக்கலாம். ஒன்றுக்குள் ஒன்றாகப் போட்டு வைக்கும் வகையில் பாத் திரங்களை உபயோகப்படுத்தினால் இடம் மிச்சமாகும்.



தாத்தாவின் பீரோ: பாட்டியின் பல்லாங்குழி!

என்று பெரிய மரப்பெட்டி வைத்திருப்பார் கள். நல்ல வேலைப்பாடுகளுடன் உள்ள அந்தப் பெட்டியைக் குட்டிச் சமையல் அறையில் வைக்க முடியாது. எனவே அதை ஹாலுக்கு மாற்றுங்கள். அடிக்கடி வார்னிஷ் போட்டு பளபள என்று வையுங்கள். அதன் மேல் அன்றாடப் பத்திரிகைகள், புத்தகங் களை வைத்துக் கொள்ளலாம். பெட்டியின் நடுவில், மேலே அழகிய மலர்க் கொத்தை வைத்தால் ஹாலுக்கே அழகு கூடுமே!

★ மாடிப்படிக்குக் கீழே இருக்கும் இடத்தை டீ.வி. வைக்கவோ, பாத்ரூம் கட் டவோ பயன்படுத்தலாம்.

★ இரண்டு குழந்தைகள் இருந்தால், 'டூ டயர் காட்' (ஒன்றன் மீது ஒன்று இருக்கும்

★ அபர்ணா கார்த்திகேயன்



★ அடுப்புக்குக் கீழேயே இழுக்கும் அலமாரிகள் வைத்து விடுங்கள். அப்படி டிராயர்களை அமைக்கும்போது, ஓர் அடுக்கு தம்ளர்கள், அடுத்த அடுக்கு கரண்டிகள், ஸ்பூன்கள் வைப்பதற்கு ஏற்ற வகையில் வடி வமைக்கவும்.

★ அரிசி உட்பட மளிகை சாமான்களை அதிகப்படியாக வாங்கி, மாதக்கணக்கில் வைத்துக் கொள்ளும் பழக்கத்தை விடுங்கள்.

★ சமையலறையின் தொட் டியின் கீழேயே பலகை அமைத்து கதவுடன் சேர்ந்த அலமாரி செய்ய முடியும்.

★ கார் நிற்கும் இடத்துக்குக் கீழே செப்டிக் டாங்க் அல்லது குடிநீர் சம்ப் வைக்கலாம்.

- ஸ்ரீநி

சமூக சேவை...

ஆபத்துக்கு 108!



அவசர போலீஸ் உதவி, தீயணைப்புப் படை, ஆம்புலன்ஸ் இவற்றுக்காக இனி நீங்கள் தனித்தனியாக 100, 101 என்று 'டயல்' செய்ய வேண்டாம். '108' டயல் செய்தால் போதும்... கொஞ்சம் பொறுங்க... அவசரப் படறீங்களே.. இந்த வசதி தமிழ்நாட்டுக்கு வர இன்னும் சில மாதங்கள் ஆகலாம். ஆந்திராவில் சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திரா, ராயலசீமா, தெலுங்கானா ஆகிய மாகாணங்களில் 50 இடங்களிலும், சென்ற மாதம் குஜராத் மாநிலத்தில், அகமதாபாத், காந்தி நகர் போன்ற இடங்களிலும் இந்த வசதி தொடங்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகிறது.


எம்.டெக்கும், ஐ.ஐ.எம்., அகமதாபாத்தில் எம்.பி.ஏ.வும் முடித்து 20 ஆண்டுகளுக்கு மேலாக, பல நிறுவனங்களில், (பன்னாட்டு நிறுவனம் உள்பட) வேலை செய்து வந்த வெங்கட் சங்கவல்லியை 2005-ஆம் ஆண்டு 'சத்யம் கம்ப்யூட்டர்ஸ்' சேர்மன் ராமலிங்க ராஜு சென்னையில் ஒரு விழாவில் சந்தித்தார். உடனே இலட்சக்கணக்கானோருக்கு சேவை செய்ய எண்ணி தன்னுடைய மற்றும் இதர குடும்பத்தினரின் சொத்து, சொந்தப் பணம் இவற்றில் பல கோடிகளை முதல் போட்டு, ஒரு நிறுவனம் ஆரம்பித்து அதன் இயக்குநராக வெங்கட்டை நியமித்தார். இதன் பயனாக உருவானதுதான் Emergency Management & Research Institution (EMRI) என்னும் என்.ஜி.ஓ. நிறுவனம்.

அமெரிக்காவில் 911-ஐ டயல் செய்தால் போலீஸ், மருத்துவ வசதி, ஆம்புலன்ஸ் வருவதைப் போல இந்தியாவில் '108' டயல் செய்தால், 15-20 நிமிடங்களுக்குள் உங்கள் வீட்டு வாசலில் 'ஆம்புலன்ஸ்' வண்டி நிற்கும். ஆந்திராவில் சுமார் 85 ஆம்புலன்ஸ்களும், குஜராத்தில் ஆரம்பக் கட்டமாக 10 ஆம்புலன்ஸ்களும் மக்களின் 24 மணி சேவைக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆம்புலன்ஸில் குளிர்சாதன வசதி, ஐசியு, ஆக்ஸிஜன் சிலிண்டர், சக்கர நாற்காலிகள், கயிறுகள், பிளாஸ்டிக் கையுறைகள், மற்றும் அத்தியாவசியமான உபகரணங்கள் அனைத்தும் உள்ளன.

தங்கள் சேவை மூலம் இந்த EMRI நிறுவனம் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஏறத்தாழ 7000-க்கும் மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றியுள்ளது. இதுவரை இந்த ஆம்புலன்ஸிலேயே 60க்கும் மேற்பட்ட பிரசவங்களும் பார்க்கப்பட்டுள்ளன.

நல்ல 'நெட்வர்க்' வசதி உள்ளதால் '108'ல் யார் கூப்பிட்டாலும், மற்றும் டாக்டர் நோயாளிக்கோ, அவர்களின் உறவினர்களுக்கோ, உடனே என்னென்ன செய்ய வேண்டும் எனக் கூறும் அனைத்தும் கம்ப்யூட்டரில் பதிவாகிவிடுகின்றன. எப்பொழுதும் ஒவ்வோர் ஆம்புலன்ஸிலும் 4 டாக்டர்கள் காத்திருப்பார்கள். ஆம்புலன்ஸில் மேற்கொள்ளும் அனைத்து சிகிச்சைகளும் இலவசம்.

''இந்தச் சேவையை சிறிது சிறிதாக அதிகரித்து 2011-ஆம் ஆண்டுக்குள் இது இந்தியா முழுக்க இயங்கி இலட்சக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றும்'' என EMRI தலைவர் வெங்கட் கூறுகிறார். இதன் மூலம் 50,000 பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.



மேலும், சாலை விபத்து, தீ விபத்து, தற்கொலை முயற்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை, ''இது போலீஸ் கேஸ்'' எனக் கூறி மருத்துவமனையில் அனுமதிக்க மறுப்பார்கள். ஆனால் EMRI அந்தந்த மாநில அரசாங்கத்தின் அனுமதியுடனும், கூட்டுறவுடனும் இந்த அமைப்பை நடத்துவதால் மருத்துவமனைகள் நோயாளிகளை நிராகரிப்பதில்லை.

ஆந்திராவில் பாழுங்கிணற்றில் தவறி விழுந்த காவலாளி ஒருவர், ஏழு நாட்கள் அங்கேயே மண்ணைத் தின்று, சில சமயம் தன் சிறுநீரையே குடித்துக் கொண்டிருந்தார். இவரைத் தற்செயலாகப் பார்த்த ஒரு சிறுவன், '108'ஐ டயல் செய்ததில், EMRI அவரைக் காப்பாற்றிற்று.

இதுபோல எத்தனையோ கேஸ்கள், சவாலான அனுபவங்கள் என தன் பணியைச் செய்து வரும் EMRI அமைப்பு, இந்தியா முழுக்க ஏற்பட்டால் பெரிதும் உதவியாக இருக்கும்!

- ஆர். பாண்டுரங்கன்,
அகமதாபாத்.

உருமாறும் சுண்டல்!

அதிக அளவில் மீந்து போன கடலைப்பருப்பு, பட்டாணி, பயத்தம் பருப்பு சுண்டல்களை மிக்ஸியில் ஒன்றிரண்டாக அரைத்து திட்டமாக அரிசிமாவு, கடலைமாவு சேர்த்து பச்சை மிளகாய், கறிவேப்பிலை சேர்த்துப் பிசைந்து எண்ணையில், பக்கோடாக்களாகப் போட்டு எடுக்கலாம். மீந்த பண்டம் ருசியாக உருமாறும்.

- சீனு சந்திரா, சென்னை -4



பள்ளிகளில், கடைசி வரிசைக் குழந்தைகளுக்கு முன்வரிசையில் உட்காரும் பிள்ளைகளால் கரும்பலகை மறைக்கப்படாமல் இருக்க பெஞ்சுகளின் உயரத்தில் முதலிலிருந்து கடைசி வரிசை வரை படிப்படியான உயர வித்தியாசம் வைத்தால் வசதியாக இருக்கும். புதிதாகக் கட்டப்படும் வகுப்புகளில் தரையிலேயே படிப்படியான அமைப்புகளைக் கொண்டு வரலாம்.

-உமா மகேஸ்வரி சங்கர், சிட்லபாக்கம்

விளக்கு ஏற்றும்போது ''தீபதேவி, மஹாதேவி, சுபம் பவதுமே சதா'' என்று சொல்லி ஏற்றினால் எல்லா மங்களங்களும் ஏற்படும்.

- என்.ஜெயலக்ஷ்மி,
திருவான்மியூர்-41

"முத்தம் கொடுக்கணும்"

உமா கல்யாணி

திருச்செந்தூரிலிருந்து புறப்படும் போது இருந்த உற்சாகம் இப்போது கண்காணாமல் போய் விட்டிருந்தது.

தாத்தாவின் வீட்டு முன்பு ஆட்டோ வந்து நின்ற போது, தாத்தா, பாட்டி, சித்தப்பா எல்லோரும் ஆவலாய் வெளியே ஓடோடி வந்து அன்பாக வரவேற்றதோடு சரி.

அந்த நிமிடத்தில் பொங்கிய மகிழ்வை அனுபவித்ததோடு சரி.

அப்புறம் இல்லை.

எங்கோ துள்ளிக் குதித்தோடிப் போய் விட்டன உற்சாகம், மகிழ்வு, பூரிப்பு எல்லாமே!

இப்போது வெறுமையின் மத்தியில் சப்பணமிட்டுச் சோகமாய் அமர்ந்திருக்கிறான் வருண்.

சந்தோஷச் சிம்மாதனத்தில் கொலு ஏறப் போவது போல்தான் புறப்படும் போது இருந்தான்.

இங்கே, ஆழ்வார்குறிச்சியில் வந்து இறங்கிய பிறகு முழுமையாய் மாற்றம்.

"வாய்யா வருண்!'' என்று, வாய் நிறைய வரவேற்றதோடு, தாத்தா ஒதுங்கிக் கொண்டு விட்டார். முன்பென்றால் தூக்கித் தோள் மீது வைத்துக் கொண்டாடுவாரே!

''என் தங்கக் கட்டி வந்திருச்சே!'' என்று பாட்டி வரவேற்று, கன்னத்தில் கிள்ளி விட்டு, அம்மாவின் பின்னால் போய் விட்டாள்.

முன்பென்றால், இவன் வேண்டாம் வேண்டாம் என்றாலும் இழுத்து அணைத்து, 'இச் இச்' என்று முத்தம் கொடுத்து அன்புப் பெருக்கினால் திணற அடிக்கிற பாட்டிதான்.

இப்போது ஏதோ ஒப்புக்கு வரவேற்பது போல் வரவேற்றுவிட்டு உள்ளே போய் விட்டாள்.

''ஹாய் வருண் பையா! ஹௌ ஆர் யு டா?'' என்று வரவேற்ற சித்தப்பாவிடமும் பழைய அன்பு தென்படாதது போல்தான் வருண் உணர்ந்தான்.

இல்லை எனில் தாத்தாவுக்குப் போட்டியாகத் தூக்கி, முத்தமிட்டுச் சுழற்றுவாரே!

இன்று வரவேற்றதுடன் நின்று விட்டாரே!

ஏதோ தலை போகிற அவசரம் இருப்பது போல், ஆட்டோ சார்ஜைக் கொடுத்த தாத்தா 'சட்' என்று வீட்டினுள் நுழைந்து விட்டார்.

அவர் மட்டுமா?

எல்லோருமேதான்.

இவனுடைய அம்மா லலிதா



கூட, வருண் வரு
கிறானா இல்லையா
என்பதைக் கூடக் கவனிக்
காமல் அவர்கள் பின்னாடியே
புயல் வேகத்தில் அல்லவா
உள்ளே நுழைந்து விட்டாள்?

வருண் தனித்து நின்றான்.

இவனை மறந்து விட்டார்களா?

இதை வருணினால் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

எல்லோரும் உள்ளே போன பிறகு, தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தான்.

ஐந்து வயதும் நிரம்பாத சிறு பாலகன். அன்பின் கதகதப்பை எப்போதும் அனு

பவிக்க எண்ணுகின்ற சின்னப் பையன்.

இதுவரையிலும் அனுபவித்தவன் அல்லவா!

அதனால்தான், இப்போது கிடைக்காமற் போனதும் ஏக்கம். மனதுள் தவிப்பு.

உள்ளே போயிருந்த அனைவரும் தொட்டிலைச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள்.

தொட்டிலில் சரண்யா. அறுபத்தொரு நாள் குழந்தை. சித்தப்பாவின் குழந்தை. இவளுக்காகத்தான் தன்னைப் புறக்கணிக்கிறார்களா?

கோபத்தோடு எண்ணினான்.

சித்தியின் மீது அதிக கோபம் பிறந்தது.

இப்படி சரண்யாவை அவள் பெற்றுக் கொடுத்ததால் அல்லவா, தன்னையே மையமாக்கி அன்பைச் சுழற்றி வீசிக் கொண்டிருந்தவர்கள் திடுமென்று கட்சி மாறி விட்டிருக்கிறார்கள்.

சரண்யாவைச் சூழ்ந்து கொண்டு, அவளிடமே விளையாடுகிறார்கள்.

இந்தச் சித்தி கூட தன்பக்கம் திரும்பவில்லையே!

மகாராணி போலக் கட்டிலில் அல்லவா உட்கார்ந்து, சிரித்தபடி இருக்கிறாள்.

முன்பெல்லாம், 'வருண் கண்ணா, வருண் கண்ணா' என்று கொஞ்சுகிறவள்தான் சித்தி.

◆ தமிழ் ஐயர், ஸ்ரீவத்ஸ, பிரஹசரணம், ரோஹிணி 4, 29, எம்.பி.ஏ., சென்னையில் தனியார் பணி, ரூ. 15,000/- படித்த குடும்பப்பாங்கான சென்னையில் பணியிலுள்ள/மாற்றலாகி வரக்கூடிய பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். 1-7க்குள் லக்னம், ராகு-கேது மற்ற கிரஹங்கள் உள்ள ஜாதகம் வேண்டும். தொடர்பு கொள்ளவும். 04322-228512. என். கோபாலகிருஷ்ணன், 2976, கீழ 3ம் வீதி, புதுக்கோட்டை - 622001.

◆ ஐயர், வடமாள், கௌண்டன்யம், புனர்பூசம் 2ம் பாதம், 32/எம்.எஸ்ஸி., பி.எட்., சிவப்பு, அரசு ஆசிரியர் பணி, ரூ. 20,000/- மாத வருமானம், பட்டதாரி மணமகள் தேவை. போன் : 9442135853 என். முரளி ஐயர், 8/188/1, பிள்ளையார்

பெட்டி எண் விளம்பரங்களுக்கு வரும் கடிதங்கள், அந்தந்த பெட்டி எண் விளம்பரதாரர்களின் விலாசங்களுக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம், 3 தவணைகளில் அனுப்பப்படுகிறது. அவற்றிற்கு பதில் எழுதுவது/எழுதாமல் இருப்பது, அந்தந்த விளம்பரதாரரின் விருப்பமே. இதில் நாங்கள் தலையிட இயலாது.

கோயில் தெரு, தோட்டப்பாளையம், வேலூர் - 632 004.

◆ **Iyengar Vadakalai, Srivathsam, Ashwini, 31/172, ITI, Business, Rs. 50 K/p.m. any Brahmin bride ok. T.N.Veeraraghavan, 8/14, Lenin Nagar 2nd Main Road, Ambattur, Chennai - 53. Ph : 044-2658 2806, 98405-09054.**

◆ **Iyer, Vadamal, Kousigam, Bharani, 1.6.1981, MCA, 6.5', working in CTS, Chennai 50 K. p.m. seeks suitable working/non-working girl. Chennai based prefered. Contact : K.V. Raman, 26, Chidambaraswamy 3rd Street, Mylapore, Chennai - 600 004. Ph : 42109013/ 24990192**

◆ **Iyengar, Vadakalai, Vadhulam, Uthirattadhi, 37/162, B.Com., (MBA), Self employed, Kalai no bar, Seeks bride. K. Raghavan, E-1, Sunil Gothi Apts., 41, Munusamy Salai, K.K.Nagar, Chennai - 78. Ph : 044-2472 7946, 98401-84466.**

◆ **Iyengar, Vadakalai, Bharathwajam, Chithirai, 16/1/74, B.Com., (MBA), Private Job, Kalai no bar, seeks bride. K.Vatsala, Flat 2, LB Castle, Lenin Nagar 3rd Main Road, Ambattur, Chennai - 53. Ph : 6453 7143**

◆ **Iyer, Ashtasahasram, Vadhoolam, Poorattadhi, 39/175/15,000 Graduate, Ltd Company, Coimbatore, seeks bride, Subsect acceptable. V. Sivaramakrishnan, 37/B1 Judge Colony Third Street, Tambaram Sanatorium, Chennai - 600 047. Ph : 9841406638, 044-22235265**

◆ பிராமின் சுக்லயஜுர், வடமாள், ஸ்ரீவத்ஸம், அஸ்வதி, 35, டிஇசிஇ, மாதம் ரூ. 40,000/- தனியார் (எம்.என்.சி.) கோயம்புத்தூர், சொந்த வீடு, கார் உள்ளது. எதிர்பார்ப்புகள் இல்லை. குடும்பப்பாங்கான பெண் தேவை. இராமனாதன், 3/7, கோவிந்தபிள்ளை தெரு, தரமணி, சென்னை - 600 113. போன் : 22431153.

◆ **Iyengar, Vadakalai, Bharathwajam, Thiruvonam, 16.4.74, SSLC, Private job, Own House, any Brahmin ok. seeks bride. A. Narayanan, MIG-116, 9th Cross Street, Nolambur, Chennai - 37. Ph : 044-65907864, 93810-32074.**

◆ **Iyengar, Vadakalai, Bharathwajam, Hastham, 1.5.77, DCT, BDIT, (MBA final semester), ISO Auditor, Own House, Seeks bride A. Narayanan, MIG-116, 9th Cross Street, Nolambur, Chennai - 37. Ph : 65907864, 93810-32074.**

◆ **Iyengar, Vadakalai, Srivatsam, Hastham, 33/160, MA, Business, Rs. 50 K/M, any Brahmin Bride ok. T.N. Veeraraghavan, 8/14, Lenin Nagar, 2nd Main Road, Ambattur, Chennai - 53. Ph : 044-2658 2806. 98405-09054.**

தபால் மூலம் விளம்பரம் அனுப்பும் விளம்பரதாரர்கள், தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி எண் மற்றும் விளம்பர வாசகங்களை தெளிவாகப் புரியும்படி எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

◆ Iyer, Vathima, Bharadwajam, 1977, 160cms, Sadayam 4 padam, B.Sc., MBA, MNC, Rs. 4.15 Lac p.a., seek graduate bride, employed, Subsect accepted. S. Narayanan, Srivari, G-1, No. 20 (old 8) 12th Cross Street, Dhandeeswaram, Velachery, Chennai - 600 042. Ph : 044-65397329, 9884769759

◆ Iyer, Brahacharanam, Bharathwaj, Ayilyam-1, April 76,5.6', MCA, Project Manager, HCL, seeks graduate employed/unemployed Iyer girl, Subsect no bar. K. Sankarasubramaniam, 16/A1 Jagannathapuram 2nd Cross Street, Velacherry, Chennai - 42. Phone : 044-22441419; Cell : 9884022738

◆ ஐயர், பிரஹசரணம், ஹரித கோத்திரம், ஹஸ்தம், 174 செ.மீ., சுத்த ஜாதகம், வயது 29, M.Tech., ISRO திருவனந்தபுரம், சம்பளம் ரூ. 30,000/- படித்த பி.ஜி., டிகிரி/பி.ஈ., பிரஹசரணம்/வடமாள் மணப்பெண் தேவை. தொடர்புக்கு : M. Kalyanam, 58, Bharathi Nagar South, Kumbakonam - 612 001. Ph : 0435-2410445

◆ Iyer, Brahacharanam, Bharatwajam, Krithigai, Mesham, 30, 165, M.Sc., (C.T.) M.S. Senior Lecturer, 20,000/- seeks employed/unemployed bride. M. Lakshmi, 2/56, Ambal Nagar, Cheran Ma Nagar, V.K. (p.o.) Coimbatore - 641 035.

◆ ஆத்ரேய ஆயில்யம், ஆரோக்கியமான 50 வயது, எம்.பி.பி.எஸ்., டாக்டர், விவாகரத்து பெற்றவர். குழந்தை கிடை யாது. நெல்லையில் தனியார் மருத்துவ மனையில் வேலை. பெண்ணின் வயது 38-43. ஐயங்கார் பெண் தேவை. வேலை பார்க்கத் தேவையில்லை. வசதி குறைவு, குறைந்த கல்விப் பெண்களும் ஏற்றுக் கொள்ளப்படும். குழந்தையில் லாத சட்டப்படி விவாகரத்து பெற்ற வர்களும் விண்ணப்பிக்கலாம். போன் : 954639-273662 பெட்டி எண் : 14036

◆ Iyer, Vadamal, Athreya, Avittam, 37/5.9', M.Pharm Ph.D., Asst. Prof. seeks homely girl 28-32. Subsect no bar. Contact : V. Ramamoorthy, 45, Anantha Sai, RBI Colony Katol Road, Nagpur. Ph : 0712-3298640

◆ Wanted bride preferably Brahmin for Tamil Iyer, Vadamal, Naidruvakasyapa, Aswini, 1967, 170cm, B.Sc., Electronics MBA, Contact : Flat 21, Anuradha Complex, Bhaupatil Road, Kirkee, Pune - 411020. Phone : 020-25818702, 9890001857, 09892591857

◆ ஐயர், பிரஹசரணம், ஷடமர்ஷண கோத்திரம், பூசம், 31, 164 செ.மீ., DEEE, IIIE, மாத வருமானம் 80,000/- துபாயில் பணிபுரியும் பையனுக்கு தகுந்த மணப் பெண் தேவை. என்.எஸ். கிருஷ்ணன், 15, செந்தில் நகர், சங்கர் நகர், திருநெல் வேலி. ஃபோன்: 0462-2301888

◆ ஐயங்கார், வடகலை, காசியப, கன்னி 31/165செ.மீ., பி.ஏ., தனியார் 15,000/- மாத வருமானம், தென்கலை, ஐயர் பெண்ணும் சம்மதம். V. Krishna, G-2, Soundarya Apar 7/2 Pak Subramanyam St., Venkatapuram, Ambattur, Chennai - 53, 25982935, 26571023, 9444750455, hindustanfabss@yahoo.co.in

◆ Thengalai, Bharadwaj, Visakam-I, B.Sc., MBA, 34/180, 7.5 L p.a. MNC, Chennai, Tee-totaller seeks graduate decent employed girl. Kalai no bar. N. Parthasarathy, New No. 5 North Avenue, Korattur, Chennai - 600 080.

◆ Iyer, Ashtasahasram, Bharatwajam, Avittam, 1977, 5.7', B.Sc., MCA, working in MNC Software at Dubai

seeks graduate home loving girl. Susbect no bar. R. Kalpana, 37/2, 'Bharat Subiksha', Medimix Avenue, Kalaivanar Colony, Anna Nagar (W) Extn., Chennai - 600 101. Ph : 044-65133202, 09444289900, 0251-2425252.

◆ **Iyer, Vadamal, Sreevatsam, Krithigai, 44 years, 6 feet, fair, good-looking, handsome groom Private Company, (Rs. 15,000) having Own house in Adyar seeks suitable bride. Nandakumar, 2/2, Ramanikripa, 9th Cross Street, Karpagam Gardens, Adyar, Chennai - 600 020. Phone : 24469979.**

◆ Iyer, Brahacharanam, Bharadwajam, Aswathi, Dec. 1975, 177, B.Sc., MCA, Manager I.T. Nationalised Bank, Bangalore, seeks graduate girl send BHP C.S. Krishnan, 20/40, Govindan Road, West Mambalam, Chennai - 600 033. Ph : 044-24850402.

◆ ஐயர், வடமாள், வாதூலம், பூசம், கடக ராசி, 33/5.4' Diploma Mech, சென்னையில் உத்யோகம், 10,000, பெண் தேவை. எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லை. உட்பிரிவுகள் சம்மதம். போன் : 99400 59175 L. Ramasubramanian, 1/184 C, Rudhralaya Flat 18, Sri Perumal Nagar, Nanmangalam, Chennai - 600 117.

◆ ஐயர், வடமாள், சுவாதி, ஸ்ரீவத்ஸம், 30, 5.9', B.Sc., (Maths) (fair), Ashok Leyland Ltd., Chennai, மாதம் 23,000/- மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. வேலைக்குப் போகும் நல்ல குடும்பப் பெண். K.G. Srinivasan, 4/15, Sadayappan Street, Mandavelli, Chennai - 600 028.

◆ Nellai, Saiva Pillai/Saiva Chettiar, Magam, Nov. 1977, 5.4', M.E., 20,000/- Monthly, Engineer Hindustan Aeronautics Limited, Bangalore seeks fair, Beautiful graduate girl working/not working from same sect. Contact with horoscope. S. Sankarakumar, H-17, Thirunagar, Perumalpuram Post, Tirunelveli - 627 007.

◆ **Iyer, Brahacharanam, Kapi Gothram, Uthirattadhi-II, 33/173, BE, MS Comp. Science, Software Engineer, USA seeks Smart, Suitably qualified girl studying/working India/Abroad. Subsect no bar. Contact : S. Rajam, 40A, Pocket 'C', Sidhartha Extn., New Delhi - 110 014. Tel. (011) 2634 5540. email: jananiiyer @hotmail.com**

மணமகன் தேவை

◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், கேட்டை, 25/155 செமீ., எம்.சி.ஏ. படித்த பெண்ணுக்கு, பி.ஈ., எம்.சி.ஏ., எம்.பி.ஏ., படித்து நல்ல பணியிலுள்ள மணமகன் தேவை. போன் : 0422-2402220 பெட்டி எண் : 29911

◆ Brahmin, Gurukkal, Kasiba, Bharani, May 1983, M.Sc., Software Engg. working Isoft drawn Rs. 20,000/- Chennai, Handsome, Fair, seeks employed groom. Horoscope match essential. Contact : 9442163528, 9443547390. Box No. 29912

◆ Iyer, Vadamal, Kasiyaba, Swathy (Thulam) (No mother), 25/160 slim, fair, MCA working MNC Chennai, seeks Prof. qualified well employed below 30 years Boy 04226569208 email:rjayaraman2007@yahoo.com Box No. 29913

◆ இந்து ஆதிதிராவிடர், 29/4.11', M.Sc., Data Entry Operator/8000, HAL, Bangalore பெண்ணிற்கு தகுதியுள்ள, நிரந்தர பணியிலுள்ள (சென்னை/பெங்களூர்) பட்டதாரி மணமகன் 34 வயதிற்குள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 29914

◆ கொங்கு வேளாளர், மிருகசீரிஷம், மார்ச் 1982, எம்.சி.ஏ., ரூ. 20,000/- மாத வருமானம், கோவையில் சாஃப்ட்வேர் நிறுவனத்தில் வேலை பார்க்கும் பெண்ணுக்கு நன்கு படித்த மணமகன் தேவை. email:logusona@gmail.com Box No. 29915

◆ தந்தை ஐயர், தாய் சைவ முதலியார், சிவப்பான பெண் வயது 24, 152 செ.மீ., கேட்டை, போஸ்ட்-கிராஜுவேட், சென்னையில் உத்தியோகத்தில் உள்ளவருக்கு, இந்து பிரிவினரில் பையன் தேவை. ஜாதகம் தேவை. எஸ். சங்கரன், B-5, ஹரிதா பிளாட்ஸ், முதல் மாடி, 84 கே.கே.ரோடு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை - 53. மொபைல் : 99402 42817 பெட்டி எண் : 29916

◆ Iyer, Brahacharanam, Bharatwajam, Poosam, Sept. 1983, 24 years, 5.3', MCA working in Minvesta@Chennai, seeks professionally qualified bridegroom. Phone : 0452-2660301, 9486468002. Box No. 29917

◆ Iyer, Vadamal, Kousigam, Uthiram-II, July-75, 166 cm, MCA, fair, Sr. Software Engineer, MNC, Chennai earning 3.5 Lac/year. Seeks BE/MCA professional groom well employed. Earning above 4 Lac/year India/Abroad. Box No. 29918

◆ Iyer, Vadamal, Bharadwajam, Sadayam, 31/152. Computer Engineer girl, employed in Bay Area USA with Green Card, issueless innocent legal divorcee seeks suitable alliance from Iyer/Iyengar. Contact : Phone No. 022-2879 8004, 04362-243533 email: cmohang09@yahoo.com Box No. 29919

◆ ஐயர், கௌசிகம், பூசம், பிரஹசரணம், 1980, 5.2', சிவப்பு, புதுதில்லியில் தனியார் வங்கியில் வேலை, போஸ்ட் க்ராஜுவேட் படித்த, சிகரெட், குடிப்பழக்கம் இல்லாத டில்லி அல்லது அருகில் நல்ல வேலையில் இருக்கும் 30 வயதுக்குள்ளான அழகான மணமகன் தேவை. Phone : 011-2786 1639 or email-sridhar_ramani16@yahoo.co.in Box No. 29920

◆ Iyer, Brahacharanam, Srivatcham, Oct. 77, Barani, 5 feet, B.A., (Eco.,) D.C.S. P.P.T.C. Wheatish, Not willing to go job. Expectation: Professionally qualified and well settled Boy : Phone No. 04179-221383. Box No. 29921

◆ Iyer, Vadamal, Vathoolam, Kettai, June 83/152, BE, Software Engineer, TCS, Medium Complexion, Seeks professionally qualified groom with good family background, Send BHP aksu1990@yahoo.com 9444923508 Box No. 29922

◆ Iyer, Vadamal girl, Vadhoolam, Wheatish Complexion, Revathi, October 1983, 5.4', BE (EEE) SW Engineer Infosys Chennai seeks suitable well employed groom around 28. Contact: 0452-2693426 Box No. 29923

◆ வடகலை, ஸ்ரீவத்ஸம், கேட்டை, 34, 4.11", Graduate employed Infosys BPO Pune, Seeks suitable groom. Box No. 29924

◆ Iyer, Brahacharanam, Shadamarshanam, Visakam, Thulam, 1984, BCS., (PGDBA) 162 cm, employed, seeks well qualified, well employed groom. Contact : +9940659241 Box No. 29925

◆ Iyer, Brahacharanam, Koundinyam, Magam, Simmam, 160cm, Feb. 85 BCS (MBA) seeks well qualified well employed groom. Contact : +9840593816 Box No. 29926

◆ குருக்கள், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்யம், 25/5.2', **B.Com., MFM** படித்துள்ள பெண்ணுக்கு, நல்ல குணமுள்ள, படித்த, வேலை பார்க்கும் மணமகன் தேவை. ஃபோன் : 65618569. பெட்டி எண் : 29927

நவம்பர் மாத இதழுக்கான திருமண மலர் விளம்பரங்கள் எமது அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 5.10.2007

◆ Iyer, Vadamal, Kousigam, Magam, 28, 5.4", Senior Software Engineer, USA requires BE/MS/MBA USA Based settled Boys upto 33 years. Subsect no bar. Girl visiting Chennai soon. early marriage preferred. Contact : (0) 9841579822/044-24811513 email:sr_amrithakalyani@yahoo.com Box No. 29928

◆ Iyer, Brahacharanam, Moudgalyam, Pooradam, Legal Divorcee, Bank employed 47 girl needs graduate Govt/Pvt. employed grooms within 49 years. Divorcees/widowers without issue can also apply. Box No. 29929

◆ Iyer, Ashtasahasram girl, Haritham, Poosam 28, 5.4', MCA, Slim, Good-looking seeks professionally qualified groom, well employed good character, decent family. Subsect no bar. Age difference 2-5 years. BHP to Phone : 04322-270260 Box No. 29930

◆ படித்த வசதியான 27 வயது செட்டியார் மணமகளுக்கு அரசு வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதி தடையில்லை. பெட்டி எண் : 29931

◆ ஐயர், பிரஹசரணம், ஸ்ரீவத்ஸம், மூலம், 26/5.6', எம்.காம்., படித்த பெண்ணுக்கு நல்ல படித்த பணியிலுள்ள நல்ல குணமுள்ள மணமகன் தேவை. ஃபோன் : 04151-235841 பெட்டி எண் : 29932

◆ Iyer, Kashyapam, Brahacharanam, Ayilyam II, 9/1981, 165cms, M.A., M.Phil., (Eng) Good-looking girl seeks suitable Boy, BE/CA/S/WEngr. Brahacharanam/Vadama preferred. Contact : 0435-2425535 Box No. 29933

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜம், மூலம், 5.4', 25 வயது, பி.காம்., பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள மணமகன் தேவை. S. Ganapathy Sundaram, No. 12, LIC Colony, East Tambaram, Chennai - 600 059. Tel : 98413 86560.

◆ Iyer, Vadamal, Srivatsam, Moolam 3rd padam, 25/5.2', M.Sc., M.Phil., working Matric School, Girl seeks suitable bridegroom. Contact : Narasimhan, M 96, Taj Nagar SPB Colony PO, Erode - 638 010. Phone : 04288-244296

◆ Alliance invited from well settled, broadminded Boys for Iyer, Vadama, Kausika, Punarpoosam 28/5.6', V. fair, good-looking, CA Inter, PSU employed Delhi slight Muscular Problem, Capable, self reliant Cont. K. Vaidyanathan, 80-C, AC-4 Shalimar Bagh, Delhi. Ph : 9810959256

◆ Madhwa, Kannada, Kasiyapam, Poosam-3, 25.11.1983, 165 cms, M.A., (E) Litt., Private School, English Tutor, Bharathanatiyam Teacher, Own House, seeks graduate, well employed suitable boy below 30, N.Venkatramani, 11, N.G.G.O. Nagar, Chinglepur. Ph : 27430032.

◆ Vadamal, Athreya, Avittam, Kumbam, 1959/5.2', B.Com., Good-looking, accmodative, innocent legal divorcee, seeks well settled qualified groom, second marriage acceptable. Contact : T.S. Venkatraman, 460, Gandhi Road, Perumal Lathe (upstairs) Soorampatti, Erode - 638 009; Phone : 0424-6544831.

ஜெல் வேக்ஸ் தீபம்!



1

தேவையான பொருள்கள் :

கண்ணாடித் தம்ளர் - 1,
திரி - 1,
கெமிக்கல் கலர் மெழுகு பால்ஸ் - தேவையான நிறங்கள் - 3,
ஜெல் வேக்ஸ் - 50 கிராம்,
அலுமினிய பாத்திரம்.



2

செய்முறை :

★ உங்களுக்குப் பிடித்த வடிவத்தில் அழகிய கண்ணாடி பௌலையோ, தம்ளரையோ தேர்ந்தெடுக்கவும்.

★ மெழுகுவர்த்தி தயாரிப்புக்கு என்றே திரிநூல் கிடைக்கின்றது. அதை கண்ணாடித் தம்ளரில் பசை கொண்டு ஒட்டவும். அல்லது கையில் பிடித்துக் கொண்டே, கெமிக்கல் கலர் மெழுகு பால்ஸை போடவும்.



★ கெமிக்கல் கலர் பால்ஸ் என்பது மெழுகுக் கடைகளில் கிடைக்கும். இவை உருகாதவை. ஆனால் அலங்காரமாக அப்படியே இருக்கும். இதை ஒரே நிறத்திலும் கொட்டலாம். அல்லது வெவ்வேறு வண்ணங்களிலும் வாங்கி, படிப்படியாகக் கொட்டி, கான்ட்ராஸ்டாகவும் அலங்கரிக்கலாம்.

★ இப்போது திரியை வைத்தாயிற்று. அதன் மீது மெழுகு பால்ஸ்களைக் கொட்டியாகி விட்டது. அடுத்தபடியாக, ஜெல் வேக்ஸைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.



★ ஜெல் வேக்ஸ் என்பது எல்லா ஃபேன்ஸி கடைகளிலும் கிடைக்கும். இது அல்வா பதத்தில் இருக்கும். இதை ஒரு அலுமினிய பாத்திரத்தில் வைத்து சூடு செய்யவும். இது, ஐந்து நிமிடங்களில் உருகி, கூழாகக் கரையும். இரண்டு நிமிடம் கழித்து, புகைச்சல் அடங்கியதும், கண் ணாடித் தம்ளரில் மெதுவாக ஊற்றவும்.

★ கெமிக்கல் பால்ஸ்கள் மெழுகின் மீது வராது. பத்தே நிமி டத்தில் அப்படியே 'செட்' ஆகிவிடும்.

★ மேலும் அலங்கரிக்க வேண்டு மானால் அதன் மீது ஜிகினாத் தூள்கள் தூவியும் அலங்கரிக்கலாம்.









★ இதில் திரியை ஏற்றிய தும் பளபளப்பாகச் சுடர் விடும். நவராத்திரி, தீபாவளி பண்டிகை களுக்கு ஜெல்வேக்ஸ் தீபம் ரெடி!

- வித்யா வேலு,
கடலூர்.

சுவரில் பெயர்கள்!



சமீபத்தில் நான் அமெரிக்காவில் உள்ள கனடா லைப்ரரிக்குச் சென்றிருந்தேன். லைப்ரரிக்குள் குளிர்ச்சியாக எந்த நேரமும் ஏஸி ஓடிக் கொண்டேயிருக்கிறது. குளிர் காலத்தில் ஹீட்டர் போட்டு அறைகளை வெதுவெதுப்பாக வைத்திருக்கிறார்கள்.

எத்தனையோ பேர் வந்து போகும் இடம் என்றாலும் படுசுத்தமாக உள்ளது. உறுப்பினர் அட்டையை இலவசமாகவே கொடுக்கிறார்கள்.

ஒரே தடவையில் இருபது புத்தகங்கள் வரை எடுக்கலாம். புத்தகத்தை தாமதமாகக் கொண்டு போனாலோ, தொலைத்து விட்டாலோ அபராதம் உண்டு. ஒரு கிளையில் புத்தகம் எடுத்து விட்டு நகரில் உள்ள எந்த நூலகக் கிளையிலும் திருப்பிக் கொடுக்கலாம்.

அப்படித் திருப்பிக் கொடுக்கும் போது நம் பெயரைப் பார்த்துப் பதியணும் என்று கூட அவசியம் இல்லை. நூலகத்துக்கு வெளியே பெரிய பெட்டி ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதில் கொண்டு போட்டால் போதும். புத்தகம் போட்டு எடுத்துச் செல்ல பெரிய பிளாஸ்டிக் பையையும் கொடுக்கிறார்கள்.

புத்தகங்களை அதிக நாட்கள் வைத்திருக்க வேண்டுமென்றாலோ, பதிவுசெய்ய வேண்டுமானாலோ வீட்டில் இருந்தபடியே கம்ப்யூட்டர் மூலமாகவே செய்து விடலாம். வேண்டிய புத்தகங்களைப் பதிவுசெய்து விட்டால் நாம் போய் எடுத்துக் கொள்ள முடியும்.

நாம் கேட்கும் புத்தகம் இல்லாதிருந்தால், வந்ததும் உடனே தொலைபேசியில் தெரிவிக்கிறார்கள்.

ஒருநாள் நூலகத்தின் சுவர் முழுவதும் துண்டு பேப்பர்களில் நிறைய பெயர்கள் எழுதி ஒட்டப்பட்டு இருந்தன.

''இங்கே நிறையக் குழந்தைகள் வந்து புத்தகங்கள் எடுக்கிறார்கள் இல்லையா? அவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் பெயர்களை எழுதியிருக்கிறார்கள். இதோ உங்கள் பேத்தி, பேரன் பெயர்கள்'' என்று அவள் கை காட்டிய இடத்தில், ''ஆஸ்னா, அனிஷ்'' என்று இருந்தது கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

ஒருநாள், நான் எடுத்த புத்தகத்தில் ''இந்தப் புத்தகத்தில் முப்பது முதல் நாற்பது வரை பத்து பக்கங்கள் இல்லை. புத்தகம் பழுதாகி விட்டது'' என்று அச்சிடப்பட்ட தாள் ஒட்டப்பட்டிருந்தது கண்டு ஆச்சரியப்பட்டேன்.

நூலகத்தின் உள்ளேயே காப்பி, பலகாரக் கடை உள்ளது. ஜெராக்ஸ் வசதியும் உண்டு. ஜப்பானிய, கொரியா, சைனீஷ், ஸ்பானிஷ் என எல்லா நாட்டு மொழியிலும் புத்தகங்கள் உள்ளன. அங்கே தமிழ் மொழி புத்தகங்களைப் பார்த்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

- சரோஜா மனோகரன், விருதுநகர்.

அம்மனின் சிரிப்பு!



பட்டுப்பாவாடை கட்டி
பதக்கங்கள், மாலை போட்டு
தாழம்பூ ஜடை பின்னி
தலைநிறைய பூச்சூட்டி

நாளுக்கொரு நகை செட்டு
ஆள் வைத்து அலங்கரித்து
வருபவர்க்குப் பரிசளிக்க
வகை வகையாய்ப் பொருள் வாங்கி.

தாம்பூலத் தட்டங்களில்
தாலிக் கயிறு வைத்து
மருதாணிப் பொடியுடனே
மஞ்சள் குங்குமம் தந்து

அம்மன் முகம் பார்த்தால்
ஆனந்தம் காணோமே
தாயின் முகத்தினிலே
துயைகூட காணோமே

போட்ட சுண்டல் உப்பா?
பாயசம் கசப்பா?
ஆசாரக் குறைவா?
அலங்காரக் கோணலா?

பக்திக்குறை பாடா? பூஜை
சரியில்லையா?
சிந்தனை செய்ததில் சிக்கல் அறுந்தது.

'அடடா!
ஏழைச் சிறுமிகளை ஏற்றிவைத்துப்
போற்றவில்லை
ஒன்றும் இல்லாதவர்க்கு ஒரு பொருள்
தரவில்லை
சுற்றியுள்ள பேர்களில் சுகம்காணா
பெண்களை
குங்குமம் வைத்தழைத்து, கூட்டி இலை
போட்டு

பரிமாற, பரிமாற...
அம்மன் முகம் மலர்ந்ததடீ!
அருள் அதிலே சுரந்ததடீ
சின்னச் சிரிப்பு கூட
சிங்காரமாய்த் தோன்றுதடீ!

- வேதாத்மா, சிட்லபாக்கம்.

எழில் கொஞ்சும் இமயமலைச் சாரலில் அமைந்துள்ள குலுமணாலிப் பள்ளத்தாக்கில் ஆண்டுதோறும் பகவான் ரகுநாத்ஜிக்கு நடைபெறும் அற்புத விழா, நவராத்திரியின் ஹைலைட்! இரவு நேரங்களில் பகல் போன்ற விளக்கு வெளிச்சங்களில் ஒரு புறம் ராமாயணக் கூத்து நடைபெறும், மறுபுறம் நாட்டியம், நாடகம் என்று மூலைக்கு மூலை அமர்க்களப்படும். பக்கத்துக் கிராமங்களிலிருந்து வரும் பலதரப்பட்ட பக்தர்கள் கூடாரம் அமைத்துக் கொண்டு இந்த அற்புதத் திருவிழாவை ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

இங்கு கோயில் கொண்டிருக்கும் பகவான் 'ரகுநாத்ஜி' ஸ்ரீராமபிரானின் மறு வடிவம். ஸ்ரீராமபிரான் தாமே தமது கை கட்டை விரல் உயரத்தில் வடிவமைத்துக் கொடுத்த விக்ரகம் என்பது நம்பிக்கை!

• எள் விழ இடமில்லை...



ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த குலு மணாலிப் பகுதியை ஜெகத்சிங் என்ற மன்னன் செழிப்புடன் ஆண்டு வந்தான்.

ஒரு சமயம் இந்த மன்னன் மணிக்கரன் என்ற வசந்தம் தவழும் அருமையான இடத்திற்கு ஓய்வெடுக்கச் சென்றான். அப்போது அவனது ஓய்வு மாளிகையை நோக்கி இரண்டு பணியாட்கள் வந்து ''திவான்... இந்தக் கிராமத்தில் அந்தணன் ஒருவன் விலை மதிக்கமுடியாத முத்துக்களை வைத்திருக்கிறான். அதை திவானுக்குக் கொடுக்கும்படி கேட்டோம். ஆனால் அவன் தருவதற்கு மறுக்கிறான்'' என்றார்கள்.




* ராஜ உபசாரம்

அந்த முத்துக்களின் மீது அபரிமிதமாக பிரியத்தை வைத்த அரசன் எப்படியாவது அதை அவனிடமிருந்து கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டான். அவர்களும் அந்த அந்தணர் வீட்டிற்குச் சென்று அந்தணனை அடித்து, உதைத்து முத்துக்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து அரசனிடம் சேர்த்தனர்.

முத்துக்களை இழந்த அந்தணன் வேத

குலு மணாலியில் நவராத்திரி!

னையில் இறந்து போகிறான். அரண்மனையில் ஏதேதோ அசம்பாவிதங்கள் நடக்கவே, அரசன் பயந்து போகிறான். அப்போது வைஷ்ணவ சன்னியாசி ஒருவர், தனது சிஷ்யனுடன் அரண்மனைக்கு வருகை தந்தார். "நீங்கள் செய்த பாவத்துக்குப் பரிகாரமாக, ஸ்ரீராமன் பிறந்த நாடான அயோத்திக்குச் சென்று ஸ்ரீரகுநாத் விக்ரகத்தை பெற்று வந்து அரண்மனைக்குப் பக்கத்திலேயே



* ஸ்ரீ ரகுநாத்ஜிவிக்ரகம்

பிரதிஷ்டை செய்து கோயில் கட்டி தினசரி ஆறுகால பூஜை செய்ய வேண்டும்" என்று சொல்லி மறைகிறார்.

அதே போல அரசனும், அவனது உறவினர்களும் அயோத்திக்குச் சென்று ரகுநாத் விக்ரகத்தைக் கொண்டு வந்து கோயில் கட்டி வழிபாடு செய்து வந்தனர். பிறகு ஒரு காலத்தில் சன்னியாசியாக வந்த வைஷ்ணவரும், சிஷ்யரும் ஸ்ரீராமன், லட்சுமணன் என்பதைத் தெரிந்து கொள்கின்றனர்.

நவராத்திரியின் பத்தாம் நாள் பவுர்ணமியன்று வியாஸ் நதிக்கரைக்கு ஸ்ரீ ரகுநாத்ஜி அழகிய ரதத்தில் எழுந்தருளுகிறார். அங்கு அவரது பார்வையில் படும்படி ராவணன் உருவ பொம்மை வைக்கப்பட்டிருக்கும். ஓர் ஈட்டியை பூஜாரி ரகுநாத்ஜி பக்கமிருந்து ராவணன் உருவ பொம்மை மீது வீசி எறிவார். ராவண பொம்மை எரிக்கப்பட்டு, லங்கா தகனம் நடைபெறும். அப்போது மக்கள் ஆரவாரத்துடன் குதூகலமாக இருப்பார்கள்.

இந்த விழாவின் போது பத்து நாட்களும் குலுமணாலி பகுதியின் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட தெய்வங்கள் பகவான் ரகுநாத்ஜியைக் கண்டு தரிசனம் செய்வார்கள். மேள, தாள தாரை தப்பட்டையுடன், ஆட்டம் ஆடிய படி பக்தர்கள் திரும்பிச் செல்வார்கள்.

விழா முடிந்ததும் ஸ்ரீரகுநாத்ஜியை ராஜவம்சத்தினர் எடுத்துச் சென்று ஒருநாள் முழுவதும் ஆராதித்து மறுநாள் கோயிலுக்குக் கொண்டு சென்று ஒப்படைப்பார்கள். அப்போது ராஜாக் குடும்பத்தினரின் ஊர்வலம் கண்கொள்ளாக்காட்சியாக இருக்கும்.

- ராமசுப்பு, சென்னை - 44.

நன்றி : 'ஜெட்விங்க்ஸ்'

எங்கள் 'அனுகிரி'யில் உள்ள பதினான்கு அபார்ட்மெண்ட்களில் பதினொரு வீடுகளில் கணவன் மனைவி மட்டுமே இருக்கிறோம். குழந்தைகள் எல்லாம் வெளியூரிலோ, வெளிநாட்டிலோ, மாமியார் வீட்டிலோதான்! இங்கே, மும்பையில் நிறைய சினேகிதிகளின் நிலையும் இதுதான். இந்த நிலையைத்தான் 'எம்ப்டி நெஸ்ட் சின்ட்ரோம்' என்கிறோம். பல ஊர்களிலும் இதுபோல் நிறைய பேர் இருக்கின்றனர். என்ன செய்தால் காலிக் கூடுகள ஜாலிக் கூடுகள் ஆகும்?



வீடா? காலிக் கூடா?

வீடு நிறைய மனிதர்களுடன் இருந்து விட்டு, குழந்தைகள் படிப்புக்காகவும், கல்யாணமாகியும் புது வாழ்க்கையை நோக்கி வீட்டை விட்டுச் சென்றபின் 50 ப்ளஸ்களும் 60 ப்ளஸ்களும் தவிக்கும் தவிப்பு இருக்கிறதே... அப்பப்பா!

காலிக்கூடாகிவிட்ட நம் வாழ்க்கையை பாஸிடிவ் வாகவும் அர்த்தம் உள்ளதாகவும் எப்படி ஆக்கிக் கொள்வது? இதோ சிலரைச் சந்திக்கலாம்.

என் பக்கத்து வீட்டு லலிதா, தன் மகனை ஹாஸ்டலுக்கு அனுப்பிய பின் வெகு நாட்களாகத் தேங்காய்த் துவையல் செய்யாமல் இருந்தாள். அது மக னுக்குப் பிடிக்குமாம். அவன் நினைவு வந்து அழுது விடுவோம் என்றுதான் இப்படித் தேங்காய்த் துவைய லைத் தவிர்த்து வந்தாள். மகன் வீவுக்கு வந்தபின் தினமும் தேங்காய்த் துவையல் செய்து தந்தாள். மறுமுறை கிறிஸ்துமஸ்





என் தங்கை சீதா வுக்கு, தன் மாமியாரைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இருக்கிறது. மகள் கல்யாணமாகி கலிஃபோர்னி யாவுக்குச் சென்று விட்டாள். இவள் தினமும், ''என்னை நம்பி வயசான ஜீவன் ஒன்று இருக்கிறது. ஆகலால் என் உடல்நலனைப் பேண வேண்டும்'' என்று சொல் வாள். கேல்ஷியம், நியூரோ பின், ஏதோ லேகியம், புரோட்டீனெக்ஸ் என அட்டவணை போட்டு முழுங்குவாள். தினம் ஒரு பட்டுப் புடைவை கட்டிக் கொண்டு மிகவும் தன்னம்பிக்கையோடு வெளியே சென்று எல்லாரிடமும் நன்றாகப் பேசுவாள்; சந்தோஷமாக இருப்பாள். தான் மருந்து சாப்பிடுவது கூட பிறருக்காக என்று எடுத்துக் கொள்வதில் எவ்வளவு ஆனந்தம்!





✱ ஆன்மிக வகுப்பில்...

லீவில் வந்த பையன், ''அம்மா, துவையல் செய்யாதே. பீட்ஸா ஆர்டர் பண்ணு கிறேன். எனக்கு ரக்டா - பேட்டீஸ் பண்ணிக் கொடு அம்மா!'' என்றான்.

பிறகு அவர் மகளிர் சங்கத்தில் சேர்ந்து கொண்டு புதுப்புது சிநேகிதிகள், கிட்டி பார்ட்டி, புதுப்புது சமையல், கைவேலை என்று படு ஆக்டிவ் வாகவும் சந்தோஷமாகவும் மாறி விட்டாள்.

ஆம்! மாறுவதுதான் வாழ்க்கை! குழந்தை களும் அப்படித்தான்! அதைப் புரிந்து கொள் ளுங்கள். வயதான மாமனார், மாமியாரைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு உள்ளவர்கள் உங்களை அதிர்ஷ்டக்காரியாக நினையுங்கள். உங்கள் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருக் கிறது.

அர்ச்சனா கல்யாணமாகி அமெரிக்காவுக் குச் சென்ற இரண்டு மாதங்களில் அரவிந் தும் எம்.எஸ். செய்ய யு.எஸ். சென்றான். இரு குழந்தைகளும் அம்மாவுக்கு ஈமெயில் செய்வதால் அவர்களுடைய தாயார் தர்மாம் பாள் கம்ப்யூட்டரில் ஈமெயில் செய்ய, வெப்-கேம், வெப்-ஃபோன் உபயோகிக்கக் கற்றுக் கொண்டாள். தொலைத் தொடர்புத்



■ ஸ்மிதாவின் குழந்தையுடன் லட்சுமி...

திறமையை வளர்த்துக் கொண்டதால் தூரமும் காலமும் அவர்களைப் பிரிக்க வில்லை.

செம்பூரில் உள்ள சரஸ்வதி, என் உறவினர். கணவர் இறந்து விட்டார். குழந்தைகளும் இங்கில்லை. மெனோபாஸிலும், தனிமையிலும் மாட்டிக் கொள்ளாமல் 57 வயதிலும் சந்தோஷமாக பிஸியாக இருக்கிறார். தன் அண்ணா, அக்கா, தங்கை, நாத்தனார், மச்சினர், தூரத்து சொந்தம் என எல்லார் வீட்டுக் குழந்தைகளையும் ஞாயிற்றுக் கிழமை கூப்பிட்டு விதம்விதமாகச் சமைத்துப் போடுவாள். வளையல்கள் வாங்கிக் கொடுப்பாள். இந்த டீன்ஏஜ் ஃப்ரண்ட்ஸுடன் படம் பார்ப்பாள். ஹோட்டலுக்குக் கூட்டிச் செல்வாள். வெளிநாடுகளுக்கும் சென்று வந்திருக்கிறார். குழந்தைகளுடைய அம்மா அப்பாவும் ''சரஸா இருந்தால் போதும். நல்ல பாதுகாப்பு. சாப்பாட்டைப் பற்றிக் கவலையில்லை'' என தைரியமாக இருப்பார்கள்.

உங்களுக்கு இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவற்றை அழகாகச் சொல்லத் தெரியுமா? உங்கள் வீட்டிலேயே பிரவசனம் செய்யுங்கள்; அல்லது தேர்ச்சி பெற்றவரை வரவழைத்துப் பேசச் செய்யுங்கள். எங்கள் கட்டடத்தில் ஒரு பாகவத சப்தாஹம் ஏற்பாடு செய்தோம். காலையில் கோபால விம்சதி, பகலில் ஆழ்வார்கள், மாலையில் பாகவதம் என ஒரே பிஸி!

ஒன்பது மணிக்கு மேல் இரவுச் சாப்பாட்டை வெளியிலிருந்து தருவித்து எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டோம். ஒரு வாரம் பயனுள்ளதாகக் கழிந்தது. எங்களுக்குள் ஒற்றுமையும் வளர்ந்தது.

புத்தகக் கிளப் என்று ஆரம்பியுங்கள். ஏதாவது புத்தகத்தை எல்லோரும் வாங்கி ஒருவர் படிக்க, மற்றவர் கேட்டு மகிழலாம். கருத்துப் பரிமாறல் செய்து கொள்ளலாம்.

குழந்தைகள் மேல் பிரியம் உள்ளவர்கள் பக்கத்து வீட்டுக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளலாம். லட்சுமி ஆன்ட்டி அப்படித்தான். பிரசவத்துக்குப் பின் முதுகுவலியால் அவஸ்தைப்பட்ட ஸ்மிதாவின் மகனைத் தன் வீட்டில் வைத்து பார்த்துக் கொண்டதில் ஸ்மிதாவுக்கும் ஓய்வு கிடைத்து வலியிலிருந்து விடுதலை பெற்றாள். ஆன்ட்டிக்கும் பொழுது போனது. எவ்வளவு அழகான நட்பு உருவாகிறது, பாருங்கள்!



ஆஹா 50!

மக்கள் அதிகம் வந்து போகும் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், ஹோட்டல், திரையரங்குகள், கோயில்கள் போன்ற இடங்களில் கட்டட உரிமையாளர்களோ, அரசோ பாம் டிடெக்டர் கருவிகளை வைத்தால் பெரிய அளவு உயிர்ச்சேதம் தவிர்க்கப்படலாம்!

– எஸ். மங்கை, குளித்தலை.

"மூக்கைத் திருகு!"



என் சிறு வயதில், கிராமத்திலிருந்து, என்னுடைய அத்தைப் பெண் நவராத்திரிக்கு வந்திருந்தாள். என் அம்மா, மாலை வேளையில், அவளிடம், மூக்கைத் திருகிவிட்டு, குத்து விளக்கு ஏற்றச் சொன்னார்கள். "சரி" என்று சொல்லிவிட்டுப் போன அவள் சுவாமி ரூமிலிருந்து வெகு நேரமாகியும் வரவில்லை.

சுவாமி ரூமுக்குப் போய்ப் பார்த்தால், குத்து விளக்கு ஏற்றாமல் இருந்தது. ஏன் என்று கேட்டதும், "மூக்கைத் திருகி ஏற்றச் சொன்னீங்களே! அதுதான் மூக்கைத் திருகிக் கொண்டிருக்கிறேன்" என்றாள் கோவைப் பழமாக சிவந்த மூக்கைக் காட்டி!

- நாகராணி குணசேகரன்,
சென்னை.

சத்யபாமாவுக்கு 75 வயது. கணவர் மட்டும்தான். தினம் ஒரு காகிதத்தில் நான்கு ஸ்லோகங்களை எழுதி ஷோகேஸில் வைப்பார். அதற்கு எதிரே நாற்காலியில் அமர்ந்து பாதங்களை உப்புப் போட்ட சுடுநீரில் வைத்துக் கொள்வார்.

காகிதத்தைப் பார்த்து ஸ்லோகங்களை மனப்பாடம் செய்வார். பிறகு, அடுத்த நான்கு ஸ்லோகன்களை எழுதுவார். இரவில் ஒப்பித்துப் பார்ப்பார். இதோ அவருக்கு பகவத்கீதையில் ஏழு அத்தியாயங்கள் மனப்பாடமாகி விட்டன.

சென்டட் கேன்டில், கிளாஸ் பெயிண்ட்டிங், சேண்ட் பெயிண்ட்டிங் என உங்களுக்கு ஆர்வமுள்ள பரிசுப் பொருள்களைத் தயாரியுங்கள். அவற்றை அன்பளிப்பாகக் கொடுத்து மகிழுங்கள்; அல்லது சிறு ஸ்டால் வைத்து விற்று விடுங்கள். கேக்ஸ், சாக்லேட்ஸ் செய்து விற்றாலும், சுவையாகப் பொழுது போகும்.

சமூகச் சேவை, ஆன்மிகச் சேவைக் குழுக்களில் அங்கத்தினர் ஆனீர்களானால் முதியோர் இல்லம், ஏழைகளுக்கு உதவுவது, இலவச மருத்துவ முகாம், இலவசப் பாட வகுப்புகள், அன்னதானம், ரத்ததானம், மருத்துவ முகாம், பஜனை என்று நேரம் போதாமல் பறப்பீர்கள்.

எதுவுமே முடியவில்லையா? உறவினர்கள், நண்பர்கள், அக்கம் பக்கத்தவர், தெரிந்தவர்களின் உடம்பு முடியாத போது முடிந்த உதவி செய்யுங்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசுங்கள். சத்யம் வத, பிரியம் வத. கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. யாரையும் கடுஞ்சொல் பேசாதீர்கள்.

பிறருக்கு உதவி செய்வதைப் போன்ற இன்பம் வேறில்லை. யாருக்காவது துன்பம் என்றால் மனமுவந்து உதவுங்கள்.

நம் வீடாகிய கூடு காலியான பின் நாம் செல்ல வேண்டிய பாதையையும், செய்ய வேண்டிய வேலையையும் கவனமாகத் தேர்ந்தெடுத்தோமானால் மிக்க மகிழ்ச்சியோடு இருப்போம். இதில் சந்தேகமே இல்லை. *(நானும் என் 61 வயதில் இதோ எழுதத் தொடங்கி உள்ளேன்!)*

- சாந்தி சந்திரன், மும்பை - 88.

சிறுகதை

அமுதா அழுகிறாள்!

டி.பெத்துமாலா

“சீக்கிரம் விடியாதா? எழுந்து முதல் பஸ் பிடித்து அமுதாவின் வீட்டுக்கு ஓடி விட மாட்டோமா?'' என்றிருந்தது.

''அக்கா, நீ கொஞ்சம் உடனே வர முடியுமா? உன்னைப் பார்த்து என் கவலைகளைக் கொட்டினால்தான் என் மனம் ஆறும்'' என்று அமுதா அழுதபோது மனம் சொல்லொண்ணா துக்கத்தில் வலித்தது. ஒரு காலத்தில் அவளால் என் அம்மா, அப்பா, தங்கை, தம்பி என, எத்தனை பேரின் தூக்கம் காணாமல் போனது? படுபாவி, அந்த அளவுக்குப் படுத்தினாளே!

அம்மா, அப்பாவுக்கு மூன்று பெண்கள் நாங்கள். ஒரு தம்பி. நான்தான் மூத்தவள்; இரண்டாவது பெண் அமுதா.

அப்பாவுக்கு இரும்புக் கடை. சுமாரான வியாபாரம். இரண்டாவது, மூன்றாவதாகப் பிறந்த குழந்தைகளுக்கென்று எழுதப்படாத விதி ஒன்று நடுத்தரவர்க்கக் குடும்பங்களில் இருந்தது. புதுத்துணி வருடத்துக்கு இரண்டுதான். மற்றபடி நான் போட்ட குட்டையான கவுன், பாவாடை, நான் படித்துப் பழசான புத்தகங்கள் எல்லாம் அமுதாவுக்கு. சிலபஸ் மாறினால் மட்டுமே புதுப் புத்தகங்கள் கிடைக்கும். ஒரு சமயம் நான் படித்த புத்தகம் என் தம்பி வரை வந்தது.

எனக்குத் திருமணம் முடிந்தது. அதே ஊர் மாப்பிள்ளைதான். அமுதாவின் திருமண சமயம் அப்பாவுக்கு வியாபாரத்தில் கொஞ்சம் முன்னேற்றம். அதனால் கூட கொஞ்சம் நகை, சீர் செய்து சற்று வசதியான குடும்பத்தில் அமுதாவுக்குத் திருமணம் செய்தோம். அதன் பிறகு அமுதா மாறிப் போனாள். கல்யாணமான புதிதில் ,அவள் கேட்டதையெல்லாம் அப்பா வாங்கிக் கொடுத்தார். அதனால் எதையும் கேட்டு



வாங்கிக் கொள்வது என அமுதா முடிவு செய்தாள்.

என் மகள் சஹானா நடக்க ஆரம்பிக்கும் போது அமுதாவுக்கு மிருதுளா பிறந்தாள்.

பெண் பிறந்ததுமே அமுதாவுக்குப் பணத்தின் மீது ஆசை அதிகமானது.

''அப்பா, எங்கள் வீட்டில் இரண்டு தலை முறைக்குப் பிறகு இது தான் பெண். அதுவும் மூத்த பேத்தி. அதனால் நீங்கள் பத்துப் பவுனாவது போட்டால்தான் எனக்கு கௌரவமாக இருக்கும்'' என்றாள்.

அப்பாவோ, ''அஞ்சாறு பவுன் போடலாம்மா, பத்துப் பவுன் எப்படி? அதுவும் வீட்டில் கல்யாணத்துக்கு இன்னொரு பெண்ணை வெச்சிக்கிட்டு செய்ய முடியாதும்மா'' என்றார்.

எப்படியோ அழுது, அடம்பிடித்து வாங்கிக் கொண்டாள். அது மட்டுமா? குழந்தைக்கு செரிலாக் ஊட்ட வெள்ளிக் கிண்ணம் ஸ்பூன், சங்கு, நடக்கும்போது கொலுசு, காது குத்த வைரக் கம்மல், ஜிமிக்கி, பிறந்த நாள் கொண்டாட்டத்





சிறு பெண் குழந்தைகளை ரயிலில் அழைத்துச் செல்லும் போது பேண்ட் அல்லது டிவைடட் ஸ்கர்ட் போட்டு விட்டால் நாம் கவலையின்றி இருக்கலாம். சில பள்ளிகளில் கூட தற்போது உள்ளாடையின் மேல் ப்ளூமர் என்று தொடை வரையில் உள்ள ஆடையை அணிவது கட்டாயமாக உள்ளது.

- ஆர். பத்மா, சென்னை - 92.

துக்கு ஒரு பவுன் பிரேஸ்லெட் என அப்பாவின் சேமிப்பு குறைந்து வியாபாரத்துக்காக வைத்திருந்த பணத்தை அவளுக்காகச் செலவு செய்து அப்பாவும், அம்மாவும் நொந்து போயினர். மூன்றாவது தங்கையை என்னைப் போல் சுமாரான இடத்தில் திருமணம் செய்தோம்.

அமுதாவுக்காகவே செலவு செய்ததால் தம்பியின் இன்ஜினியரிங் கனவு கலைந்தது. பி.ஏ.வோடு நிறுத்திக் கொண்டான்.

இப்படியே காலம் போனது. என் பெண் கள் பெரியவர்களாயினர். அப்பாவும் தம்பி யும் செய்த சீரை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு பதில் மரியாதை செய்தோம். மிருதுவும் பெரிய மனுஷியானாள். தகவல் தெரிந்ததும் சந்தோஷமடைவதற்குப் பதில் வீட்டில் அனைவரும் கலவரமடைந்தனர்.

நினைத்தபடியே ஃபோன் செய்தாள் அமுதா. ''அப்பா, நாங்கள் மண்டபம் பிடித்து விழா வைக்கப் போகிறோம். ஆயிரம் பேராவது வருவாங்க. அதனால் சபையில் வைத்து என் மானத்தை வாங்கிடாதீங்க!'' என்று சொல்லி ஒரு பெரிய லிஸ்ட் வாசித்தாள். தம்பி சுமாரான சம்பளம் தான் வாங்கிக் கொண்டிருந்தான். அதனால் ஊரில் உள்ள நிலத்தை விற்றுத்தான் அப்பா செலவு செய்தார்.

ஒருநாள் அப்பா எங்களிடம், ''நீங்களெல்லாம் எவ்வளவு அனுசரணையாக இருக்கீங்க... இவள் மட்டும் ஏன் இப்படி இருக்கா? வீட்டுப் பொண்ணு மனசு நோகக் கூடாதேன்னு சமாதானமாப் போக வேண்டியிருக்கு!'' என்று ரொம்பவே வருத்தப்பட்டார்.

தம்பி கல்யாணத்துக்கும் அப்படித்தான்! ''எனக்குப் பட்டுச் சேலை எடுத்துக் கொடுத்தால்தான் கல்யாணத்துக்கு வருவேன்'' என்று கரெக்டாகப் பேசி வாங்கியும் விட்டாள். இவளால் அப்பாவுக்கு பிரஷர் கூடி இரண்டு நாள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியதாயிற்று.

அம்மாதான் பொறுமையிழந்து, ''இது வரைக்கும் உன்னை நாங்க எதுவும் சொன்னதில்லை. ஏதாவது கேட்டால் உறவு போய் விடுமோ என்று அப்பா பயப்பட்டார். இனி நான் அப்படி நினைக்க மாட்டேன். பாசமிருந்தால் மட்டும் வா. இல்லையென்றால் நீ உன் வீட்டிலேயே இருந்து விடு'' என்று சொல்லியே விட்டாள்.

உடனே அமுதாவுக்குக் கோபம் பொங்கியது. ''நான் என்ன சும்மாவா கேட்கிறேன்? எனக்குச் சேர வேண்டிய பங்கைத்தானே கேட்கிறேன். நீங்களும் செய்ய வேண்டிய முறைதானே? அக்காவுக்கு இரண்டு பெண்கள்; தங்கச்சிக்கு மூன்று பேர். இவங்களுக்கெல்லாம் செய்வீங்கதானே? நான் வைத்திருப்பதோ ஒரே ஒரு பெண். நான் கொஞ்சம் கூட கேட்டால் தப்பா? எல்லாவற்றையும் கணக்குப் போட்டுப் பாருங்கள்; சரியாக வரும்.''

இன்னும் என்னவெல்லாமோ பேசி சண்டை போட்டுக் கொண்டு ஊருக்குப் போய்விட்டாள். அதிலிருந்து எங்களுடன் அவள் பேசுவதையே விட்டு விட்டாள். எங்கள் பிள்ளைகள் கல்யாணங்களுக்கு அழைத்தால் வந்து விட்டு மண்டபத்திலிருந்தே போய் விடுவாள்.

சில ஆண்டுகளில் மிருதுவின் கல்யாணம் வந்தது. மாப்பிள்ளை ஜெர்மனியில் இருந்தார். வசதியான இடம். கிட்டத்தட்ட கையில் உள்ள அனைத்தையுமே வீடு தவிர மிருதுவுக்கு அவள் செய்து விட்டதாகக் கேள்விப்பட்டோம். இது நடந்து இரண்டு வருடங்களாகி விட்டன. இந்நிலையில்தான் அமுதாவிடமிருந்து ஃபோன்!

அமுதா வீட்டில் களையே இல்லை. ஆங்காங்கே ஒட்டடையும், தூசுமாய் அழுது வடிந்தது. ஆளே இளைத்துப் போய், கண்களைச் சுற்றிக் கருவளையம் போட்டு...

''ஏன் அமுதா? என்ன பிரச்னை? உன் உடம்புக்கு ஏதாவது? மிருது ஜெர்மனியிலிருந்து வந்தாளா?''

''ஆமாம் அக்கா, வந்து பத்து நாட்களாகி விட்டன.''

''எங்கே போயிருக்கா?''

''அவள் இங்கே வரவே இல்லை, அக்கா. கொடைக்கானலில் அவளோட மாமியார் வீட்டுல இருக்கா. சென்னை வெயில் எனக்கும் குழந்தைக்கும் ஒத்துக்காது; அதனால் வரலை''ன்னு சொல்லிட்டா.


''என்ன மிருதுவுக்குக் குழந்தை வேறு பிறந்து விட்டதா? நீ ஏன் ஜெர்மனி போகவில்லை? இங்கேயாவது போய்ப் பார்த்தாயா, இல்லையா?''

''இல்லை. என்னால போக முடியலை. நான்கைந்து மாதங்களாக வயிற்றில் வலி; ஸ்கேன் செய்ததில் ஹெர்னியா, உடனே ஆபரேஷன் செய்யணும்ன்னு டாக்டர் சொல்லியிருக்காரு. மிருதுவுக்கும் இது தெரியும். ஆனாலும் என்னைப் பார்க்கக் கூட வரவில்லை. நாங்களே எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டியிருக்கு. மிருது, ஒரு தடவை என்னை உதாசீனப்படுத்தியதற்கே எனக்கு இவ்வளவு வலிக்குதே! நான் உங்களையெல்லாம் எத்தனை தடவை உதாசீனப்படுத்தியிருக்கேன்! என்னால் அப்பா என்னவெல்லாம் இழந்திருப்பார்! எல்லாம் மிருதுவுக்காகத்தானே செய்தேன்? வாழ்க்கையில் அவள் எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணத்தில்தானே சேர்த்து சேர்த்து வெச்சேன். உங்கள் பாசத்தை விட எனக்குப் பணம்தான் பெரிதாகத் தெரிந்தது. ஆனால் ஒரு தாயாக ஆன பின் அதுவும் இந்த வயதான காலத்தில்தான் நான் செய்தது எல்லாம் ஞாபகம் வந்து என்னைக் கொல்லுது அக்கா. என்னை மன்னிச்சிருங்க.''

இதோ அமுதா அழுகிறாள். அவள் அழுகையில் அவளுக்கு ஞாபகம் வந்த தப்புகள் எல்லாம் எங்களுக்கு மறந்து போய்க் கொண்டிருக்கின்றன. அனைவரும் அழுகிறோம். அமுதா திருந்தி விட்டாள். வேறென்ன வேண்டும்? காலம்தான் எப்பேர்ப்பட்ட கருவி! எப்படியெல்லாம் மனிதர்களைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறது? அந்தக் காலமானது மிருதுவையும் விரைவில் அழைத்து வரும் என்ற நம்பிக்கையும் பிறக்கிறது.

கிட்டத்தட்ட இருபத்திரண்டு வருடங்களாகத் தொலைந்து போயிருந்த எங்கள் சகோதரி மீண்டும் கிடைத்த சந்தோஷத்தில் அமுதாவை இறுக அணைத்துக் கொண்டேன். ●

ஆஹா 50!



கொலுவில் பார்க் அல்லது சாலை அமைக்கும் போது சிறிய பென் டார்ச் வைத்து ஒளிரச் செய்தால் நிஜமாகவே விளக்கு எரிவது போல் இருக்கும்.

– சங்கரி வெங்கட்,
பெருங்களத்தூர்

டாக்டர் மகாதன் ஷேகர் ராஜா

பிறந்த தேதி பலன்கள்!



அக்டோபர்
2007

1,10,19,28

தேதிகளில் பிறந்தவர்களே... தாங்கள் எந்தக் காரியத்தை செய்தாலும் அதில் ஒரு முதன்மையும், முழுமையும் இருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். அதனால்தானோ என்னவோ, நீங்கள் தொடர்ந்து வெற்றிக் கனியைப் பறிக்கக் கிட்டே இருப்பீங்க. குறிப்பாக, வியாபாரம், சிறு தொழில் செய்பவர்கள், உங்கள் தொழிலை நேர்த்தியாகவும், நியாயமாகவும் செய்வதை கைகொண்டிருப்பதால், நீங்கள் தொட்டதெல்லாம் தங்கம் எனத் துலங்கிக் கொண்டிருக்கும்.

இந்த மாதம், ஒண்ணாம் எண்காரர்கள் மிகவும் உற்சாகமாக இருப்பார்கள். அவர்களுடைய உற்சாகம் வீட்டில் உள்ளவர்களையும் தொற்றிக் கொள்ளும். கிழக்குத் திசையிலிருந்து நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். கணவன் - மனைவி இடையே அன்பு தழைத்து, நெருக்கம் நீடிக்கும். மாத இறுதியில் பெண்கள் பிறந்த வீட்டினரால் சீராட்டப்படுவார்கள். மாணவ-மாணவியருக்கு படிப்பில் கவனம் சிதறும். பெற்றோர்கள் கூடுதல் கவனம் செலுத்தவும்.

குறிப்பு : தங்களது வாழ்க்கை சிறக்கவும், சிறப்பான வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ளவும், நீங்கள் மாதம் ஒருமுறையாவது ஏழை எளியவருக்கு உங்களால் இயன்ற அளவு அன்னதானம் செய்யுங்க. பசித்தவர்களின் பிணி தீரத் தீர, உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிரம்பத் தொடங்கும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 1, 9.



2,11,20,29

தேதிகளில் பிறந்தவர்களே... பொதுவாகவே, எண்களுக்கும், எண்ணங்களுக்கும் சம்பந்தம் உண்டு என்பது ஃபார்மெட் நியூமராலஜியின் முடிவு. அது உங்கள் விஷயத்தில் இந்த மாதம் அப்படியே பலிக்கப் போகிறது. எனவே, உங்கள் எண்ணங்களை எந்த அளவுக்கு ஆக்கப்பூர்வமாக வைத்துக் கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு செயலிலும் உயர்வு ஏற்படும். இயல்பாகவே, இரண்டாம் எண்காரர்கள் எளிமையானவர்கள். 'சிம்பிள் லிவ்விங்; ஹை திங்கிங்' என்பார்களே, அந்த வகையைச் சேர்ந்தவர்கள். இந்த மாதம் உங்களை பல வகையிலும் உயர்த்தித் தாங்கிப் பிடிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் இருக்கும்.

நீண்ட நாட்களாகத் திருமணத் தடையுள்ளவர்களுக்கு இந்த மாதம் 'டும் டும்' கொட்ட வாய்ப்புள்ளது. அதுவும் பெண்களுக்கு, எதிர்பாராதவண்ணம், 'சட்' என்று நிச்சயமாகிவிடும். விற்பனை, கமிஷன், ஏஜென்ஸி வகை தொழில்களில் கணிசமான லாபம் கிடைக்கும். மாத இறுதியில் வீணான கலக்கம் வந்து சேரும். உடல்நலம் பாதிக்கப்படக்கூடும்.

குறிப்பு : குடும்பமோ, அலுவலகமோ, வியாபாரமோ... ஏதாவது சின்னச் சின்ன சஞ்சலங்கள் கடல் அலை போல உங்கள் மனத்திடலில் ஓயாது அடித்துக் கொண்டேயிருக்கும். மன அமைதி கிடைக்க ஷீரடி சாய்பாபாவை வணங்கி வரவும். வியாழன்தோறும் 'சாய்சரிதம்' படிக்கவும். நிம்மதி கிடைக்கும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 2, 7.



3,12,21,30

தேதிகளில் பிறந்தவர்களே, மூன்றாம் எண்காரர்களின் மிகப் பெரிய பலம் என்ன தெரியுமா? அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது என்று திடமாக நம்புவதுதான். தெய்வ நம்பிக்கையோடு, நேர்மை, வாய்மை, திறமை, மனவலிமை போன்ற குணங்களும் உங்களுக்கு இருப்பதால், நீங்கள் மண்ணைத் தொட்டால் பொன்னாகிவிடும். மூன்றாம் எண்காரர்களின் மிகப் பெரிய பலவீனம் என்ன தெரியுமா? எளிதில் எதையும், யாரையும் நம்பி விடுவது! இதனால், பல சந்தர்ப்பங்களில் வீண் பிரச்னைகளில் மாட்டிக் கொண்டு விடுவீர்கள். உஷார்!

நல்லதொரு வீடு, மனை, அமையாமல் அலைந்து கொண்டிருந்தவர்களுக்கு, அருமையான இடத்தில் அமையும். வெளிநாடு போகத் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு மிக விரைவில் அமையும். ஆசிரியப் பணி, அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு, பதவி உயர்வு, பணி மாற்றம், ஊதிய உயர்வு கிடைக்கும்.

குறிப்பு : மூன்றாம் எண்காரர்கள் கை நிறைய சம்பாதிப்பார்கள். ஆனால் எப்படியோ கையிடுக்குகளில் பணம் ஓடியே போய்விடும். அதிகம் சம்பாதித்தும், பணம் உங்களிடம் தங்கவில்லை என்றால், நல்ல தரமான ரூபி (மாணிக்கம்) ஜெம்மை வாங்கி, பர்ஸில் வைத்துக் கொள்ளுங்க. அதற்குப் பிறகு, பணம் உங்களிடம் எப்படித் தங்குகிறது என்று பாருங்க!

அதிர்ஷ்டத் தேதிகள் : 3, 9



4,13,22,31

தேதிகளில் பிறந்தவர்களே... நல்ல துணை, அருமையான குழந்தைகள், அற்புதமான குடும்பம் என திருமணம் பற்றிய நிறைய கனவுகள் கொண்டவர்கள் நீங்க. ஆனால் நான்காம் எண்காரர்களுக்கு திருமண வாழ்க்கை அத்தனை திருப்தியாக அமைவதில்லை. அதிலும் 13-ம் தேதியில் பிறந்த பெண்களுக்கு, நிறைய திருமண பாதிப்புகள் இருக்கும் என்பது நமது ஃபார்மெட் நியூமராலஜியின் ஆராய்ச்சி முடிவு. ஆனால் தீமையிலும் தீமை என்பது போல, திருமண வாழ்வின் ஏமாற்றத்தைத் தவிர்க்க, இவர்கள் அலுவலகம், கைவேலை, தொழில், ஆன்மிகப் பணிகள் என்று பிஸியாக இயங்குவதால், வெளிவட்டாரத்தில் ஏற்றம் பெறுவார்கள்.

இந்த அக்டோபர் மாதம், தங்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய மாதமாக அமையும். பெண்கள் ஆடை, ஆபரணம், நவீனப் பொருள்கள் என வாங்கிக் குவிப்பார்கள். எலக்ட்ரானிக்ஸ், ஜவுளி, நகை, ரியல் எஸ்டேட், வாகனம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏற்றம் பெறுவார்கள்.

குறிப்பு : கணவனுக்கு ஆரோக்கியம் இருந்தால், மனைவிக்கு உடல்நலம் பாதிக்கும். ஒருவருக்கு பணவரவு இருந்தால், இன்னொருவர் சிரமப்படுவார்கள். இதனாலும் மணவாழ்வில் இயைந்த பொருத்தம் இருக்காது. நல்ல தரமான கோமேதகம் ஜெம்மை வாங்கி ஏதேனும் அம்மன் கோயில் உண்டியலில் சேர்ப்பித்து விடவும். தாம்பத்ய இணக்கம் ஏற்படும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 1, 5.



5,14,23

தேதிகளில் பிறந்தவர்களே.. பளிங்கு போன்ற உள்ளம் கொண்ட நீங்க, உங்கள் எண்ணம், பேச்சு, செயல் எல்லாவற்றிலும் தெளிவான அணுகுமுறை கொண்டிருப்பீங்க. வாய் ஜாலம், பாசாங்கு எதுவுமே இல்லாமல், தீர்க்கமான சிந்தனையோடு, வெளிப்படையாக, வாழ்வீங்க! இந்த எண்காரர்கள், சமூக சேவை, அரசியல், மக்கள் பணி என்று பொது வாழ்வில் ஈடுபட்டால், உலக அளவில் பெயரும் புகழும் பெறுவார்கள் என்பது எமது ஃபார்மெட் நியூமராலஜி ஆராய்ச்சிகளின் முடிவு. இதுவே தொழில் அதிபர்களாக இருந்தால், தவிட்டையும் தங்கமாக்கி விடும் வல்லமை கொண்டவர்களாக இருப்பாங்க.

இந்த மாதத்தின் முற்பகுதி சுமாரான பலன்களையும், இறுதிப் பகுதி செழிப்பான பலன்களையும் கொண்டிருக்கும். பெண்கள், எல்லா வகையிலும் ஏற்றம் பெறுவார்கள். தெய்வ சிந்தனை வலுக்கும். அலுவலகத்தில் இருந்து வந்த மனக்கசப்புகள், போட்டா போட்டிகள் மெள்ள மெள்ள குறைய ஆரம்பிக்கும்.

குறிப்பு: பொது வாழ்க்கையில் உள்ளவர்கள், தாங்கள் செய்யும் நற்பணிகளுக்கு மேலும் வெளிச்சம் தேவை என்று எண்ணினாலோ, உலகம் முழுவதும் தங்களது புகழ் பரவ வேண்டும் என்று நினைத்தாலோ, மெரூன், இளஞ்சிவப்பு போன்ற நிறங்கள் கொண்ட ஆடைகளைப் பயன்படுத்துங்க. இதனால் உங்கள் வசீகரம் கூடும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 5, 6.



6, 15, 24

தேதிகளில் பிறந்தவர்களே... அன்பால் மட்டுமே யாரையும் வசப்படுத்த முடியும் என்ற அசைக்க முடியாத சித்தாந்தம் கொண்டவர் நீங்க. விளையாட்டாகக் கூட யாரையும் புண்படுத்தாத, அன்பு நெஞ்சம் உங்களுடையது. ஒருசிலர் உங்கள் அன்பை, தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்தி, உங்களைக் கழற்றி விடக்கூடும். எனவே... யாரிடமும் பழகும் போது ஓர் எல்லைக் கோட்டுக்குள் நின்று கொள்வது நல்லது. குறிப்பாக பண விஷயத்தில் கொஞ்சம் சுதாராகவே இருக்க வேண்டும். இதே அன்பு விஷயத்தால்தான், உங்கள் வாழ்க்கைத் துணை, சில தவறுகள் செய்யும் போது, வெளிப்படையாகத் தட்டிக் கேட்காமல், உள்ளுக்குள் மருகுவீங்க. இதனாலும் உங்களுக்கு மனக்குழப்பங்கள் நேரிடும்.

இந்த மாதம் முழுக்க, மகிழ்ச்சி தரக் கூடிய மாதமாக அமைந்திருக்கிறது. உங்கள் கண்மணிகள் மேல்படிப்புக்காக, உத்தியோகத்துக்காக வெளிநாடு போவார்கள் அல்லது வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்திகள் வந்தடையும்.

குறிப்பு : 24ம் தேதியில் பிறந்த பெண்களுக்கு, திருமண வாழ்வில் ஏதாவது ஒரு பாதிப்பு வந்து கொண்டேயிருக்கும். 'ஜாண் ஏறினால், முழம் சறுக்குது' என்பார்களே அந்த நிலைதான்! தாம்பத்ய இனிமை நீடிக்க, திருத்தணி/அரக்கோணம் அருகிலுள்ள ஸ்ரீ மஹிஷாசுரமர்த்தினி கோயிலுக்குச் சென்று மஞ்சள் - குங்கும அபிஷேகம் செய்து வழிபடவும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 6, 9.



7, 16, 25

தேதிகளில் பிறந்தவர்களே... ஃபார்மெட் நியூமராலஜிபடி, பெரிய படிப்பாளிகளாகவோ, கலைத்துறை வசீகரங்களாகவோ அதிக அளவில் இருப்பவர்கள் நீங்கள்தான்! அதே போல பன்னாட்டு நிறுவனங்களில் வேலை, அதிக வருமானம், அதிக வரி கட்டும் திறன் எல்லாமே இவர்களுக்குத்தான் அநேகமாக அமைகிறது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் தனி வாழ்க்கையில் ஸ்திரத் தன்மை சற்று குறைவாகத்தான் காணப்படும். குறிப்பாக, ஆண்கள் மண வாழ்க்கையில் சஞ்சலம் மிகுந்திருப்பார்கள்.

ஏழாம் எண்காரர்களே... இந்த மாதம் ஏற்றமும் இறக்கமும் கொண்ட மிதமான மாதமாக அமையும். மாணவமணிகள், இதுவரை இருந்த மனக் குழப்பங்கள் மாறி, முன்னேற்றமான வாழ்க்கைக்கு, பலமான அஸ்திவாரம் போடுவாங்க. வீட்டுப் பெரியவங்களுக்கு கண் உபாதைகள் வந்து நீங்கும்.

குறிப்பு : மனப்பொருத்தம், உடல் பொருத்தம் இல்லாத காரணத்தால், உங்கள் மணவாழ்க்கையில் அடிக்கடி கருத்துப் பிரச்னைகள் வெடிக்கும். உங்கள் துணையோ/நீங்களோ மிகவும் சகிப்புத் தன்மை கொண்டவர்களாக இல்லாவிட்டால், மனமுறிவுகள் கூட நேரிடலாம். எனவே, அருகிலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று வில்வ இலை அர்ச்சனை செய்து வந்தால், திருமண வாழ்வு மகிழ்வுடன் இருக்கும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 2, 5.



8,17,26

தேதிகளில் பிறந்தவர்களே... குடத்துக்குள் இட்ட விளக்கு போன்ற குணமுடையவர்கள் நீங்க! நாற்பது வயசுக்கு மேல்தான் உங்கள் திறமையே வெளி உலகுக்குத் தெரியும். தானாக மனமுவந்து பிறருக்கு உதவிகளை செய்வது உங்களுடைய பிறவிக் குணம். ஆனால் சின்னச் சொல்லுக்குக் கூட தொட்டாச்சிணுங்கியாகிப் போவீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணை திடமானச் சிந்தனை உள்ளவராக இருந்தால் மட்டுமே, உங்களால் வாழ்க்கையில் சிறப்பான இடத்துக்கு வர முடியும். அலுவலகமோ, வியாபாரமோ உங்கள் செயல்களுக்குக் கொஞ்சம் வெளிச்சமும் விளம்பரமும் தேடிக் கொண்டால் வாழ்க்கை மேலும் வெற்றிகரமாகும்.

இந்த மாதம் முற்பகுதி சவால்கள் நிறைந்ததாகவும், இறுதிப் பகுதி சாதனைகள் மிகுந்ததாகவும் அமையும். பெண்களின் எண்ணங்கள் எல்லாம் நிறைவேறும். திருமணத்துக்காகக் காத்திருக்கும் பெண்களுக்கு மனம் போல மாங்கல்யம் அமையும்.

குறிப்பு : எந்தக் காரியம் செய்தாலும், ஏகப்பட்ட தடைகள் வந்து உங்களைச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தால், அருகில் உள்ள விநாயகர் கோயிலுக்குச் சென்று அருகம்புல்லால் அர்ச்சனை செய்து வரவும். அல்லது சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று 'ஸ்ரீராம' என்று ஜெபித்து வரவும். இதனால் தடைகள் நீங்கி செல்வம் பெருகும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 1, 5.



9,18,27

தேதிகளில் பிறந்தவர்களே... உலக அளவில் இராணுவ அதிகாரிகள் பலரும் 9ம் எண்ணில் பிறந்தவர்கள்தான். வீட்டைப் பற்றி நினைப்பதை விட, நாட்டைப் பற்றி அதிகம் நினைக்கும் தேசப் பற்று உள்ளவர்கள். கல்லூரி விரிவுரையாளர்கள், ஆன்மிகப் பேருரையாளர்கள், போன்ற பலரும் இந்த எண்ணுக்கு உரியவர்களாக இருப்பது பெருமைக்குரியது. நிர்வாகத் துறையில் சிறந்து விளங்கும் இவர்களின் பேச்சும் நடத்தையும் 'வெட்டு ஒன்னு துண்டு இரண்டு' ஆகத்தான் இருக்கும். வீட்டு நலனிலும், உடல் ஆரோக்கியத்திலும் சற்று கவனம் செலுத்தினால் குடும்பங்கள் உடையாமலிருக்கும்.

இந்த மாதம் முழுக்க அலைச்சலும் பிரயாணங்களுமாய் அமையும். ஆனால் நீங்கள் நினைத்த அளவு பலனிருக்காது. கூட்டுத் தொழில்களில் நல்ல லாபம் கிடைக்கும். புதிய நபர்களிடம் ஒப்பந்தங்கள் போட நேர்ந்தால் கவனமிருக்கட்டும். வீடு, வாகனம், வசதி, வாய்ப்பு கூடி பெருகும் சமயம் என்பதால், எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம்.

குறிப்பு : 9ம் எண் மிகுந்த சக்திவாய்ந்த எண் என்பதால், அதே 9ம் எண் கொண்டவர்களைத் திருமணம் செய்ய வேண்டாம். மேலும் 2-ம் எண், 8-ம் எண்காரர்களைத் திருமணம் செய்வதையும் தவிர்க்கவும். மற்றபடி, உங்கள் திருமண வாழ்க்கை மகிழ்ச்சிப் பெட்டகமாக அமையும்.

அதிர்ஷ்டத் தேதிகள் : 1, 9



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 Registered No. TN/CC(S)DN/170/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/103/06-08 Registered as a Newspaper in Srilanka



என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அக்டோபர் 2007 இதழுடன் இணைப்பு

நவராத்திரி 64

LOOK INSIDE PAGES FOR PARTICIPATION

PARLE

GOLU GALATA

CONTEST - 2007

No Participation Fee

WIN MEGA CASH PRIZES



என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

அக்டோபர் 2007 இதழுடன் இணைப்பு

நவராத்திரி 64

LOOK INSIDE PAGES FOR PARTICIPATION

PARLE

GOLU GALATA

CONTEST - 2007

No Participation Fee

WIN MEGA CASH PRIZES

Tall, short, fair, dark, rich, poor - anyone can win!



WIN MEGA CASH PRIZES

School participation is welcome for special prizes.

For details and participation contact: 9941016640, 9941013153, 9941013154, 9941013152 or log on to www.parleproducts.com

Tall, short, fair, dark, rich, poor - anyone can win!



WIN MEGA CASH PRIZES

School participation is welcome for special prizes.

For details and participation contact: 9941016640, 9941013153, 9941013154, 9941013152 or log on to www.parleproducts.com



நவராத்திரி



மாசி மாதம் சுக்லபக்ஷ
ப்ரதமையன்று நவராத்திரி
பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.
பிறகு, நவமி வரை 9
நாட்கள் தேவியை
துர்கா–லக்ஷ்மி–ஸரஸ்வதி ரூபத்தில்
தினந்தோறும் பூஜை செய்ய
வேண்டும்.



Supplement to Mangayar Malar October 2007 3



நவராத்திரி



மாசி மாதம் சுக்லபக்ஷ
ப்ரதமையன்று நவராத்திரி
பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.
பிறகு, நவமி வரை 9
நாட்கள் தேவியை
துர்கா–லக்ஷ்மி–ஸரஸ்வதி ரூபத்தில்
தினந்தோறும் பூஜை செய்ய
வேண்டும்.

உள்ளத்தைக் கவர்ந்திடும் சுவை





ஸ்ரீ விக்நேச்வர பூஜையுடன், நவராத்திரி பூஜையைத் தொடங்கவும். 'சுக்லாம்பரதரம்' சொல்லி, கணபதியை மனதாரப் பிரார்த்தித்து, வீட்டின் பெரியோர்களையும் பிரார்த்திக்க வேண்டும். 'அயம் முகூர்த்தஸ் ஸுமுகூர்த்தோஸ்து' என்று பெரியோர்கள் ஆசீர்வதித்ததும் பூர்வாங்கப் பூஜையை முழுமையாகச் செய்து நமஸ்கரிக்கவும்.

4 Supplement to Mangayar Malar October 2007



